ஸ்ரீ:.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

திருமங்கையாழ்வார் திருவாய்மலர்ந்தருளிய

பெரிய திருமொழியில்,

எட்டாம்பத்து—முதல் திருமொழி,

சிலையிலங்குபொன்னாழி.

[பெருமாள் கோயில் பிரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசாரியர் இயற்றிய திவ்யார்த்த தீபிகையுடன் கூடியது.]

உரையவதாரிகை:—கீழ்த்திருமொழியில், எம்பெருமான் தன்னுடைய படிகளையெல்லாம் ஆழ்வார்க்கு விளங்கக் காட்டிக்கொடுக்க, இனிய பாசுரங்களாலே வாயாரப்பேசி யநுபவித்தார்; இப்படிப்பட்ட மஹாபுருஷனோடே ஸம்ச்லேஷிக்க வேணுமென்று ஆசைகிளர்ந்தது; ஆசைப்பட்டபடியே பாஹ்ய ஸம்ச்லேஷம் கிடைக்கப்பெறாமையாலே தளர்ந்து தம் நிலைமைமாறிப் பிராட்டிதசையை யடைந்து அதுதன்னிலும் தன்வாயாலே பேசமாட்டாதே திருத்தாயார்வாயாலே பேசவேண்டும்படியான நிலைமை நேர்ந்தமை இத்திருமொழியில் வெளியாகின்றது.

பரகாலநாயகியாகிய பெண்மகள் பலவற்றையும் சொல்லி வாய்வெருவுகிறபடியைக் கண்ட திருத்தாயார் ‘இப்போது இவளுடைய பேச்சுக்களின் ஸந்நிவேசத்தை ஆராயுமளவில் இவள் பரத்வத்திலே ஈடுபட்டிருக்கமாட்டாள்; விபவாவதாரங்களிலும் ஈடுபட்டிருக்கமாட்டாள்; வ்யூஹரூபத்தையாகிலும் அந்தர்யாமித்வத்தையாகிலும் சிந்தித்திருக்கவேமாட்டாள்; அர்ச்சாவதாரங்களில் வைத்துக்கொண்டு திருக்கண்ணபுரத்தெம்பெருமானளவில்தான் ஈடுபட்டவளாயிருக்கவேணும்; இல்லையாகில் இப்படிப்பட்ட வாய்வெருவுதல் இவளுக்குண்டாகப்பெறாது’ என்று நெஞ்சிற்கொண்டு,—வினவவந்தவர்களை நோக்கி ‘இப்பெண்பிள்ளையின் பேச்சுக்கள் இங்ஙனேயிருக்கையாலே இவள் கண்ணபுரத்தம்மானைக் கண்டவளாயிருக்கவேணும்போலே’ என்று சொல்லுகிற அடைவாக இத்திருமொழி அருளிச்செய்யப்படுகிறது.

பெண்மகளின் நிலைமையைக்கண்ட திருத்தாயார் ‘இவள் கண்ணபுரத்தம்மானைக் கண்டாளாகவேணும்’ என்று தெரிந்துகொண்டது எங்ஙனே? என்கிற சங்கை நீங்குமாறு பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியானத்தில் ஓர் ஐதிஹ்யமருளிச்செய்யப்பட்டுள்ளது காணீர்;—

"ராஜேந்த்ர சோழனிலே ஒரு ப்ராஹ்மணன்மகன் புத்த (வேஷ) ரோடே ஸம்ப்ரதாயமுண்டாய்ப் பூணூலையும் குடுமியையும் அறுத்துப் போகட்டான்; கூரத்தாழ்வான் அங்கே நடந்தவளவிலே சிகாயஜ்ஞோபவீதங்களைத் தரித்துக் கொண்டுவந்து புகுந்தான்; பிதாவானவன் 'கூரத்தாழ்வானைச் சந்தித்தாயோ?' என்று கேட்டான். புறம்புள்ளார் 'நீ இதறிந்தபடி எங்ஙனே?' என்று கேட்க, 'ஆழ்வான் ஸந்நிதியில் தமோநிஷ்டரும் ஸத்வஸ்தராவர்கள் காண்' என்றான்" என்று.

(அதாவது—) ராஜேந்த்ரசோழனென்னுமூரிலே ஒரு ப்ராஹ்மணகுமாரன் பௌத்தருடைய ஸஹவாஸத்தாலே மதிகெட்டுத் தன்பூணூலை அறுத்தெறிந்தும் குடுமியைச் சிரைத்தொழித்தும் வ்ராத்யனாய்த் திரிந்துகொண்டிருந்தான்; இப்படியிருக்கையில் ஒருநாள் அவ்வூர்க்குக் கூரத்தாழ்வான் எழுந்தருளினார். அந்த ப்ராஹ்மணகுமாரனுக்கு ஆழ்வான் ஏதாவது ஹிதோபதேசம் செய்தருளினரோ இல்லையோ தெரியாது; ஆழ்வான் அவ்வூர்க்கு எழுந்தருளினவளவே தெரியும். அவன் அப்போதே முன்போல ப்ராஹ்மண லக்ஷணங்களுடன் வீட்டுக்குவந்து சேர்ந்தான்; அவனைக்கண்ட அவனது தகப்பனார் 'பிள்ளாய்! கூரத்தாழ்வானோடு சந்திக்கப்பெற்றாயோ?' என்று கேட்க, அங்கிருந்த சிலர் இதைக்கேட்டு, உண்மையில் ஆழ்வானுடைய அருளாலேயே இவன் திருந்தினான் என்பதை அவர்கள் மாத்திரம் நன்கு அறிந்தவர்களாகையாலே இந்த மருமத்தை இவர் எங்ஙனே தெரிந்துகொண்டார் என வியந்து 'நீர் இதை எப்படி தெரிந்துகொண்டீர்?' என்று கேட்க, 'ஆழ்வானுடைய ஸந்நிதானத்தில் தாமஸர்களும் ஸாத்விகர்களாய்த் திருந்துவது வழக்கமன்றோ? நெடுநாளாகத் தாமஸனாய்க் கெட்டுப்போனவிவன் இன்று ஸாத்விகபுத்தியுண்டாகித் திருந்தினனென்றால் ஆழ்வானோடே இவன் ஸந்தித்திருக்கவேணுமென்று தோன்றிற்று' என்றாராம் அவனது தகப்பனார்.

அதுபோல, இத்தனைநாளுமில்லாமல் இன்று விலக்ஷணமாகவுண்டான இப்பெண்பிள்ளையின் நிலைமையைக்கண்டால் இவள் திருக்கண்ணபுரத்தெம்பெருமானைக் காணப்பெற்றவளாயிருத்தல் வேண்டும்; அப்பெருமானுக்கே இப்பாடுபடுத்தவல்ல சக்தியுண்டு—என்று பரகாலநாயகியின் திருத்தாயார் அறுதியிட்டனரென்கை.

இதனால், திருக்கண்ணபுரத்தெம்பெருமானுடைய வைலக்ஷண்யமும் ஆழ்வாருடைய இப்போதையநிலைமையின் வைலக்ஷண்யமும் தெரிவிக்கப்பட்டவாறும்.

....

சிலையிலங்கு பொன்னாழி திண்படை தண்டொண்சங்க மென்கின்றாளால் *
மலையிலங்கு தோள்நான்கே மற்றவனுக்கெற்றேகா ணென்கின்றாளால் *
முலையிலங்கு பூம்பயலை முன்போட அன்போடி யிருக்கின்றாளால் *
கலையிலங்கு மொழியாளர் கண்ணபுரத்தம்மானைக் கண்டாள்கொலோ? (1)

	(எனது பெண்பிள்ளையானவள்)
சிலை	'சார்ங்கவில்' (என்றும்)
இலங்கு பொன் ஆழி	'விளங்குகின்றதும் விரும்பத்தக்கதுமான திருவாழி' (என்றும்)
திண் படை	'வலிமைபொருந்திய வாட்படை' (என்றும்)
தண்டு	'கதை' (என்றும்)
ஒண் சங்கம் என்கின்றாள்	'அழகிய சங்கு' என்றும் சொல்லாநின்றாள்,
ஆ!	இஃது என்னே!
மற்று	இன்னமும்
அவனுக்கு	'அப்பெருமானுக்கு
மலை இலங்கு நால் தோளே	நான்கு திருத்தோள்களும்
எற்றே காண்	'எப்படி அழகாயிருக்கின்றன பார்'
என்கின்றாள்	என்று சொல்லுகிறாள்;
முலை இலங்கு	முலையில் விளங்குகின்ற
பூ பயலை	அழகிய பசலைநிறமானது
முன்பு ஓட	முன்னேசென்று வழிகாட்ட
அன்பு ஓடி இருக்கின்றாள்	அன்பு பின்செல்லப் பெற்றிருக்கின்றாள்;
கலை இலங்கு மொழி ஆளர்	சாஸ்த்ரப்பயிற்சி விளங்குகின்ற வாய்ப்பேச்சையுடையவர்கள் வாழ்கிற
கண்ணபுரத்து	திருக்கண்ணபுரத்தி லெழுந்தருளியிருக்கிற
அம்மானை	சௌரிப்பெருமாளை
கண்டாள்	ஸேவிக்கப்பெற்றாளோ!

[... இவளுக்கு எப்படி உண்டாகும்!.]

* * *—தன் பெண்மகள் சொன்னவார்த்தைகள் தனக்கு மிகவும் ரஸித்திருந்தபடியாலே அவற்றைத் தன்வாயாலும் பேசியநுபவிக்கிறாள் திருத்தாய்.

என்மகளானவள் எம்பெருமானுடைய திவ்யபூஷணங்களைக் கண்டுகந்து அவற்றையே ... கின்றாள்; சிலை என்கிறாள்; இலங்கு பொன்னாழி என்கிறாள்; திண்படை என்கிறாள்; தண்டு என்கிறாள்; சங்கு என்கிறாள்; அவனுக்கு மலைபோன்ற நான்கு திருத்தோள்களுண்டு என்கிறாள்; அவற்றின் அழகை என் சொல்வேனென்கிறாள்; நாயகன் விஷயத்தில் அன்பு உண்டான பின்பு முலையிற் பசலைநிறம் தோன்றுவது இயல்பு; இவள் அங்ஙனன்றி முந்துற முன்னம் பசலைநிறமுண்டாகவும் பின்பு அன்புவிளையவும் பெற்றி இன்றாள்; இப்படிப்பட்ட இவளது தன்மையை நோக்குமளவில் இவள் கண்ணபுரத் தெம்பெருமானைக் கண்டவளாயிருக்கவேணும்போலே—

முதலடியில் எம்பெருமானுடைய பஞ்சாயுதங்கள் கூறப்பட்ட சங்கு சக்கரம் வில் வாள் தண்டு என்பவை எம்பெருமானுக்கு ... யிருப்பதுதவிர ஆபரணங்களாகவு மிருக்கும். எம்பெருமானைக் ... நிரஸநம் பண்ணுவித்துக்கொள்ள விரும்புமவர்களே அவற்றை ஆயுதங்களாக அநுஸந்திப்பர்கள்; அவனைக்கொண்டு ஒருகாரியங் கொள்ளுகையின்றியே ... னுக்குப் பல்லாண்டுபாடுகையே புருஷார்த்தமா யிருக்குமாழ்வார் அவற்றை ஆபரணமாகவே அநுஸந்திப்பரென்க.

இலங்குபொன்னாழி—மேகத்திலே மின்னல் மின்னினாற்போலே கரிய திருமேனிக்குப் பரபாகமாய்க் கொண்டு விளங்காநின்ற திருவாழியென்கை. "திண்படை" என்றது நந்தகமென்னும் வாட்படையைச் சொன்னபடி. படை—ஆயுதக்

கட்டுப் பொதுப்பெயரும் வாளுக்குச் சிறப்புப் பெயருமாம். தண்டு-கௌமோதகி யென்னும் கதை. ஒண்சங்கம்=1. "கருப்பூரம் நாறுமோ கமலப்பூ நாறுமோ, திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித்திருக்குமோ? மருப்பொசித்த மாதவன் தன் வாய்ச்சுவையும் நாற்றமும், விருப்புற்றுக் கேட்கின்றேன் சொல்லாழி வெண்சங்கே!" என்றும், 2. "உண்பது சொல்லில் உலகளந்தான் வாயமுதம், கண்படை கொள்ளில் கடல்வண்ணன் கைத்தலத்தே" என்றும் பேசும்படி யான சிறப்புவாய்ந்த சங்கு என்றபடி.

இரண்டாமடியில், **எற்றேகாண்**—ஆச்சரியத் தோற்றச் சொல்லுகிறபடி. இது மகள்வார்த்தையைத் தாய் அநுவதிக்கிறதாகவுமாம்; அன்றி, மகள் வார்த்தைக்கு ஆச்சரியப்பட்டுத் தாய் சொல்லுகிறதாகவுமாம். தாய்வார்த்தை யாகக்கொள்ளில் 'என்கின்றாளால்' என்றதற்குப் பிறகு 'எற்றேகாண்' என்றதை யோஜித்துக் கொள்ளவேணும்.

முலையிலங்கு பூம் பயலை முன்போட அன்போடியிருக்கின்றாள்=நாயகனைப் பிரிந்த வருத்தத்தினால் முலைத்தடத்தில் தோன்றும் நிறவேறுபாடு 'பசலை' என்றும் 'பயலை' என்றும் சொல்லப்படும்; அதாவது தேமல் போன்ற வைவர்ணியம். முதலில் நாயகனிடத்து அன்பு உண்டாகி, அதனால் கலவி நேர்ந்து, கலவிக்குப் பின்பு பிரிவு வந்தே தீருமாதலால் அப்பிரிவினால் பயலை உண்டாக வேண்டியது முறைமையாயிருக்க, பயலை முன்பு ஓடவும் பிறகு அன்பு ஓடவும் பெற்றதாக இங்குச் சொல்லப்படுகின்றதே, இஃது என்னென்னில்; இதற்கு இரண்டு வகையாக ஸமாதாநம் கூறலாம்; தாய் மகளை நோக்கும்போது முன்னம் முலையிலங்கு பூம் பயலையைக் கண்டாள்; பிறகு எம்பெருமானிடத்தில் அவளுக்குண்டான அன்பை அறிந்தாள்; ஆகையாலே, தான் கண்ட க்ரமப் படியே பேசுகிறாள் என்பது ஒன்று. மற்றை விஷயங்களைப்போலல்லாமல் பகவத் விஷயம் விலக்ஷணமாகையாலே, அவ்விஷயத்திலுண்டாகும் அன்பின் காரியமும் விலக்ஷணமாயிருக்குமாதலால் முன்னம் பயலைநிறத்தைபுண்டாக்கிப் பின்பு அன்பை யுண்டாக்கிற்று என்று ஒருவகை அதிசயோக்தியாகச் சொல்லப்படுகிறது என்பது மற்றொன்று. 3. "முந்திவானம் மழை பொழிய மூவாவுருவின் மறையாளர், அந்தி மூன்று மனலோம்பும்" என்றாப்போலே கொள்க.

ஆக இப்படிப்பட்ட இவளது நிலைமைகளை நோக்குங்கால் இவள் கண்ணபுரத்தம்மானைக் கண்டாளாக வேணுமென்று ஈற்றடியால் தலைக்கட்டுகிறபடி. **கலையிலங்கு மொழியாளர்**=திருக்கண்ணபுரத்திலுள்ளாருடைய வெறும் வாய்ப் பேச்சுக்களிலும் சாஸ்த்ரம் விளங்குமாம்; அதாவது—அவர்கள் சாஸ்த்ர விஷயமாகப் பேசுகையன்றியே 'உண்ண உடுக்க' என்று உலக வார்த்தைகள் பேசினாலும் அவற்றிலும் அவர்களுடைய பாண்டித்தியம் கண்டுகொள்ளலா யிருக்கு

1. நாச்சியார் திருமொழி 7—1. 2. நாச்சியார் திருமொழி 7—8.
3. பெரியதிருமொழி 7-5-1.

மென்கை. அறிவு நிரம்பியிருப்பார் ஏது பேசினாலும் சாஸ்த்ரார்த்தங்கள் பெருகுமிறே. .... (க)

செருவரைமுன் னாசறுத்த சிலையன்றோ கைத்தலத்த தென்கின்றாளால் *
பொருவரைமுன் போர்தொலைத்த பொன்னாழி மற்றொருகையென்கின்றாளால் *
ஒருவரையும் நின்னொப்பா ரொப்பிலாவென்னப்பா! வென்கின்றாளால் *
கருவரைபோல் நின்றானைக் கண்ணபுரத்தம்மானைக் கண்டாள்கொலோ? (உ)

முன்	முன்னம்
செருவரை	போர்வீரர்களை
ஆசு	சீக்கிரமாக
அறுத்த	தொலைத்த
சிலை அன்றோ	சார்ங்க வில்லன்றோ
கைத்தலத்தது	திருக்கையிலுள்ளது
என்கின்றாள்	என்று சொல்லுகிறாள்;
மற்றொரு கை	மற்றொரு திருக்கையிலே,
முன்	முன்பொருகால்
பொருவரை	(சிறகோடு கூடிப்) போர் செய்த மலைகளை
போர்	யுத்தத்தில்
தொலைத்த	பங்கமடைவித்த

பொன் ஆழி	அழகிய திருச்சக்கரம் (உள்ளது)
	என்கின்றாள் ஆல்—;
ஒப்பு	ஒத்திருக்கும் விஷயத்தில்
நின் ஒப்பார் ஒருவரையும் இலா	உன்னோடொத்தவர்கள் ஒருவருமில்லாதிருக்கப் பெற்ற
என் அப்பா	என் நாயனே!
	என்கின்றாள் ஆல்—;
கரு வரை போல் நின்றானை	அஞ்சனமலைபோல் நிற்பவனான
	கண்ணபுரத்து அம்மானை கண்டாள் கொலோ—.

* * *—[செருவரையித்யாதி.] ஆசைப்பட்டாரை உகந்து அணைப்பதே எம்பெருமானுடைய ஸ்வபாவமாயிருக்கவும் மிக்க ஆசை கொண்டிராநின்ற நம்மை இப்படி அவன் உபேக்ஷித்திருப்பதற்கு என்ன ஹேது? தன் காதலியான மைதிலியைப் பிரிந்திருக்கையில் கலவிக்கு விரோதியாயிருந்தவற்றை யொழித்து அவளை அணைந்து கொண்டவனன்றோ அவன்; அப்படியே நம்முடைய கலவிக்கும் ஏதாவது விரோதியுண்டாகில் அதனைத் தொலைத்து வந்து அணைவதற்கு உறுப்பான உபகரணம் அவனிடம் இல்லையோ? எத்தனை போர்வீரர்கள் எதிரிட்டாலும் அழிக்கவல்ல சார்ங்கவில் கைத்தலத்திலுண்டே; இது கொண்டு முன்னே பல விரோதிகளையும் தொலைத்திருக்கவில்லையோ? அப்படியிருக்க இப்போது வாளாவிருப்பதற்கு என்ன காரணம் என்கிறாள்.

செருவர்—செருச் செய்பவர்; (செரு—யுத்தம்.) ஆசறுத்த—'ஆஜி:' என்னும் வடசொல் 'ஆசு' எனத் திரிந்ததென்று கொண்டால் யுத்தமென்று பொருள்; யுத்தத்திலே செருவரை யறுத்த சிலை என்க. அன்றியே, 'ஆஶு' என்னும் வடசொல்லின் விகாரமாகக் கொண்டால் 'விரைவாக' என்று பொருள்.

பண்டு திருக்கண்ணபுரத்து அரையரொருவர் விரோதிவர்க்கங்களால் தாம் நோவுபட நேர்ந்த காலத்து சௌரிராஜன் திருமுன்பே சென்று "செருவரை

முன்னை சுறுத்த சிலையன்றோ கைத்தலத்தது" என்று தாளக்கட்டி விண்ணப்பம் செய்ய, பெருமாள் திருவுள்ள முவந்தருளி அரையரை நோக்கி 'ஓய்! நீர் அஞ்ச வேண்டா; ஒரு க்ஷணத்திலே விரோதிகளை முடிக்கிறோம்' என்று அருளிச் செய்து அப்படியே தலைக்கட்டினரென்று வியாக்கியானத்தில் ஓர் ஐதிஹ்ய மருளிச்செய்வர்.

பொருவரை முன் போர் தொலைத்த பொன்னாழி மற்றொருகை யென்கின்றாள் = முன்சொன்ன சிலையிற் காட்டிலும் பராக்ரமம் மிக்க திருவாழியாழ்வான் மற்றொரு திருக்கையிலே வீற்றிருக்கவும் நம்முடைய கலவிக்கு உண்டான விரோதிவர்க்கம் தொலையுமாறு திருவுள்ளம் பற்றவில்லையே அவர் என்கிறாள். முற்காலத்தில் மலைகளெல்லாம் சிறகெழுந்து பறந்து ஆங்காங்கு வீழ்ந்து பல விடங்களிலும் நாசத்தை யுண்டு பண்ணு கிற்கையில் எம்பெருமான் உபேந்த்ர மூர்த்தியாய் வளர்ந்தருளுகிற காலத்திலே திருவாழியைக் கொண்டு அம்மலை களின் இறகுகளை அறுத்தொழித்ததாக வரலாறு அறிக. ஸுதர்சந சதகத்தில் "யாத்ராயாத்ராகனௌகா" (27) என்ற ச்லோகத்தில் "க்ருத்தலவமர..." என்றது காண்க. (அவ்விடத்து உரையில் யாமுரைத்த விசேஷங்களுங் காண்க.)

'பொருவரை முன்போர் தொலைத்த' என்பதற்கு வேறொருவகையாகவும் பொருளுரைப்பர்; 'வரை' என்பதை உவமையாகுபெயராகக் கொண்டு, மலை போன்ற யானை (அதாவது) கம்ஸனுடைய குவலயாபீடமென்னும் மதயானை, அதைத் தொலைத்த என்று. இப்பொருளில் 'பொன்னாழி' என்றது அறுகாழி மோதிரத்தை என்பர்.

ஒருவரையும் நின்னொப்பா ரொப்பிலா வென்னப்பா என்கின்றாள் = திரு விண்ணகரப்பன் திருநாமம் 'ஒப்பிலியப்பன்' என்பது; "மின்னப் பொன் மதிள்சூழ் திருவிண்ணகர்ச் சேர்ந்தவப்பன், தன்னொப்பா ரில்லப்பன்" என் றார் திருவாய்மொழியில்; அப்பெருமானை இங்கு விளிக்கப்படுகிறு னென்ன லாம். இங்ஙனே கொள்வதற்கு ஒரு பொருத்த முண்டு; பெரிய திருமடலில் "தாமரைமேல் மின்னிடையாள் நாயகனை விண்ணகருட் பொன்மலையை" என் றும் "கண்புரத்துப் பொன்மலைபோல் நின்றவன்" என்றும் திருவிண்ண கரப்பனையும் திருக்கண்ண புரத்தம்மானையும் பொன்மலையாகப் பேசின ஒற்றுமை நயம் உண்டிறே. .... (௨)

துன்னுமா மணிமுடிமேல் துழாயலங்கல் தோன்றுமாலென்கின்றாளால் *
மின்னுமா மணிமகரகுண்டலங்கள் வில்வீசுமென்கின்றாளால் *
பொன்னின்மா மணியார மணியாகத்திலங்குமா லென்கின்றாளால் *
கன்னிமா மதிள்புடைசூழ் கண்ணபுரத்தம்மானைக் கண்டாள் கொலோ? (௩)

துன்னு	நெருங்கியிருக்கின்ற
மா மணி	சிறந்த ரத்னங்களிழைக்கப் பெற்ற
முடி மேல்	கிரீடத்தின் மீது
துழாய் அலங்கல்	திருத்துழாய் மாலை
தோன்றும் ஆல் என்கின்றாள் ஆல்	விளங்குகின்றதே! என்று சொல்லுகிறாளே!;
மின்னு	ஜ்வலிக்கின்ற
மா மணி	சிறந்த மணிகளழுத்தின
மகர குண்டலங்கள்	மகரக் குழைகள்
வில் வீசும் என்கின்றாள் ஆல்	ஒளிவீசுகின்றன என்று சொல்லுகிறாளே!;
பொன்னின் மா மணி ஆரம்	பொன்னாலே செய்யப்பட்டதும் சிறந்த ரத்னங்களழுத்தப்பட்டதுமான ஹாரமானது
அணி ஆகத்து	அழகிய திருமார்பிலே
இலங்கும் ஆல் என்கின்றாள் ஆல்	விளங்காநின்றதே! என்று சொல்லுகிறாளே!;
கன்னி மா மதிள்	அழிவில்லாத பெரிய மதிள்களாலே
புடை சூழ்	நாற்புறமும் சூழப்பட்ட

கண்ணபுரத்து, அம்மானை கண்டாள் கொலோ—.

* * *—துன்னுமா மணிமுடிமேல் துழாயலங்கல் தோன்றுமா லென்கின்றுளால்—'பெண்ணே! உனக்கு அடக்கம் வேண்டும்; இங்ஙனே வாய்வெருவுதல் தகாது' என்று தாயாகிய இவள் ஹிதம் சொன்னால் அதற்கு மகள் இங்ஙனே சொல்லுகிறாளாம்—எம்பெருமான் திருமுடிமேல் அணிந்து கொண்டிருக்கிற திருத்துழாய் மாலையானது என்னெஞ்சைக் கவர்ந்து என் கண்முன்னே தோன்றுகின்றதே!, உங்களுடைய வார்த்தையொன்றும் என் செவியில் விழுகின்றன வில்லையே! என்கிறாளென்றபடி. திருத்துழாய்மாலை சேஷித்வஸூசகமாதலால், எம்பெருமானுடைய சேஷித்வத்திலே ஈடுபட்டிருக்கிற நான் இனி உங்களுக்கு சேஷப்பட்டிருக்க முடியுமோ என்பதும் குறிப்பிடப்பட்டதாம்.

மின்னுமாமணி மகரகுண்டலங்கள் வில்வீசு மென்கின்றுளால்—திருத்துழாய் மாலையிற் படிந்திருந்த நெஞ்சை மகரக் குழைகள் தம்மிடத்து இழுத்துக் கொண்டனபோலும். திருமுகமண்டல சோபைக்குக் கைவிளக்குப் பிடித்துக் காட்டுவன போன்றிருக்கின்றதாம் மணிமகர குண்டலங்கள்: அவை, வில் வீசும்—திருமேனி யடங்கலும் முட்டாக்கிடும்படி தன் ஒளியைப் பரவச் செய்கின்றன வென்கை. சுறாமீன் வடிவாகச் செய்யப்படும் காதணிக்கு 'மகரக்குழை' என்று பெயர். மகரம்—வடசொல்.

பொன்னின் மாமணியாரம் அணியாகத் திலங்குமா லென்கின்றுளால்—ஒரு ஆபரணமும் வேண்டாதே வெறும்புறத்திலே ஆலத்தி வழிக்கவேண்டும்படியான திருமார்பிலே அவ்வழகுக்கு மேலே ஸ்ரீகௌஸ்துபமணியும் முத்துமாலையும் விளங்காநின்றது என்கிறாள். 'பொன்னின் மாமணியாரம்' என்றதை உம்மைத் தொகையாகக் கொண்டால் பொன்னின் மாமணியும் ஆரமும் என்று பொருள்படும்.

'கன்னிமா மதிள் புடைசூழ்' என்ற விடத்திற்குப் பெரியவாச்சான் பிள்ளை யருளிச்செய்த பரம போக்யமான ஸ்ரீஸூக்தியைக் காண்மின்:— "சேமித்து வைத்த வஸ்துவை இவள் ஒருத்தியுமே அறிந்து கொண்டாள் போலேயிருந்தது" என்று. அதாவது—உள்ளுள்ள எம்பெருமானுடைய சீர்மைக்குத் தகுதியாய் அரணாயிருக்கின்ற திருமதிளால் சேமிக்கப்பட்டு உள்ளே யுறைகின்ற பிரானை என்மகள் எப்படியோ கண்டு கொண்டாளே! என வியந்தவாறு. .... (ங.)

தாராயதண்துளப வண்டுழுத வரைமார்ப னென்கின்றாளால் *
போரானைக் கொம்பொசித்த புட்பாகனென்னம்மா னென்கின்றாளால் *
ஆரானுங்காண்மின்கள் அம்பவளம் வாயவனுக் கென்கின்றாளால் *
கார்வானம் நின்றதிரும் கண்ணபுரத்தம்மானைக் கண்டாள்கொலோ? (ச)

தார் ஆய தண் துளபம்	மாலையாகிய குளிர்ந்த திருத்துழாயிலுள்ள
வண்டு	வண்டுகளாலே
உழுத	(தேனும் சுண்ணமுங் கொண்டு) சேறு செய்யப்பட்ட
வரை மார்பன்	மலைபோன்ற திருமார்பை யுடையவன்
	என்கின்றாள் ஆல்—;
போர் ஆனை	போர்புரிய நின்ற (சம்ஸனது) யானையினுடைய
கொம்பு ஒசித்த	தந்தங்களை முறித்தொழித்த
புள் பாகன்	கருடவாஹநன்
என் அம்மான்	எனக்கு ஸ்வாமி
	என்கின்றாள் ஆல்—;
ஆரானும்	யாராகிலும்
காண்மின்கள்	பாருங்கள்,
அவனுக்கு	அப்பெருமானுடைய
வாய்	திருவதரமானது
அம் பவளம்	அழகியபவளம்போற்சிவந்தது
	என்கின்றாள் ஆல்—;
கார் வானம்	கறுத்தமேகம்
நின்று அதிரும்	நிலைநின்று கோஷிக்கப்பெற்ற
	கண்ணபுரத்து, அம்மானை கண்டாள் கொலோ—.

* * *—இவள் தான் அணைய ஆசைப்பட்ட திருமார்பின் படியைப்பேசுபவளாய், பூத்துத் தழைத்துச் செவ்வியை யுடைத்தாய்க் குளிர்ந்திருந்துள்ள திருத்துழாய் மாலையிலே படிந்த வண்டுகள் அத்திருத்துழாயின் மது வெள்ளம் வண்டவிட்டுக் கிடக்கின்ற திருமார்பிலே உழுகின்றன என்கின்றாள். தன் முலைகளைக்கொண்டுபோய் அத்திருமார்பிலே நடலாம்படி சேறுசெய்திருக்கின்றதென்கிறாள். அந்தோ! நான் புரளவேண்டிய மார்பிலே வண்டுகள் புரளுகின்றனவே; அவை பண்ணின ஸுக்ருதம் என்னோ? நான் பண்ணின பாவம் என்னோ? என்கிறாள்.

கம்ஸனால் தன்னைக்கொல்லுமாறு மதமூட்டி நிறுத்தப்பட்ட குவலயாபீடமென்னும் யானையைக் கொம்பொசித்துக் கொன்றழித்த சிறுச்சேவகத்தையும் பெரிய திருவடியின் முதுகிலே வீற்றிருக்குமிருப்பையும் காட்டி என்னை அகப்படுத்திக் கொண்டவனென்கின்றாள்.

‘நங்காய்! சிறுக்கியான நீ இங்ஙனே சொல்லிக்கொண்டிருப்பது தகுதியன்று; நாணமடமச்சங்கெட்டு வாய்விடுவதைத் தவிரவேண்டும்’ என்று ஹிதமுரைக்கத் தொடங்கினால், ‘ஆரானுங் காண்மின்கள் அம்பவளம்வாய் அவனுக்கு’ என்கின்றாள்; ‘ஹிதஞ்சொல்லி விலக்கப்பார்கிற நீங்களே பாருங்கள்; அப்பெருமானுக்கு அழகிய பவளம் போன்றிருக்குள்ள திருவதரத்தை ஒருகால் ஸேவித்துப் பாருங்கள்; அது கண்டார்க்கு விட்டுப்போகலாயிருந்ததோ?’ என்கிறாள்.

ஆக இப்படிப்பட்ட இவளது நிலைமையை நோக்குங்கால். எப்போதும் வர்ஷாகாலமாய் ஆகாசம் அதிராநின்ற திருக்கண்ணபுரத்துப் பெருமானை இவள் காணப்பெற்றாளாகவேணும். .... (௪)

அடித்தலமுந் தாமரையே அங்கைகளும் பங்கயமே யென்கின்றாளால் *
முடித்தலமும் பொற்பூணு மென்னெஞ்சத்துள்ளகலா தென்கின்றாளால் *
வடித்தடங்கண் மலரவளோ வரையாகத்துள்ளிருப்பா ளென்கின்றாளால் *
கடிக்கமலம் கள்ளுகுக்கும் கண்ணபுரத்தம்மானைக் கண்டாள்கொலோ? (௫)

அடித்தலமும்	திருவடிகளும்
தாமரையே	தாமரைப் பூவே;
அம் கைகளும்	அழகிய திருக்கைகளும்
பங்கயமே	தாமரைப் பூவே;
என்கின்றாள் ஆல்—;	
முடித்தலமும்	கிரீடமும்
பொன் பூணும்	(அதிலிழைத்த) திருவாபரணமும்
என் நெஞ்சத்துள் அகலாது	என் மனத்தைவிட்டுப் பிரியாது
என்கின்றாள் ஆல்—;	
வடி	கூர்மை பொருந்திய
தட	பெரிய
கண்	கண்களையுடையளான
மலரவளோ	பங்கயச் செல்வியான பெரியபிராட்டியாரோ வென்னில்
வரை ஆகத்துள் இருப்பாள் என்கின்றாள்	மலைபோன்ற திருமார்பிலிருக்கின்றாளென்று சொல்லுகிறாள்;
கடி கமலம்	பரிமளமுள்ள தாமரைப் பூக்கள்
கள் உகுக்கும்	தேனைப் பொழியப்பெற்ற
கண்ணபுரத்து, அம்மானை கண்டாள் கொலோ— .	

* * *— ‘நங்காய்! எவ்வளவு நன்மை சொன்னாலும் கேட்கின்றிலையே!, திடீரென்று நீ இப்படி மாறுபடுவதற்குக் காரணமென்’? என்று கேட்டால், அதற்கு ஒரு மறுமொழியுங் கூறாதே, ‘அப்பெருமானுடைய திருவடிகள் ஸாக்ஷாத் தாமரைப்பூவே; திருக்கைகளும் தாமரைப்பூவே’ என்கிறாள்; ‘இப்படியும் ஒரு வார்த்தையுண்டோ? நான் ஒன்று கேட்டால் நீ ஒன்று சொல்லுகின்றனையே; உனக்கு ஏதேனும் உன்மாதமோ?’ என்றால், அப்பெருமானுடைய திருவபிஷேகமும் அது தன்னிற் சாத்தின திருவாபரணமும் என்னெஞ்சை விட்டுப் பேர்ந்து போனாலன்றோ உங்கள் வார்த்தை என்னெஞ்சிலே பதியும் என்கிறாள்.

புருஷகார பூதையான பிராட்டி * அகலகில்லே னிறையுமென்று திருமார்பிலே நித்யவாஸம் பண்ணா நின்றாள்; இந்த நிலையயிலும் நான் இழக்கலாமோ

வென்கிறாள். பிராட்டி மேல்விழுந்து நித்யாநுபவம் பண்ணும்படியான பரம ரஸிகனன்றோ அவன்; அவனையோ நான் இழந்திருப்பது என்கிறாளென்னவு மாம். .... (ரு)

பேராயிரமுடைய பேராளனென்கின்றாளால் *
ஏரார்கனமகர குண்டலத்தனெண்தோளனென்கின்றாளால் *
நீரார்மழைமுகிலே நீள்வரையேயொக்குமாலென்கின்றாளால் *
காரார்வயலமரும் கண்ணபுரத்தம்மானைக் கண்டாள்கொலோ? (சு)

ஆயிரம் பேர் உடைய	ஆயிரந் திருநாமங்களையுடைய
பேராளன் பேராளன் என்கின்றாள்	மஹாநுபாவனென்று பலகாலும் சொல்லுகின்றாள்;
ஏர் ஆர்	அழகுபொருந்திய
கனம்	கனகத்தினால் செய்யப்பட்ட
மகர குண்டலத்தன்	மகரக்குழைகளையுடையவன்,
எண் தோளன்	எட்டு புஜங்களையுடையவன்
என்கின்றாள் ஆல்—;	
நீர் ஆர்	நீர் நிறைந்த
மழை முகிலே	கார்காலத்து மேகத்தையும்
நீள் வரையே	பெரிய மலையையும்
ஒக்கும்	ஒத்திருப்பன்
என்கின்றாள் ஆல்—;	
கார் ஆர் வயல் அமரும்	கருமை மிக்க கழனிகள் அமர்ந்திருக்கப்பெற்ற
கண்ணபுரத்து, அம்மானை கண்டாள் கொலோ—.	

* * *—வாயாரச் சொல்வதற்குப் பாங்கான ஆயிரந் திருநாமங்களையுடைய பெரியோன், பெரியோன் என்று பலகாலுஞ் சொல்லுகின்றாள்; அவனை ரக்ஷித்தான் இவனை ரக்ஷித்தானென்று அவன் பெற்றிருக்குந் திருநாமங்கள் பல்லாயிரமுண்டு; அப்படிப்பட்ட திருநாமங்களையுடைமையினால் மிகப் பெரியோனென்று தன்னை மதித்திருக்கிறானவன்; என்னொருத்தியைக் கைவிட்டதனால் அந்தப் பெருமையெல்லாம் இல்லையாய்விடப்போகிறதே! என்ற கருத்துப்போலும் பரகால நாயகிக்கு.

நம்மை அவன் உபேக்ஷித்து விட்டாலும் அவனுடைய வடிவழகு அவனை நாம் மறந்து பிழைக்க வொட்டுகின்றதில்லையே; மகரகுண்டலங்கள் தளதளவென்று ஒளிமல்கப் பெற்ற திருத்தோள்களினழகை என் சொல்வேனென் கிறாள்.

மகரகுண்டலம் முதலிய திருவாபரணங்கள் இருக்கவுமாம், இல்லையாகவுமாம்; அவையில்லையேயாகிலும் வெறும் புறத்திலே ஆலத்தி வழிக்க வேண்டும்படியான திருமேனியின் அழகை என்ன சொல்லுவேன்!; 'நீர் கொண்டெழுந்த காளமேகமோ இது, அன்றிப் பச்சை மலையோ' என்று விதர்க்கிக்கலாம்படியன்றோ திருமேனியிருப்பது! என்கிறாள். ஆக இப்படியெல்லாம் இவள் சொல்லுகையாலே திருக்கண்ணபுரத்தம்மானை இவள் காணப்பெற்றவளாயிருக்க வேணுமென்கை.

ஈற்றடியில் "வயல் மருவும்" என்று சிலர்க்குப் பாடமாம். .... (சு)

செவ்வரத்தவுடையாடை யதன்மேலோர் சிவளிகைக்கச் சென்கின்றாளால் *
அவ்வரத்தவடியிணையு மங்கைகளும் பங்கயமே யென்கின்றாளால் *
மைவளர்க்கும் மணியுருவம் மரதகமோ மழைமுகிலோ வென்கின்றாளால் *
கைவளர்க்குமழலாளர் கண்ணபுரத்தம்மானைக் கண்டாள்கொலோ? (எ)

செம்	சிவந்ததாய்
வரத்த	சிறந்ததாக
உடை	உடுக்கப்பட்ட
ஆடை	பீதாம்பரம் (என்றும்)
அதன் மேல்	அந்தப் பீதாம்பரத்தின்மேல்
ஓர்	ஒப்பற்ற
சிவளிகைக் கச்சு என்கின்றாள்	சிவளிகைக்கச்சு (சாத்தப்பட்டிருக்கிறது) என்றும் சொல்லுகிறாள்;
அவ் வரத்த அடி இணையும்	அப்படிப்பட்ட சிறந்த உபயபாதங்களும்
அம் கைகளும்	அழகிய திருக்கைகளும்
பங்கயமே என்கின்றாள்	தாமரைப்பூவே என்று சொல்லுகிறாள்;
மை வளர்க்கும் மணி உருவம்	நீலநிறத்தை மிகுதியாகத் தோற்றுவிக்கின்ற நீலமணிபோன்ற திருமேனி
மரதகமோ	மரதகமணியோ, (அன்றி,)
மழை முகிலோ	காளமேகமோ
என்கின்றாள் ஆல்—;	
கை வளர்க்கும் அழல் ஆளர்	தமது கைகளால் ஓம்பப்படுகின்ற அக்நியையுடையரான அந்தணர் வாழ்கிற
கண்ணபுரத்து அம்மானை கண்டாள் கொலோ—.	

* * *—எம்பெருமானுடைய உடைவாய்ப்பிலே தான் தோற்றுளென்பது தோன்ற வாய்விடுகின்றாள்: திருப்பீதாம்பரம் சாத்தினால் திரு அரை பூத்தாற் போலேயாயிற்றிருப்பது; அப்படிப்பட்ட பீதகவாடையுடையழகிலே யீடுபட்டுப் பேசுகின்றாள். அவ்வளவோடு நின்றாளோ? அப்பீதகவாடையின்மேல் 'சிவளிகைக் கச்சு' என்ற கச்சுப்பட்டை கட்டப்பட்டிருக்குமழகை யெடுத்துரைக்கின்றாள்; மீண்டு மீண்டும் 'திருவடிகளும் திருக்கைகளும் தாமரையே' என்கிறாள்; அவை தாமரையே யென்று சிறிதும் ஸந்தேஹமின்றி நிச்சயமாகச் சொல்லுகிறவிவள் திருமேனி விஷயத்தில் மாத்திரம் ஸந்தேஹப்படச் சொல்லுகிறாள்; (அதாவது) 'மை வளர்க்கும் மணியுருவம் மரதகமோ மழை முகிலோ' என்கிறாள்;—திருமேனியானது பச்சைமாமலையோ அல்லது நீர்கொண்டெழுந்த காளமேகமோ தெரியவில்லை யென்கிறாள். இவளுடைய வார்த்தைப் பாடுகளை நோக்குமிடத்து நித்யாக்நிஹோத்ரிகள் வாழப்பெற்ற திருக்கண்ணபுரத்து எம்பெருமானை இவள் காணப் பெற்றாளாகவேணும்.

முதலடியிலும் இரண்டாமடியிலும் எதுகையில் 'வரம்' என்னும் வடசொல் புகுந்திருக்கின்றது; அச் சொல் சிறப்புப் பொருளது. இரண்டாமடியில் 'ரக்த' என்னும் வடசொல் 'அரத்த' என்று கிடக்கிறதென்றுங் கொள்ளலாம்; அச் சொல் சிவப்புப் பொருளது. (எ)

கொற்றப்புள்ளொன்றேறி மன்றூடே வருகின்றானென்கின்றாளால் *
§ வெற்றிப்போ ரிந்திரர்க்குமிந்திரனேயொக்குமா லென்கின்றாளால் *
பெற்றக்காலவனாகம் பெண்பிறந்தோ முய்யோமோ வென்கின்றாளால் *
கற்றநூல்மறையாளர் கண்ணபுரத்தம்மானைக் கண்டாள்கொலோ ? (அ)

கொற்றம் புள் ஒன்று ஏறி — வெற்றி பொருந்திய ஒரு கருடப்பறவையை மேற்கொண்டு
மன்று ஊடே — திருவீதியிலே
வருகின்றான் — எழுந்தருளுகிறான்
என்கின்றான் ஆல்—;
வெற்றி போர் — ஜயசீலமான யுத்தத்திலே
இந்திரர்க்கும் இந்திரனே ஒக்கும் என்கின்றாள் — மஹேந்திரனை ஒத்திருப்பன் என்கின்றாள்;
அவன் ஆகம் — அப்பெருமானுடைய திருமார்பை
பெற்றக்கால் — பெற்றால்
பெண் பிறந்தோம் உய்யோமோ என்கின்றான் — பெண்ணாய்ப்பிறந்த நாம் வாழ்ந்து போகமாட்டோமோ என்கிறான்;
கற்ற நூல் மறை ஆளர் — (முறையே) கற்கப்பட்ட சாஸ்த்ரங்களை யுடையரான வைதிகர் வாழ்கிற
கண்ணபுரத்து, அம்மானை கண்டாள் கொலோ—.

* * *—1. "வெள்ளைச் சுரிசங்கொடு ஆழியேந்தித் தாமரைக்கண்ணனென்னெஞ்சினூடே, புள்ளைக்கடாகின்ற ஆற்றைக்காணீர்" என்ற பராங்குச நாயகிக்கு நெஞ்சினுள்ளே கருடவாஹந ஸேவை ஸாதித்தான் எம்பெருமான்; அங்ஙனன்றிக்கே இப் பரகாலநாயகிக்காகத் திருவீதியூடே கருடவாஹந ஸேவை ஸாதித்தான் போலும். ஆகவே 'கொற்றப்புள் ஒன்றேறி மன்றூடே வருகின்றான்' என்கிறாள்; தாஹித்தவர்கள் இருந்தவிடங்களிலே சாய்கரகத்தைக் கொண்டு வந்து சாய்ப்பாரைப்போலே என்னொருத்திக்கே யல்லாமல் மற்றும் என்னைப்போன்ற அன்புடையார்க்கும் ஸேவைஸாதிக்கப் பெரிய திருவடியின் மீதேறி வீதியூடே வந்து உலாவுகின்றான் காண்மின் என்கிறாள். ஒருவர்க்குந் தெரியாமல் வந்து என் கண்ணுள்ளே யிருக்கவேண்டியவன் மஹோத்ஸவமாகத் தெருவோடே வருகிறானே, யாரேனுங்கொள்ளைகொண்டு ஸ்வாநுபவ மாத்திரத்திலே நிறுத்திக்கொள்ளப்போகிறார்களே! என் செய்வேன் என்கிறாள் போலும்.

அப்படி யாரேனும் தன்னைக் கொள்ளை கொண்டாலும் அவர்களுக்குப் பிடிகொடாதே உத்தேசித்தவிடத்தே வந்து சேர்தற்கு உரிய பராக்ரமத்தில் குறையுடையனல்லன்; வீர்யத்தில் மஹேந்த்ரனை ஒத்திருப்பனென்கிறாள். 'வெற்றிப்போர்' என்பது வழங்கி வரும் பாடம்; 'வெற்றுப் போர்' என்னும் பாடமே வியாக்கியானத்திற்குப் பொருந்தும். "வெறும் போரில்" என்பது பெரிய வாச்சான் பிள்ளை வியாக்கியான ஸ்ரீஸூக்தி.

"இந்திரற்கு மிந்திரனேயொக்கும்" என்றவிடத்து வியாக்கியானத்தில்— "இந்த்ரனுக்கும் இந்த்ரனுண்டு மஹேந்த்ரன்; வ்ருத்ரவதாதிகளாலே பட்டம்

1. திருவாய்மொழி 7-3-1. § 'வெற்றுப்போர்' என்பது வியாக்கியான பாடம்.

சூடினவன், அவனேடொக்குமென்னு நின்றாள்" என்றுள்ளது. க்ருஷ்ண யஜுர்வேத தைத்திரீய ஸம்ஹிதையில் ஆறுவது காண்டத்தில் ஐந்தாவது ப்ரச்நத்தில்—(16) इन्द्रो वृत्रमहन् तं देवा अब्रुवन् महान् वा अयमभूत् यो वृत्रमवधीदिति तन्महेन्द्रस्य महेन्द्रत्वम्" என்றதைத் திருவுள்ளம்பற்றியதாயிது. (இந்திரன் வ்ருத்ராஸுரனைக் கொலைசெய்ததுபற்றி மஹேந்திரனென்று அவனுக்குத் தேவர்கள் பட்டஞ்சூட்டினராம்.)

[பெற்றக்கால் இத்யாதி.] பெண்ணைப் பிறந்தவர்கள் அணைந்து வாழ்வதற்கென்றன்றே அவன் திருமார்பு படைத்தது; ஒருத்தியைத் திருமார்பிலேயே வாழ வைத்திருக்கின்றானல்லனே? அங்ஙனே நமக்கும் அத்திருமார்பைப் பெறுவித்தால் பெண்பிறந்த நாமும் வாழ்ந்து போகமாட்டோமோவென்கிறாள். இத்தனை அபிநிவேசம் இவளுக்குண்டானமை காண்கையாலே இவள் வைதிக வித்வான்கள் வாழும் திருக்கண்ணபுரத்து எம்பெருமானைக் காணப்பெற்றாளாகவேணும். .... (அ)

வண்டமரும் வனமாலைமணிமுடிமேல் மணநாறு மென்கின்றாளால் *
உண்டிவர்பா லன்பெனக்கென் றொருகாலும் பிரிகிலேனென்கின்றாளால் *
பண்டிவரைக் கண்டறிவதெவ்வூரில் யாமென்றே பயில்கின்றாளால் *
கண்டவர்தம் மனம்வழங்கும் கண்ணபுரத்தம்மானைக் கண்டாள்கொலோ? (௯)

வண்டு அமரும்	வண்டுகள் படிந்த
வனமாலை	திருத்துழாய்மாலை
மணிமுடிமேல்	ரத்ன கிரீடத்தின்மீது
மணம் நாறும் என்கின்றாள்	பரிமளம் கமழாநிற்கிறது என்கிறாள்;
எனக்கு இவர்பால் அன்பு உண்டு என்று	'எனக்கு இவரிடத்திலே அன்பு உண்டு' என்று சொல்லி
ஒருகாலும் பிரிகிலேன் ஆல் என்கின்றாள்	(அவ்வன்பால்) ஒருகொடிப்பொழுதும் பிரிந்திருக்க முடியவில்லையே யென்கிறாள்;
இவரை	'இப்பெரியவரை
பண்டு	இதற்கு முன்னம்
யாம் கண்டறிவது	நாம் பார்த்திருப்பது
எவ் ஊரில்	எந்தவூரிலே
என்றே பயில்கின்றாள்	என்றே பலகாலும் உருப்போடுகின்றாள்;
கண்டவர்	ஸேவித்தவர்களெல்லாரும்
தம் மனம்	தங்கள் மனத்தை
வழங்கும்	அர்ப்பணம் செய்துவிடும்படியான

கண்ணபுரத்து, அம்மானை கண்டாள்கொலோ—.

* * *—தேன்வெள்ளத்தில் நசையாலே வண்டுகள் படிந்திருக்கப்பெற்ற திருத்துழாய்மாலையானது அப்பெருமானது திருமுடியில் ஏறினவாறே தன்னிலத்திற்காட்டிலும் அதிகமான பரிமளம் வீசப்பெறுகின்றது காண்மின் என்கிறாள். என்னுடைய ப்ரீதித்துவம் முழுதும் அப்பெரியவர் பக்கலிலே குடிபுகுந்துவிட்டது, ஆகையாலே ஒரு நொடிப்பொழுதும் அவரைப்பிரிந்து தரித்திருக்கமாட்டுகின்றிலேன் என்கிறாள். அதற்குமேல் பாவனையின் முதிர்ச்சி

யாலே அவரைக் கண்ணெதிரே வந்து நிற்பவராகக்கொண்டு 'இவரை முன்னம் எவ்விடத்திலோ பார்த்திருப்பதுபோல் தெரிகின்றதே, எவ்வூரில் கண்டது!' என்று தன்னில் தான் பலகாலும் சொல்லிக்கொள்ளுகிறாள்; இப்போது இவள் இப்படியிருக்கையாலே ஸர்வாங்க ஸுந்தரரான சௌரிப்பெருமாளைக் காணப் பெற்றவளாயிருக்கவேண்டும்.

"பண்டிவரைக் கண்டறிவது எவ்வூரில் யாமென்றே பயில்கின்றாளால்" என்ற மூன்றாமடியின் விசேஷப்பொருள் குறிக்கொள்ளத் தக்கது;—இவ்விடத்துப் பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியான வாக்கியங் காண்மின்:—"முதல்நாள் கண்டால் ஸ்வாபாவிகமான ஸ்வாமித்வத்தாலும் முகத்தில் தண்ணளியாலுமாக 'முன்பே கண்டறியும் முகமாயிருந்ததீ! எவ்வூரில்தான் கண்டது?' என்னும்படியிருக்கும்; விரவரிவயம் பிறந்தால் பின்பு 'முன்போரிடத்திலும் இவரைக் கண்டறியோம்' என்னும்படியாயிருக்கும்; நித்யாபூர்வமான விஷயமென்றபடி. சொன்ன இரண்டர்த்தத்தையும் அது காட்டுமோவென்ன, 'பயில்கின்றாளால் என்றது கண்டாயே; எற்றைக்கும் வார்த்தை இதுவேயன்றோ: இப்படியாக வேண்டாவோ?' என்று ஜீயர்." என்று. இதனை விவரிப்போமிங்கு;—பண்டிவரைக் கண்டறிவதெவ்வூரில்' என்பதற்கு இரண்டு வகையான பொருள் சொல்ல இடமுண்டு; 'முன்பு இவரை எவ்விடத்திலோ பார்த்திருக்கிறோம் போல இருக்கின்றதே, எவ்விடத்தில் பார்த்திருப்போம்!' என்று விமர்சிப்பதாக ஒரு பொருள்; பண்டு இவரை எவ்வூரில் கண்டறிவது—எவ்வூரிலும் கண்டறிந்ததில்லை; இப்போதுதான் முதன்முதலாகக் காண்கிறோம் என்பதாக மற்றொரு பொருள். ஒரு தடவை பிரயோகிக்கப்பட்டிருக்கின்ற வாக்கியம் இவ்விரண்டு பொருளையும் ஏககாலத்தில் எங்ஙனே தருமென்னில்; மூலத்தில் "என்றே பயில்கின்றாளால்" என்றிருப்பதால் 'பண்டிவரைக் கண்டறிவதெவ்வூரில் யாம்' என்னும் வார்த்தையைப் பலகாலும் உருப்போடுகிறாள் என விளங்குதலால், அந்த வார்த்தையை முதல் தடவை சொல்லும்போது முதற்பொருளும் அடுத்த தடவைகளிலெல்லாம் இரண்டாவது பொருளும் சொல்லப்படக் குறையில்லையென்க. இவ்விரண்டு பொருள்களின் ஸ்வாரஸ்ய மென்னவெனில்;—எம்பெருமானை முதன்முதலாகக் காணும்போது திருமுகமண்டலத்தில் தண்ணளி முதலியவற்றைக் கொண்டு 'இவரை முன்பு எங்கோ கண்டாற்போலிருக்கிறதே!' என்று தோன்றும்; அதன்பிறகு எவ்வளவு நெருங்கிப் பழகினாலும் தெகுட்டுதலின்றியே "எப்பொழுதும் நாள் திங்களாண்டூழி யூழிதொறும், அப்பொழுதைக் கப்பொழுதென்னாராவமுதமே" என்னும்படியான விஷயமாகையாலே முன்பு எங்கும் கண்டறியாதது போலவும் அப்பொழுதே புதிதாகக் கண்டு அநுபவிப்பதுபோலவுந் தோன்றிக்கொண்டேயிருக்கும். மற்ற விஷயங்களிற் காட்டில் பகவத் விஷயத்திற்குள்ள வைலக்ஷண்யம் இது—என்று காட்டினபடி.

கண்டவர் தம் மனம் வழங்கும்=ஒருகால் ஸேவித்தவர்களும் தங்கள் நெஞ்சைத் தாங்களே 'இஃது எம்மதல்ல, உன்னுடையதே' என்று எழுதிட்டுக்

கொடுத்துவிடும்படியான ஆகர்ஷகத்வ முடையவன் எம்பெருமான் என்க..... (கூ)

மாவளரும் மென்னோக்கிமாதராள் மாயவனைக் கண்டாளென்று *
காவளருங் கடிபொழில்சூழ் கண்ணபுரத்தம்மானைக் கலியன்சொன்ன *
பாவளருந் தமிழ்மாலை பன்னியநூலிவையைந்து மைந்தும்வல்லார் *
பூவளருங் கற்பகஞ்சேர் பொன்னுலகில் மன்னவராய்ப் புகழ்த்தக்கோரே. (க०)

மா வளரும் மென் நோக்கி	மானினுடைய நோக்குப் போன்று விசாலமாய் மெல்லிதான நோக்கை யுடையவளான
மாதராள்	(பரகால) நாயகியானவள்
மாயவனை கண்டாள் என்று	ஆச்சரியனான எம்பெருமானைக்கண்டாள் கொலோ என்று
கா வளரும் கடி பொழில் சூழ்	சோலைகளில் வளரும் பரிமளமான து பூமியெங்கும் பரவப்பெற்ற
கண்ணபுரத்து	திருக்கண்ணபுரத்தி லெழுந்தருளியுள்ள
அம்மானை	ஸ்வாமியைக் குறித்து
கலியன் சொன்ன	திருமங்கையாழ்வாரருளிச் செய்த
பா வளரும்	சந்தங்கள் நிறைந்திருக்கப் பெற்ற
தமிழ் மாலை	தமிழ்ப்பாசுர மாலையாகிய
பன்னிய நூல்	கொண்டாடுதற்கு உரிய இத் திவ்யப்ரபந்தத் திற் சேர்ந்த
இவை ஐந்தும் ஐந்தும்	இப்பத்துப் பாட்டையும்
வல்லார்	ஓதியுணரவல்லவர்கள்
பூ வளரும்	பூக்கள் நிறைந்த
கற்பகம் சேர்	கல்பவ்ருக்ஷம் பொருந்திய
பொன்னுலகில்	பரமபதத்தில்
மன்னவர் ஆய்	நிர்வாஹகர்களாகவும்
புகழ் தக்கோர்	(இங்குள்ளவரையில்) புகழ்க்குத் தகுதியுடையவர்களாகவும் இருக்கப் பெறுவர்.

* * *—"கண்ணபுரத் தம்மானைக் கண்டாள் கொலோ" என்று சொல்லித் திருத்தாயார் தம் பெண்பிள்ளையின் பகவத்விஷயானுராகத்தை வெளியிடும் பாசுரமாக ஆழ்வார் தமது அன்பு நிலைமையைத் தாமே வெளியிட்டுக் கொண்ட இத்திருமொழியைக் கற்றுணரவல்லவர்கள் திருநாட்டை ஆளவல்லராவர் என்று பயனுரைத்துத் தலைக்கட்டினாராயிற்று.

மா—மான். மாதராள்—'மாதர்' என்று விரும்பப்படும் அழகுக்குப்பெயர்; அதனையுடையவள் மாதராள். பலவிடங்களிலும் அழகையுடையவட்கு வாசகமாக 'மாதர்' என்று பிரயோகமுண்டாகிலும் அது இலக்கணையா லென்க.

பூவளருங் கற்பகஞ்சேர் பொன்னுலகில்=கல்பவ்ருக்ஷமுள்ளது ஸ்வர்க்கலோகத்திலன்றோ, பரமபதத்திலு முண்டோவென்கிற சங்கையில் பெரியவாச்சான்பிள்ளை அருளிச்செய்கிறார் காண்மின்—"உபரிதந லோகங்களுக்கடைய கற்பகத்தைச் சிறப்பாகச்சொல்லக்கடவர்கள்" என்று.

பொன்னுலகில் மன்னவராய்—"வானிளவரசு வைகுந்தக்குட்டன் வாசுதேவன்" என்கிறபடியே பரமபதத்தில் நித்யமுக்தர்களைத் தலைவராக்கி எம்பெருமான் இளவரசாயிருப்பனும். .... (க०)

அடிவரவு:—சிலை, செரு, துன்னு, தார், அடி, பேர், செவ்வாய்த்த, கொற்ற, வண்டு, மாவளரும், தெள்ளியீர்.

முதல்திருமொழி உரை முற்றிற்று.

ஜீயர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

எட்டாம்பத்து—இரண்டாந்திருமொழி,

தெள்ளியீர் தேவர்க்கும்.

உரையவதாரிகை:—கீழ்த் திருமொழியாக நிகழ்ந்த திருத்தாயார் பாசுரம் இத்திருமொழியாகவும் அநுவர்த்தித்து வருகின்றது. பரகால நாயகியின் [illegible]மையைக்கண்ட அத்திருத்தாயார் 'இவள் கண்ணபுரத் தம்மானைக் காணப்பெற்றவளாயிருக்கவேணும்' என்பதாகச் சென்றது கீழ்த்திருமொழி; இத்திருமொழியில் அத் திருக்கண்ணபுரத் தெம்பெருமானையே நேராக நோக்கித் தன் பரிதாபத்தைப் பேசுகிறாள் திருத்தாய். இதில் சில பாசுரங்கள் தன்னில் தான் நொந்துகொண்டு பேசுவனவாகவுஞ் செல்லும்.

ஆழ்வார் சௌரிப்பெருமாள் பக்கலிலே தமக்குண்டான அளவுகடந்த ப்ராவண்யத்தையும், அவரைப் பிரிந்து மேனி மெலிந்தபடியையும் இங்ஙனே அந்யாபதேசத்தாலே அருளிச்செய்கிறாரென்க. .... (*)

தெள்ளியீர்! தேவர்க்கும் தேவர் திருத்தக்கீர்!*
வெள்ளியீர் வெய்யவிழுநிதி வண்ணர் * ஓ!
துள்ளுநீர்க் கண்ணபுரந் தொழுதாளிவள்
கள்வியோ! * கைவளைகொள்வது தக்கதே? (௧)

தெள்ளியீர்	தெளிந்த அறிவு உடையவரே!
தேவர்க்கும் தேவர்	தேவாதிதேவரே!
திரு தக்கீர்	பெரியபிராட்டியார்க்குத் தகுதியானவரே!
வெள்ளியீர்	சுத்தமான ஸ்வபாவத்தை யுடையவரே!
வெய்ய விழு நிதி வண்ணர்	காய்ச்சின சிறந்த பொன் போன்ற நிறமுடையவரே!
ஓ!	இஃது என்ன அநியாயம்!,
இவள்	இப்பரகால நாயகியானவள்
துள்ளும் நீர்	கரைபுரண்டு பெருகுகின்ற நீரையுடைத்தான
கண்ணபுரம்	திருக்கண்ணபுரத்தை
தொழுதாள்	கையெடுத்துக் கும்பிட்டாள்;
(இவள்)	இப்படிப்பட்ட இவள்
கள்வியோ	(ஆத்மாபஹாரம் செய்திலளாகையாலே) கள்வியன்றே;
	(அப்படியிருக்க)
கை வளை கொள்வது	(அடிச்சியான இவளுடைய) கைவளைகளைக் கொள்ளை கொள்வதானது
தக்கதே	உமக்குத் தகுந்ததோ?.

* * *—என் பெண்பிள்ளை திருக்கண்ணபுரத்தைத் தொழுதாளென்பதையே வியாஜமாகக் கொண்டு இவளுடைய கைவளையைக் கொள்ளை கொள்வது தகுதியோ சொல்லீர் என்று சௌரிப்பெருமாளை மடிபிடிக்கிறாள் திருத்தாய். இவளுடைய கைவளைகளை அவர் கொள்ளை கொள்வதாவது என்னென்னில், பிரிவாற்றாமையினால் இவள் உடம்பு இளைத்துக் கைவளைகள் கழன்று விழும்படியாவதாம். இவளை நீர் இப்படி ஈர்க்குப்போல் இளைத்துப் போம்படி செய்தீரே, இது தகுதிதானோ? நித்ய ஸம்ச்லேஷத்தைக் கொடுத்து இவளுடம்பைப் புஷ்டியாக்குவதன்றோ தகுதி என்கிறாளென்க.

தெள்ளியீர்'=நீர் மஹா விவேகியென்று பேர்பெற்றவரன்றோ? தெளிந்த ஞானமுள்ளது உமக்கேயன்றோ? பெண்பிறந்தவர்களின் பொருளைக் கொள்ளை கொள்வது தகுதியன்றென்று உமக்குத்தானே தெரியாதோ? ஸர்வஜ்ஞானவுமக்கு அல்பஜ்ஞையான நானோ உணர்த்துவது? என்றவாறு.

தேவர்க்குந் தேவர்!=நீர் ஏதேனும் ஸாமாந்யமானவரோ? நித்யஸூரிகளுக்கும் நாயகராய் நிற்கும்படியான பெருமேன்மை பெற்றவரன்றோ நீர்; இப்படி மேன்மையுடையரான நீர் பிறர்க்கு வேண்டியவற்றைக் கொடுத்தருள வேண்டுவது ப்ராப்தமாயிருக்க, உள்ளதையும் கொள்ளை கொள்வது உம்முடைய மேன்மைக்குத் தகுதியோவென்று பாரீர் என்றவாறு. ‘தேவர்!’ என்றது அண்மைவிளி.

இவ்விடத்து வியாக்கியான ஸ்ரீஸூக்தி காண்மின்:—“பெருமாள் திருவயோத்யையில் நின்றும் போந்து சக்ரவர்த்தி திருமகன் எழுந்தருளியிருந்த வளவிலே ஸ்ரீ குஹப்பெருமாள் பலத்தேனையும் காட்டுப் பழமுங் கொண்டு சென்று உபஹாரமாகக் கொடுக்க, ‘நாம் கொள்ளப் பிறந்தோமல்லோம் காணும், கொடுக்கப் பிறந்தவர்காணும்’ என்றருளிச் செய்தாரிறே.”—ஆண் பிள்ளைகள் இசைந்து கொடுக்க வந்ததையும் கொள்ளப் பெறாதென்ற நீர் பெண்பிறந்தார் பொருளை வலியக்கவர்ந்து கொள்ளுதல் என்ன தகுதி? என்றவாறு.

திருத்தக்கீர்!=பெரிய பிராட்டியாராகிற ஒருபெண்பெண்டாட்டியை ஒரு நொடிப்பொழுதும் விடாது திருமார்பிலே யிருத்தி உவக்குமவர் ஒருத்தியின் கைவளைகளைக் கொள்ளை கொள்வது தகுதியோ? என்றவாறு.

வெள்ளியீர்'=1. “என்னை வெள்ளுயிராக்கவல்ல” என்றாற்போலே வெண்மையாவது சுத்தஸ்வபாவமுடைமை: நீர் பரம பவித்திரரன்றோ? பிறர் பொருளைக் கொள்ளை கொள்வது உம்முடைய பாவநத்வத்திற்குத் தகுமோ?. “பரபெர் ஸாஹிஷ்ஹி ஸாஹிஃந ஶ்ருதாரி ஸாஹிஸூஹிஃ—யோர்த்தே சுசிஸ் ஸஹி சுசிர் ந ம்ருத்வாரி சுசிச் சுசிஃ” [பிறர்பொருளைக் கவராதவன் பரிசுத்தனெனப் படுவனேயன்றி, மண்ணையும் நீரையுங்கொண்டு பலகால் தேஹத்தை சுத்தி செய்பவன் பரிசுத்தனாகமாட்டான்.] என்று சொல்லி யிருப்பது உமக்குத் தெரியாதோ? பெண்பிள்ளையின் பொருளைக் கவர்கின்ற நீர் என்ன பரிசுத்தர்!.

1. திருப்பல்லாண்டு 8.

வெய்ய விழுநிதி வண்ணர்=உம்முடைய திருமேனியின் வைலக்ஷண்யம் உமக்குத் தெரியாதோ? ஆசைப்பட்டார்க்கு அணைக்கக் கொடுப்பதற்கன்றோ நீர் இப்படிப்பட்ட உடம்பு படைத்திருப்பது; இவளை நோவுபடுத்துவதற்கென்றே இவ்வுடம்பு படைத்தீர்போலும். 'நிதி' என்னுஞ் சொல்லை ஸ்வதந்த்ரமான தமிழ்ச் சொல்லாகக் கொண்டால் 'பொன்' என்று பொருள்படும்; நீலமேக நிறத்தனான எம்பெருமானுக்குப்பொன் னுருவமுண்டோ வென்னில்; 1. "பாலினீர்மை செம்பொனீர்மை" 2. "பொன்னின் வண்ணம் மணியின் வண்ணம் புரையுந் திருமேனி" 3. "சுட்டுரைத்த நன்பொன் உன் திருமேனி யொளி" இத்யாதிப் படியே அதாவுஞ் சொல்லுவதுண்டு. ஒவ்வொரு யுகத்தில் ஒவ்வொரு நிறங் கொள்வனிறே. பிராட்டிநிறத்தின் நிழலீட்டாலே பொன் னிறமாவதாகச் சொல்வதுமுண்டு. இனி, வெய்ய—விரும்பத்தக்க, விழு—சிறந்த, நிதி—பொன் போன்ற, வண்ணர்—தன்மையையுடையவர் என்றுரைத்து, பொன் எப்படி அனைவராலும் விரும்பத்தகுந்ததாயிருக்கிறதோ அப்படி விரும்பத்தக்கவரென்றுங் கொள்ளவுமாம். 'நிதி' என்னுஞ் சொல்லை வடசொல்லாகக் கொண்டு 'புதையல்' என்றும் பொருள் கொள்ளலாம். அன்பர்க்குச் சேமவைப்பானவர் என்கை; தேவரீர் பிறருடைய உடைமையாயிருக்க வேண்டியவரேயன்றி, பிறருடைமையைக் கொள்ளை கொள்பவராதல் தகுமோ என்றவாறு.

இரண்டாமடியின் முடிவில் 'ஓ' என்றது 'இப்படியும் ஒரு பெண்பிள்ளையைக் கொலை செய்யலாமோ? என்று கதறி முறையிடுகிறபடி. தெள்ளுநீர்க் கண்ணபுரம் தொழுதாளிவள் கள்வியோ?=இப்பரகால நாயகியானவள் உம்மிடத்தில் ஏதேனும் அபராதப் பட்டதுண்டோ? திருக்கண்ணபுரமென்னுந் திருப்பதி நீர்வாய்ப்புப் பொருந்திக் குளிர்ந்திருக்கின்றதென்று அவ்விடத்தை நோக்கிக் கையெடுத்துக் கும்பிட்டாள்; இத்தையே காரணமாக இவளுடைய கைவளையைக் கொள்ளை கொள்ளுதல் தகுமியோ? இவள் $ ஆத்மாபஹாரக் கள்வியாகில் நீர் நினைத்தபடியெல்லாம் இவளைப் பரிபவப்படுத்தலாம்; அப்படி இவள் பக்கல் ஒருவகையான கள்ளத்தனமும் இல்லையாயிருக்கவும் கைவளைகொள்வது தக்கதோ.

'இவள் கள்வியோ?' என்றது—இவளன்று கள்வி, நீர் தாம் கள்வர் என்றபடி. கண்ணபுரந் தொழுதாளாகையாலே இவள் கள்வியல்லள்; தொழுதவளுடைய கைவளையைக்கொள்ளை கொண்டீராகையாலே நீர் கள்வர் என்கை.

கைவளை கொள்வது தக்கதே="யாநி யாநீஹ வஸ்தூநி வாஸுதேவ க்ஷணேந தாநி ஹரதி" முதலான ச்லோகம்... [illegible] ...யாநி யாநீஹ தவே வதநி புரஸ்தாத் க்ஷணேந தாவந்த்யா:—ஹரிதாநி புரோவலயாநி அபராணி புநஸ் ததைவ தவிதாநி" என்ற ச்லோகத்

1. திருச்சந்த விருத்தம். 2. பெரியதிருமொழி. 4—9—8.
3. திருவாய்மொழி. 3—1—2.

$ ஆத்மாபஹாரக் கள்வமாவது ஈச்வர சேஷமான ஆத்மவஸ்துவை ஸ்வதந்த்ரமென்று நினைக்கை.

தின் தாற்பரியம் இங்கே நினைக்கத்தகும். அதாவது நாயகன் நாயகியை 'என் கண்மணி! நான் உன்னைப் பிரிந்து ஓர் ஊர்க்குச் செல்லுகின்றேன்' என்று சொன்ன நொடிப்பொழுதிலேயே அவளுடைய கையில் அணியப்பட்டிருந்த வளைகளில் முன்னேயிருந்தவளைகள் கழன்று கீழே வீழ்ந்தன; அதனைக்கண்ட நாயகன் 'இவள் நம்து பிரிவைப் பொறுத்திருக்க கில்லாளாகையாலே இவளைப்பிரிந்து நாம் வெளியேறலாகாது' என்று நினைத்து உடனே 'நான் போகவில்லை' என்று சொல்லவே அச்சொல் செவிப்பட்ட கொடிப்பொழுதிலேயே கையில் நின்றும் கழன்றொழிந்தவைபோக நின்ற வளைகள் படீல் என்று வெடித்துத் துகளாய் விழுந்தன என்பது மேற்காட்டிய ச்லோகத்தின் கருத்து. நாயகனுடைய பிரிவு ப்ரஸ்தாவத்தில் வந்த மாத்திரத்திலேயே நாயகியினது உடல் மிகவும் மெலிந்து போம் என்பதும் அந்த விரஹவார்த்தை மாறினவாறே உடம்பு பூரிக்குமென்பதும் இதன் உள்ளுறை. ஆகவே, இங்குக் 'கைவளை கொள்வது தக்கதே' என்றது இவளுக்கு நீர் நித்ய ஸம்ச்லேஷத்தைத் தந்து இவள் உடம்பு பூரித்திருக்கக் காண்கை ப்ராப்தமாயிருக்க, இவளைப்பிரிந்து மேனியை மெலியச்செய்து வருத்துகை தகாது என்றவாறு.

இப்பாட்டின் பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியானத்தின் முடிவில்—"ந தே ரூபம்' என்கிறாள்" என்று அச்சுப்பிரதிகளில் ஒரு வாக்கியம் காண்கிறது; மேற்குறித்த ப்ரமாணம் ஜிதந்தாஸ்தோத்ரத்திலுள்ளதென்று ஆகாரமும் குறிப்பிட்டிருக்கின்றார்கள்; இது ஒரு பெரிய அச்சுப்பிழை; "ந தேரூப: என்கிறாள்" என்று திருத்திக்கொள்க; இது ஸ்தோத்ரரத்நத்தின் மேற்கோள்; "ந தே ரூபம் ந சாகாரோ நாயுதாநி ந சாஸ்பதம் ..." என்பது இங்கே விவக்ஷிதம். .... (க)

நீணிலா முற்றத்து நின்றிவள் நோக்கினள் *
காணுமோ கண்ணபுரமென்று காட்டினள் *
பாணனார் திண்ண மிருக்க வினியிவள்
நாணுமோ? * நன்று நன்று நறையூரர்க்கே. (உ)

இவள்	இப்பராகாலநாயகியானவள்
நீள் நிலா முற்றத்து நின்று	உக்ஙதஸ்தானத்திலுள்ள நிலாமுற்றத்தில் நின்றுகொண்டு
நோக்கினள்	பார்த்தாள்; (தான் பார்த்துவிட்டு)
காணும் ஓ! கண்ணபுரம் என்று காட்டினள்	'வாரீர்! பாருங்கோள் இதோ கண்ணபுரம்' என்று (பிறர்க்கும்) காட்டினள்;
பாணனார் திண்ணம் இருக்க	சேர்விக்கும் ஆசார்யருடைய த்ருடாத்யவஸாயம் குறையற்றிருக்கையாலே
இனி இவள் நாணுமோ	இனி இவள் வெட்கப்பட்டு மீளக்கூடுமோ?
நறையூரர்க்கே	திருநறையூர்ப் பெருமானுகிய எம்பெருமானுக்கே
நன்று நன்று	(தன் எண்ணம்) நன்றாய்த் தலைக்கட்டிற்று.

* * *—'இப்பரகாலநாயகியை மநுஷ்ய ஸஞ்சாரமில்லாத வேறிடத்திலே கொண்டுபோய் வைத்தால் திருக்கண்ணபுரத்தெம்பெருமானிடத்து இவளுக்குண்டான அபிநிவேசம் ஒருவாறு தணியக்கூடும்' என்றெண்ணித் திருத்தாய் இவளை ஒரு உயர்ந்த மாடமாளிகையிலே கொண்டுவைத்தாள்; அவ்விடமே நீணிலாமுற்றம் எனப்படுகின்றது; உந்நதமாயும் நிலாவோடு கூடினதாயுமிருக்கிற முற்றம் என்றபடி. அவ்விடத்தில் நின்றுகொண்டு திருக்கண்ணபுரத்தை நோக்கினாள்.

ஆசார்ய ஹ்ருதயத்தில் (இரண்டாம் பிரகரணத்தில்) "நிலாமுற்றம் ப்ரஜ்ஞா ப்ராஸாதமென்னும் எல்லை நிலம்" என்கிற சூர்ணிகையும், அவ்விடத்து மணவாள மாமுனிகள் வியாக்கியானத்தில்—"நீணிலா முற்றத்து நின்றிவள் நோக்கினாள் என்கிற நிலா முற்றமாகிறது—'ப்ரஜ்ஞாப்ராஸாதமாருஹ்ய அசோச்ய: சோசதோ ஜநாந். பூமிஷ்டாநிவ சைலஸ்த: ஸர்வாந் ப்ராஜ்ஞோऽநுபச்யதி.' என்கிறபடியே உத்துங்கமாய் நின்று ஸர்வத்தையும் தர்சிக்கைக் குறுப்பாகச் சொல்லப்படுவதாய், அதிலே நின்று தர்சித்தவளவில் காணுமோ கண்ணபுரமென்று காட்டினாளென்கையாலே ததீயவிஷயமே பரமப்ராப்யமென்று பிறர்க்கும் ப்ரகாசிப்பிக்கும்படி சரமாவதியான புருஷார்த்த ஜ்ஞாநமென்கை" என்றுள்ள ஸ்ரீஸூக்திகளும் இங்கு நினைக்கத்தக்கன. உயர்ந்த முற்றம் என்று 'இனி இதற்குமேற்பட உயர்ந்ததில்லை' என்னும்படியாய், 'காணுமோ கண்ணபுரமென்று காட்டினாள்' என்று-கண்ணபுரத்தெம்பெருமானைக் காட்டாதே அவனுடைய வஸ்து வான இடத்தைக் காட்டினதாகச் சொல்லுகையாலே ததீயவிஷயமே பரமப்ராப்யமென்னும்படி எல்லை நிலமான புருஷார்த்தஜ்ஞானமே நீணிலா முற்றமென்பதற்கு உள்ளுறை யென்க.

காணுமோ கண்ணபுரமென்று காட்டினாள்='சாண் நீளச் சிறுக்கியான வுனக்கு இப்படிப்பட்ட ப்ராவண்யம் ஆகாது' என்று அடிக்கடி சிக்ஷிக்கின்ற தாயாகிய என்னையும் அஞ்சாதே அழைத்து 'அதோபார், திருக்கண்ணபுரம் தெரிகிறதா?' என்று விரலாற் சுட்டிக் காட்டுகின்றாளே. (அன்றியே) 'திருக்கண்ணபுரத்தைப் பாருங்கள்; கைதொழுதுக் கும்பிடுங்கள்' என்று பன்னியுரைக்கப் புகுந்து விவக்ஷிதங்களைப் பூர்த்தியாகச்சொல்லித் தலைக்கட்டமாட்டாமல் 'காணுமோ கண்ணபுரம்' என்று வாயாற் சொல்லி மற்றதை ஹஸ்தமுத்ரையாலே பூரிக்கின்றாள் என்றுமாம்.

காணும் ஓ= இங்கு 'ஓ' என்றது இரக்கத்தைக் குறிப்பதுமாம்; திருக்கண்ணபுரத்தைக் காண்பதற்காகவேயன்றோ இக்கண்கள் படைக்கப்பட்டன; அப்படியிருக்க, இதனை விலக்குவாரும் சிலர் உண்டாவதே! என்று வருந்துகிறபடி. இவ்விடத்து வியாக்கியானத்தில் ஒரு ஐதிஹ்யமுள்ளது;—வடமதுரைப் பிறந்தானென்பாரொருவருடைய புத்திரன் ஸ்ரீரங்கவிமானத்தை நோக்கினாற்

§ இவ்விடத்தில் அச்சுப்பிழை ஏதாவது இருக்கக்கூடுமென்று தோன்றுகிறது; ஆகாரம் தெரியவில்லை; பொருளும் நன்கு விளங்கவில்லை.

போலே நின்று கொண்டு கண்களை மூடிக்கொண்டு ஏதோ ஜபம் செய்து கொண்டிருந்தானாம்; பட்டர் அந்த நிலைமையைக் கடாக்ஷித்துக் கொண்டே எழுந்தருளி $ 'புலகயதி விமாநம் பாவநம் லோசநே ந:' என்று கண்களுக்குப் பரமபோக்யமான விமானத்தைக் கண்ணாரக்கண்டு களிக்கலாமாயிருக்க, இவன் கண்களை இறுக மூடிக்கொண்டு திண்டாடுகிறானே; இவனுடைய கண் புண்ணோ? என்று வெறுத்துக் கொண்டே எழுந்தருளினாராம்; ஒன்றிரண்டு மாதத்திற்குள்ளே அவனுக்குக் கண் கெட்டதாம்.

பாணனார் திண்ணமிருக்க இனியிவள் நாணுமோ?— நாயகனால் நாயகி பக்கலில் அனுப்பப்படுகின்ற தூதுவன்போன்ற ஒருவனுக்குப் பாணன் என்று பெயர்; (பாணன்-பாடுமவன்.) நாயகியினுடைய ப்ரணய ரோஷங்களைப் போக்கி அவளை நாயகனோடே சேர்ப்பிக்குமவன் பாணன் என்று கொள்க. (திருவரங்கக் கலம்பகத்தில் (81) "விடாது பூமடந்தைமார்........அடாததன்று பாண!........" என்ற செய்யுள் நோக்குக.) இங்குப் 'பாணனார்' என்றது பூஜோக்தி. சேதநனை ஈச்வரனோடே சேரச்செய்கின்ற ஆசாரியரே இங்குப் பாணனார் எனப்படுகிறார். **திண்ணமிருக்க இனியிவள் நாணுமோ?**— "உங்களோடெங்களிடை யில்லையே" என்னும்படி தேஹபந்துக்களோடே உறவையறுத்து பகவத்விஷயத்திலேயே அவகாஹிக்கச் செய்கிற ஆசார்யனுடைய வலிமை இவளுக்கு இருக்கும்போது இனி இவள் அவ்விஷயத்தில் நின்றும் மீளமாட்டாள் போலு மென்கை. [நாணுமோ?] நாணுவது லஜ்ஜை; இலக்கணையால், லஜ்ஜையின் காரியமான மீட்சியை இங்கு விவக்ஷிக்கிறது.

நன்றுநன்று நறையூரர்க்கே— இவளை மீட்கப்பார்க்கிற நமக்கு நல்லகாலமில்லை; முதலிலே இவளைத் தன் வலையிலகப்படுத்திக்கொண்ட திருநறையூர் நம்பியின் எண்ணமே நிறைவேறு நின்றமையால் அவர்க்கே நல்லகாலமாயிருக்கின்ற தென்கை. .... (2)

அருவிசோர் வேங்கடம் நீர்மலை யென்றுவாய்
வெருவினாள் * மெய்யம் வினவி யிருக்கின்றாள் *
பெருகுசீர்க் கண்ணபுரமென்று பேசினாள்
உருகினாள் * உள்மெலிந்தா ளிதுவென்கொலோ?. (௩)

இவள்	இப்பரகாலநாயகியானவள்	மெய்யம் வினவி	திருமெய்யத்தைப்பற்றிக் கேள்விகேட்டு
அருவி சோர் வேங்கடம்	அருவிகள் சொரிகின்ற திருமலையென்றும்		(அதற்கு ஒருவரும் பதில் சொல்லுவாரில்லாமையாலே)
நீர்மலை என்று	திருநீர்மலையென்றும் சொல்லி		
வாய் வெருவினாள்	வாய்பிதற்றினாள்;	இருக்கின்றாள்	வாளாவிருக்கிறாள்;

$ ஸ்ரீரங்கராஜஸ்தவத்தில் விமாந மங்களாசாஸந ச்லோகம்.

பெருகு சீர் — சீர்மை மிகுந்த
கண்ணபுரம் என்று — திருக்கண்ணபுரம் என்று
பேசினாள் — வாயாற்சொன்னவளாய்க் கொண்டு (உடனே)

உருகினாள் — நீர்ப்பண்டமானாள்;
உள் மெலிந்தாள் — நெஞ்சுசிதிலமாகப் பெற்றாள்;
இது என் கொல் — இப்படியுமொருநிலைமை யுண்டாக்கடவதோ?.

* * *—இப்பரகாலநாயகியை நோக்கி ஹிதமாக நான் ஏதேனுஞ் சொன்னால் அதை இவள் செவியேற்பதுமில்லை, அதற்கு மறுமொழி கூறுவதுமில்லை; 'திருவேங்கடம்' 'திருநீர்மலை' என்றே இவள் எப்போதும் வாய்வெருவிக் கொண்டிரா நின்றாள்; சிலஸமயங்களில், 'திருமெய்யம்' என்றொரு திவ்யதேச மிருக்கிறதே, அதற்கு 'மெய்யம்' என்று ஏன் திருநாமம் வந்தது? அடியவர்கட்கு மெய்யே நின்று காரியஞ் செய்தவிடம் என்கிற காரணத்தினாலோ—அத் திருப்பதிக்கு அத்திருநாமமுண்டாயிற்று?' என்று அருகிலுள்ளாரைக் கேட்கின்றாள்; இதற்கு மறுமொழி கூறுவார் ஆருமில்லாமையாலே பெருமூச்சுவிட்டு வாளாவிருக்கின்றாள். சிலஸமயங்களில் 'திருக்கண்ணபுரம்' என்று வாய்நிறையப் பேசினவாறே அந்தக்ஷணத்திலேயே நீர்ப்பண்டமாய் உருகுகின்றாள்; நெஞ்சு தளர்கின்றாள்; இப்படி இவள் ஆவதற்கு என்பாபம் தவிர வேறு என்ன காரணமோ அறிகின்றிலேன் என்றாளாயிற்று. .... (௩)

உண்ணும் நாளில்லை உறக்கமுந் தானில்லை *
பெண்மையுஞ் சால நிறைந்திலள் பேதைதான் *
கண்ணனூர் கண்ணபுரந் தொழும் கார்க்கடல்
வண்ணர்மேல் * எண்ண மிவட்கிது வென்கொலோ?. (௪)

உண்ணும் நாள் இல்லை — இவள் ஒருநாளும் உண்பதில்லை;
உறக்கம் தானும் இல்லை — கண்ணுறங்குவது மில்லை;
பெண்மையும் சால நிறைந்திலள் — நன்றாகமுதிர்ந்த பெண்மைப்பருவ முடையளல்லள்;
பேதை தான் — இளம்பெண்தான்;
(இப்படியிருக்கச் செய்தேயும்)

கண்ணன் ஊர் — எம்பெருமானுடைய திவ்யதேசமாகிய
கண்ணபுரம் — திருக்கண்ணபுரத்தை
தொழும் — தொழாநின்றாள்;
இவட்கு எண்ணம் — இவளுடைய எண்ணம்
கார் கடல் வண்ணர் மேல் — கரியகடல்போன்ற நிறத்தை யுடையரான சௌரிப் பெருமாள்மேலுள்ளது;
இது என் கொல் — இது என்ன ஆச்சரியம்!.

* * *—இவள் முன்பெல்லாம் நம்மைப்போலே உண்பதும் உறங்குவது மாயிருந்தவள் இப்போது உண்பதுமில்லை உறங்குவதுமில்லை; நாயகனோடே கலவி செய்யும் பருவமாயிருந்தால் ஊணும் உறக்கமுந் தவிர்வது ஸஹஜமே யாகும்; அப்பருவமாவது இவட்கு உண்டோ வென்னில், அதுவுமில்லை; பேதைப் பருவமேயாயிற்று இவளது. இப்படியிருக்கச் செய்தேயும் திருக்கண்ண

புரத்தை நோக்கி அஞ்ஜலி செய்வதே இவளுடைய காயிகவ்யாபாரம்; அவ்வூருக்குள்ளே கடல் தேங்கினாற் போலே நிற்கிற சௌரிப்பெருமாளுடைய திருமேனி நிறத்தைச் சிந்திப்பதே இவளுடைய மாநஸவ்யாபாரம்; இஃது என்ன ஆச்சரியம்! என்றுளாயிற்று.

'ஊணில்லை' என்னாதே 'உண்ணும் நாளில்லை' என்றதற்குக் கருத்து யாதெனில்; பிராட்டி பெருமானைப் பிரிந்து அசோகவனத்தில் பத்துமாஸம் உபவாஸத்தால் மெலிந்திருந்தபோது தேவேந்திரன் அம்ருதமயமான அன்னத்தைக் கொண்டுவந்து ராக்ஷஸரும் ராக்ஷஸிகளுங் காணாமே கொடுக்க அதனை அமுது செய்தாளென்று ரிஷி எழுதிவைத்தான்; இவளுக்கு அப்படிப்பட்ட உணவும் ஒருநாளுமில்லை யென்பதாம்.

உணவு இல்லாமல் சில நாட்கள் தரித்திருக்கலாம்; உறக்கமின்றித் தரித்திருப்பது அரிதாதலால் 'உறக்கமில்லை' என்னாது 'உறக்கந்தானுமில்லை' என்றது. .... (ச)

கண்ணனூர் கண்ணபுரந் தொழுங் காரிகை *
பெண்மையென்? தன்னுடை யுண்மை யுரைக்கின்றாள் *
வெண்ணெயுண் டாப்புண்ட வண்ணம் விளம்பினால் *
வண்ணமும் பொன்னிறமாவ தொழியுமே. (ரு)

கண்ணனூர்	சௌரிப் பெருமானுடைய திவ்ய தேசமான	வெண்ணெய் உண்டு	(அவன்) வெண்ணெயை(க் களவாடி) அமுது செய்து
கண்ணபுரம்	திருக்கண்ணபுரத்தை	ஆப்புண்ட	(தாம்பினால்) கட்டுண்ட
தொழும்	தொழுகின்ற	வண்ணம்	ஸமாசாரத்தை
காரிகை	இவ்வழகியானவள்	விளம்பினால்	(யாரேனும் எதிர்) சொன்னால்
தன்னுடை	தன்னுடைய	வண்ணமும்	(இவளுடைய) மேனி நிறமும்
உண்மை	(வியாமோஹத்தின்) உண்மையை	பொன் நிறம் ஆவது ஒழியும்	பசலைநிறமாயிருக்குமிருப்பு தவிர்ந்து நல்ல நிறமாம்படி (இவள்) ஸந்தோஷப்படுகிறாள்.
உரைக்கின்றாள்	வாய்விட்டுச் சொல்லுகிறாள்;		
பெண்மை என்?	இஃது என்ன பெண்மைக்குணம்?		

* * *—இப்பாட்டின் இரண்டாமடியில் "பெண்மையும் தன்னுடை" என்று பாடம் வழங்கி வருகின்றது; இப்பாடத்திற்குப் பொருளுமில்லை, வியாக்கியானத்தோடு சேர்த்தியுமில்லை; பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியானங் காண்மின்—"பெண்மை—ஸ்த்ரீத்வம்; அதாகிறது — ஏதேனும் தசையிலும் பிறந்தாலும் உயிர்த்தோழிக்குங்கூட மறைக்கும்படியிறே யிருப்பது; அவளும் இவளுடைய வ்யாபாரங்களைக்கண்டு 'இவளுக்கு ஓடுகிற தசை இதுவாகாதே' என்றறியுமித்தனையிறே. ஆயிருக்க, பெற்றதாயான எனக்கும் வாய்விடாநின்றாள்; இவளுக்கு என்ன பெண்மை? என்கிறாள்."—இந்த வியாக்கியான ஸ்ரீஸூக்திக்குச் சேர;

"பெண்மை என் ?" என்றே பாடம் கொள்ளத்தக்கது ; இப்பாடமே கற்றுணர்ந்த பெரியோர் ஆதரிப்பதும். 'கண்ணனூர் கண்ணபுரந் தொழுங் காரிகை தன்னுடை உண்மை உரைக்கின்றாள் ; பெண்மை என் ?' என்று அந்வயிப்பது. சௌரிப்பெருமாள் எழுந்தருளியிருக்குமிடமான திருக்கண்ணபுரத்தை நோக்கி அஞ்ஜலி செய்கின்ற இப் பெண்மகள் அந்த காயிக வ்யாபாரத்தோடு நில்லாமல் தன்னெஞ்சில் ஓடுகின்ற எண்ணங்களைச் சிறிதும் ஒளிக்காமல் உள்ளது உள்ளபடியே என் பக்கலில் வாய்விட்டுச் சொல்லுகின்றாள் ; ஒன்றையும் மறைக்காமல் வெட்டவெளிச்சமாக வெளியிடுதற்குரிய உயிர்த்தோழியிடத்தும் ஒளித்தேதீர வேண்டும்படி மருமமான வார்த்தைகளையும் என்னிடத்தில் கூசாதே வாய்விட்டுச் சொல்லுகின்றாளே இவள் ; இஃது என்ன பெண்மை ?—பெண்மைக் குணத்திற்கு இது தகுதியோ ? என்கிறாள். தன்னுடை யுண்மை யுரைக்கின்றாள்= "வடவரை நின்றும் வந்து இன்று கணபுர மிடவகை கொள்வது யாமென்று பேசினள்" என்று மேற்பாட்டில் சொல்லுகையாலே அதுவே இதற்குப் பொருள் என்றுங் கொள்ளலாம். திருவேங்கட மலையில் நின்றும் திருக்கண்ணபுரத்திலே நித்யவாஸம்பண்ண வந்திருக்கிறேனென்பதாகத் தன்னுடைய உண்மையை உரைக்கின்றாள் என்க.

[வெண்ணெ யுண்டாப்புண்ட வண்ணம் விளம்பினல் வண்ணமும் பொன்னிறமாவ தோழியு"ம.] இப்பெண்மகள் பிரிவாற்றாமையாலே உடம்பு வெளுத்து வருந்திக் கிடக்கச் செய்தே, எம்பெருமான் பக்கலில் இவளுடைய அநுராகத்தை மாற்றுவதற்காக 'அவனுடைய தீம்புகளையும் அவன் பட்ட பரிபவங்களையும் எடுத்துரைத்தோமாகில் தன்னடையே அவனிடத்தில் இவளுக்கு வெறுப்பு உண்டாகிவிடும்' என்றெண்ணிய சிலர், "கண்ணனும் கண்ணன், என்ன கண்ணன் ! ; வெண்ணெய் திருடுவதும் எளியார் கையிலே பிடிபடுவதும் உரலோடு தாம்பினல் பிணிப்புண்டு ஏங்கிக்கிடப்பதும் இவையன்றோ அவனுடைய திவ்ய கீர்த்திகள் !" என்று ஏச்சாகச் சில சொல்லுவர்கள் ; அவன் பக்கலில் இவளுக்கு வெறுப்பையுண்டாக்குவதற்காகச் சொல்லும் இவ்வார்த்தைகள்தானே அந்தோ ! உவப்புக்கு எருவிட்டாற்போலே ஆகின்றன : 'அவாப்தஸமஸ்தகாமனானவன் குறைவாளரைப்போலே வெண்ணெயுண்ண ஆசைப்படுவதே !' அந்த வெண்ணெய்தானும் தன் மனையிலே ஏராளமாகக் கிடைக்கலாயிருக்கச் செய்தேயும் அது பிறருடையதா யிருக்கவேணுமென்றும் அது தன்னையும் களவு வழியிலே ஸம்பாதித்து உண்ணவேணு மென்றும் விரும்பிக் களவு செய்வதே!; அது செய்யினும் ஸாமர்த்தியமாய்ச் செய்து ஜரிப்பித்துக் கொள்ளவல்ல சக்தியிருக்கச் செய்தேயும் அஸமர்த்தரைப் போலே வாயது கையதாக அகப்பட்டுக் கொண்டு கண்ணிநுண் சிறுத்தாம்பினல் கட்டுண்டு அழுது ஏங்கிக்கிடப்பதே !; அஹஹ ! இத்தனை ஸௌலப்ய ஸௌசீல்யகுணம் வாய்ந்தவொரு பெருமானையன்றோ நாம் ஆசைப்படப்பெற்றோம்!;, நம்முடைய பாக்யமே பாக்யம் !; அவனுடைய ஸம்ச்லேஷம் நமக்குக் கிடையா தொழியினுமொழிக; இப்படிப்

பட்ட மஹாவிடத்தில் நாம் ஆசைப்படப் பெற்றதே நமக்கு எல்லாப் பேறும் கிடைத்தபடியாகுமன்றோ? என்று சொல்லி அவனுடைய திருமேனியோடே அணையப் பெற்றால் பிறக்கக்கூடிய ஸந்தோஷ நிலைமையைப் பெறுகின்றாளிப் பெண்பிள்ளை—என்றாளாயிற்று.

"அவாப்த ஸமஸ்தகாமனானவன் ஒருத்தியுடைமையை ஆசைப்படுவதாம்; ஸர்வ சக்தியானவன் கள்விலே இழிவதாம்; அதுதன்னிலும் அகப்பட்டுக் கட்டுண்ணும்படி எளியனாவதாம்; இனி நமக்கொரு குறையுண்டோ வென்கிறாள்" என்ற பரமபோக்யமான வியாக்கியான ஸ்ரீஸூக்திகாண்மின்.

வண்ணமும் பொன்னிறமாவதொழியுமே = பெண்டிர்க்குப் பிரிவாற்றாமையினால் தோன்றும் பசலைநிறம் பொன்னிற மெனப்படும்; அது வ்யஸநத்திற்கு ஸூசகம்; அந்த நிறம் ஒழிந்ததென்றால் ஸந்தோஷமுண்டாயிற் றென்றபடியாம். அவனுடைய திருக்குணங்களைப் பிறர் ஏச்சாகச் சொன்னாலும் 1 'கற்றினம் மேய்க்கவும் மேய்க்கப்பெற்றான் காடுவாழ் சாதியுமாகப் பெற்றான், பற்றி உரலிடை ஆப்பு முண்டான் பாவிகாள் உங்களுக்கு ஏச்சுக்கொலோ?' என்னும் மெய்யன்புடையளாதலால் அந்த திவ்ய கீர்த்தி செவிப்பட்ட மாத்திரத்திலும் அவனோடு தனக்குக் கலவி நேர்ந்ததாகவே கொண்டு வைவர்ணியம் மாறப்பெற்றாளென்க. (ரு)

**வடவரை நின்றும் வந்து * இன்று கணபுரம்
இடவகை கொள்வது யாமென்று பேசினள் *
மடவரல் மாதரென் பேதை யிவர்க்கிவள்
கடவதென்? * கண்டுயி லின்றிவர் கொள்ளவே.** (சு)

வடவரை நின்றும் வந்து	'வடக்குத் திருமலையில் நின்றும் புறப்பட்டு வந்து	இன்று	இன்றைக்கு
இன்று	இப்போது	கண் துயில்	(இவளுடைய) கண்ணுறக்கத்தை
கணபுரம்	திருக்கண்ணபுரத்தை	கொள்ள	கொள்ளை கொள்வதற்கு,
இடவகை கொள்வது யாம்	இருப்பிடமாகக் கொண்டிருப்பது நாமே'	மடவரல்	மடப்பமென்னும் குணத்தை யுடையவளும்
என்று பேசினள்	என்று (சௌரிப் பெருமானோடு ஐக்கியமாகத் தன்னைச்) சொல்லிக்கொண்டாள்;	மாதர்	விரும்பப்படுமழகை யுடையவளுமான
		என் பேதை இவள்	என்சிறுமியாகிய இவள்
இவர்	இந்த சௌரிப்பெருமான்	இவர்க்கு கடவது என்	இப்பெருமாளுக்குக் கடமைப்பட்டவிதம் என் கொல்!.

* * *— அநுகாரத்தாலே தரிப்பது என்று ஒன்றுண்டு. பண்டு திருவாய்ப்பாடியிற் பெண்கள் கண்ணபிரானைப் பிரிந்து ஆற்றமாட்டாமல் மாமியார் மாமனார் முதலானாருடைய காவலையுங் கடந்து யமுனையாற்றின் கரையிலே அப்பிரானை

1 நாச்சியார் திருமொழி 12-8.

அநுபவிப்பதாக வந்தவளவிலே அங்கு அவனைக் காணாமல் முன்னிலும் ஆற்றாமை விஞ்சி, ஏதேனுமொருபடியாலே தரிக்கப் பார்த்து "ஏஷ காளிய! திஷ்டாத்ர க்ரூரேக்ஷண ஹரி இவாவரா துஷ்ட காளிய! திஷ்டாத்ர க்ருஷ்ணோஹமிதி சாபரா" இத்யாதிப்படியே, 'அடா காளியனே! நில்; நான் கண்ணன்; உன்மேலேறித் துவைத்து நர்த்தனம் செய்யப்போகிறேன்' என்றும் மற்றும் பலவிதமாகவும் கண்ணபிரான் போலவே தங்களை அநுகாரஞ் செய்துகொண்டு பேசித் தரித்தார்கள்; நம்மாழ்வாரும் திருவாய்மொழியில் "கடல் ஞாலஞ் செய்தேனும் யானே யென்னும்" என்று தொடங்கிப் பத்துப் பாசுரங்களாலே தம்மை எம்பெருமானாகப் பேசித் தரித்தார். அந்த நிலைமை பரகாலநாயகிக்கும் நிகழ்கின்றமை இப்பாசுரத்தில் விளங்கும். மற்றை ஆழ்வார்களிற் காட்டிலும் இவ்வாழ்வார்க்கு அர்ச்சாவதாரத்தில் ப்ராவண்யம் அளவற்றதானமையாலே இவ்வநுகாரமும் அர்ச்சாவதார விஷயமாகவே செல்லுகின்றது. வடக்குத் திருமலையாகிய திருவேங்கட மலையில் வாஸத்தைவிட்டுக் கிறை வீடாகிய திருக்கண்ணபுரத்திலே நித்யவாஸம்பண்ண இன்று இங்கு வந்து சேர்ந்திருக்கிறோம் யாம் என்று தன்னைச் சௌரிப்பெருமாளாகவே சொல்லிக்கொள்ளுகிறாள் என்பதைத் திருத்தாய் விளம்புகின்றாள்,

இச்சிறுமியை இப்பாடு படுத்துதல் ஈச்வரனுக்குத் தகாது என்கிறாள் பின்னடிகளில். இதற்கு முந்தின க்ஷணம்வரையில் பந்துவர்க்கங்களின் சொல்வழுது நடந்துகொண்டிருந்தவளும் மிகச் சிறிய பருவமுள்ளவளும் அழகிற் சிறந்தவளுமான இவளை இங்ஙனே கண்ணுறக்கங் கெட்டு வருந்தவைப்பது அவர்க்கு ப்ராப்தமோ? என்கிறாள். .... (௬)

தரங்கநீர் பேசினும் தண்மதி காயினும் *
இரங்குமோ? எத்தனை நாளிருந் தேள்கினாள்? *
துரங்கம்வாய் கீண்டுகந்தானது தொன்மையூர் *
அரங்கமே யென்ப திவள்தனக் காசையே. (௭)

தரங்கம் நீர் { திரைக்கிளர்ச்சியை யுடைய கடல்
பேசினும் — கோஷம் செய்தாலும்
தண் மதி — குளிர்ந்த சந்திரன்
காயினும் — காய்ந்தாலும்
(இவள்)
இரங்குமோ { இளைப்பளோ? (இளைக்கமாட்டாள்.) (ஏனென்னில்)
எத்தனை நாள் இருந்து எள்கினள் { நெடுநாளே பிடித்தும் (இவற்றிலே) ஈடுபட்டிருக்கிறாளன்றே.

துரங்கம் { குதிரை வடிவாக வந்த அசுரனுடைய
வாய் — வாயை
கீண்டு — கிழித்தெறிந்து
உகந்தானது — மகிழ்ந்த பெருமானுடைய
தொன்மை ஊர் — அநாதி திவ்யதேசமாகிய
அரங்கம் என்பதே { திருவரங்கம் என்று சொல்லிக் கொண்டிருப்பதே
இவள் தனக்கு ஆசை { இவளுடைய ஆசையாயிருக்கிறது.

* * *—கீழ்ப்பாட்டில், 'இச் சிறுமியின் கண்ணுறக்கத்தைக் கொள்ளை கொள்வதற்கு இவர்க்கு என்ன ப்ராப்தியுண்டு?' என்ற திருத்தாயை நோக்கிச் லசிபெண்டுகள் 'இப்படி நீ சொல்லலாகுமோ? அவர்க்கு ஏன் ப்ராப்தியில்லை; அப்ராப்தஸ்தலத்திலே அவர் தம் செங்கோல் செலுத்துகிறாரல்லர்; உன் மகள் விஷயமாக நீயே சொல்லுகிற வார்த்தைகளினால் இவளுடைய மனமொழி மெய்களாகிற த்ரிகரணமும் அவர் விஷயத்திலே படிந்தனவாக விளங்காநின்றது; 'கார்க்கடல் வண்ணர்மேலெண்ணமிவட்கிது வென்கொலோ' என்றாயாகையாலே இவளுடைய சிந்தை அவர் திறத்தே படிந்ததென்று விளங்கிற்று; 'கண்ணபுரமென்று பேசினளாருகின்றன்' என்றாயாகையாலே இவளுடைய பேச்சும் அவர் திறத்தே படிந்ததென்று விளங்கிற்று; 'கண்ணபுரந் தொழும்' என்றாயாகையாலே இவளுடைய காயிக வ்யாபாரமும் அவர் திறத்தே படிந்ததென்று விளங்கிற்று; ஆக, சிந்தையாலுஞ் சொல்லாலுஞ் செய்கையினாலும் இவள் அவரையே விஷயீகரித்திருக்கின்றாள் என்னவேண்டியிருக்கும்போது 'மடவரல் மாதரென் பேதையிவர்க்கிவள் கடவதென் கண்டுயிலின்றிவர் கொள்ளவே' என்று எங்ஙனே சொல்லலாம்? அவரோடும் இவளோடும் கொள்கொடையற்றோ இருக்கிறது? இது கிடக்கட்டும்; உன் மகள்தான் இக்கஷ்டங்களையெல்லாம் பொறுத்திருக்க சக்தியுடையவள்தானோ? என்று கேட்க, அதற்கு மறுமொழி கூறுவது போன்றதாம் இப்பாசுரம்.

தாங்கரீர் பேசினும் தண்மதிகாயினும் இரங்குமோ=கடல் கோஷித்தலும் நிலாக்காய்தலும் விரஹிகளுக்கு மிக்க இளைப்பை உண்டாக்குமாயினும் அவற்றுக்கெல்லாம் இவள் இளைக்கின்றிலள். அதற்குக் காரணமென்னென்னில்; **எத்தனைநாளிருந்தெள்கினள்**=நெடுநாளாக அடிபட்டுக் காய்ப்பேறினவனுக்குப் பின்னையும் அடிபடுதல் லக்ஷியமோ? இவள் நெடுநாளாகவே இக்கஷ்டங்களை அநுபவித்து வருகிறாளாகையால் இவை இவட்கு அலக்ஷியமாய் விட்டன என்கை. கீழ்ப்பாட்டில், 'மடவரல்மாதரென்பேதை' என்று சொல்லிவைத்து இப்பாட்டில் இப்படி சொல்லத் தகுமோவென்று ஒரு சங்கை தோன்றும்; ஒன்றுமறியாதவளென்றும் நேற்றுவரை பந்துவர்க்கங்களுக்கு உடன்பட்டு நடந்த சிறுமியென்றும், இன்றே இவட்கு இப்படிப்பட்ட அவகாஹம் உண்டாயிற்றென்றும் சொல்லுவதோடு இது முரண்படுமேயென்று சங்கிக்க வேண்டா; "அடதி யத்பவாநஹ்நி காநநம்—த்ருடி யுகாயதே த்வாமபச்யதாம்" என்றும் 2. "பலபல வூழிகளாயிடும்" 3. "ஒருபகல் ஆயிர மூழியாலோ" என்றும் சொல்லுகிறபடியே பிரிவுகாலம் பல்லூழியூழிகளாகத் தோன்றுமாதலால், மகளுடைய அப்படிப்பட்ட வசநவ்யக்திகளைக் கொண்டு சொல்லுகிறாள் தாய் எனக்கொள்க.

முன்னடிகட்கு வேறு வகையாகவும் பொருள் கூறலாம்;—'இரங்குமோ' என்பதை 'இரங்கும், ஓ' என்று வாக்ய பேதமாக்கி, கடல் கோஷித்தாலும் நிலாக்

1. கோபிகா கீதை. 2. திருவிருத்தம். 3. திருவாய்மொழி 10.3.1.

காப்ந்தாலும் இவள், இரங்கும்—வருத்தப்படுகின்றாள்; ஓ!—அந்தோ. எத்தனை நாளிருந்தெள்கினள்—இப்படி எத்தனை நாளாகக் கஷ்டப்படுவள் என்று.

விரோதிகளை யழிக்கவல்ல எம்பெருமான் நெடுநாளாக நித்யவாஸம்பண்ணுமிடமான திருவரங்கத்தை வாய் வெருவிக்கொண்டிருப்பதே இப்பெண்பிள்ளையின் ஆசையாயிருக்கின்றதென்பன பின்னடிகள்.

துரங்கம்வாய் கீண்ட வரலாறு:—கம்ஸனால் ஏவப்பட்ட அஸுரர்களில் கேசியென்பவன் குதிரையின் உருவத்தோடு ஆயர்கள் அஞ்சி நடுங்கும்படி. கனைத்துத் தூரத்திக்கொண்டு கண்ணபிரான்மேற் பாய்ந்துவர, அப்பெருமான் திருக்கையை நன்றாகப் பெருக்கி நீட்டி, அதன் வாயிற் கொடுத்துத் தாக்கிப் பற்களையுதிர்த்து உதட்டைப் பிளந்து அதனுடம்பையும் இருபிளவாக வகிர்ந்து தள்ளினன் என்பதாம்.

தரங்கம், துரங்கம்—வட சொற்கள். ... ... (எ)

தொண்டெலாம் நின்னடியே தொழு துய்யுமா
கண்டு * தான் கணபுரந் தொழப் போயினள் *
வண்டுலாங் கோதையென் பேதை மணிநிறம்
கொண்டுதான் * கோயின்மை செய்வது தக்கதே. (அ)

தொண்டு எல்லாம்	ஸகல பக்தவர்க்கங்களும்	வண்டு உலாம் கோதை	வண்டுகள் உலாவப்பெற்ற மயிர்முடியை யுடையளான
நின் அடியே	உனது திருவடிகளையே	என் பேதை	என் குழந்தையினுடைய
தொழுது	ஸேவித்து	மணி நிறம் கொண்டு	அழகிய மேனி நிறத்தைக் கொள்ளைகொண்டு
உய்யும் ஆ கண்டு	உஜ்ஜீவித்துப் போவதைப் பார்த்து	தான்	ஸ்வாமியாகிய நீ
தான்	இவளும்	கோயின்மை செய்வது	அநியாயம் பண்ணுவது
கணபுரம்	திருக்கண்ணபுரத்தை	தக்கதே	தகுதியோ ?.
தொழ	ஸேவிப்பதற்கு		
போயினள்	சென்றாள்;		

* * *—தொண்டு எல்லாம்—தொண்டர் எல்லாரும் என்றபடி. பக்தர்களாயிருப்பவர்களெல்லாரும் திருக்கண்ணபுரத் தெம்பெருமானை அடிபணிந்து உஜ்ஜீவித்துப் போகிறார்களென்பதை யுணர்ந்து தானும் அப்படி உஜ்ஜீவித்துப் போக ஆசை கொண்டு திருக்கண்ணபுரம் தொழுதாள் இவள்; இப்படி அநர்த்தப்படப் போகிறோமென்று அறிந்திருந்தாளாகில் திருக்கண்ணபுரமுள்ள திக்கையும் நோக்கியிருக்கமாட்டாள்; உஜ்ஜீவிக்க வென்று வந்து தொழுதவளை இப்படி மேனி நிறமழியச் செய்து அநீதியானவற்றைச் செய்வது ஸர்வேச்வரனென்று பெயர் சுமந்திருப்பார்க்குத் தகுமோ ? என்கிறாள் திருத்தாய்.

“ ஆர்த்தோ ஜிஜ்ஞாஸுரர்த்தார்த்தீ ஜ்ஞாநீ ச ஸுக்ருதிநோ பக்தா

ஹஜெ ஊ ம—ஆர்த்தோ ஜிஜ்ஞாஸுரர்த்தார்த்தி ஜ்ஞாநீச பரதர்ஷப-சதுர்விதா

பஜந்தேமாம்'' என்று கீதையி லருளிச்செய்தபடியே, இழந்த செல்வத்தை மீண்டும்பெறவிரும்புகின்ற ஆர்த்தர்கள், புதிதாகச் செல்வம்பெறவிரும்புகின்ற அர்த்தார்த்திகள்' கைவல்யபோகத்தை விரும்புகின்ற ஆத்மப்ராப்திகாமர்கள், பகவதநுபவத்தையே விரும்புகின்ற ஞானிகள்—ஆகிய நான்கு வகை யதிகாரிகளும் எம்பெருமானை உபாஸித்துப் பேறு பெறுவதைக் கண்டவிவள் தானும் தன் அதிகாரத்திற்குத் தகுதியாகத் தொழுது உய்யலாமென்று திருக்கண்ணபுரந் தொழப்போனாள்; இவளுடைய அழகு எப்படிப்பட்டது? [வண்டலோங்கோதை யென் பேதை] இவள் மயிரை முடித்துப் பூவைச்சுற்றிவிட்டால் மதுவில் நசையாலே வண்டுகள் மேலே சுழலமிடும். [பேதை] அந்த வண்டுகளுக்கு அஞ்சி உள்ளே வந்து புகும்பருவமுடையவள்.

[மணிநிறங்கொண்டு தான்]* தம்மையே நாளும் வணங்கித் தொழுவார்க்குத் தம்மையே யொக்க அருள் செய்கையன்றோ முறைமை; தான் நன்மணி வண்ணனாயிருக்க, இவளுடைய மணிநிறத்தைக் கொள்ளை கொள்ளத் தகுதியுண்டோ? [கோயின்மை செய்வது தக்கதே] ராஜநீதியில்லாதார் செய்வதை நீர் செய்யக் கடவீரோ? இழந்தவற்றை மீட்டுக்கொடுக்கை யன்றோ அரசர்கட்கு முறைமை; ராஜாக்களே வழிபறிக்கை நீதியோ? என்கிறாள்.

[கோயின்மை] கோ—அரசன்; இன்மை—இல்லாமை; கேட்பாரற்ற அநீதிச்செயல் என்றபடி. .... (அ)

முள்ளெயி றேய்ந்தில கூழை முடிகொடா *
தெள்ளிய ளென்பதோர் தேசிலள் என்செய்கேன் *
கள்ளவிழ் சோலைக் கணபுரம் கைதொழும்
பிள்ளையை * பிள்ளையென் றெண்ணப் பெறுவரே. (கூ)

முள் எயிறு	முளைக்கின்ற பற்களும்	என் செய்கேன்	(இப்படிப்பட்ட இவள் விஷயத்தில்) நான் என்ன செய்வேன்!
ஏய்ந்தில	கிரம்பவில்லை;	கள் அவிழ் சோலை	மது பெருகுகின்ற சோலைகளையுடைய
கூழை	கூந்தலும்	கணபுரம்	திருக்கண்ணபுரத்தை
முடி கொடா	எடுத்து முடிக்கப் போரும்படி வளர்ந்தனவில்லை;	கை தொழும்	கையெடுத்து வணங்குகிற
தெள்ளியள் என்பது ஓர் தேசு இலள்	விவேகமுடையவள் என்று சொல்லும்படியான தேஜஸ்ஸை உடையவளல்லள்;	பிள்ளையை	பிள்ளையை
		பிள்ளை என்று எண்ணப் பெறுவரே	பிள்ளையென்று நினைக்கலாகுமோ? [கௌரவிக்கப்ராப்தியுண்டிறே.]

* * *—" முலையிலங்கு பூம்பயலை முன்போட அன்போடியிருக்கின்றாளால்" என்று சொன்ன திருத்தாய்தானே இப்போது "முள்ளெயிறேய்ந்தில கூழை முடிகொடா, தெள்ளிய ளென்பதோர் தேசிலள்" என்றால், இஃது என்?; பாகால நாயகியெளவன பருவத்தை யடைந்திருப்பதாகப் பல பாசுரங்களால் விளங்கா

நிற்க, இன்னம் பற்களும் முளைக்கவில்லை யென்றும், மயிரும் சேர்த்து முடிக்கலாம்படி கூடினவில்லை யென்றும் இங்கே சொல்வது பொருந்துமாறு எங்ஙனே? எனின்; உண்மையில் இவள் யௌவன பருவத்தை யடைந்தவளே ; ஆயினும் தாய்க்கு அன்பு மிகுதியால் இவளது மிக்க இளமையே தோற்றுவதென்க.

1. "செய்ய நூலின் சிற்றாடை செப்பனுடுக்கவும் வல்லளல்லள்" 2. "வாயிற் பல்லு மெழுந்தில மயிரும் முடி கூடிற்றில,......மாயன் மாமணிவண்ணன் மேலிவள் மாலுறுகின்றாளே" 3. "கொங்கையின்னங் குவிந்தெழுந்தில" 4. "முலையோ முழுமுற்றும் போந்தில மொய்பூங்குழல் குறிய, கலையோ அரையில்லை நாவோ குழறும்" இத்யாதி பாசுரங்களோடு ஒப்பிடுக.

இப்படி இளம்பருவமுடையளான இவளை நான் எப்படி நியமிப்பேன் என்கிறாள் என் செய்கேன் என்று. இவளை நான் நியமிப்பேனோ, அன்றி அநுவர்த்திப்பேனோ என்கிறாள். இத்தனை சிறு பிராயத்தில் உனக்கு இவ்வளவு ப்ராவண்யம் கூடாது என்று இவளை அடக்குவேனோ, அன்றி, இத்தனை சிறு பிராயத்திலேயே பகவத் விஷயத்தில் அவகாஹிக்கப் பெற்ற இவள் ஸாமாந்யமானவளல்லள், விண்ணுளாரிலும் சீரியள் என்று கொண்டு இவளைக் கைகூப்பி வணங்குவேனோ என்கிறாள்.

இங்ஙனே அலைபாய்ந்த நெஞ்சு ஒரு முடிவுக்கு வந்தமையைப் பின்னடிகளில் வெளியிடுகிறாள். திருக்கண்ணபுரத்தைக் கைதொழும்பிள்ளை நம் வயிற்றில் பிறந்த சிறு பிள்ளையேயாகிலும் ஈடுபட்ட விஷயத்தின் பெருமையையன்றோ நோக்கவேணும்; இவளது சிறுமையால் வரும்குற்றமேது? சிறுமையில்தானே இப்படிபகவத் விஷய ப்ராவண்யமும், உகந்தருளின நிலத்தில் ஊற்றமும் உண்டாகப் பெற்றதே! ; ஆகையாலே இவளை நியமிக்கப் பாராமல் அநுவர்த்திப்பதே நன்று என்றாளாயிற்று. "விளங்கொளியை மரதகத்தைத் திருத்தண்காவில் வெஃகாவில் திருமாலைப்பாடக் கேட்டு, வளர்த்ததனால் பயன் பெற்றேன் வருக வென்று மடக்கிளியைக் கைகூப்பி வணங்கினாளே" என்றது திருநெடுந்தாண்டகத்தில்.

கூழை—தலைமயிர். தேள்ளியள்—தெளிந்து வார்த்தை சொல்லவல்லவள். தேசு—தேஜஸ். எண்ணப் பெறுவரே=நெஞ்சால் நினைத்தாலும் ப்ராயச் சித்தம் செய்துகொள்ள வேணுமே யென்றவாறு. .... (௯)

கார்மலி கண்ணபுரத்தெம்மடிகளை *
பார்மலி மங்கையர்கோன் பரகாலன்சொல் *
சீர்மலி பாட லிவைபத்தும் வல்லவர் *
நீர்மலி வையத்து நீடு நிற்பார்களே. (௧௦)

1. பெரியாழ்வார் திருமொழி 3-7-1.
2. ஷை 3-7-2.
3. ஷை 3-7-3.
4. திருவிருத்தம் 60.

கார் மலி	மேகங்கள் நிறைந்திருக்கப் பெற்ற
கண்ணபுரத்து	திருக்கண்ணபுரத்தி லெழுந் தருளியிருக்கிற
எம் அடிகளை	எம்பெருமானைக் குறித்து
பார் மலி மங்கையர் கோன் பரகாலன்	இப்பூமியெங்கும் புகழ் மிக்க திருமங்கையாழ்வார்
சொல்	அருளிச்செய்த
சீர் மலி	பகவத்குணங்கள் நிறைந்த
பாடல்	பாசுரங்களாகிய
இவை பத்தும்	இத்திருமொழியை
வல்லவர்	கற்றுணரவல்லவர்கள்
நீர் மலி	கடல்சூழ்ந்த
வையத்து	இப் பூமண்டலத்திலே
நீடு	நீண்டகாலம்
நிற்பார்கள்	நிலைநிற்கப் பெறுவர்.

* * *—மேக ஸஞ்சாரம் மாறாத திருக்கண்ணபுரத்தி லெழுந்தருளியிருக்கும் சௌரிப்பெருமாள் விஷயமாகத் திருமங்கையாழ்வா ரருளிச்செய்த இத்திருமொழியைக் கற்றுணரவல்லவர் கடல்சூழ்ந்த பூமியிலே நெடுங்காலம் வாழப் பெறுவர் என்று பயனுரைத்ததாயிற்று.

* ஈற்றடியின் வியாக்கியானத்தில் பெரியவாச்சான் பிள்ளை அருளிச்செய்கிறார் காண்மின்:—"இது கற்றார்க்குப் பலன் ஸம்ஸாரத்திலிருக்கையோ வென்னில், பரமபதத்திலே 'தெள்ளியீர்' இல்லையே; தெள்ளியீருள்ளது இங்கேயன்றோ. 'ஹாவொ நாநுஶ்ரு மஹுதி—பாவோ நாந்யத்ர கச்சதி' என்று திருவடி ராமகுணங்களைக் கேட்டு அத்தாலே பூர்ணனாய் அத்தேசத்தேயிருந்தாப்போலே தெள்ளியீரை இங்கே பாடக்கேட்டுப் பூர்ணரா யிருக்கப்பெறுவர்கள்"—என்று. (அதாவது) இவ்வருளிச் செயலைக் கற்பவர்கள் இருள் தருமா ஞாலத்தி லிருப்பொழிந்து நலமந்தமில்லதோர் நாடுபுகுவர் என்று பயனுரைக்க வேண்டியிருக்க 'நீர்மலி வையத்து நீடு நிற்பார்களே' என்று இக்கொடுவுலகத்திலிருப்பையே பயனாகவுரைக்கத் தகுமோ வென்று சங்கை; (இதற்கு ஸமாதானம்.) 'தெள்ளியீர் தேவர்க்குந் தேவர் திருத்தக்கீர்' என்று தொடங்கிப் பரமபோக்யமாய்த் தேனும் பாலும் நெய்யுங் கன்னலு மமுது மொத்தாற்போலே அருளிச் செய்யப்பட்ட இத்திருமொழி பரமபதத்திலே அநுபவிக்கக் கிடைப்பரிதாகையாலே, ஸ்ரீராம கதைகளை அநுபவிக்க ஆசைகொண்ட அனுமான் பரமபதத்தை இகழ்ந்து இந்நிலத்திலிருப்பையே உகந்தாப்போலே இத்திருமொழி நடையாடு மிந்நிலத்தில் இருப்பே ஸ்ரீவைஷ்ணவர்கட்குப் பரமோத்தேச்யமாயிருக்குமென்று கொண்டு ஆழ்வார் இங்ஙனே பயனுரைத்தது பொருந்துமென்க. .... (௧0)

அடிவரவு:—தெள்ளியீர், நீணிலா, அருவி, உண்ணும், கண்ணன், வடவரை, தாங்கம் தொண்டு, மூன், கார், கரை.

இரண்டாந்திருமொழி உரை முற்றிற்று.

ஜீயர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

எட்டாம்பத்து—மூன்றாந் திருமொழி,

கரையெடுத்த சுரிசங்கும்.

உரையவதாரிகை:—கீழ் இரண்டு திருமொழிகளும் தாய்ப் பேச்சாய்ச் சென்றன; இத்திருமொழி மகள் பேச்சாய்ச் செல்லுகிறது. கீழ்த்திருமொழியில் "கைவளை கொள்வது தக்கதே" என்று சௌரிப் பெருமாளை நோக்கித் திருத்தாயார் சொல்லக்கேட்ட தலைமகள் உணர்ந்து தன் கையை நோக்கினாள்; கையில் வளைகளைக் கண்டிலள்; அந்தோ! வளையிழந்தேனே யென்று ஒருகால் சொன்னாற்போலே ஒன்பதின்கால் சொல்லிக் கதறுகின்றாள்.

திருக்கண்ணபுரத் தெம்பெருமானை ஸம்ச்லேஷித்து அநுபவிக்கப் பெறாத பிரிவாற்றாமைக்குப் பரக்கப் பாசுரமிடுகிறபடி.

கரையெடுத்த சுரிசங்கும் கனபவளத் தெழுகொடியும் *
திரையெடுத்து வருபுனல்சூழ் திருக்கண்ண புரத்துறையும் *
விரையெடுத்த துழாயலங்கல் விறல்வரைத்தோள் புடைபெயர *
வரையெடுத்த பெருமானுக் கிழந்தேனென் வரிவளையே. (௧)

கரை எடுத்த	கோஷத்தையுடைத்தாய்
சுரி	வளைந்த
சங்கும்	சங்குகளையும்
கனம்	செறிந்திருக்கிற
பவளத்து	பவழங்களினுடைய
எழு	வளர்த்தியையுடைய
கொடியும்	கொடிகளையும்
திரை	அலைகளானவை
எடுத்து வரு	அடித்துக்கொண்டு வரப்பெற்ற
புனல்	ஜலத்தாலே
சூழ்	சூழப்பட்ட
திருக்கண்ண புரத்து	திருக்கண்ணபுரத்திலே
உறையும்	நித்யவாஸம் செய்தருள்பவனும்,
விரை எடுத்த	பரிமளம் மிகுந்த
துழாய் அலங்கல்	திருத்துழாய் மாலையை யணிந்ததாய்
விறல்	மிடுக்கையுடையதாய்
வரை	மலைபோன்றதான
தோள்	திருத்தோள்
புடை பெயர	அசையும்படியாக
வரை எடுத்த	கோவர்த்தனமலையை யெடுத்து (க்குடையாக)ப் பிடித்தவனுமான
பெருமானுக்கு	எம்பெருமானுக்கு
என் வரி வளை	எனது அழகிய வளைகளை
இழந்தேன்	இழந்துவிட்டேன்.

* * *—பண்டு இந்திரனால் இடையர்க்கும் இடைச்சியர்க்கும் ஆநிரைகட்கும் நேர்ந்த பெருமழைத் துன்பத்தை மலைக்குடை யெடுத்து நீக்கின ஆபத்பந்துவன்றோ; அது என்றைக்கோ நடந்தது என்று நினைக்கவேண்டாதபடி

இன்றைக்கும் அப்படிப்பட்ட திருக்குணங்களை விளங்கக்காட்டிக் கொண்டு திருக்கண்ணபுரத்தில் நித்ய ஸந்நிதி பண்ணியிருக்கிறானன்றோ; இப்படிப்பட்ட பெருமான் நம்மைக் கைவிடமாட்டானென்று நாம் விச்வஸித்து அவன் பக்கலிலே ஆசை வைத்ததற்குப் பலன் வளையிழக்கலாயிற்றே! என வருந்துகின்றாள் பரகால நாயகி.

"காவிரி நன்னதி பாயுங் கணபுரம்" என்பவாதலால் அக்காவிரி பெருகும்போது சங்குகளையும் பவழக்கொடிகளையும் அலைகளினால் திரட்டிக்கொண்டு வருகின்றதாம்; அப்படிப்பட்ட திருக்காவிரித் தீர்த்தத்தினால் சூழப்பட்டது திருக்கண்ணபுரம். .... (க)

அரிவிரவு முகிற்கணத்தா லகிற்புகையால் வரையோடும் *
தெரிவரிய மணிமாடத் திருக்கண்ண புரத்துறையும் *
வரியரவி னணைத்துயின்று மழைமதத்த சிறுதறுகண் *
கரிவெருவ மருப்பொசித்தாற் கிழந்தேனென் கனவளையே. (உ)

அரி	கறுப்பான து
விரவும்	கலந்துபரவப்பெற்ற
முகில் கணத்தால்	மேகக் கூட்டங்களாலும்
அகில் புகையால்	அகிற்புகைகளாலும்
வரையோடும் தெரிவு அரிய	மலையோடு வாசியறிய வொண்ணாத
மணி மாடம்	மணிமயமான மாளிகைகளையுடைய
திருக்கண்ணபுரத்து, உறையும்—;	
வரி	கோடுகளையுடைய
அரவு	ஆதி சேஷனாகிற
இன்	போக்யமான

அணை	படுக்கையிலே
துயின்று	சயனிப்பவனும்,
மழை மதத்த	மழைபோல் பெருகுகின்ற மத ஜலத்தையுடையதும்
சிறு தறு கண்	சிறுத்து வட்டணித்த கண்களையுடையதுமான
கரி	குவலயாபீட மென்னும் யானையானது
வெருவ	அஞ்சும்படியாக
மருப்பு	(அதன்) தந்தத்தை
ஒசித்தாற்கு	ஒடித்தொழித்தவனும் முன்னை பெருமானுக்கு
என் கனம் வளை	எனது பொன்வளைகளை
இழந்தேன்—.	

* * *—"ஏஷ நாராயணஃ ஸ்ரீமாந் க்ஷீரார்ணவநிகேதநஃ। நாகபர்யங்கமுத்ஸ்ருஜ்ய ஹ்யாகதோ மதுராம் புரீம்॥ = ஏஷ நாராயணஃ ஸ்ரீமாந் க்ஷீரார்ணவ நிகேதநஃ—நாக பர்யங்க முத்ஸ்ருஜ்ய ஹ்யாகதோ மதுராம் புரீம்" என்கிறபடியே திருப்பாற்கடலில் திருவனந்தாழ்வான்மீது சயனித்திருந்து அங்கு நின்றும் ஸ்ரீக்ருஷ்ணனாக வந்து அவதரித்து, கம்ஸனால் வில்விழவென்று வியாஜம் வைத்து அழைக்கப்பட்டு அரண்மனை வாசலிற் புகும்போது தன்னைக் கொல்வதற்காக மதமூட்டி நிறுத்தப்பட்டிருந்த குவலயாபீட மென்னும் யானையைக் கொன்றொழிக்கவேண்டி அதன் தந்தங்களையே பறித்து ஆயுதமாகக் கொண்டு கொன்றொழித்து மதுரையிற் பெண்களுக்குத் தன்னுடைய திவ்ய

மங்கள விக்ரஹத்தின் காட்சியை முற்றூட்டாகக் கொடுத்தருளின பெருமானன்றோ; அந்த மிடுக்கு இன்றைக்கும் விளங்குமாறு திருக்கண்ணபுரத்தில் நித்யஸந்நிதி பண்ணியிருப்பவனன்றோ; இப்பெருமான் நம்மைக் கைவிடமாட்டானென்று இவன் பக்கலிலே ஆசை வைத்ததற்குப் பலன் விளையிறக்கலாயிற்றே! என இரங்கிக் கூறுகின்றாள்.

காளமேகத் திரள்களாலும், அவ்வூரிலுள்ள செல்வம் மிக்கவர்கள் உண்டாக்குகிற அகிற்புகையாலும் உண்டான இருட்சியாலே மலைக்கும் மாடங்கட்கும் வாசி தெரிந்து கொள்ள வொண்ணாதபடியாய் ரத்னமயமான மாடங்களையுடைத்தான திருக்கண்ணபுரம் என்கிறது முன்னடிகளில்.

'ஹரி' என்னும் வடசொல் அரியெனத்திரிந்தது; அச்சொல் பலபொருள்களையுடையது; அவற்றுள் 'கறுப்பு நிறம்' என்னும் பொருள் இங்குக் கொள்ளப்பட்டது. கணம்—கண: என்ற வடசொல்திரிபு.

சிறு தறுகண் கரி—"வடிவிற் பெருமைக்கு ஈடாகப் பெருத்திருக்கையன்றிக்கே ஸங்குசிதமாம்படி சிறுத்து க்ரௌர்யமெல்லாம் தோற்றும்படி பார்க்கிற கண்களையுடைத்தாயிருந்துள்ள குவலயாபீடம்" என்பது வியாக்கியான ஸ்ரீஸூக்தி. 'தறுகண்மை' என்று அஞ்சாமைக்குப் பேராதலால் இங்குத் தறுகண் என்று முழுச்சொல்லாய் 'ஒருவர்க்கும் அஞ்சாதிருந்த யானை' என்று பொருள் கொள்ளலாமென்பர் சிலர்; அப்போது 'சிறு' என்பது அந்வயிக்க இடமில்லாமையால் 'செறு' என்று திருத்தவேணும்.

தறு—க்ரூரம். கரி—வடசொல். ... ... ௨)

துங்கமா மணிமாட நெடுமுகட்டின் சூலிகை * போம்
திங்கள் மாமுகில் துணிக்கும் திருக்கண்ணபுரத்துறையும் *
பைங்கண்மால் விடையடர்த்துப் பனிமதிகோள் விடுத்துகந்த *
செங்கண்மா லம்மானுக் கிழந்தேனென் செறிவளையே. (௩)

துங்கம்	உன்னதமாய்	பைங் கண்	பசுமை தங்கிய கண்களையுடைய
மா மணி	சிறந்த ரத்னங்களிழைக்கப் பெற்றதான	மால்	பெரிய
மாடம்	மாடமாளிகைகளினுடைய	விடை	எருதுகளை
நெடு முகட்டின்	நீண்ட உச்சியிலுள்ள	அடர்த்து	அழியச் செய்தவனும்
சூலிகை	சூலமானது	பனி	குளிர்ச்சியை இயல்வாக வுடைய
போம்	மேலே ஸஞ்சரிக்கின்ற	மதி	சந்திரனுடைய
திங்கள்	சந்திரனையும்	கோள்	க்ஷயத்தை
மா முகில்	பெரிய மேகங்களையும்	விடுத்து	போக்கி
துணிக்கும்	துண்டிக்கப் பெற்ற	உகந்த	திருவுள்ளமுவந்தவனும்
திருக்கண்ணபுரத்து, உறையும்—;		செம் கண்	புண்டரீகாக்ஷனுமிருக்கிற

மால் அம்மானுக்கு	ஸர்வேச்வரன் விஷயத்திலே
என்	என்னுடைய
செறி	கழலாதிருக்கத்தக்க
வளை	வளைகளை
	இழந்தேன்—.

* * *—நப்பின்னைப் பிராட்டியைப் புணர்வதற்கு விரோதியாயிருந்த விருஷபங்களேழையும் வலியடக்கி அவளை மணந்துகொண்ட பெருமானன்றோ; சந்திரனுடைய க்ஷயரோகத்தைப் போக்கி அவனை அநுக்ரஹித்த பெருமானன்றோ; இன்னமும் இங்ஙனே அநுக்ரஹஞ் செய்தருள்வதற்குத் திருக்கண்ணபுரத்தில் நித்யஸந்நிதி பண்ணியிருக்குமவனன்றோ; நப்பின்னைப் பிராட்டியைப் போலே நம்மையும் மணந்துகொள்வனென்றும் சந்திரனுடைய துயரைத் தீர்த்தாப்போலே நம்முடைய துயரையுந் தீர்ப்பனென்றுங் கருதி அப்பெருமான் திறத்தில் காதல்கொண்டதற்குப் பலன் வளையிழக்கலாயிற்றே! என்கிறாள்.

முன் ஒன்றரை யடியால் திருக்கண்ணபுரத்திலுள்ள திருமாளிகைகள் மேகமண்டலத்தளவும் ஓங்கியிருக்கின்றமை தெரிவிக்கப்படுகின்றது. மாடமாளிகைகட்குக் காப்பாக மேலே சூலங்கள் காட்டப்பட்டிருக்கும்; அவை மேலே ஸஞ்சரிக்கின்ற சந்திரனையும் மேகமண்டலத்தையும் கிழிக்கின்றனவாம்; இது அதிசயோக்தி. .... (௩)

துங்கம்—வடசொல்; சூலிகை—சூலம்.

கணமருவு மயிலகவு கடிபொழில்சூழ் நெடுமறுகில் *
திணமருவு கனமதிள்சூழ் திருக்கண்ண புரத்துறையும் *
மணமருவு தோளாய்ச்சி ஆர்க்கப்போயுரலோடும் *
புணர்மருத மிறநடந்தாற் கிழந்தேனென் பொன்வளையே. (௪)

கணம் மருவு	திரள்மிக்கிருக்குள்ள
மயில்	மயில்களானவை
அகவு	கூத்தாடப்பெற்ற
கடி பொழில் சூழ்	மணம்மிக்க சோலைகளாற் சூழப்பட்டதாய்
நெடு மறுகில்	பெரிய திருவீதிகளை யுடைத்தாய்
திணம் மருவு	திடம் பொருந்திய
கனம்	கனகமயமான
மதிள்	திருமதிள்களாலே
சூழ்	சூழப்பட்டதான

திருக்கண்ணபுரத்து, உறையும்—;

மணம் மருவு தோள் ஆய்ச்சி	பரிமளம் பொருந்திய தோள்களை யுடையளான இடைச்சி
ஆர்க்க	(தாம்பினால்) கட்ட
உரலோடும் போய்	உரலோடுகூடச்சென்று
புணர் மருதம்	இரட்டை மருதமரங்கள்
இற	இற்று முறிந்து விழும்படி
நடந்தாற்கு	நடைகற்ற பெருமானுக்கு

என் பொன் வளை இழந்தேன்—.

* * *—தயிர்பால் வெண்ணெய் முதலியவற்றைக் களவு செய்த குற்றத்திற்காக ஒரு அபலையின் கையினால் உரலோடு சேர்த்துக் கட்டப்பட்டு அசக்தரைப்போலே கிடந்தானே!, இப்படியும் ஒரு ஸௌலப்ய முண்டோ வென்றும், அப்படி கட்டுண்டு தளர் நடையிட்டுத் தவழ்ந்து செல்லும் பருவத்திலும்

இரட்டை மருதமரங்களை முறித்து அவற்றில் ஆவேசித்துக் கிடந்த அசுரரை வீழ்த்த வலிமை என்னே! என்றும் ஈடுபட்டிருந்ததே காரணமாக வளையிழக்கப் பெற்ற பரிதாபத்தை என் சொல்வேனென்கிறாள்.

புணர்மருதமிற நடந்த வரலாறு:—கண்ணன் குழந்தையாயிருக்குங் காலத்தில் துன்பப்படுத்துகின்ற பலவிளையாடல்களைச் செய்யக் கண்டு கோபித்த யசோதை கிருஷ்ணனைத் திருவயிற்றிற் கயிற்றினால் கட்டி உரலிலே பிணித்து விட, கண்ணன் அவ்வுரலை யிழுத்துக்கொண்டு தவழ்ந்து அங்கிருந்த இரட்டை மருத மரத்தின் நடுவே எழுந்தருளியபொழுது அவ்வுரல் குறுக்காய் நின்று இழுக்கப்பட்டபடியினாலே அம்மரங்களிரண்டும் முறிந்து விழுந்த வளவில், முன் நாரதர் சாபத்தால் அம்மரங்களாய்க் கிடந்த நளகூபரன் மணிக்ரீவன் என்னுங் குபேர புத்திரர் இருவரும் சாபம் தீர்ந்து சென்றனர். இந்தக் குபேரபுத்திரர்கள் முன்பு ஒரு காலத்தில் பல அப்ஸரஸ் ஸ்த்ரீகளுடனே ஆடையில்லாமல் ஜலக்ரீடை செய்து கொண்டிருக்கையில் நாரதமுனிவர் அங்கு எழுந்தருள, மங்கையர் அனைவரும் நாணங்கொண்டு ஆடை யெடுத்து உடுத்து நீங்க, இந்த [illegible]தர் மாத்திரம் மதுபான மயக்கத்தால் வஸ்த்ரமில்லாமலேயிருக்க, நாரதர் கண்டு கோபங்கொண்டு 'மரங்கள்போலிருக்கிற நீங்கள் மரங்களாவீர்' என்று சபிக்க, உடனே அவர்கள் வேண்டிக்கொண்டதற்கு இணங்கி 'நெடுங்காலஞ் சென்றபின்பு திருமால் உங்களருகு அணுகுஞ் சமயத்தில் இவ்வடிவ மொழிந்து முன்னையவடிவம் பெற்று மீள்வீர்' என்று சாபவிடை கூறிப்போயினர். இப்படி சாபத்தினால் மரங்களான இவற்றில் கம்ஸனால் ஏவப்பட்ட இரண்டு அசுரர்களும் ஆவேசித்துக் கிடந்தனர் என்பதும் சில புராணங்களிலுண்டு: 'பொய்ம்மாய மருதான வசுரரை' என்று பெரியாழ்வாரு மருளிச்செய்தார்.

மயில்கள் திரள்திரளாகக் கூத்தாடப் பெற்ற சோலைகளாற் சூழப்பட்டும் பெரிய திருவீதிகளையுடைத்தாயும் திடமான திருமதிளாற் சூழப்பட்டு மிருக்கும் திருக்கண்ணபுரம்.

கணம்-மணி. அகவுதல்—கூத்தாடுதல்; 'கேகா' என்று மயில்கள் சப்திக்கின்ற ஒலிக்கும் பெயருண்டு. மறுகு—வீதி. திண்ம='திண்ணம்' என்பதன் தொகுத்தல். கனம்='வந' என்னும் வடசொல்லின் விகாரமுமாகலாம்; கநக மென்னும் வடசொல்லின் சிதைவுமாகலாம்.

மணமருவு தோளாய்ச்சி='ஸர்வகந்த:' என்ற உபநிஷத்தின்படியே பரிமளமே வடிவெடுத்தவனை கண்ணபிரான் அநவரதமும் யசோதைப் பிராட்டியின் தோளைக் கட்டிக்கொண்டு கிடப்பனிறே. .... (௪)

வாயெடுத்த மந்திரத்தா லந்தணர்தம் செய்தொழில்கள் *
தீயெடுத்து மறைவளர்க்குந் திருக்கண்ண புரத்துறையும் *
தாயெடுத்த சிறுகோலுக் குளைந்தோடித் தயிருண்ட *
வாய்துடைத்த மைந்தனுக் கிழந்தேனென் வரிவளையே. (ரு)

அந்தணர்	பிராமணர்கள்
வாய் எடுத்த மந்திரத்தால்	உரக்க உச்சரிக்கப்படுகிற மந்திரங்களைக்கொண்டு
தம் செய் தொழில்கள்	தாங்கள் செய்யும் அநுஷ்டானமாகிய
தீ எடுத்து	அக்நிகாரியங்களைக் குறையறச் செய்து
மறை வளர்க்கும்	வேதமரியாதையை ஓங்கச் செய்யுமிடமான

திருக்கண்ணபுரத்து, உறையும்—;

தாய் எடுத்த	தாயான யசோதைப்பிராட்டி கையிலெடுத்த
சிறு கோலுக்கு	சிறியதடிக்கு
உளைந்து ஓடி	அஞ்சி ஓடிச்சென்று
தயிர் உண்ட வாய் துடைத்த	தயிரை அமுதுசெய்த வாயைத்துடைத்த
மைந்தனுக்கு	ஸ்வாமிக்கு

என் வரி வளை இழந்தேன்—.

* * *— வேதமந்திரங்களைக் கொண்டு அந்தணர்கள் அக்நி காரியங்கள் செய்து வேதமரியாதையை நடத்திப் போரும்படியான திருக்கண்ணபுரத்தில் எழுந்தருளியிருப்பவனும், முன்பு க்ருஷ்ணாவதாரத்தில் தான் செய்த தீம்புகட்குச் சீற்றங்கொண்ட யசோதைப் பிராட்டி அடிப்பதாகக் கையிற் கோலை யெடுக்க, அதற்கு அஞ்சி ஓடுமளவிலே எதிர்ப்படுமவர்கள் வாயில் தயிருண்ட சுவடு இருப்பதைக் காட்டி, 'நீ தயிர் களவு கண்டாயன்றோ' என்பர்களே யென்று அதை மறைக்க வேண்டி அத் தயிர்ச்சுவடுதன்னைத் துடைக்கப் புகுந்து தயிரை முகம் முழுதும் தடவிக்கொண்ட பரமமுக்தனுமான பெருமானுடைய அக்குணத்திலே யீடுபட்டு வளையிழந்தே னென்கிறாள்.

'தயிருண்ட வாய்துடைத்த மைந்தன்' என்ற விடத்து, "யஶோதா நாத! நவநீதகலேபஸம் ததாதி நாய யதி தே திராவிரா வஸீக:। கிம் முக்த! திக்தமநா காரபல்லவம் தே ஹாஸ்ரே ஷஷ்ட்ய நிர காஞ்சி நிவிலிங்க: = யஶோதா நாத! நவநீத மஞ்சரஸ்த்வம் தச்சாதநாய யதி தே மநிராவிராஸீத், கிம் முக்த! திக்த மமுநா கரபல்லவம் தே காத்ரே ப்ரம்ருஜ்ய நிரகா: கில நிர்விசங்க:" என்ற ஆழ்வானுடைய அதிமாநுஷஸ்தவ ஸ்ரீஸூக்தி ஸ்ம்ருதி விஷயமாகும். [வெண்ணெயைக் களவு செய்த கண்ணன் உடையவர்கள் தன்னைப்பிடிக்க வருகிற சுவடறிந்து கையது வாயதான வெண்ணெயை மறைத்திடவேணுமென் றெண்ணி 'வாயிலேயாவது கையிலேயாவது வெண்ணெயிருக்கக் கண்டாலன்றோ நம்முடைய களவு வெளிப்படலாவது, கையிலும் வாயிலும் இல்லாதபடி யாக்கிவிடுவோம்' என்று வெண்ணெயை யெல்லாம் உடம்பிலே தடவிக்கொண்டு 'இனி நாம் ஆர்க்கும் அஞ்ச வேண்டியதில்லை' என்று நிர்ப்பயனாய் வெளிப்புறப்பட்டா னென்கிற ஒரு முக்த சேஷ்டிதத்தை அநுஸந்தித்து 'என் நாயனே! இப்படியும் ஒரு மௌக்த்யமுண்டோ? வெண்ணெய்க் களவை மறைக்க நினைத்து அது நன்கு வெளியாம்படியான் காரியஞ் செய்தாயே! இது உண்மையில் மௌக்த்யத்தாலோ? அன்றி மௌக்த்யாபாவனையாலோ? சொல்லாய் பிரானே! என்றார்.]

முற்காலத்தில் ஒரு பிள்ளை அரசன் தோட்டத்திலே புகுந்து மல்லிகை

மொக்குகளைத் திருடிக்கொண்டிருக்கையில் அஃதறிந்த தோட்டக்காரன் அவனைப் பிடித்து ராஜசபைக்குக் கொண்டு போவதாக இருக்கையில் அதனை யுணர்ந்த அக்கள்வன் 'இந்த ஆபத்தில் நின்றும் எங்ஙனே தப்பிப் பிழைப்பது!' என்று கவலைப்பட்டுக் கொண்டிருக்கையில் இச் செய்தியை யறிந்த அவன் தந்தை 'வாயுண்டானால் பிள்ளை பிழைக்கிறான்' என்று அப் பிள்ளையின் செவியிலே படுமாறு செய்விக்க, 'பாம்பின் சுவடு பாம்புக்குத் தெரியும்' என்றாற்போலே தந்தை சொற்கருத்தை யுணர்ந்த அப்புதல்வன் அந்த மல்லிகை மொக்குகளைத் தின்று மென்று விட்டான்; பிறகு வெறுங்கையனான அவனை என் சொல்லி ராஜதண்டனைக்கு ஆளாக்குவதென்று திகைத்த தோட்டக்காரன் அவனை விட்டிட்டான் என்றொரு கதையுண்டு; தின்னக் கூடாதவற்றையும் வருந்தித்தின்று களவை மறைத்துக் கொள்ளும் பிள்ளைகளின்படி தெரிந்திருந்தும், உண்ட தயிரின் சுவட்டை நாவினால்நக்கி மறைத்துக் கொள்ளலாமாயிருக்க அங்ஙனஞ் செய்யாதே களவு நன்கு வெளிப்படுமாறு தயிர்ச்சுவடு முகமெங்குமாகும்படியாகத் தடவிக் கொண்டது பேதைமையின் பணியன்றோவென்று இக்குணத்திலே உள்குழைந்து வளையிழந்தாள்போலும் பரகாலநாயகி. .... (௫)

மடலெடுத்த நெடுந்தாழை மருங்கெல்லாம் வளர்பவளம் *
திடலெடுத்துச் சுடரிமைக்கும் திருக்கண்ண புரத்துறையும் *
அடலடர்த்தன் றிரணியனை முரணழிய அணியுகிரால் *
உடலெடுத்த பெருமானுக் கிழந்தேனென் னொளிவளையே. (௬)

மடல் எடுத்த	மடல்களை உயரக்கொண்ட
நெடு	நீண்ட
தாழை	தாழைச்செடிகளின்
மருங்கு எல்லாம்	பக்கங்களிலெல்லாம்
வளர்	வளர்கின்ற
பவளம்	பவழங்களானவை
திடல் எடுத்து	மேடுகளிலே படர்ந்து
சுடர் இமைக்கும்	ஒளியுடன் விளங்கப்பெற்ற

திருக்கண்ணபுரத்து, உறையும்—;

அன்று	முன்பொருகாலத்தில்
இரணியனை	ஹிரண்யாஸுரனை
அடல்	யுத்தத்திலே
அடர்த்து	நெருக்கி
முரண் அழிய	(அவனுடைய) மிடுக்கு அழியும்படியாக
அணி உகிரால்	அழகிய நகங்களாலே
உடல் எடுத்த	(அவனது) உடம்பைப் பிளந்தொழித்த
பெருமானுக்கு	ஸர்வேச்வரனுக்கு

என் ஒளி வளை இழந்தேன்—.

* * *— பரமபக்தனான ப்ரஹ்லாதாழ்வானிடத்துள்ள வாத்ஸல்யத்தினால் அவனுடைய விரோதியான இரணியனைப் பிளந்தொழித்த பெருமானன்றோ; ஆச்ரிதர்களை இப்படி பரிந்து காத்தருள்பவனன்றோ; இதற்காகவே யன்றோ திருக்கண்ணபுரத்தில் நித்ய ஸந்நிதி பண்ணியெழுந்தருளி யிருப்பது! என்று ஈடு

பட்ட நான் ப்ரஹ்லாதனைப்போலே பரமக்ருபைக்குப் பாத்திரமாகப் பெறுமல் வளையிழந்தேன் காண்மின் என்கிறுள்.

ஓங்கின மடல்களையுடைய தாழைச்செடிகளின் ப்ராந்தங்களில் வளர்ந்த பவளங்களானவை மேட்டுநிலங்கள் மூடப்படர்ந்து நெருப்பு ஜ்வலிக்குமாபோலே விளங்குகின்றனவாம் திருக்கண்ணபுரத்தில். .... (௬)

வண்டமரும் மலர்ப்புன்னை வரிநீழ லணிமுத்தம் *
தெண்டிரைகள் வரத்திரட்டும் திருகண்ண புரத்துறையும் *
எண்டிசையு மெழுகடலு மிருநிலனும் பெருவிசும்பும் *
உண்டுமிழ்ந்த பெருமானுக் கிழந்தேனென் னொளிவளையே. (௭)

வண்டு அமரும்	வண்டுகள் படிந்திருக்கிற
மலர்	புஷ்பங்களையுடைத்தான
புன்னை	புன்னைமரத்தினுடைய
வரி நீழல்	அகன்றநிழலிலே
தெண் திரைகள்	தெளிந்த அலைகளானவை
அணி முத்தம்	அழகிய முத்துக்களை
வர திரட்டும்	கொண்டுவந்து திரட்டப்பெற்ற

திருக்கண்ணபுரத்து, உறையும்—;

எண் திசையும்	எட்டுத்திசைகளையும்
எழு கடலும்	ஏழு கடல்களையும்
இரு நிலனும்	விசாலமான பூமியையும்
பெரு விசும்பும்	பெரிதான ஆகாசத்தையும்
உண்டு	(பிரளயத்தில்) அமுது செய்து
உமிழ்ந்த	(பிறகு) வெளிப்படுத்தின
பெருமானுக்கு	ஸ்வாமிக்கு

என் ஒளி வளை இழந்தேன்—.

* * *— ஸகல பதார்த்தங்களையும் பிரளயங்கொள்ளாதபடி திருவயிற்றிலே வைத்துக் காத்தருள்பவனன்றோ; மீண்டும் அவற்றை வெளியிட்டருள்பவனன்றோ; இப்படி ஆபத்துக்கு உதவுமவன் என்று நம்பி ஆசைவைத்துக் கெட்டேனென்கிறுள்.

மூன்றுமடியில் "எழுகடலும்" என்ற பாடமே எங்கும் வழங்கிவருகின்றது. இப்பாடம் பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியானத்தில் பாடாந்தரமாகக் கொள்ளப்பட்டுள்ளது; 'எழுகடலும்' என்ற பாடமே முந்துறக் கொள்ளப்பட்டது.

கொங்குமலி கருங்குவளை கண்ணாகத் தெண்கயங்கள் *
செங்கமல முகமலர்த்தும் திருக்கண்ண புரத்துறையும் *
வங்கமலி தடங்கடலுள் வரியரவி னணைத்துயின்ற *
செங்கமல நாபனுக் கிழந்தேனென் செறிவளையே. (௮)

தெண் கயங்கள்	தெளிந்த தடாகங்களானவை
கொங்கு மலி	பரிமளம் மிக்க
கரு குவளை	கருநெய்தற்பூக்களை
கண் ஆக	கண்களாகவும்

செம் கமலம்	செந்தாமரைப்பூக்களை
முகம்	முகங்களாகவும்
மலர்த்தும்	விகஸிப்பிக்கப்பெற்ற

திருக்கண்ணபுரத்து, உறையும்—;

வங்கம் மலி தடம் கடலுள்	அலைகள் நிரம்பிய பெரிய திருப்பாற்கடலிலே	அணை	திருப்பள்ளி மெத்தையிலே
வரி	கோடுகளையுடைய	துயின்ற	சயனித்தருளாநின்ற
அரவு	திருவனந்தாழ்வானாகிற	செம் கமலம் நாபனுக்கு	செந்தாமரைப்பூவைத் திருநாபியிலே உடைய னான பெருமானுக்கு.
இன்	இனிமையான		என் செறி வளை இழந்தேன்—.

* * *— ஆர்த்தியுடையாருடைய கூக்குரல் கேட்டுக் கடுகவெழுந்து வந்து காத்தருள்வதற்காகவன்றோ திருப்பாற்கடலில் திருவனந்தாழ்வான்மீது சயனித்திருப்பது; உலகங்களை யுண்டாக்கின செங்கமல மலரைத் திருநாபியிலு டையவனன்றோ; இப்படி உலகங்களை யெல்லாம் படைத்துக் காத்தருளும் பெருமான் நம்மையோ கைவிடப் போகிறானென்று நம்பி ஆசைவைத்து வளை யிழக்கையைப்பலனாகப் பெற்றேனென்கிறாள். வங்கம்—அலை, கப்பல். (அ)

வாராளு மிளங்கொங்கை நெடும்பணைத்தோள் மடப்பாவை *
சீராளும் வரைமார்பன் திருக்கண்ண புரத்துறையும் *
பேராள னாயிரம்பே ராயிரவாயரவணைமேல் *
பேராளர் பெருமானுக் கிழந்தேனென் பெய்வளையே. (௯)

வார் ஆளும் இள கொங்கை	கச்சினால் தாங்கப்படுகின்ற இள முலைகளை யுடையளாய்	மார்பன்	திருமார்பையுடையவனும்
நெடு பணை தோள்	நீண்ட மூங்கில் போன்ற தோள்களை யுடையளாய்		திருக்கண்ணபுரத்து, உறையும்—;
மடம்	ஆத்மகுணங்களால் நிறைந்தவளாய்	பேர் ஆளன்	பெருமை பொருந்தியவனும்
பாவை	பதுமை போன்றவளான பெரிய பிராட்டியார் (நித்யவாஸம் பண்ணப் பெறுகையினாலே)	ஆயிரம்பேர்	ஆயிரந்திருநாமங்களை யுடையவனும்
சீர் ஆளும்	சீர்மையையுடைத்தான	ஆயிரம் வாய்	ஆயிரம் முகங்களையுடைய
வரை	மலைபோன்ற	அரவு	ஆதிசேஷனாகிற
		அணை மேல்	படுக்கையின்மீது பள்ளி கொண்டிருப்பவனுமான
		பேராளர் பெருமானுக்கு	தேவாதி தேவனுக்கு
			என் பெய் வளை இழந்தேன்—;

* * *— கச்சணிந்த திருமுலைத்தடங்களை யுடையளாய் நெடிய பணைபோலே நேர்நின்ற திருத்தோள்களை யுடையளாய் ஆத்ம குணங்களால் நிறைந்தவளான ஸ்ரீமஹாலக்ஷ்மி நித்யவாஸம் பண்ணப் பெறுகையாலே செல்வம் மிக்கு மலை போன்றதான திருமார்வையுடையவனும், திருக்கண்ணபுரத்திலே வந்து ஸுலபனாகையால்வந்த ஏற்றத்தை யுடையவனும், ஸஹஸ்ர நாமங்களாலும் ப்ரதிபாதிக்கப்படும் திவ்யகுண சேஷ்டிதங்களையுடையவனும், நித்யபாநுபவ ஹர்ஷப்ரகர்ஷத்தாலே ஆயிரமுகமாகப் பெருகின பலவாய்களை யுடையனான திருவனந்தாழ்வான்மீது சயனித்தருள்பவனும், பெருமையுடையாரென்று புகழ்பெற்ற செல்

லாரிற் காட்டிலும் பெருமை பொருந்தினவனுடையான எம்பெருமான் 1. 'பெண்ணீர்மையிடழிக்குமிது தமக்கோர் பெருமையே!' என்றதைக் கணிசியாமல் தன் பெருமைகட்குப் பொருந்தாதபடி என்வளைகளைக் கவர்ந்தானென்கிறாள்.

பெய்வளை — அணிந்து கொண்டிருந்தவளை.

பேராளர் பெருமான் = பேராளரென்று மஹான்களுக்குப் பெயர்; அவர்கட்கும் மஹான் என்றபடி. .... (௯)

தேமருவு பொழில்புடைசூழ் திருக்கண்ண புரத்துறையும்
வாமனனை * மறிகடல்சூழ் வயலாலி வளநாடன் *
காமருசீர்க் கலிகன்றி கண்டுரைத்த தமிழ்மாலை *
நாமருவி யிவைபாட வினையாய நண்ணாவே. (௧௦)

தே மருவு	தேன் பொருந்திய	ஆலி நாடன்	திருவாலிநாட்டுக்குத் தலைவரும்
பொழில்	சோலைகளினால்	காமரு சீர்	விரும்பத்தக்க குணங்களையுடையவருமான
புடை சூழ்	நாற்புறமுஞ் சூழப்பட்ட	கலிகன்றி	திருமங்கையாழ்வார்
திருக்கண்ண புரத்து	திருக்கண்ணபுரத்தில்	கண்டு உரைத்த	ஆராய்ந்து அருளிச்செய்த
உறையும்	நித்யவாஸஞ் செய்தருளாநின்ற	தமிழ் மாலை இவை	இத்தமிழ்ப்பாசுரங்களை
வாமனனை	வாமநாவதாரஞ் செய்தருளின பெருமானைக்குறித்து,	நா மருவி	நாவிலே பொருந்தவைத்து
மறி கடல் சூழ்	அலை மடிகின்ற கடலாலே சூழப்பட்ட	பாட	பாடுமளவிலே
வயல் வளம்	வயல் வளப்பமுடைத்தான	வினை ஆய	பாபமென்று உள்ளவை யெல்லாம்
		நண்ணா	கிட்டாதே ஒழிந்துபோம்.

* * * — தேன்மிக்க பொழில்களாலே புடைசூழப்பட்ட திருக்கண்ணபுரத்திலே வாமநாவதார ஸௌலப்ய ஸௌசீல்ய ஸௌந்தர்யாதிகளைப் பிரகாசிப்பித்துக்கொண்டு எழுந்தருளியிருக்கும் சௌரிப்பெருமாள் விஷயமாகத் திருமங்கையாழ்வாரருளிச்செய்த இத்திருமொழியை ஓதியுணருமவர்கள் ஸர்வ பாப விநிர்முக்தராவர் என்று பயனுரைத்துத் தலைக்கட்டினாராயிற்று. .... (௧௦)

அடிவரவு:—தரை அரி அங்கம் கணம் வாய் மடல் வண்டு கொங்கு வாரணும் தேமருவு விண்ணவர்.

மூன்றாந்திருமொழி உரை முற்றிற்று.

ஜீயர் திருவடிகளே சரணம்.

---

1. நாச்சியார் திருமொழி 8—1.

ஸ்ரீ:

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

எட்டாம்பத்து — நான்காந்திருமொழி,

விண்ணவர் தங்கள் பெருமான்.

உரையவதாரிகை:—இத்திருமொழியும் பிராட்டி யவஸ்தையாய்ச் செல்லுகிறது. எம்பெருமானோடு ஸம்ச்லேஷிக்கப் பெறாத வருத்தத்தினால் பரகால நாயகி மிகவும் மேனி மெலிந்து துவண்டு கிடந்தாள்; இவள் ஸந்தோஷமாயிருக்கும் ஸமயங்களில் தலையிலே நறுமலர்களைச் சூடியிருப்பள்; அவற்றில் மதுவும் பெருகா நிற்கும்; மதுவைப் பருகுவதற்கு வண்டுகள் வந்து மொய்த்துக்கிடக்கும். இப்போது வருந்திக்கிடக்கும் நிலைமை யாகையாலே தலையிற் பூ வாடிப்போய் மதுவும் சுவறிப்போய் இராநின்றாலும் 'உருசி கண்ட பூனை உறியைத் தாவிற்றாம்' என்னும் பழமொழியின்படியே முன்பு மதுவுண்ட வாஸனையாலே இப்போதும் உண்ணப்பெறலாமென்று ஆசைகொண்டு வண்டு அருகே வந்து மொய்க்கப் பார்த்தது; அதனை நோக்கி 'உனக்கு இப்போது இங்கு என்ன உணவு உண்டு? என் தலையில் பூவும் மதுவும் உண்டாகும்படி செய்யப்பாராய்; திருக்கண்ணபுரத் தெம்பெருமான் திருவபிஷேகத்தின்மேல் சாத்திக்கொண்டிருக்கின்ற திருத்துழாயிலே படிந்து அங்குள்ள பரிமளத்தை இங்கே கொண்டு வந்து ஊது; பிறகு உனக்கு இங்கே உண்ணக்கிடைக்கும்' என்கிறாள் பரகால நாயகி.

"கெண்டை யொண்கணும் துயிலும் என்னிறம், பண்டு பண்டுபோ லொக்கும் மிக்க சீர்த், தொண்டரிட்ட பூந்துளவின் வாசமே, வண்டு கொண்டுவந்து ஊதுமாகிலே" (11-1-9) என்று மேலே அருளிச்செய்யும் பாசுரம் இங்கு நினைக்கத்தக்கது. எம்பெருமானுடைய ஸம்ச்லேஷந்தானே நேரிற் கிடைக்காவிட்டாலும் அவனோடு ஸம்பந்தம் பெற்ற வஸ்து ஏதேனும் கிடைக்கப் பெற்றாலும் த்ரிப்பு உண்டாகுமென்பது இதனால் அறியத்தக்கது.

சைவ சமயாசிரியருள் ஒருவரான மாணிக்கவாசகர் இயற்றிய திருவாசகத்தில் இத்திருமொழியை ஒருவாறு அடியொற்றி 'திருக்கோத்தும்பி' என்றொரு பதிகம் சொல்லப்பட்டுள்ளது. "சென்றூதாய் கோத்தும்பீ" என்ற முடிவுடன் இருபது செய்யுள்கள் பாடப்பட்டுள்ளன. அங்குக் "கோத்தும்பீ" என்றுள்ளது; இங்குக் "கோற்றும்பீ" என்றுள்ளது. ... . *

விண்ணவர் தங்கள் பெருமான் திருமார்வன் *
மண்ணவரெல்லாம் வணங்கும் மலிபுகழ்சேர் *
கண்ணபுரத் தெம்பெருமான் கதிர்முடிமேல் *
வண்ண நறுந்துழாய் வந்தூதாய் கோல்தும்பீ! (க)

கோல் தும்பீ	கொம்புகளில் திரிகின்ற தும்பியே!
விண்ணவர் தங்கள் பெருமான்	நித்யஸூரிகளுக்குந் தலைவனும்
திருமார்வன்	பிராட்டியைத் திருமார்பிற் கொண்டவனும்
மண்ணவர் எல்லாம் வணங்கும்	இந்நிலத்திலுள்ளா ரெல்லாராலும் வணங்கப் படுபவனும்
மலி புகழ் சேர்	நிறைந்த கீர்த்தியை யுடையவனும்
கண்ணபுரத்து	திருக்கண்ணபுரத்திலெழுந் தருளி யிருப்பவனுமான
எம்பெருமான்	ஸ்வாமியினுடைய
கதிர் முடி மேல்	ஒளிபொருந்திய திருமுடி யின் மீதுள்ள
வண்ணம் நறு துழாய்	அழகியதும் மணத்ததுமான திருத்துழாயைக் கொண்டு
வந்து	இங்கே வந்து
ஊதாய்	நீ ஊது.

* * *—'தும்பி' என்பது வண்டுகளில் ஒருவகைச் சாதி; கருவண்டு ...
றுங் கூறுவர். மரக்கொம்புகளிலே மதுவுக்காகத் திரியுமியல்புடைமைபற்
'கோல்தும்பீ!' என விளிக்கப்பட்டது. ஸத்தையற்றுக் கிடக்கின்ற என்னிடத்
திலே இப்ப ...ப்போல்
நான் § தளிரும் முறியுமாய்க் கிடக்கிறேனென்றிருக்கிறாயோ? பாராய் நான்
வாடி வதங்கிக்கிடக்கும்படியை; என் தலையிலே பூத்தங்கினாலன்றோ மது இருக்
கும்; மது இருந்தாலன்றோ நீ இங்கே வந்து சுழலமிடுவதற்கு ஒருபயனுண்
டாகும்; உனக்கு இங்கே மதுவுண்ண விருப்பமுண்டாகில் எனக்கு ஸத்தையை
யுண்டாக்கப் ... செய்தால் ஸத்தையுண்டாகுமென்று கேட்கிறாயோ?
கேள்ாய் ... நித்ய ஸூரிகளுக்கெல்லாம் நிர்வாஹகனாயிருக்கிற
பெருமான் உனக்குத் தெரியுமே; அவனிடத்தில் நாம் அணுக முடியுமோ
வென்று நினையாதே; அவன் திருமார்வன்; புருஷகாரபூதையாய் காருண்ய
ரூபையான பிராட்டியைத் திருமார்பிலே கொண்டவனாதலால் கூசாதே சென்
புகலாம்; விண்ணவர் தங்கள் பெருமானிடத்தே நான் சென்றால் மீண்டு
முடியாதேயென்கிறாயோ? அங்குச் செல்லவேண்டா; லீலாவிபூதியிலுள்
ரெல்லாரும் எளிதாக வணங்கும்படி நிற்பவன்; 'பரத்வ நிலைமையைவிட்டு இப்ப
ஸுலபனாவதே!' என்று அனைவராலும் கொண்டாடப்பட்டு நி
திருப்பவன்; திருக்கண்ணபுரத்திலே நித்ய ஸந்நிதி பண்
அன்னவனுடைய திருவபிஷேகத்திற் சாத்தியுள்ள திருத்துழா
முகந்துகொண்டு இங்கே வந்து ஊது; இது செய்வையாகில்
வேன்; உனக்கு ஏராளமாக மதுவுண்ணக் கிடைக்கும் என்கிறாள் பரக
நாயகி.

1. "தெய்வத்தண்ணந் துழாய்த் தாராயினுந் தழையாயினுந் தண் கொம்பதாயினும் கீழ்வேராயினும் நின்ற மண்ணாயினுங் கொண்டு வீசுமினே" என்கிற

---

§ செழித்திருக்கிறேனோ என்றபடி.

1. திருவிருத்தம் 52.

படியே எம்பெருமானணியுந் திருத்துழாயின் ஸம்பந்தம் எவ்வகையினுற் பெற்றாலும் தரிப்பும் உவப்பு முண்டாகுமாதலால் அதற்காக இங்ஙனே சொல்லுகிறுளென்க.

வண்ணநறுந்துழாய் வந்தூதாய்=இங்குத் 'துழாய்' என்றது திருத்துழாயின் பரிமளத்தில் நோக்காக. "செவ்வியோறுத பரிமளத்தையுடைத்தாயிருக்கிற திருத்துழாயிலே படிந்து அந்தத்தைப் பரிமளத்தைக் கொடு வந்து இங்கே ஊது" என்பது வியாக்கியான ஸூக்தி.

ஊதுதல்—தும்பிகளின் இயற்கைத் தொழில். .... (க)

வேத முதல்வன் விளங்கு புரிநூலன் *
பாதம் பரவிப் பலரும் பணிந்தேத்தி *
காதன்மை செய்யும் கண்ணபுரத் தெம்பெருமான் *
தாது நறுந்துழாய் தாழ்ந்தூதாய் கோல்தும்பீ! (உ)

வேதம் முதல்வன்	வேதங்களால் முழு முதற் கடவுளாகப் பிரதிபாதிக்கப் படுபவனும்
விளங்கு	(திருமேனியில்) விளங்குகின்ற
புரி நூலன்	யஜ்ஞோபவீதத்தை யுடையவனும்
பலரும்	எல்லாரும்
பாதம்	திருவடிகளை
பரவி பணிந்து ஏத்தி	ஆச்ரயித்து வணங்கித் துதித்து
காதன்மை செய்யும்	பக்தி பண்ணுதற்கு உரியனான
கண்ணபுரத்தெம்பெருமானுடைய,—	
தாது	தாதுகளை யுடைத்தாய்
நறு	மணம்மிக்கதான
துழாய்	திருத்துழாயிலே
தாழ்ந்து	படிந்து
(அந்த நறுமணத்தைக் கொணர்ந்து) ஊதாய் கோல் தும்பீ!—.	

* * *—"வேதேஷு ஸர்வைரஹமேவ வேத்ய:" என்கிறபடியே ஸகல வேதங்களாலும் முழு முதற் கடவுளாகப் பிரதிபாதிக்கப்பட்டவனும், அழகிய திவ்யமங்கள விக்ரஹத்தையுடையனுய் அதிலே பளபளவென்று விளங்குகின்ற யஜ்ஞோபவீதத்தையுடையனும், எல்லாரும் திருவடிகளிலே விழுந்து ஸ்தோத்ரம் பண்ணித் தங்கள் பக்தியைச் செலுத்துமாறு திருக்கண்ணபுரத்திலே நித்யஸந்நிதி பண்ணியிருப்பவனுமான பெருமானுடைய, பூந்தாச் செவ்வியையுடைத்தாயிருக்கிற திருத்துழாயிலே தங்கியிருந்து அதிலுள்ள பரிமளத்தை முகந்துகொண்டு வந்து இங்கே ஊதாய் கோல்தும்பீ! நான் ஸத்தை பெறுவதற்காக.

1. "கோலால் நிரைமேய்த்து ஆயனாய்க் குடந்தைக் கிடந்த குடமாடி, நீலார் தண்ணந்துழாய் கொண்டு என்னெறி மென்குழல்மேல் சூட்டீரே" என்று அவனுடைய திருத்துழாய்ப் பிரசாதத்தைக் கொணர்ந்து தன் தலையில் சூட்ட

1. நாச்சியார் திருமொழி 13—2;

வேணுமென்று அபேக்ஷித்தாள் சூடிக்கொடுத்த சுடர்க்கொடி; இப்பரகால நாயகி அங்ஙனன்றிக்கே துழாயிற் படிந்து வந்து ஊதினாற்போதுமென்கிறாள். (௨)

விண்ட மலரெல்லா மூதிநீ யென்பெறுதி ?*
அண்ட முதல்வ னமரர்களெல்லாரும் *
கண்டு வணங்கும் கண்ணபுரத் தெம்பெருமான் *
வண்டு நறுந்துழாய் வந்தூதாய் கோல்தும்பீ ! (௩)

கோல்தும்பீ !—;
நீ — நீ
விண்ட மலர் எல்லாம் — விகஸித்த புஷ்பங்களி லெல்லாம்
ஊதி — ஒலிசெய்து
என் பெறுதி — என்னபேறு பெறுகின்றாய்? (ஒன்றுமில்லை)
அண்டம் முதல்வன் — பரமபதத்துக்கு நிர்வாஹகனும்
அமரர்கள் எல்லாரும் கண்டு வணங்கும் — தேவர்களெல்லாரும் (தங்கள் அஹங்காரந் தொலைந்து) ஸேவித்து வணங்கப் பெற்றவனுமான
கண்ணபுரத்தெம்பெருமானுடைய,—
வண்டு நறு துழாய் — வண்டுகள்படிந்து பரிமளம் மிக்க திருத்துழாயைக் கொண்டு
வந்து ஊதாய்—.

* * *—வழக்கப்படி பரகால நாயகியின் தலையில் மதுவுண்ண வந்த தும்பி இங்குப் பூவுமில்லை மதுவுமில்லை என்றறிந்தவாறே வேறு சில மலர்களிலே மது வுண்ணப் புக, அதனைக் கண்ட பரகால நாயகி கூறுகின்றாள்;—திறந்து கிடந்த வாசலெல்லாம் நுழைந்து திரியுமவைபோலே விண்டமலர்கள் தோறும் நீ ஊதித் திரிவதனால் என்ன பேறு பெறப்போகிறாய்? அல்பமாயும் அஸ்திரமாயுமுள்ள மதுவையுடைய இம்மலர்களிலே ஊதித்திரிவது தவிர்ந்து, அண்டாதிபதியாயும் நித்யஸூரிகளெல்லாரும் திரண்டு வந்து கண்டு வணங்கும்படியாகத் திருக் கண்ணபுரத்தில் நித்ய ஸந்நிதிபண்ணி யிருப்பவனுமுள்ள பெருமானுடைய திருத்துழாய் மாலையிலே உனது ஸஹோதரிகளோடே கூடித் தங்கியிருந்து அங் குள்ள பரிமளத்தை இங்குக் கொணர்ந்து ஊதுவாயாகில் அநல்பமும் ஸ்திரமு மான மதுவைப்பருகலா மென்றாளாயிற்று.

1. "வண்ணந்திரிவும் மனங்குழைவும் மானமிலாமையும் வாய்வெளுப்பும், உண்ணலுறாமையு முள்மெலிவும் ஓத நீர் வண்ணனென்பானொருவன், தண்ணந் துழா யென்னும் மாலைகொண்டு சூட்டத்தணியும்" என்று எம்பெருமானுடைய திருத்துழாய்ப் பிரசாதத்தைக் கொணர்ந்து தன் தலையில் சூட்டினால்தான் தனது நோய்கள் தீருமென்றாள் சூடிக்கொடுத்த பிராட்டி; இவள் அங்ஙனன்றிக்கே துழாயிற் படிந்து வந்து ஊதினாற் போதுமென்கிறாள் காண்மின்.

அண்டமுதல்வன் = அண்டங்கட்கு முதல்வன் என்னவுமாம்; அண்ட மென்னப்படுகிற பரமபதத்துக்கு முதல்வன் என்னவுமாம். .... (௩)

1. நாச்சியார் திருமொழி 12-7.

நீர்மலிகின்றதோர் மீனாயோ ராமையுமாய் *
சீர்மலிகின்றதோர் சிங்க வுருவாகி *
கார்மலி வண்ணன் கண்ணபுரத் தெம்பெருமான் *
தார்மலி தண்டுழாய் தாழ்ந்தூதாய் கோல்தும்பீ ! (௪)

கோல்தும்பீ !—;

நீர்மலிகின்றது	ஸமுத்ரத்திலே வியாபித்த
ஓர் மீன் ஆய்	அத்விதீயமான மத்ஸ்யாவதார மெடுத்தவனும்
ஓர் ஆமையும் ஆய்	விலக்ஷணமான கூர்மாவதார மெடுத்தவனும்
சீர் மலிகின்றது ஓர் சிங்கம் உரு ஆகி	சீர்மையிருந்த நரஸிம்ஹாவதார மெடுத்தவனும்
கார் மலி வண்ணன்	மேகத்திற்காட்டிலும் சிறந்த வடிவு பெற்றவனுமான

கண்ணபுரத்தெம்பெருமானுடைய—;

தார்	மாலையிலே
மலி	பொருந்திய
தண்	குளிர்ந்த
துழாய்	திருத்துழாயிலே
தாழ்ந்து	தாமதித்திருந்து
ஊதாய்	(வந்து) ஊது.

* * *—கோல்தும்பீ! பண்டு மத்ஸ்யாவதாரஞ் செய்தருளி "வானோரளவும் முது முந்நீர் வளர்ந்த காலம் வலியுருவின் மீனாய் வந்து வியந்துய்யக் கொண்ட தண்டாமரைக் கண்ணன்" என்கிறபடியே அனைவரையும் பிரளயப் பெருவெள்ளத்தினின்று பாதுகாத்தருளிய பெருமான் என்னை விரஹப் பெருங் கடலில் வீழ்த்தி வருத்துகின்றான்; ஆமையாய் உருவெடுத்து மந்தர மலையைத் தாங்கியிருந்து தேவர்களுக்கு அமுதமளித்தவன் எனக்குச் சோதிவா யமுத மளித்திடாது வஞ்சனை செய்கின்றான்; நரசிங்கமூர்த்தியாய்த் திருவவதரித்து ப்ரஹ்லாதாழ்வானுக்குப் பேரருள் செய்த பெருமான் எனக்குச் சிறிதும் அருள் செய்கின்றிலன்; நான் விரஹவ்யஸநத்தாலே உடம்பு வெளுத்து வருந்திக் கிடக்க, தான் சிறிதும் நிறமழியாதே காளமேகத்திற் காட்டிலும் பொலிந்து வர்த்திக்கின்றான்; திருக்கண்ணபுரத்திலே எளியனாய் வந்து நின்றும் அவ் வெளிமையைப் பாவியேன் திறத்தில் பலிக்கச் செய்கின்றிலன்; என்னை இங்ஙனே துடிக்கவிட்டுத் தானே ஸர்வரக்ஷகனென்று தோற்றுமாறு தனிமாலையணிந் திருக்கின்றான்; அதிலுள்ள திருத்துழாயிற் படிந்து அதன் பரிமளத்தையாகிலும் இங்குக் கொணர்ந்து ஊதுவாயாகில் உய்யவிரகுண்டு என்பது இப்பாட்டின் உட்கருத்து. .... (௪)

ஏரார் மலரெல்லா மூதிநீ யென்பெறுதி *
பாராருலகம் பரவப் பெருங்கடலுள் *
காராமை யான கண்ணபுரத் தெம்பெருமான் *
தாரார் நறுந்துழாய் தாழ்ந்தூதாய் கோல்தும்பீ! (௫)

கோல் தும்பி!—;

நீ	நீ
ஏர் ஆர் மலர் எல்லாம்	அழகு நிரம்பிய (மற்ற) புஷ்பங்களிலெல்லாம்
ஊதி	ஒலி செய்து
என் பெறுதி	என்னபேறு பெறுவாய்; [ஒன்றும் பெறமாட்டாய்.]
பார்	இப்பூமியிலே
ஆர்	பொருந்திய
உலகம்	ஜனங்களெல்லாம்
பரவ	வணங்குமாறு
பெரு கடலுள்	பெரிய ஸமுத்ரத்திலுள்ளே
கார் ஆமை ஆன	பெரிய ஆமையாகத் திருவவதரித்த

கண்ணபுரத்தெம்பெருமானுடைய—;

தார்	மாலையிலே
ஆர்	பொருந்திய
நறு	பரிமளம் மிக்க
துழாய்	திருத்துழாயிலே
தாழ்ந்து	வைகியிருந்து
ஊதாய்	(வந்து) ஊது.

* * *—கோல்தும்பி!, நான் உனக்கு எத்தனை சொன்னாலும் கேட்கின்றிலையே; உனக்குத்தான் செவியில் துளையில்லையோ? இந்த மலர்களிலெல்லாம் ஊதித்திரிவதனால் உனக்கு என்ன லாபமுண்டு? ஒரு மலரிலே உன் வயிறு நிறையுமோ? பல மலர்களில்தான் திரிந்தாலும் நிறையுமோ? இவ்வீண் செயலை விட்டிடு; முன்பு தூர்வாஸ முனியின் சாபத்தினால் செல்வமிழந்து துவண்ட தேவர்கட்கு இரங்கிக் கூர்மாவதாரஞ் செய்தருளி அவர்களுடைய ஜீவனத்தை நிர்வஹித்தருளினவன் அத்தேவர்களைப் போலே ப்ரயோஜநாந்தரத்தை நெஞ்சிலும் நினையாதே அவனையே பரமப்ரயோஜநமாக நினைத்திருக்கின்ற என்னுடைய ஜீவனத்தை நிர்வஹியாதிருக்கின்றான்; இருக்கட்டும்; அவன் திருக்கண்ணபுரத்திலே வந்து ஸந்நிதிபண்ணியிருக்குமிருப்பிலே அணிந்திருக்கின்ற மாலையிலுள்ள திருத்துழாயிற் சென்று நீ படிந்து அதன் பரிமளத்தைக் கொணர்ந்து ஊது, உய்யப்பெறுவேன் நீயும் வாழப்பெறுவாய் என்கிறாள்.

ஏரார் மலரெல்லாம் = வெறும் நிறத்தினால் மாத்திரம் அழகாயிருக்கின்ற மலர்களில் ப்ரமியாதே என்றவாறு. .... (௫)

மார்வில் திருவன் வலனேந்து சக்கரத்தன் *
பாரைப் பிளந்த பரமன் பரஞ்சோதி *
காரில்திகழ் காயா வண்ணன் கதிர்முடிமேல் *
தாரில் நறுந்துழாய் தாழ்ந்தூதாய் கோல்தும்பி! (௬)

கோல் தும்பி!—;

மார்வில் திருவன்	திருமார்பிலே ஸ்ரீ மஹாலக்ஷ்மியை யுடையவனும்
வலன் ஏந்து சக்கரத்தன்	வலத்திருக்கையில் தரிக்கப்பட்ட திருவாழியை யுடையவனும்
பாரை	(அண்டபித்தியில்) ஒட்டிக் கிடந்த) பூமியை
பிளந்த பரமன்	(மஹாவராஹமாகிக்) குத்திக் கொணர்ந்த மேன்மை வாய்ந்தவனும்
பரம் சோதி	விகாரற்ற சோதியே வடிவெடுத்தவனும்
காரில் திகழ்	கறுப்பு நிறத்தினால் விளங்குகின்ற
காயா	காயாம்பூப்போன்ற

வண்ணன்	வடிவையுடையனுமான பெருமானுடைய	நறு	பரிமளம் மிக்க
கதிர் முடி மேல்	ஒளி பொருந்திய திருமுடி மீதுள்ள	துழாய்	திருத்துழாயில்
தாரில்	மாலையில் (தொடுக்கப்பட்டிருக்கின்ற)	தாழ்ந்து	தங்கியிருந்து
		ஊதாய்	(வந்து) ஊது.

* * *— கோல்தும்பீ! கட்டுங்காவலுமாயிருக்கின்ற எம்பெருமான் ஸந்நிதியிலே புகுவதற்கு நாமோ அதிகாரி! என்று தியங்காதே: திருமார்விலே பிராட்டியுண்டு; ஒரு குறையுமில்லை; ப்ராப்திப்ரதிபந்தகங்கள் ஏதேனுமிருந்தாலும் அவற்றைத் தொலைக்க ஸாமக்ரியிலுங் குறையில்லை; 1. "எப்போதுங் கைகழலாநேமியான் நம்மேல் வினைகடிவான்" என்கிறபடியே நம்முடைய வினைகளை நீக்குதற்கே எப்போதும் கையுந் திருவாழியுமாய் எழுந்தருளியிருக்கிறான் காண்; ஹிரண்யாக்ஷனென்பானோரஸுரன் பூமியைப் பாயாகச் சுருட்டிக்கொண்டு சென்று மறைய, மஹாவராஹமாகி அவனை நாடிப் பொருது கொன்று அப்பூமியைக் கோட்டாற் குத்திக்கொணர்ந்து பழையபடி விரித்த விறலுடையான் காண்; பிறர்க்கு உதவி புரிவதே அவனுக்குத் தொழில்; உதவா தொழியினும் விடவொண்ணாத வடிவழகு படைத்தவன்காண்; அன்னவனுடைய ஆதிராஜ்ய ப்ரகாசகமான திருவபிஷேகத்தின் மேலுள்ள செவ்வித்துழாயிலே படிந்து இங்கு வந்து ஊது என்கிறாள்.

வலன்—வலமென்றபடி; மகரனகரப்போலி. .... (ஙு)

வாமனன் கற்கி மதுசூதன் மாதவன் *
தார்மன்னு தாசரதி யாயதடமார்வன் *
காமன்றன் தாதை கண்ணபுரத் தெம்பெருமான் *
தாம நறுந்துழாய் தாழ்ந்தூதாய் கோல்தும்பீ! (சு)

வாமனன்	வாமநாவதாரஞ்செய்தவனும்	தாசரதி ஆய	தசரத புத்ரனாகத் திருவவதரித்தவனும்
கற்கி	கல்கியவதாரம் செய்யப் போகிறவனும்	காமன் தன் தாதை	மன்மதனுக்குத் தந்தையுமான
மது சூதன்	மதுவென்னு மசுரனைக் கொன்றவனும்	கண்ணபுரத்தெம்பெருமானுடைய—;	
மாதவன்	திருமகள் கொழுநனும்	தாமம்	மாலையிலுள்ள
தார் மன்னு	(ரக்ஷகத்வஸூசகமான) மாலை பொருந்திய	நறு	பரிமளம் மிக்க
தட மார்வன்	பெரிய திருமார்பை யுடையவனும்	துழாய்	திருத்துழாயில்
		தாழ்ந்து ஊதாய் கோல்தும்பீ!—.	

* * *— கோல்தும்பீ!, தன்னுடைமையைப் பெறுகைக்குத்தானே யாசகனாய்ச் சென்றவன்காண்; விரோதிகளைக் கிழங்கெடுப்பதற்கு இன்னமும் ஸங்கல

1. பெரிய திருவந்தாதி. 87.

பித்துக் கொண்டிருப்பவன்தான்; கல்கியவதாரஞ் செய்தருளி மண்ணின் பாரம் நீக்கப் போகிறானிறே; மது, கைடபன் என்று சொல்லப்படுகிற அசுரர்களை மாய்த்தவன்தான்; இக் குணங்களெல்லாம் அவனுக்கு வாய்க்கும்படி லக்ஷ்மீபதியாயிருப்பவன்தான்; "ரக்ஷிதா ஜீவலோகஸ்ய ஸ்வஜநஸ்ய ச ரக்ஷிதா" என்றபடி ஸாபேக்ஷ ரக்ஷணத்திற்கும் நிரபேக்ஷரக்ஷணத்திற்கும் தனிமாலை யிட்டிருக்குமவன்தான்; ராமாவதார முகத்தாலும் க்ருஷ்ணாவதார முகத்தாலும் தன்னுடைய ரக்ஷகத்வத்தை வெளியிட்டருளினவன்தான்; இப்போதும் திருக்கண்ணபுரத்திலே நித்ய ஸந்நிதிபண்ணி ஸர்வரக்ஷகனாயிருக்குமவன்தான்; அவன், இப்போது என்னுடைய ரக்ஷணத்திலே சோர்வடைந் திருக்கிறான்; இருக்கட்டும்; நீ சென்று அப்பிரானுடைய மாலையிலுள்ள திருத்துழாயிலே படிந்து இங்கே வந்து ஊதாய் என்கிறாள்.

முதலடியிற் பதங்கள் நான்கும் வடசொற்கள். தாசரதி—வடமொழித்தத்திதாந்த நாமம்; தசரதனது குமாரன்.

காமன்றன் தாதை—ருக்மிணிப்பிராட்டியினிடத்து மன்மதனுடைய அம்சமாகப் பிறந்த ப்ரத்யும்நனுக்குக் கண்ணபிரான் தந்தையாதல் அறிக. 'தாதஃ' என்னும் வடசொல் தாதை யெனத் திரிந்தது. 'தாம' என்னும் வடசொல் தாமமெனத் திரிந்தது; மாலை. .... (எ)

நீல மலர்கள் நெடுநீர் வயல்மருங்கில் *
சால மலரெல்லா மூதாதே * வாளரக்கர்
காலன் கண்ணபுரத் தெம்பெருமான் கதிர்முடிமேல் *
கோல நறுந்துழாய் கொண்டூதாய் கோல்தும்பீ ! (அ)

கோல் தும்பீ !—;

நெடு நீர்	அதிகமான ஜலத்தையுடைய
வயல்	வயல்களிலுண்டான
நீலம் மலர்கள்	நீலோற்பல மலர்களிலும்
மருங்கில்	சுற்றிலுமுள்ள
மலர் எல்லாம்	எல்லா மலர்களிலும்
சால	மிகவும்
ஊதாதே	ஒலிசெய்வது தவிர்ந்து,

வாள் அரக்கர் காலன்	வாட்படையையுடைய ராக்ஷஸர்களுக்கு மிருத்யுவான

கண்ணபுரத்தெம்பெருமானுடைய—;

கதிர் முடி மேல்	ஒளிபொருந்திய திருமுடி மீதுள்ள
கோலம்	அழகிய
நறு	பரிமளம் மிக்க
துழாய்	திருத்துழாயை

கொண்டு ஊதாய்—.

* * *— கோல் தும்பீ !, வயல்களிலுள்ள நீலோற்பல மலர்களிலும் மற்றும் சுற்றிலுமுள்ள மலர்களிலுஞ் சென்று ஊதுவதனால் என்ன பயன் கிடைக்கும்? வீணான காரியத்தைச் செய்யாதே; ராக்ஷஸ குலத்திற்கு மிருத்யுவாகத் திருவவதரித்து இலங்கை பாழாளாகப் படைபொருதவனும் அந்த வீரப்பாடு தோன்றத் திருக்கண்ணபுரத்திலே நித்யஸந்நிதிபண்ணியிருப்பவனுமான பெருமானுடைய திருவபிஷேகத்தின் மேலுண்டான திருத்துழாயிலே அவகாஹித்து

வந்து ஊதாய் என்கிருள்.

காலன்— வட சொல். .... (அ)

நந்தன் மதலை நிலமங்கை நற்றுணைவன் *
அந்த முதல்வ னமரர்கள் தம்பெருமான் *
கந்தங்கமழ் காயாவண்ணன் கதிர்முடிமேல் *
கொந்து நறுந்துழாய் கொண்டூதாய் கோல்தும்பீ! (கூ)

கோல் தும்பீ!—;

நந்தன் மதலை	நந்தகோப குமாரனும்	காயா வண்ணன்	காயாம்பூப்போன்ற நிறத்தனுமான பெருமானுடைய
நிலம் மங்கை நல் துணை வன்	பூமிப்பிராட்டிக்கு இனிய வல்லபனும்	கதிர் முடி மேல்	ஒளிபொருந்திய திருமுடியின் மீதுள்ள
அந்தம் முதல்வன்	ஸம்ஹாரத்துக்கும் ஸ்ருஷ்டிக்குங் கடவனும்	கொந்து	கொத்துக் கொத்தான
		நறு	மணம்மிக்க
அமரர்கள் தம் பெருமான்	நித்யஸூரிகட்குத் தலைவனும்	துழாய் கொண்டு	திருத்துழாயைக் கொணர்ந்து
கந்தம் கமழ்	பரிமளம் கமழப்பெற்றவனும்	ஊதாய்	ஊது.

* * *— கோல்தும்பீ!, எல்லார்க்கும் எளியனாகைக்காக நந்தகோபர்க்குக் குமாரனாய்த் திருவவதரித்தவனும், அப்படி திருவவதரித்தது பூமிபாரத்தைப் போக்குகைக்காக வாகையாலே பூமிப்பிராட்டியின் மனத்துக்கு இனியனானவனும், துர்ஜனங்கள் மிகைத்தவாறே அவற்றை ஸம்ஹரிப்பதும் 'இனியாகிலும் ஸஜ்ஜனங்களாக வாழ்கிறார்களோ பார்ப்போம்' என்று பாரித்து மீண்டும் ஸ்ருஷ்டி பண்ணுவதுமாக இப்படி அழித்தலும் படைத்தலுமாகிற காரியங்களைச் செய்து கொண்டிருப்பவனும், அயர்வறுமமரர்களுக்கு அதிபதியாயுள்ளவனும், 'ஸர்வ—கந்தஃ' என்கிறபடியே திவ்யஸுகந்த வாஸிதனும், காயாம்பூப்போன்ற நிறமுடையனுமான எம்பெருமானுடைய கதிர்முடிமேல் கொந்து நறுந்துழாய்கொண்டு ஊதாய் என்கிருள்.

அந்தம்— வடசொல்; அந்தம். கந்தம்— கந்தஃ. 'கந்தங்கமழ்' என்ற அடைமொழி காயாவுக்கு இட்டதன்று, காயாவண்ணனுக்கு இட்டது. கொந்து— கொத்து. .... (கூ)

வண்டமருஞ் சோலை வயலாலி நன்னாடன் *
கண்டசீர் வென்றிக் கலியனொலிமாலை *
கொண்டல் நிறவண்ணன் கண்ணபுரத்தானை *
தொண்டரோம் பாட நினைந்தூதாய் கோல்தும்பீ! (க0)

கோல் தூம்பீ !—;

வண்டு அமரும் சோலை	வண்டுகள் படிந்த சோலைகளை யுடையதும்
வயல்	கழனிகளை யுடையதுமான
ஆலி	திருவாலியென்கிற
நல் நாடன்	நல்லநாட்டுக்குத் தலைவரும்
கண்ட சீர்	ப்ரத்யக்ஷமான திருக்குணங்களை யுடையவரும்
வென்றி	ஜயசீலருமான
கலியன்	திருமங்கையாழ்வார்
ஒலி	அருளிச்செய்த
மாலை	இச்சொல் மாலையைக் கொண்டு,
கொண்டல் நிறம் வண்ணனை	மேகத்தின் நிறம்போன்ற நிறத்தையுடையனை
கண்ண புரத்தானை	திருக்கண்ணபுரத் தெம்பெருமானை
தொண்டரோம்	அடியோங்கள்
பாட	பாடும்படியாக
நினைந்து	நீ நெஞ்சிற்கொண்டு
ஊதாய்	ஊதவேணும்.

* * *— திருமங்கையாழ்வா ரருளிச்செய்த இப் பாசுரங்களைக்கொண்டு தொண்டர்கள் திருக்கண்ணபுரத் தெம்பெருமானைப் பாடுகவென்று நீ உன் ஹ்ருதயத்திலே கொண்டு அவன் பக்கலிலே அறிவித்து எங்களுக்கு அவன் முகந் தரும்படிபண்ணி எங்கள் குறையைத் தீர்க்கப்பாராய் தும்பீ! என்கை.

நிகமநப் பாசுரங்களில் "பூவளருங் கற்பகஞ்சேர் பொன்னுலகில் மன்னவராய்ப் புகழ் தக்கோரே" "நீர்மலி வையத்து நீடு நிற்பார்களே" "நாமருவியிவை பாட வினையாய நண்ணாவே" என்று பயனுரைப்பதுபோல இப்பதிகத்திற்குப் பயனுரைக்கப் படவில்லை; தொண்டர்கட்குத் திருமொழியைப் பாடுதல் ஸ்வயம் ப்ரயோஜநமென்று காட்டப்பட்ட தாயிற்று.

"தொண்டர்கள் பாட" என்று படர்க்கையாகச் சொல்ல வேண்டுமிடத்துத் 'தொண்டரோம்' என்று தன்மையாகச் சொல்லியிருந்தாலும் படர்க்கையில் நோக்காகக் குறையில்லை. ஈற்றடியின் உட்கருத்து யாதெனில்; ஆழ்வார் தாம் குறைதீரப் பெற்றால் தொண்டர்க ளெல்லாரும் தம் குறைதீரப் பெற்றதாக நினைப்பர்களாதலால் அந்த மகிழ்ச்சியினால் இத் திருமொழியை உவந்து பாடுவர்கள்; அப்படி செய்விக்க வேணுமென்று தும்பிபோல்வாரான பாகவதர்களை வேண்டுகிறபடி. .... (௧௦)

அடிவரவு:— விண்ணவர் வேதம் விண்ட நீர் ஏரார் மார்வில் வாமனன் நீலம் கந்தன் வண்டமரும் தந்தை.

நான்காந்திருமொழி உரை முற்றிற்று.

ஜீயர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

எட்டாம்பத்து—ஐந்தாந்திருமொழி,

தந்தை காலில் விலங்கற.

உரையவதாரிகை :— எம்பெருமானைப் பிரிந்து மிகத் தளர்ந்த பரகால நாயகி எம்பெருமானுடைய ஸம்ச்லேஷம் நேராகக் கிடைக்காவிடினும் அவனோடு ஸம்பந்தம் பெற்றதொருவஸ்துவாயினும் கிடைக்கப்பெற்றால் தரிக்கலாமென்று பார்த்துச் சில தும்பிகளை நோக்கித் திருக்கண்ணபுரத் தெம்பெருமானுடைய திருத்துழாய் மாலையிற் படிந்து அங்குள்ள பரிமளத்தை முகந்து கொண்டுவந்து ஊதவேணுமென்று இரந்தாள். அத் தும்பிகள் கருத்தறிந்து காரியஞ் செய்யுமென்றும், தன்னுடைய நிலைமையை எம்பெருமானுக்கு அறிவித்து அவனைக் கொண்டுவருமென்றும், குறைதீரக் கலவி செய்யப் பெறலாமென்றும் பெரிய மநோரதங் கொண்டிருந்தாள்; அத்தும்பிகளோ வென்னில், இவள் பேச்சைச் செவியேறாதே தங்கள் ஜீவனந்தேடி யோடிப் போயின; எம்பெருமானோ வந்திலன்; தன்னை ஹிம்ஸிக்கும் பொருள்கள் மிகைத்தன; அவற்றுக்கு ஆடல்கொடுத்துப் போதுபோக்க வொண்ணாதபடி கண்டவிட மெங்கும் இருள் மூடிப்போகவே இன்னது செய்வதென்று தெரியாமல், திருவாய்ப்பாடியில் க்ருஷ்ணனைப் பிரிந்த பெண்களெல்லாரும் ஒரு ஸந்த்யையில் பட்ட பாட்டை இவளொருத்தியே பட்டுக் கூப்பிடுகிறதாய்ச் செல்லுகிறது இத்திருமொழி.

இத் திருமொழியின் நிகமனப் பாசுரத்தில் "வார்கொள் மென்முலை மடந்தையர் தடங்கடல் வண்ணனைத் தாள் நயந்து, ஆர்வத்தாலவர் புலம்பியபுலம்பலை யறிந்து முன்னுரை செய்த" என்று திருவாய்ப்பாடியிற் பெண்கள் க்ருஷ்ணன் திருவடிகளை ஆசைப்பட்டுக் கிட்டாமையாலே அபிநிவேசம் கரைபுரண்டு அவர்கள் புலம்பியபுலம்பலை இவ்வாழ்வார் அநுவாதம் பண்ணினதாக அருளிச்செய்யப்பட்டிருந்தாலும் விஷயம் அவ்வளவேயன்று; அவ்வாய்ச்சிகளின் அவஸ்தை தமக்குப் பிறந்து அவர்களைப் போலவே ஆற்றாமை கரைபுரண்டு பேசுகிறாரென்க. "அவ்வவஸ்தை பிறந்து கூப்பிட்ட" என்பர் பெரியவாச்சான்பிள்ளையும். .... *

தந்தைகாலில் விலங்கறவந்துதோன்றிய தோன்றல்பின் * தமியேன்றன்
சிந்தை போயிற்றுத் திருவருளவனிடைப் பெறுமளவிருந்தேனை *
அந்திகாவல னமுதுறுபசுங்கதி ரவைசுட வதனோடும் *
மந்தமாருதம் வனமுலைதடவந்து வலிசெய்வ தொழியாதே. (க)

தந்தை	தகப்பனாரான நந்தகோபருடைய
காலில்	காலில் பூட்டியிருந்த
விலங்கு	விலங்கானது
அற	இற்று முறிந்து விழும்படி
வந்துதோன்றிய	திருவவதரித்த
தோன்றல் பின்	ஸ்வாமியான கண்ணபிரானுடைய பின்னே
தமியேன் தன்	தனிப்பட்டிருக்கின்ற என்னுடைய
சிந்தை	நெஞ்சானது
போயிற்று	போய்விட்டது;
அவனிடை	அப்பெருமானிடத்தில்
திரு அருள்	க்ருபையை
பெறும் அளவு இருந்தேனை	பெறுவதற்கு ஸமயம் பார்த்திருக்கின்ற என்னை
அந்தி காவலன்	இராப்பொழுதுக்கு இறைவனான சந்திரனுடைய
அமுது உறு	அமுதம் மிக்க
பசுங் கதிர் அவை	அப்போதுண்டான கிரணங்களானவை
சுட	தஹிக்க,
அதனோடும்	அதோடுகூட,
மந்த மாருதம்	மெல்லிய தென்றற்காற்றும்
வனம் முல்லை தடம் வந்து	அழகிய முல்லைத்தடத்திலே வந்து வீசி
வலி செய்வது ஒழியாது	ஹிம்ஸைபண்ணுவதில் நின்றும் ஓய்கிறதில்லை.

* * *—தனிக்கிடை கிடந்து வருந்துகின்ற என்னுடைய நெஞ்சானது கண்ணபிரானைப் பின்பற்றிச் சென்றொழிந்தது; நெஞ்சு கைவிட்ட இந்த ஸமயத்திலே அப்பெருமானுடைய அருளாவது கிடைக்குமோ வென்று பார்த்திருக்குமெனக்கு அவ்வருள் கிடையாதது மன்றிக்கே உலகத்தில் மற்றுள்ளவர்கட்குத் தாபத்தைத் தணித்துக் குளிர்ச்சியைப் பண்ணவல்ல நிலாத் தென்றல் முதலியனவும் என் திறத்திலே விபரீதங்களா யிருக்கின்றனவே! அந்தோ! என்கிறாள்.

தேவகியின் வயிற்றிற் பிறக்கும் பிரஜையினால் தனக்கு மரணமுண்டாகுமென்று ஆகாசவாணியினாலறிந்த கம்ஸன் அவளைக் கத்தியினால் வெட்டிக்கொல்லப் புகுந்தபோது நல்வார்த்தைகளால் ஒருவாறு ஸமாதான மடைந்து வஸுதேவ தேவகிகளை விலங்கிட்டுச் சிறையிலடைத்துவைக்க, "மக்களறுவரைக் கல்லிடை மோத இழந்தவள் தன் வயிற்றில், சிக்கென வந்து பிறந்து நின்றாய்" என்றபடியே கண்ணபிரான் திருவவதரித்தவுடனே அவ்விலங்கு முறிபட்டுக் கழன்றொழிந்ததென்று இதிஹாஸபுராணங்கள் கூறுதலால் '**தந்தை காலில் விலங்கற வந்து தோன்றிய தோன்றல்**' எனப்பட்டது. அவன்பின் சிந்தை போயிற்றென்றது—அந்த வரலாற்றை அநுஸந்தித்து நெஞ்சு ஈடுபட்டுப் போயிற்று என்றவாறு. தந்தைதாயருடைய விலங்கைப் பரிஹரித்தவன் காதலியின் விலங்கைப் பரிஹரிக்கத் திருவுள்ளம்பற்றுகிறானில்லையே! என்று நெஞ்சு அழிகின்றதென்பது உட்கருத்து.

அவன்றான் அருள்மறுத்தால் அவனுடைய விபூதியும் அருள்மறுக்கவேணுமோ? உலகுக்கு நன்மையைப் பயக்கவேணுமென்று அவனால் நியமிக்கப்பட்டுள்ள சந்திரன் அம்ருத கிரணனாகையாலே அனைவர்க்கும் குளிர்ச்சியைப் பண்ணாநிற்க, அவனது கிரணங்கள் என்னொருத்திக்கே தாபத்தை விளைக்கக் காரண

மென்னே? இப்படியோ அவன் ஸங்கல்பித்து வைத்தது? அது கிடக்க; மந்த மாருதம் வீசாதோவென்று அதனை யெதிர்பார்த்து அனைவருங் களியாநிற்க அது என் முலைத்தடத்திலே வீசி வலிசெய்கின்றதே!, அது தானும் சற்றுப்போதோ? ஓயாது வலிசெய்கின்றதே! என் செய்வேன் என்கிறாள் பின்னடிகளில். விரஹி களுக்கு நிலாத்தென்றல் முதலியவை பாதகங்களாகுமென்க.

'தமியேன்' என்றாலும் 'தனியேன்' என்றாலும் ஒக்கும். இருந்தேனை— நிகழ்காலப் பொருளில் வந்த இறந்தகாலம்; இருக்கின்ற என்னை என்றபடி. அந்திகாவலன் = ஸந்த்யா காலத்திற்கு வாசகமான அந்தி என்னுஞ் சொல் இலக்கணையால் இரவைச் சொல்லுகின்றது; இராப்பொழுதுக்குக் காவலன் சந்திரன்; 'நிசாபதி:' என்பர் வடநூலாரும். மந்தமாருதம்—வடசொல் தொடர். ....(க)

மாசிமாக்கடல் வளைவணற்கிளையவன் வரைபுரை திருமார்பில் *
தாரினாசையிற் போயினநெஞ்சமும் தாழ்ந்ததோர் துணைகாணேன் *
ஊரும் துஞ்சிற் றுலகமுந் துயின்றது ஒளியவன் விசும்பியங்கும் *
தேரும் போயிற்றுத் திசைகளும்மறைந்தன செய்வதொன்றறியேனே. (உ)

மாசி	மேகம்போன்றவனும்
மா கடல்	நீலக்கடல் போன்றவனும்
வளை வணற்கு இளையவன்	சங்குபோன்ற [வெளுத்த] நிறமுடையவனான பலராம னுக்குப் பின் பிறந்தவனுமான கண்ணபிரானுடைய
வரை புரை	மலைபோன்ற
திரு மார்வில்	திருமார்பிலுள்ள
தாரின்	மாலையினிடத்து
ஆசையின்	ஆசையினால்
போயின	என்னைவிட்டு நீங்கின
நெஞ்சமும்	மனமும்
தாழ்ந்தது	மீண்டுவரத் தாமதித்தது; [அவனிடத்திலேயேகால் தாழ்ந்துவிட்டது.]
ஓர் துணை காணேன்	உதவியான வொருவனையுங் காண்கின்றிலேன்;
ஊரும் துஞ்சிற்று	ஊரிலுள்ளாரும் உறங்கினார்கள்;
உலகமும் துயின்றது	உலகங்களும் உறங்கின;
விசும்பு	ஆகாசத்திலே
இயங்கும்	ஸஞ்சரிக்கின்ற
ஒளியவன் தேரும்	ஸூர்யனது தேரும்
போயிற்று	மறைந்துபோயிற்று;
திசைகளும்	திக்குக்களும்
மறைந்தன	தெரியவில்லை;
செய்வது ஒன்று அறியேன்	(இந்நிலைமையில்) செய்யத்தக்கது ஒன்று மறிகின்றிலேன்.

* , * *—எம்பெருமான் திருமார்பிலணிந்துள்ள மாலையில் ஆசையாலே என்னைவிட்டு அங்குச்சென்ற எனது நெஞ்சானது அதைப் பெற்றுத் திரும்பி வருதலோ அன்றிப் பெறுதற்கரிது என்று ஆசையை விட்டிட்டுத் திரும்பிவரு தலோ ஆக இரண்டத்தொன்று செய்யாது 1. "சீரிருக்கு மறைமுடிவு தேடரிய திருவரங்கரை வணங்கியே திருத்துழாய் தரில் விரும்பியே கொடு திரும்பியே வருதலின்றியே, வாரிருக்குமுலை மலர்மடந்தையுறை மார்பிலே பெரிய தோளிலே

1. திருவரங்கக் கலம்பகம்.

மயங்கியின்புற முயங்கி பெண்ணைபு மறந்து தன்னைபுமறந்தே'' என்றாப் போலே அவன் பக்கலிலேயே கால் தாழ்ந்துவிட்டது; இதுவரையில் எனக்குத் துணையாயிருந்த நெஞ்சு அகன்று போகையாலும் உற்ற துணைவனான அப்பிரான்றானும் உபேக்ஷிக்கையாலும் இனி யெனக்குத் துணையாவாரில்லையே; உண்டியே உடையே உகந்தோடு மிம்மண்டலத்தோடே * உண்ணுஞ் சோறு பருகுநீர்த் தின்னும் வெற்றிலையுமெல்லாங் கண்ணனென்றிருக்கிற எனக்கு ஒரு சேர்த்தியில்லை யாகையாலே ஊராரும் உலகத்தாரும் எக்கேடுகெட்டாலும் அவர்களைப்பற்றி எனக்கு விசாரமில்லை: ஆயினும் யாருடனாவது எதையாவது பேசிக் கொண்டு இப்பாழும் பொழுதைப் போக்கித் தொலைப்போமென்று பார்த்தாலும் ஊராரும் உலகத்தாரும் என்னைப்போலே பகவத்விஷயத்தில் ஈடுபட்டவர்களல்லாமையாலே தாங்கள் விரும்பிய விஷய போகங்களைக் குறையறப்பெற்றுக் களித்துக் கொறுட்டைவிட்டு உறங்குகிறார்கள்; உலகப்பொருள்களில் எதையேனுங் கண்டு கொண்டாகிலும் இந்தப் பிரிவாற்றாமையை ஒருவாறு ஆற்றுவோமென்று பார்த்தாலோ, * சுழன்றிலங்கு வெங்கதிரோன் தேரோடும் போய்மறைந்தான்; இருள்மூடிக் கிடப்பதனாலே ஒரு பொருளையுங்காண விரகில்லை; அந்தோ! புறம்புள்ளா ரொருவருமில்லையாயிற்று; நெஞ்சும் குடிபோயிற்று; நாயகனோ வந்தணைகின்றிலன்; காலமோ துயர் நெடுகும்படியான இராக்காலமாயிராநின்றது; என்ன செய்து தரிக்கலாமென்று தெரியவில்லையே என்கிறாள்.

"மாரிமாக்கடல்" என்றதில் உவமவுருபு தொக்கிக் கிடக்கின்றது; மாரி போலவும் மாக்கடல் போலவுமுள்ளவன் என்றவாறு. வேறு வகையாகவுங் கொள்ளலாம்;—மாரி—மேகங்கள் படிகின்ற, மாக்கடல்—பெரிய கடலிலுண்டான, வளை—சங்குபோன்ற, வண்ணற்கு—நிறத்தையுடைய பலராமனுக்கு, இளையவன்—என்று. பலராமன் ஆதிசேஷனுடைய அம்ஸமாதல்பற்றி வெண்மைநிறமுடையனாதலால் வளைவண்ணனெனப்பட்டான். 1. "முன்னலோர் வெள்ளிப் பெருமலைக்குட்டன் மொடு மொடு விரைந்தோட" என்றார் பெரியாழ்வாரும். கண்ணபிரான் பெண்களைப் பிரிந்து நெடுநாள் அந்யபரனாயிருந்திடுவன்; அப்போது பிரிவாற்றாமையின் கனத்தினால் அப்பிரான்மீது மிக்கவெறுப்புக் கொண்ட பெண்கள் 'இனி ஒருநாளும் அப் படுபாவியின் முகத்தில் விழிக்கக் கடவோமல்லோம்; அவன்றானே வேறு கதியற்று வந்து நின்றாலும் கதவடைத்துத் தள்ளக்கடவோம்' என்று ஸங்கல்பித்துக் கொண்டிருப்பார்கள்; பலராமன் இதனையறிந்து முன்னாடித் தான் பெண்களிடம் வந்து இன் சொற்களாலே கிருஷ்ணனுடைய குற்றங்களை மறப்பித்து அவர்களது சீற்றத்தையும் ஆற்றிச் சேரவிடுவன். ("[illegible] யஸ்ய ஜாவவநிதா: க்ருஷ்ணாமஹஸம் வ்யூஹாநு தம் ஸ்வாம் [illegible]" என்றார் பட்டரும் ஸ்ரீரங்கராஜஸ்தவ உத்தரசதகத்தில்.) அந்த உபகார ஸ்ம்ருதிதோற்ற இங்கு 'வளைவணற்கு இளையவன்' எனப்பட்டதென்ப.

1. பெரியாழ்வார் திருமொழி 1—7—5.

'தாரிணுசையிற்போயின நெஞ்சமும் தாழ்ந்தது' என்றது—என்னுடைய நெஞ்சானது அப்பெருமான் திருமார்பிலணிந்த திருத்துழாய்மாலையைப் பெறு தற்கே பேராசை கொண்டிருக்கின்றது என்றவாறு. இப்படிப்பட்ட ஆசை யுடையார் மற்று எவருமில்லாமையாலும், வேறுவகையான ஆசையுடையாரோடு தனக்குச் சேர்த்தி யில்லாமையாலும் 'ஓர் துணைகாணேன்' என்றது.

'ஊருந்துஞ்சிற்று உலகமும் துயின்றது' என்றதற்கு ஸ்வாபதேசப்பொருள் கூறலாம்; ஆசார்ய ஹ்ருதயத்தில் "ஊரார் நாட்டார் உலகர் கேவலைச்வர்யகாம ஸ்வதந்த்ரர்" என்றருளிச் செய்திருக்கையாலே, கைவல்யார்த்திகளும் ஐச்வர் யார்த்திகளுமாய் ப்ரயோஜநாந்த்ரபரரா யிருக்கின்ற இவ்வுலகத்தவர்கள் செத்த பிணம் போன்றிருக்கின்றனர்; அவர்களைக் கொண்டு நமக்கொரு காரியமில்லை என்றவாறு.

முற்காலத்தில் எம்பெருமானார் திருவடிகளில் ஆச்ரயித்த பிள்ளையுறங்கா வில்லிதாஸர் திருநாட்டுக் கெழுந்தருள; அவரை ப்ரஹ்மரதத்திலே யெழுந் தருளப் பண்ணிக்கொண்டு செல்ல, அவருடைய தேவியாரான பொன்னாச்சி பிரிவாற்றாமைப் பாசுரமாகிய இத்திருமொழியை அநுஸந்திக்கத் தொடங்கி, முதற்பாசுர மநுஸந்தித்து இரண்டாவதான இப்பாசுர மநுஸந்திக்குமளவிலே முன்னே ப்ரஹ்மரத பெழுந்தருளப் பண்ணிக்கொண்டு செல்பவர்கள் விரைந்து செல்லுகையாலே திருத்தேர் மறைய, அதற்குத் தகுதியாகப் பொன்னாச்சியின் அநுஸந்தானம் "தேரும் போயிற்றுத் திசைகளும் மறைந்தன செய்வதொன்றறி யேனே" என்றாக, அப்போதே பொன்னாச்சியின் பிராணனும் தன்னுடையே விட்டு நீங்கிப்போயிற்று என்ற ஐதிஹ்யம் இங்கு அறியத்தக்கது. .... (உ)

ஆயன்மாயமே யன்றிமற்றென் ? கையில் வளைகளு மிறைநில்லா *
பேயினாருயி ருண்டிடும்பிள்ளை நம்பெண்ணுயிர்க் கிரங்குமோ? *
தூயமாமதிக் கதிர்சுடத்துணையில்லை யிணைமுலை வேகின்றதால் *
ஆயன்வேயினுக் கழிகின்ற துள்ளமு மஞ்சேலேன்பாரிலையே. (௩)

ஆயன்	கண்ணபிரானுடைய
மாயமே அன்றி மற்று என்?	வஞ்சனை தவிர வேறு என்ன இருக்கிறது? (ஒன்றுமில்லை.)
வளைகளும்	வளைகளும்
கையில் இறை நில்லா	கையில் க்ஷணகாலமும் தங்குவதில்லை;
பேயினார்	பேய்ச்சியாகிய பூதனையினுடைய
உயிர்	பிராணனை
உண்டிடும் பிள்ளை	உண்டு அவளை முடித்த பிள்ளை
நம் பெண் உயிர்க்கு	(அவளைப்போல்) பெண்ணாய்ப்பிறந்த நம்முடைய பிராணனுக்கு
இரங்குமோ	தயைபண்ண ப்ரஸக்தி யுண்டோ?
தூய மா மதி	மறுவற்ற சந்திரனுடைய
கதிர்	கிரணங்கள்
சுட	தஹிப்பதனாலே
இணை முலை	இரண்டு முலைகளும்
வேகின்றது	தீப்பற்றி யெரிகின்றன
ஆல்	அந்தோ !;

துணை இல்லை — (எரியும்நெருப்பையவிக்கத்) துணையாவாரில்லை;
உள்ளமும் — மனமும்
ஆயன் — கண்ணபிரானுடைய
வேயினுக்கு — வேய்க்குழலுக்கு ஈடுபட்டு
அழிகின்றது — மாய்கின்றது;
அஞ்சேல் என்பார் இல்லையே — 'பயப்படாதே' என்று அபயமளிப்பாரு மில்லையே.

* * *—என் கையில் வளைகள் க்ஷணகாலமும் நிற்கின்றனவில்லை; இப்படி யாகைக்கு என்ன காரணமிருக்கும்? எம்பெருமானுடைய வஞ்சகமே இதற்குக் காரணமாயிருக்க வடுக்கும்; வேறொன்றுமில்லை; எல்லார் திறத்திலும் அருள் செய்கின்ற அப்பெருமான் நம்பக்கலில் அருள் செய்யாமைக்குக் காரணமென்னே வென்னில், பூதனையென்னும் பேய்ச்சி பேய் வடிவை மறைத்துத் தாய் வடிவைப் பூண்டுகொண்டு திருவாய்ப்பாடியேற வந்து நள்ளிருளில் நஞ்சு தீற்றிய முலையைக் கொடுத்துத் தன்னைக் கொல்ல நினைத்தவன்றுமுதலாக அப்பெருமான் ஸ்த்ரீ ஜாதியில் பரிபூர்ணமான பகைமையைக் கொண்டான்போலும்; 'பெண்ணாய்ப் பிறந்தவர்களெல்லாரும் நம்மைக் கொல்லுங் கருத்துடையாரே யன்றி, ஒருவரும் நம்மிடத்தில் நல்லெண்ண முடையாரில்லை' என்று அவனுக்குக் கருத்துண்டாயிற்றுப் போலும்; ஆகவே பெண்ணாய்ப்பிறந்த நம்முடைய உயிர்க்கு அவன் எங்ஙனே இரங்குவன்? இரங்கவே மாட்டான். அவன் இரங்கி யருளாதவளவேயோ? உலகுக் கெல்லாம் குளிர்ச்சியைத் தரவல்ல சந்திரனுடைய கிரணங்கள் நம்மைத் தஹிக்கின்றன; வேறு எந்த அவயவத்தையும் தஹிக்கின்றனவில்லை; இணை முலைகளையாயிற்று தஹிப்பது!; இந்த நிலைமையிலே அப்பிரானுடைய வேய்ங்குழலோசை வந்து நெஞ்சை வலியக்கவர்ந்து கொண்டுபோகின்றது; இதற்கு மேற்படவும் ஒரு ஆபத்து விளையப்போவதுண்டோ? எவ்வளவு கொடிய ஆபத்து நேர்ந்தாலும் அருகில் யாரேனுமிருந்து 'அஞ்சாதேகொள்' என்று தைரியங் கூறினால் ஒருவாறு ஆறியிருக்கலாம்; அப்படி இங்கு அஞ்சேலென்பாரையுங் காணோம். ஆபத்தை நீக்கி அபயமளிக்கவல்ல அவன்றானே ஆபத்தை விளைத்து அச்சத்தை யுண்டாக்கும்போது அஞ்சேலென்னவல்லார் வேறுயாவருளர்? என வருந்திக் கூறுகின்றாள்.

"அஞ்சலென்பாரில்லையே" என்றும் பாடமுண்டு; அது ஓசைக்கு மிகச் சேரும். .... (௩)

கயங்கொள்புண்தலைக் களிறுந்து வெந்திறற்கழல்மன்னர் பெரும்போரில் *
மயங்கவெண்சங்கம் வாய்வைத்த மைந்தனும் வந்திலன் மறிகடல்நீர் *
தயங்கு வெண்டிரைத்திவலை நுண்பனியெனும் தழல்முகந் திளமுலைமேல் *
இயங்குமாருதம் விலங்கிலென்னாவியை யெனக்கெனப் பெறலாமே. (௪)

கயம் கொள் புண் தலை — (ஈயும் ரத்தமும்) தடாகம் போலே வற்றாதிருக்கிற புண்கள் நிரம்பிய தலையையுடைய
களிறு — யானைகளை
உந்து — தள்ளிநடத்தவல்ல
வெம் திறல் — வெவ்விய வலிமையை யுடையவரும்

கழல்	வீரக்கழலையுடையருமான
மன்னர்	அரசர்களினுடைய
பெருபோரில்	பெரிய பாரதயுத்தத்தில்
மயங்க	அறிவுகலங்கும்படி
வெண் சங்கம்	வெளுத்த பாஞ்சஜந்யத்தை
வாய் வைத்த	திருப்பவளத்தில் வைத்து ஊதின
மைந்தனும்	மஹாபுருஷனும்
வந்திலன்	(என்னிடம்) வந்து சேர்ந்தானில்லை ;
மறி கடல்	அலைமடிகின்ற கடலினுடைய
நீர்	ஜலத்தில்
தயங்கு	அசைந்துவருகின்ற
வெண் திரை	வெண்மையான அலைகளாலுண்டான
திவலை	திவலைகளாகிற
நுண் பனி எனும்	நுட்பமான பனியென்று சொல்லப்படுகிற
தழல்	நெருப்பை
முகந்து	வாரிக்கொண்டுவந்து
இள முலை மேல்	(என்து) இளமைதங்கிய முலைகளின்மீது
இயங்கு	வீசுகின்ற
மாருதம்	காற்றானது
விலங்கில்	தணியப்பெற்றால்
என் ஆவியை	என்துஉயிரை
எனக்கு என பெறலாம்	எனக்கு உரித்தாக அடையலாம்

* * *—"பந்தார் விரலாள் பாஞ்சாலி கூந்தல் முடிக்கப் பாரதத்துக், கந்தார்களிற்றுக் கழன்மன்னர் கலங்கச் சங்கம்வாய்வைத்தான்" என்கிறபடியே என்னைப்போல் பெண்ணாய்ப்பிறந்த வொருத்தியான த்ரௌபதியின் விரித்த கூந்தலை முடிப்பதற்காகப் பாரதப்போரில் வியாபரித்து * மலைபுரைதோள் மன்னவரும் மாரதரும் மற்றும் பலர் குலைய நூற்றுவரும் பட்டழியத் திருப்பவளத்திலே ஸ்ரீ பாஞ்சஜந்யத்தை வைத்து ஊதித் தன்னுடைய பக்ஷபாதத்தைக் காட்டியருளின மஹாநுபாவன் இன்று என் விஷயத்திலே அருள் செய்கின்றிலனே !; படாத பாடுகள் பட்டு த்ரௌபதியின் மநோரதத்தைத் தலைகட்டினாப்போலே எனக்காக ஏதேனும் படாதபாடுகள் படச்சொல்லுகிறேனோ? இங்கு வரவேணு மென்றித்தனையேயன்றோ நான் வேண்டுவது.

அவன்படி அப்படியிருக்கட்டும் ; "பீஷாஸ்மாத் வாத: பவதே" [எம்பெருமானுக்கு அஞ்சிக்கொண்டு காற்று வீசுகின்றது] என்று உபநிஷத்திற் கூறிய படியே அப்பெருமானுக்கு அஞ்சி நடக்கின்ற காற்றும் அவன் கருத்தையே பின் சென்று என் ஆவியைக் கொள்ளை கொள்ளப்பார்க்கின்றது : எல்லார்க்கும் ஆவியைத் தளிர்ப்பிக்கின்ற மந்தமாருதமானது இப்போது என் ஆவியைமாய்க்கின்ற படியாலே இஃது எப்போது தணியப்போகின்றதென்று எதிர்பார்க்கவேண்டிற்றாயிற்று ; ஒருகால் தணியப்பெறில் என்னுடைய ஆவி என்னுடையதுதானென்று நினைத்துக்கொள்ள இடமுண்டாகுமென்றாளாயிற்று.

பாரதப்போரில் வந்து நின்ற அரசர்கள் எப்படிப்பட்டவர்களென்னில் ; கயங்கொள் புண்தலைக் களிறுந்து வெந்திறல்=யானைகளைச் சேனைத்தொகையாக நடத்திக்கொண்டு வந்தவர்கள் என்றும் பொருள் கூறலாம், யானைகளையும் கையாலே நெரித்துத் தள்ளவல்ல பெருமிடுக்கர் என்றும் பொருள் கூறலாம்

யானைகளின் மத்தகம் எப்போதும் மாவட்டியினால் குத்தப்பட்டு விரணங்கொண்டு சீயும் ரத்தமும் § அறக்கயம்போலே யிருக்குமாதலால் ‘கயங்கோள் புண்தலை’ என்று களிற்றுக்கு விசேஷண மிடப்பட்டது; யானைச்சாதிக்கு இயற்கை விசேஷணமெனக.

காற்று வீசும்போது கடலலைத்திவலைகளைக் கொணர்ந்து வீசும்; அவை விரஹிகளுக்கு நெருப்புப்பொறி போன்றிருக்குமென்க. மாருதம்—வடசொல். விலங்கில்—விலகினால். இந்தக்காற்று இப்படியே சிறிதுபோது வீசிக்கொண்டிருக்குமாகில் என் ஆவி என்னுடையதன்று, இறந்தேபோயிந்தனை என்றவாறு. .... (௪)

ஏழுமாமரம் துளைபடச்சிலைவளைத் திலங்கையை மலங்குவித்த
ஆழியான் * நமக்கருளிய வருளோடும் பகலெல்லை கழிகின்றதால் *
தோழி! நாமிதற் கென்செய்தும்? துணையில்லை சுடர்படுமுதுநீரில் *
ஆழவாழ்கின்ற ஆவியையடுவதோ ரந்திவந் தடைகின்றதே. (௫)

ஏழு மா மரம்	ஸப்தஸாலவ்ருக்ஷங்கள்
துளைபட	(ஸுக்ரீவனுடைய நம்பிக்கைக்காகத்) துளைபடும்படி
சிலை	வில்லை
வளைத்து	வளைத்தவனும்,
இலங்கையை	லங்காபுரியை
மலங்குவித்த	கலங்கப்பண்ணினவனுமான
ஆழியான்	அழகாழி மோதிரத்தைக் கையிலேயுடைய இராமபிரான்
நமக்கு அருளிய அருளோடும்	நம்விஷயத்திற்பண்ணின கிருபையோடுகூட
பகலெல்லை கழிகின்றது	பகற்போதும் முடிந்து போகாநின்றது;
ஆல்	அந்தோ!;
தோழி	வாராய் தோழீ!;
இதற்கு நாம் என் செய்தும்	இந்த ஆபத்துக்கு நாம் என்ன பரிஹாரம் செய்யவல்லோம்!;
துணை இல்லை	துணைநிற்பார் ஆருமில்லை;
சுடர்	ஸூர்யனானவன்
படு	தான்தோன்றின
முதுநீரில்	ஸமுத்ரத்தினுள்
ஆழ	ஆழ்ந்தமறைந்துபோக,
வாழ்கின்ற ஆவியை அடுவது	பிழைத்திருக்க நினைத்திருக்கின்ற பிராணனை முடிப்பதான
ஓர் அந்தி	ஒரு ஸாயம்ஸந்த்யாகாலமானது
வந்து அடைகின்றதே	வந்து சேர்கின்றதே!.

* * *—அன்பர்கட்கு அருந்தொழில்கள் செய்யுமவன் என்று புகழ்பெற்ற பெருமான் இதுவரையில் நமக்குச் செய்திருந்த அருளும் போயிற்று, பகற்பொழுதும் போயிற்று; எம்பெருமானருள் மறுத்தாலும் பகற்பொழுதாகிலுமிருந்தால் ஒருவாறு உலகப்பொருள்களையாவது கண்டுகொண்டு ஆற்றலாம்; அவனருளோடு கூடவே பகற்போதும் போயிற்றே; தோழீ! இதற்கு நாம் என் செய்யக்கடவோம்; நமக்கு ஆரும்துணையில்லையே; ஸூர்யன் தான்

§ அறக்கயம்—ஒருகாலும் வற்றாத குளம்,

தோன்றின ஸமுத்ரத்திலேயே சென்று அஸ்தமிக்க, இன்னம் சிறிது நாளைக்கு ஜீவித்திருக்கவல்ல பிராணனை இன்றே முடிப்பதாக மாலைப்பொழுது வந்து சேர்ந்து விட்டதே! அந்தோ! என்கிறாள்.

ஏழுமாமரந் துளைப்படச் சிலைவளைத்து=ஸுக்ரீவன் இராமபிரானால் அபய ப்ரதாநஞ் செய்யப்பெற்ற பின்பும் மனந்தெளியாமல் வாலியின் பேராற்றலைப் பற்றிப்-பலவாறு சொல்லி, வாலி மராமரங்களைத் துளைத்ததையும் துந்துபியின் உடலெலும்பை ஒரு யோசனைதூரம் தூக்கி யெறிந்ததையுங் குறித்துப் பாராட்டிக் கூறி, இவ்வாறு போராற்ற லமைந்தவனை வெல்வது ஸாத்தியமாகுமோ? என்று சொல்ல, அது கேட்ட லக்ஷ்மணன் ‘உனக்கு விச்வாஸம் இல்லையாயின் இப்போது என்ன செய்யவேண்டுவது?’ என்ன, ஸுக்ரீவன் ‘இராமபிரான் நீறுபூத்த நெருப்புப்போலத் தோன்றினும் வாலியின் வல்லமையை நினைக்கும் போது ஸந்தேஹமுண்டாகின்றது; ஏழு மராமரங்களையுந் துளைத்து இந்தத் துந்துபியின் எலும்பையும் இருநூறு விரற்கடை தூரம் தூக்கி யெறிந்தால் எனக்கு நம்பிக்கையுண்டாகும்’ என்று சொல்ல, ஸுக்ரீவனுக்கு நம்புதலுண்டாக்குமாறு அவனது வார்த்தைக்கு இயைந்து இராமபிரான் துந்துபியின் உடலெலும்புக் குவியலைத் தனது காற்கட்டை விரலினால் இலேசாய்த் தூக்கிப் பத்து யோஜனை தூரத்துக்கு அப்பால் எறிய, அதனைக் கண்ட ஸுக்ரீவன் ‘முன்பு உலராதிருக்கையில் வாலி இதனைத் தூக்கியெறிந்தான்; இப்போது உலர்ந்துபோன இதனைத் தூக்கியெறிதல் ஒரு சிறப்பன்று’ என்று கூற, பின்பு இராமபிரான் ஒரு பாணத்தை ஏழு மராமரங்களின்மேல் ஏவ, அது அம்மரங்களைத் துளைத்ததோடு ஏழுலகங்களையுந் துளைத்துச் சென்று மீண்டு அம்பறாத் தூணியை யடைந்தது என்றாயிற்று வரலாறு; இப்படி எனக்காக ஏதேனும் அருமையான காரியம் செய்யவேணுமென்கிறேனோ என்றவாறு.

இலங்கையை மலங்குவித்த=1. “உண்ணுதறங்காது ஒலிகடலை யூடறுத்துப், பெண்ணாக்கை யாப்புண்டு தாமுற்ற பேதெல்லாம்” என்னுமாபோலே ஒரு ஸீதாபிராட்டியின் உடம்பிலே ஆசை வைத்துப் பட்டபாடுகள் தெரியுமே; அப்படி ஏதேனும் எனக்காகப் பாடுபடவேண்டுகிறேனோ? என்கை.

[ஆழியான்.] “கைகேயியுடைய வரத்தில் அகப்படாதது அறுகாழியொன்றுமே போலே” என்பது பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியான ஸ்ரீ ஸூக்தி.

‘அருளோடும் பகலெல்லை கழிகின்றது=அருளும் கழிந்தது, பகற்பொழுதுங் கழிந்தது என்றபடி. மூன்றமடியில், செய்தும்=தன்மைப் பன்மை வினைமுற்று. .... (௫)

முரியும் வெண்டிரை முதுகயம்தீப்பட முழங்கழ லெரியம்பின் *
வரிகொள்வெஞ்சிலை வளைவித்தமைந்தனும் வந்திலனென்செய்கேன் ?
எரியும்வெங்கதிர் துயின்றது பாவியேனிணைநெடுங் கண்துயிலா *
கரியநாழிகை யூழியிற்பெரியன கழியுமா றறியேனே. (௬)

முரியும்	கிளர்ந்து அலைகின்ற
வெண் திரை	வெளுத்த அலைகளையுடைய
முதுகயம்	ஸமுத்ரமானது
தீப்பட	தீக்கொளுவியெரியும்படி
முழங்கு அழல் எரி அம்பின்	ஒலியுடைய நெருப்பு எரியாநின்றுள்ள அம்புகளையுடைய
வரி கொள் வெம் சிலை	அழகியதாய்க் கொடிதாயிருக்குமுள்ள வில்லை
வளைவித்த	வளையச்செய்த
மைந்தனும்	மஹாவீரனான இராமபிரானும்
வந்திலன்	வரவில்லை ;
என் செய்கேன்	என்னபண்ணுவேன் ? ;
எரியும்	பிரகாசித்துக்கொண்டிருந்த
வெம் கதிர்	ஸூர்யனும்
துயின்றது	அஸ்தமித்தான் ;
பாவியேன்	பாவியான என்னுடைய
இணை நெடுங் கண் துயிலா	பெரிய இரண்டுகண்களும் உறங்குகின்றனவில்லை ;
ஊழியின்	கல்பகாலத்திற்காட்டிலும்
பெரியன	பெரியவையாயுள்ள
கரிய நாழிகை	இரவு நாழிகைகள்
கழியும் ஆறு அறியேன்	எப்படி கழியப் போகின்றனவோ அறிகின்றிலேன்.

* * *—கடற்கரையிலே விபீஷணாழ்வான் வந்து சரணமடைந்து பெருமாளுடைய திருவருளுக்கு இலக்கான பிறகு, விபீஷணன் பெருமாளை நோக்கி 'ஸ்வாமீ! இந்த நம்முடைய ஸேனைகள் கடலைக்கடந்து அப்பாற் செல்லவேண்டுமாதலால் அதற்காகக் கடலரசனை நீர் சரணம் புகவேணும்' என்ன, இராமபிரான் கடலைக்கடக்க உபாயஞ் சொல்லவேண்டுமென்று கடலரசனாகிய வருணனைப் ப்ரார்த்தித்துத் தர்ப்பசயனத்திலே படுத்து மூன்று நாளளவும் ப்ராயோபவேசமாகக் கிடக்க, ஸமுத்ர ராஜன் அப்பெருமானது மஹிமையைக் கருதாமல் உபேக்ஷையாயிருந்திடவே, ஸ்ரீராமன் அதுகண்டு கோபங்கொண்டு 'அனைவரும் நடந்தே செல்லும்படி கடலை வற்றச் செய்வேன்' என்று ஆக்நேயாஸ்த்ரத்தைத் தொடுத்த வரலாறு இங்கு ஸ்மரிக்கத் தக்கது.

ஸர்வலோக சரண்யன் சரணாகதி பண்ணுகிறானென்று சிறிதும் நினையாமல் கீழ்மண் கொண்டு மேல்மண் வீசி அலையெறிந்த செருக்கை உட்கொண்டு 'முரியும் வெண்டிரை முதுகயம்' எனப்பட்டது. எப்போதும் அருள்வடிவமாகவேயிருக்கும்பெருமான் சீறிச் சிவந்த கண்ணினராய்க் கடலரசன்மேல் அம்பு தொடுத்தது எதுக்காக? கடலைக்கடந்து இலங்கைக்குச் சென்று அங்கு அசோகவனத்திலிருக்கும் மைதிலியோடு கூடி மகிழவேணுமென்கிற ஆசையினாலன்றோ? அங்கு அங்ஙனம் பாரித்தவர் என்னோடு வந்து கலப்பதற்கு ஒரு இடையூறுமில்லையாயிருக்கவும் ஏனோ உதாஸீநராயிருக்கிறார்! என வருந்துகிறாள் பரகால நாயகி.

ஸூர்யனும் அஸ்தமித்து விட்டான்; இரவிலே உறக்கம் வரவேண்டியது ப்ராப்தமாயிருந்தும் பாவியேனுடைய கண்கள் உறங்குகின்றில; 1. "நீளிரவும்,

1. திருவாய்மொழி 5—4—8.

ஓயும் பொழுதின்றி ஊழியாய் நீண்டதால்'' என்னுமாபோலே ப்ரளயராத்ரியினும் நெடுகிச் செல்கின்ற இவ்விராப்பொழுது எங்ஙனங் கழியப்போகின்றதோ அறிகின்றிலேன் என்கிறார் பின்னடிகளில்.

கரிய நாழிகை = இராப்பொழுதானது இருண்டு கறுத்திருப்பதனால் நாழிகையிலும் அக்கருமை ஏற்றிக் கூறப்பட்டது. கரிய நாழிகை—கொடிதான நாழிகை என்னவுமாம். .... (சு)

கலங்கமாக்கடல் கடைந்தடைத் திலங்கையர்கோனது வரையாகம்
மலங்க * வெஞ்சமத்தடுசரந் துரந்த எம்மடிகளும் வாரானால் *
இலங்குவெங்கதி ரிளமதியதனொடும் விடைமணியடும் * ஆயன்
விலங்கல்வேயினதோசையுமாயினி விளைவதொன் றறியேனே. (எ)

மா கடல்	பெரிய கடலானது
கலங்க	கலங்கும்படியாக
கடைந்து	(அதனைக்) கடைந்தவனும்
அடைத்து	(அக்கடலில்) அணை கட்டினவனும்
இலங்கையர் கோனது	இலங்கையிலுள்ளார்க்கு அரசனான இராவணனுடைய
வரை ஆகம்	மலைபோன்ற மார்பானது
மலங்க	வியாகுலப்படும்படி
வெம் சமத்து	கொடியபோரில்
அடு சரம்	கொலையம்புகளை
துரந்த	பிரயோகித்தவனுமான
எம் அடிகளும்	எமது ஸ்வாமியும்
வாரான்	வரவில்லை;
ஆல்	அந்தோ!;
இலங்கு	விளங்காநின்ற
வெம் கதிர்	உஷ்ணமான கிரணங்களையுடைய
இள மதி அதனொடும்	இளஞ்சந்திரனோடுகூட
விடை	எருதினுடைய
மணி	(கழுத்தில்கட்டின மணியின்) ஓசையும்
அடும்	(என்னைக்) கொலை செய்கின்றது;
ஆயன்	இடையனான கண்ணபிரானிடத்துள்ள
விலங்கல் வேயினது	மலைமூங்கிற்குழலினுடைய
ஓசையும்	த்வநியும்
ஆய்	உண்டாக,
இனி விளைவது ஒன்று அறியேன்	இனி உண்டாகப்போகும் ஆபத்தை ஒன்று மறிகின்றிலேன்.

* * *—(1. ''விண்ணவரமுதுண அமுதில் வரும் பெண்ணமுதுண்ட எம்பெருமானே'' என்கிறபடியே) தேவர்களுக்கு அமுதமெடுத்துக் கொடுக்கிற வியாஜத்தினால் சிறந்த அமுதமாகிய பிராட்டியைத் தான் பெறுதற்குக் கடலைக் கடைந்தான்; அவளைப்பெறுதற்கே மற்றொரு ஸமயத்தில் கடலையடைத்தான்; இலங்கையிற் புகுந்து எதிரிகள் விட்ட அம்புமாரிகளையெல்லாம் மேலேற்றுப் போர்புரிந்து இராவணனைக் கொன்றான்; இவ்வரிய பெரிய காரியங்களை

1. பெரியதிருமொழி 6—1—2.

யெல்லாம் நோக்குங்கால் அப்பெருமானுக்கு ஸ்த்ரீ வ்யக்தியில் அளவற்ற காத லுள்ளமை நன்கு விளங்கும். ஒரு ஸ்த்ரீவ்யக்தி கிடைப்பதாயிருந்தால் பொறுக் கொணாத ஆயாஸங்களையும் பொறுத்துப் படாதன படுதற்கு ஸித்தனாயிருக்கு மப்பெருமான் நான் எளிதிற் கிடைக்கிறேனென்றோ என்னை உபேக்ஷித்திருப் பது! என்கிறாள் போலும்.

அவன்றான் வாராதொழியினும் என்னைக் கொலைசெய்வதற்கும் வழிதேட வேணுமோ? ஒரு புறத்திலே சந்திர கிரணங்களை ஏவி நலிகின்றான்; மற்றொரு புறத்திலே மாட்டுக் கழுத்து மணியோசையை யுண்டாக்கி நலிகின்றான்; பிறரை யிட்டு நலிவது போராதென்று தானே நேரில் நலியக்கருதி வேய்ங்குழலை வாயில் வைத்து ஊதி அவ்வோசையை யிட்டு நலிகின்றான்; இன்னமும் எவ்வெவ்வித மான நலிவுகள் நேரப்போகின்றனவோ அறிகின்றிலேனென்றாளாயிற்று.

விடைமணி அடும்=மாலைப்பொழுதில் மாடுகள் மேய்ந்துவிட்டுத் திரும்பும் போது கழுத்திற் கட்டியுள்ள மணிகளை ஓசைப்படுத்திக்கொண்டே வரும்; அவ் வோசை செவிப்பட்டவாறே மாலைப்பொழுது நெருங்கினமை யறிந்து "மாலையும் வந்தது மாயன்வாரான்" என்று நாயகி வருந்துவளென்க. "மாலைவாய்த் தன் னுடைய நாவொழியாதாடுந் தனி மணியின், இன்னிசை யோசையும் வந்தென் செவிதனக்கே, கொன்னவிலு மெஃகில் கொடிதாய் நெடிதாகும்" என்றார் பெரிய திருமடலிலும்.

விலங்கல் வேய்=கண்ணபிரான் ஊதும் குழல் மூங்கிலினால் செய்யப்பட் டது; அந்த மூங்கில் மலையில் விளைந்தது என்பதுபற்றி 'விலங்கல்வேய்' எனப் பட்டது. விலங்கலென்று மலைக்குப்பெயர். 'வேய்' என்ற மூங்கிலின் பெயர் அதனாற் செய்யப்பட்ட குழலுக்கு வாசகமானது ஆகுபெயர். .... (எ)

முழுதிவ்வையகம் முறைகெட மறைதலும் முனிவனும் முனிவெய்த *
மழுவினால் மன்னராருயிர் வௌவிய மைந்தனும் வாரானால் *
ஒழுகுநுண்பனிக் கொடுங்கிய பேடையையடங்கவஞ் சிறைகோலி *
தழுவுநள்ளிருள் தனிமையிற்கடியதோர் கொடுவினை யறியேனே. (அ)

இ வையகம்	இந்த லோகமானது
முழுது	அடங்கலும்
முறை கெட மறைதலும்	மரியாதை குலைந்து போனதனால்
முனிவனும்	ஜமதக்நிமுனிவன்
முனிவு எய்த	சீற்றங்கொள்ள (அதுகாரணமாக)
மழுவினால்	கோடாலிப்படையினால்
மன்னர்	க்ஷத்ரியர்களினுடைய
ஆர் உயிர்	அருமையானபிராணன்களை
வௌவிய	கவர்ந்த
மைந்தனும்	மிடுக்கையுடைய (பரசுராம) பிரானும்
	வாரான் ஆல்—;
ஒழுகு	பெருகுகின்ற
நுண் பனிக்கு	சிறுபனிக்காக
ஒடுங்கிய	ஒடுங்கிவர்த்திக்கிற
பேடையை	பெண்பறவையை
அம் சிறை கோலி	அழகிய சிறகுகளை விரித்து

அடங்கத் தழுவும்	நிபிடமாக அணைத்துக் கொள்வதற்குரிய	கடியது	க்ரூரமான
கள்ளிருள்	நடு நிசியில்	ஓர் கொடு வினை	வேறொரு பாபத்தை
தனிமையின்	(இப்படி) தனிமைப்பட்டி ருப்பதிற்காட்டிலும்	அறியேன்	அறிகின்றிலேன்.

* * *—உலகத்தில் எவரும் அழிப்பவரில்லாமையால் கொழுத்துத் திரிந்து கொடுமையியற்றிவந்த க்ஷத்ரிய வம்சங்கள் பலவற்றை நாசஞ் செய்தற் பொருட்டு நாராயணமூர்த்தி ஜமதக்நி முனிவரது மனைவியான ரேணுகையிடம் இராமனாய்த் திருவவதரித்துப் பரசு என்னுங் கோடாலிப்படையை ஆயுதமாகக் கொண்டு அதனாற் பரசுராமனென வழங்கப்பெற்று வருகையில், ஒருநாள் கார்த்தவீர்யார்ஜுநனும் அவனது குமாரர்களும் ஜமதக்நியின் ஆச்ரமத்தில் இளைப்பாறப்புகுந்த காலத்து அங்கே அம்முனிவனது ஹோமதேநுவானது வேண்டின வஸ்துக்களை யெல்லாம் யதேஷ்டமாக அளித்துக் கொண்டிருப்பதைக் கண்ட இவர்கள் அப்பசுவைக் கொள்ளைகொள்ள விரும்பி அதனைக் கவர்ந்து அம்முனிவனையுங் கொன்றிட்டது காரணமாக(ப் பரசுராமன்) அந்தக் கார்த்தவீர்யார்ஜுநனையும் அவனது குமாரர்களையுங் கொன்று அதனாலேயே க்ஷத்ரிய வம்சம் முழுவதன்மேலும் கோபாவேசங்கொண்டு உலகத்திலுள்ள அரசர்கள் பலரையும் இருபத்தொரு தலைமுறை பொருது ஒழித்திட்டானென்ற வரலாறு இங்கு உணரத்தக்கது.

அரீதிபுரியுமவர்களைக் கருவழிப்பதற்கென்றே திருவவதாரம் பண்ணின தலைவன் தானே அரீதிசெய்யத் தலைப்பட்டானே! எனவருந்துகின்றாள் பரகால நாயகி. பிரதிபக்ஷிகளான க்ஷத்ரியர்களின் உயிரைக் கவர்ந்த பெருமான் அன்புடையேனான என்னுடைய உயிரையுங் கவரப்பார்க்கிறானே! என்கிறாளாகவுமாம்.

பறவையினங்களும் குளிர்க்கு அஞ்சி ஒடுங்கிக்கிடக்கும் பேடையைச் சிறகினால் அணைத்து ஒன்றிக்கிடக்கும்படியான இந்த நள்ளிருட்போதிலே நாயகனைப் பிரிந்து பரிதபியா நின்ற என்னைப்போலே பாவஞ்செய்தாரு முலகிலுண்டோ என்கிறாள் பின்னடிகளில். நாயகனைப் பிரிந்து தனிக்கிடை கிடப்பதற்கு மேற்பட்ட பாபமில்லை யென்கிறாள். .... (௮)

கனஞ்செய் மாமதிட் கணபுரத் தவனொடும் கனவினி லவன்தந்த *
மனஞ்செ யின்பம்வந்துள்புக வேள்கி யென் வளைநெக விருந்தேனை *
சினஞ்செய் மால்விடைச் செறுமணி யோசையென் சிந்தையைச் சிந்துவிக்கும் *
அனந்த லன்றிலி னரிகுரல் பாவியே னாவியை யடுகின்றதே. (௯)

கனம் செய்	திண்ணிதாகச்செய்யப் பட்டுள்ள	மா மதிள்	பெரியதிருமதில் களையுடைத்தான

கணபுரத்து	திருக்கண்ணபுரத்தி லெழுந்தருளியிருக்கிற
அவனொடும்	அப்பெருமானோடு கூடியிருப்பதாக
கனவினில்	ஸ்வப்நத்திலே
அவன் தந்த	அப்பெருமான் கொடுத்த
மனம் செய் இன்பம்	மாநஸிகமாத்ரமான இன்பமானது
வந்து உள்புக	நினைவுக்குவர (அதனாலே)
என்கி	ஏற்பட்டு
என் வளை நெக இருந்தேனை	என் கைவளை கழலும்படி யிருக்கிற வென்னை
சினம் செய்	கோபங்கொண்ட

மால் விடை	பெரியவிருஷபத்தினுடைய
செறு மணி	க்ரூரமான மணியினுடைய
ஓசை	த்வநியானது
என் சிந்தையை	எனது நெஞ்சை
சிந்துவிக்கும்	சிதிலமாக்குகின்றது ;
அணைந்த	உறக்கங்கொண்டிருக்கின்ற
அன்றிலின்	அன்றிற்பறவையினுடைய
அரி குரல்	தழுதழுத்த பேச்சானது
பாவியேன்	பாவியான என்னுடைய
ஆவியை	உயிரை
அடுகின்றது	ஹிம்ஸிக்கின்றது.

* * *—இங்ஙனே துடிக்கின்ற பரகால நாயகிக்கு ஒருவகையான தேறுத லுண்டாகும்படி, எம்பெருமான் மாநஸிகமான அநுபவத்தைத் தந்து இன்பம் விளைவிக்க, தரித்ரனாயிருப்பானொருவன் பெருஞ் செல்வம் பெற்றதாகக் கனாக் கண்டு கண்விழித்தவாறே ஒன்றுமில்லாமை கண்டு முன்னிலும் விஞ்சிய வருத் தத்தை யடையுமாபோலே இப்பரகாலநாயகியும் ஸ்வப்நகல்பமான அவ் வநுபவத்தினால் பின்னையுந் தளர்ந்திருக்குமளவில் விடைமணி யோசையும் அன் றிற்பறவையின் கூக்குரலும் செவிப்பட்டு இன்னமும் நலிகிறபடி பேசிற்று யிட்டது.

அன்றில் என்பது ஒரு பறவை ; அது பெரும்பாலும் பனை மரத்தில் வாழும்; அது எப்பொழுதும் ஆணும் பெண்ணும் இணைபிரியாது நிற்கும். கணப்பொழுது ஒன்று ஒன்றைவிட்டுப் பிரிந்தாலும் அத்துயரத்தைப் பொறாமல் ஒன்றை ஒன்று இரண்டு மூன்று தரம் கத்திக் கூவி அதன் பின்பும் தன் துணை யைக் கூடாவிடின் உடனே இறந்துபடும். இப்பறவையை வடநூலார் க்ரௌஞ் சம் என்பர். ஆணும் பெண்ணுமான அந்த அன்றிற் பறவை இணைபிரியாமல் நெருங்கி ஒன்றோடொன்று வாயலகைக் கோத்துக்கொண்டு அவ்வுறக்கத்திலே வாயலகு தன்னில் நெகிழ்ந்தவளவிலே துயிலுணர்ந்து அப்பிரிவைப் பொறாமல் மெலிந்து பெருந்தொனியாகக் கத்துகிற மிக இரங்கத்தக்க சிறுகுரல் காமோத் தீபகமாய்ப் பிரிவாற்றாமைத் துயரை வளர்த்து விரஹிகளை மிக வருத்தும் என்ப. .... (௯)

வார்கோள்மென்முலை மடந்தையர் தடங்கடல்வண்ணனைத் தாள்நயந்து
ஆர்வத்தாலவர் புலம்பியபுலம்பலை யறிந்துமுன் னுரைசெய்த *
கார்கோள்பைம்பொழில் மங்கையர்காவலன் கலிகன்றி யொலிவல்லார் *
ஏர்கோள் வைகுந்தமாநகர் புக்கிமையவரோடும் கூடுவரே. (௰)

வார் கொள்	கச்சு அணிந்த
மென் முலை	மெல்லியமுலைகளையுடைய
மடந்தையர் அவர்	(திருவாய்ப்பாடியிலுள்ள) அப்பெண்கள்
தட கடல் வண்ணன்	பெரிய கடலின் நிறம் போன்றநிறமுடைய ஞானகண்ணபிரானுடைய
தாளை	திருவடிகளை
நயந்து	ஆசைப்பட்டு
ஆர்வத்தால்	அன்பினால்
முன் புலம்பிய புலம்பலை	முன்பு கதறின கதறலை
அறிந்து	உட்கொண்டு,

கார் கொள் பை பொழில் மங்கையர் காவலன்	மேகஸஞ்சாரத்தையுடைய பரந்தசோலைகளையுடைத்தான திருமங்கை நாட்டிலுள்ளார்க்குத் தலைவரான
கலிகன்றி	ஆழ்வார்
உரைசெய்த	அருளிச்செய்த
ஒலி	இச்சொற்களை
வல்லார்	ஓதியுணரவல்லவர்கள்
ஏர்கொள்	அழகிய
வைகுந்தம் மாநகர்	பரமபதமென்னும் திருநாட்டிலே
புக்கு	புகுந்து
இமையவரோடும்	நித்யஸூரிகளோடே
கூடுவர்	சேரப்பெறுவர்கள்.

* * *—இப்போது தமக்குண்டான பிரிவாற்றாமைத் துயரம் முன்பு யௌவனம் நிரம்பிய திருவாய்ப்பாடியிற் பெண்கள் கண்ணபிரான் திருவடிகளை ஆசைப்பட்டுக் கிடையாமையாலே அவர்களுக்குண்டான துயரத்தோடு ஒத்திருத்தலால் அவர்கள் பேசினதாகத் தலைக்கட்டுகிறார். அவ்வாய்ச்சிமாருடைய அவஸ்தையே தமக்கு உண்டாகி அவர்கள் புலம்பிய புலம்பலே தம் வாயால் வெளிவந்ததென்றாராயிற்று.

எம்பெருமானைப் பிரிந்து வருந்தி அவ்வருத்தத்தின் பரீவாஹரூபமாக நான் சொன்ன இத்திருமொழியை ஓதவல்லவர்கள் என்னைப் போலே எம்பெருமானைப் பிரிந்து வருந்த வேண்டாதே * ஒழிவில்காலமெல்லாமுடனாய்மன்னி விழுவிலா வடிமைசெய்யப் பெறுவர்கள், என்று பயனுரைத்தாராயிற்று. (௧௦)

அடிவரவு:—தந்தை மாரி ஆயன் கயம் ஒழு முரியும் கலங்க முழுது கனஞ்செய் வார்கொள் தொண்டர்.

ஐந்தாந்திருமொழி உரை முற்றிற்று.

ஜீயர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

எட்டாம்பத்து—ஆறாந்திருமொழி,

தொண்டருய்யும்வகைகண்டேன்.

உரையவதாரிகை:—திருக்கண்ணபுரத் திருப்பதி விஷயமான இவ்வெட்டாம்பத்தில் கீழ்ஐந்து திருப்பதிகங்களும் தாய் பாசுரமும் தலைமகள் பாசுரமுமாக அந்யாபதேசத்தாலே சென்றன; இனி, மேல் ஐந்து திருப்பதிகங்களும் ஆழ்வார்தம் பாசுரமாகச் செல்லுகின்றன.

கீழ்த் திருமொழியில் இவர் பட்ட பரிதாபங்களையெல்லாம் உணர்ந்த எம்பெருமான் 'ஆழ்வீர்! நீர் இங்ஙனே பரிதபிப்பானேன்? நாம் திருக்கண்ணபுரத்திலே வந்து நித்யஸந்நிதிபண்ணியிருப்பது நம்மைப் போன்ற அடியார்க்காகவன்றோ? நாம் விபவத்திலே செய்த அநுகூலரக்ஷணமும் ப்ரதிகூல நிரஸநமும் இவ்வர்ச்சையிலும் நடத்தவல்லோமாக ஸந்நிதிபண்ணியிருக்கின்றோமிறே; ஆகையாலே உமக்கொரு குறையுண்டோ?' என்று ஆழ்வாரைத் தேற்ற, அவரும் தேறி அருளிச்செய்வதாய்ச் செல்லுகிறது இத்திருமொழி. .... *

தொண்டருய்யும்வகைகண்டேன் துளங்கா வரக்கர்துளங்க * முன்
திண்டோள் நிமிரச் சிலைவளையச் சிறிதேமுனிந்த திருமார்பன் *
வண்டார் கூந்தல் மலர்மங்கை வடிக்கண்மடந்தை மாநோக்கம்
கண்டான் * கண்டு கொண்டுகந்த கண்ணபுரம் நாம்தொழுதுமே. (க)

தொண்டர் — பகவத் கைங்கரியத்தில் ருசியுடையீர்காள்!
உய்யும் வகை — உஜ்ஜீவிக்கும் வழியை
கண்டேன் — தெரிந்து கொண்டேன்;
முன் — முற்காலத்தில்,
துளங்கா அரக்கர் — ஒருநாளும் கஷ்டப்பட்டறியாத ராக்ஷஸர்கள்
துளங்க — கஷ்டப்படும்படியாக
திண் தோள் நிமிர — வலிமை பொருந்திய திருத்தோள்கள் நிமிரவும்
சிலை வளைய — வில்வளையவும்
சிறிதே முனிந்த — ஸ்வல்பமான சீற்றமே கொண்டவனாய்
திரு மார்பன் — லக்ஷ்மியைத் திருமார்பிலே உடையவனாய்,
வண்டு ஆர் கூந்தல் மலர் மங்கை — வண்டுகள் படிந்த கூந்தலையுடைய பெரிய பிராட்டியாரென்ன
வடி கண் மடந்தை — கூர்மை பொருந்திய திருக்கண்களையுடைய பூமிப்பிராட்டியாரென்ன
இவர்களுடைய
மா நோக்கம் கண்டான் — சிறந்த கடைக்கண் பார்வையை அநுபவிப்பவனான எம்பெருமான்
கண்டு கொண்டு உகந்த — (நித்யவாஸத்திற்குப் பாங்கான இடமென்று) திருவுள்ளம்பற்றி மகிழ்ந்து உறையுமிடமான
கண்ணபுரம் — திருக்கண்ணபுரத்தை
நாம் தொழுதும் — நாம் தொழுவோம்.

* * *—பாசுரந் தொடங்கும்போதே "தொண்டீர்! உய்யும் வகை கண்டேன்" என்று தொடங்குகிற ஆழ்வாருடைய களிப்பை என் சொல்வோம்! கீழ்த்திருமொழியில் "வலிசெய்வ தொழியாதே" என்றும் "செய்வதொன்றறியேனே" என்றும் "அஞ்சேலென்பாரில்லையே" என்றும் "என்னுடையை எனக்கெனப் பெறலாமே" என்றும் "பாவியேனுவியை அடுகின்றதே" என்றும் கூறின அலமாப்பெல்லாம் பகலவனைக்கண்ட பனிபோல் அகன்றொழிந் தமை தோன்றத் தோண்டீருய்யும்வகைகண்டேனென்று களித்துப் பேசுகிறார். இது 'கண்ணபுரம் நாம் தொழுதுமே',என்பதில் அந்வயிக்கும். திருக்கண்ணபுரம் தொழும்படியான பாக்கியம் பெற்றதுதானே தாம் கண்ட உய்யும்வகை என்றவாறு. "ஒழிவில் காலமெல்லாமுடனாய்மன்னி வழுவிலாவடிமை செய்ய வேண்டும் நாம்" என்றாற்போலே தொண்டிலூண் டமுதமுண்பதில் பாரிப்புக் கொண்டிருக்குமவர்களே! நாம் அத்தை பெறுவதற்கு ஒரு நல்விரகு கண்டேன்; (அதாவது) திருக்கண்ணபுரம் தொழுவோம், வாருங்கோள் என்கிறார்.

அங்குள்ள எம்பெருமானுடைய திறம் பேசுவன மற்றவை. [துளங்காவரக்கர் துளங்க வித்யாதி.] துளங்குதலாவது-வருத்தப்படுகையும், அச்சப்படுகையும் கலங்குகையும். ஒரு நாளும் துளங்கியறியாத ராக்ஷஸர்கள் துளங்கும்படியாகத் தோள் நிமிர்த்துச் சிலைவளைந்த பெருமான் எழுந்தருளியிருக்குமிட மென்கை.

சிறிதே முனிந்த=பஞ்சவடியிற் பிராட்டியைப் பிரிந்தவுடனே அளவுகடந்த கலக்க மடைந்த இராமபிரான் 1. " ஜகத்ஸஶைலம் பரிவர்த்தயாம்யஹம்—ஜகத் ஸசைலம் பரிவர்த்தயாம்யஹம் "—உலகம் முழுவதையும் இதோ தலைகீழாகத் திருப்பிவிடுகிறேன் என்று எல்லையற்ற சீற்றத்தை வெளியிட்டருளினன்; அப்படிப்பட்ட சீற்றம் ஒரு லங்கையிலுள்ள ராக்ஷஸரளவிலே தலைக்கட்டிற்றாகையாலே 'சிறிதே முனிந்த' என்னப்பட்டது. முற்ற முடிய முனிந்திருந்தால் ஜகத்துக்கெல்லாம் உபஸம்ஹாரம் விளைந்திருக்குமே.

"[திருமார்பன்] வீரஸ்ரீக்குக் குடியிருப்பான மார்வுபடைத்தவன்" என்பது பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியான வருளிச்செயல்.

'பிராட்டிமாரும் அவனுமான சேர்த்தியிலே அடிமை செய்கை முறை' என்ற சாஸ்த்ரார்த்தமும் நமக்குப் பலிக்கப்பெற்றது என்கிறார் மூன்றாமடியால். திருமடந்தை மண்மடந்தை இருபாலுந்திகழ அப்பிராட்டிமார்களது கண்ணழகிலே துவக்குண்டிருக்கிற ,சௌரிப்பெருமாள் நித்யஸந்நிதி பண்ணியிருக்குமிட மென்கை. வண்டார் கூந்தல் மலர் மங்கை=அபராதியான சேதநன் எம்பெருமானடி பணிந்தால் ஸ்வதந்த்ரனான அப்பெருமான் அவனுடைய குற்றங்குறைகளையே பார்த்துச் சீறி அவனைப்படுகுழியிலே தள்ளவேணுமென்றிருக்கும் நிலைமையில், பிராட்டியானவள் 'அந்தோ! நீர் செய்ய நினைத்தது சாலவும் நன்றாயிருந்தது!, இச்சேதநனுடைய குற்றங்களைக் கணக்கிட்டு நீர் இப்படி தன்

1. ஸ்ரீராமாயணம்—ஆரண்யகாண்டம். 64-75.

ளிக் கதவடைத்தால் இவனுக்கு வேறொரு போக்கிடமுண்டோ? இவனுக்கும் உமக்குமுள்ள ஸம்பந்தம் § கடப்ரஹாரம் பண்ணினாலும் ஒழியாததொன்றன்றோ? இவனைப் பெறுகை உம்முடைய பேறன்றோ? 'நம் வலையில் ஆர் அகப்படுவார்?' என்று தேடித்திரிகிற உமக்கு நான் சொல்லவேணுமோ? 'ஸ்வாமிந்! ரக்ஷித்தருளவேணும்' என்று வந்தவிவனை ரக்ஷியாவிடில் உம்முடைய ஸர்வரக்ஷகத்வபட்டம் என்னாகும்? 'நெடுநாளாக சாஸ்த்ரவரம்புகளைக் கடந்து பெருங்குற்றவாளனாய்த் திரிந்த இவனைத் தக்கபடி தண்டியாமல் இன்று கைப்பற்றினால் சாஸ்த்ரமரியாதை கெடும்' என்று திருவுள்ளமாகில் அதுகொண்டு இவனை ரக்ஷியாமல் தண்டித்து விட்டால் உம்முடைய க்ருபை முதலிய குணங்களுக்கு எள்ளுந் தண்ணீரும் விடவேண்டியதாகுமன்றோ? பராங்முகராய் [உம்மை வந்து பணியாதே] திரிகின்றவர்களிடத்தில் சிக்ஷாசாஸ்த்ர விதியையும், அபிமுகரான சேதநரிடத்தில் க்ருபாதி குணங்களையுஞ் செலுத்தினீராகில் மிக்க பொருத்தமாயிருக்கும்; ஆனபின்பு இவனைக் கடுகக் காத்தருளீர்' என்று நயமாக உபதேசித்துப் பார்ப்பள்; இவ்வுபதேசங்கேட்ட எம்பெருமான் 'ஆமாம்போ, உனக்கு வேறு வேலை என்ன?' என்று அவளுபதேசத்தை உதறினவாறே கண்ணைப் புரட்டிக் கச்சை நெகிழ்த்திக் கூந்தல் முதலியவற்றின் அழகைக் காட்டி அவனைப் பிச்சேறும்படி பண்ணி, தான் சொன்னபடி செய்தல்லது நிற்கமாட்டாதபடி பண்ணி அங்கீகரிக்கச் செய்வள் என்பவாதலால் இவ்விசேஷார்த்தம் தோன்ற 'வண்டார் கூந்தல் மலர்மங்கை' என்றும் 'வடிக்கண் மடந்தை' என்றும் அவயவச் சிறப்பையுமிட்டு அருளிச்செய்ததாகக் கொள்க. "உபதேசத்தாலே மீளாதபோது சேதநனை அருளாலே திருத்தும், ஈச்வரனை அழகாலே திருத்தும்" என்ற ஸ்ரீவசநபூஷண திவ்யஸூக்தியும் இங்கு அநுஸந்திக்கத்தகும். .... (க)

பொருந்தா வரக்கர் வெஞ்சமத்துப் பொன்றவன்று புள்ளூர்ந்து *
பெருந்தோள்மாலி தலைபுரளப் பேர்ந்தவரக்கர் தென்னிலங்கை *
இருந்தார்தம்மை யுடன்கொண்டு அங்கெழிலார்பிலத்துப் புக்கொளிப்ப *
கருந்தாள்சிலைக் கைக்கொண்டானூர் கண்ணபுரம் நாம்தொழுதுமே. (உ)

அன்று — முன்பொரு காலத்தில்,
வெம் சமத்து — கொடிய போர்க்களத்திலே
பொருந்தா அரக்கர் — சத்ருக்களான ராக்ஷஸர்கள்
பொன்ற — முடியும்படியாக
புள் ஊர்ந்து — கருடப்பறவையை ஏறிநடத்திக் கொண்டெழுந்தருளி
பெரு தோள் மாலி — வலிய தோள்களையுடையனான மாலியினுடைய
தலை — தலையானது

§ கடப்ரஹாரமாவது—உறவை யறுத்துக் கொள்வதற்காகச் செய்யவேண்டும்படி சாஸ்த்ரங்களில் ஏற்பட்ட ஒரு கருமம்.

புரள	(அற்றுவிழுந்து நிலத்தில்) புரளும்படியாகவும்	எழில் ஆர் பிலத்து	அழகிய பாதாளத்திலே
பேர்ந்த அரக்கர்	அவனைத் தவிர மற்ற ராக்ஷஸர்கள்	புக்கு ஒளிப்ப	புகுந்து மறையும்படியாகவும்
தென் இலங்கை இருந்தார் தம்மை உடன் கொண்டு	தென்னிலங்கையிலிருந்த மற்றுமுள்ள ராக்ஷஸர்களையுங் கூட்டிக் கொண்டு	கருந் தாள் சிலை	வயிரம்பற்றித் திண்ணிதான வில்லை
அங்கு	அவ்விடத்திலிருந்து	கை கொண்டான்	திருக்கையிலே தரித்தவனான எம்பெருமானுடைய
		ஊர்	இருப்பிடமான
			கண்ணபுரம், நாம் தொழுதும்—.

* * *—ஸுகேசனென்னும் இராக்கதனுக்கு மாலியவான், மாலி, ஸுமாலி என மூன்று பிள்ளைகள் பிறந்ததும், அவர்கள் தவம் புரிந்து பெருமை பெற்று இலங்கையிற் குடிபுகுந்து விவாஹஞ் செய்துகொண்டு பல மக்களைப் பெற்றதும், தேவர்கள் சிவபெருமானை அடைக்கலம் புகுந்து அவர் சொன்ன உபாயத்தினால் ஸ்ரீமந் நாராயணனைச் சரணமடைந்ததும், அவர் அவர்கட்கு அபயமளித்ததும், அது தெரிந்து ராக்ஷஸர்கள் கோபங்கொண்டு படையெடுத்துத் தேவலோகஞ் சென்றதும், அப்பொழுது கருடவாஹநாரூடராய்க் கேசவன் அங்கு வந்து தோன்ற அவரைச் சூழ்ந்து அரக்கர் அம்புமாரி பொழியப் புகுந்ததும், பிறகு அரக்கர்கட்கும் திருமாலுக்கும் பெருத்த யுத்தம் நடந்ததும், அதில் மாலி மரண மடைந்ததும், மற்ற மாலியவான் சுமாலி யென்னுமிருவரும் திருமாலுடன் போர்புரிந்து பராஜயமடைந்து மற்றுமுள்ள இலங்கையரையும் கூட்டிக்கொண்டு பாதாளலோகம் போய்ச் சேர்ந்ததும் உத்தர ஸ்ரீராமாயணத்தில் [ரு. கூ. எ. அ] ஸர்க்கங்களில் விரிவாகக் கூறப்பட்டவை. அவ்வரலாறே இப்பாசுரத்தில் அநுஸந்திக்கப்பட்டுள்ளது. மேற்சொன்ன மூவருள் ஒருவனான சுமாலியின் மகளான கைகஸிக்கு இராவணன் முதலியவர்கள் பிறந்தன ரென்பதும் அறியத் தக்கது.

இப்படி விரோதி நிரஸநம் பண்ணுமியல்வினரான பெருமாள் மேலுள்ள காலமும் ஆச்ரித விரோதிகளைக் கிழங்கெடுக்கைக்காகக் கோயில் கொண்ட விடமான திருக்கண்ணபுரத்தைத் தொழுவோ மென்றாராயிற்று. ... (அ)

வல்லியிடையாள் பொருட்டாக மதிள்நீரிலங்கையார் கோவை *
அல்லல்செய்து வெஞ்சமத்துள் ஆற்றல்மிகுத்தவாற்றலான் *
வல்லாளரக்கர் குலப்பாவைவாட முனிதன் வேள்வியை *
கல்விச்சிலையால் காத்தானூர் கண்ணபுரம் நாம்தொழுதுமே. (கூ)

வல்லி இடையாள் பொருட்டாக	கொடிபோல் மெல்லிய இடையை யுடையளான ஸீதைக்காக,	நீர்	கடலை அகழாகவுடையதாய்
		மதிள்	மதிள்களை யுமுடைத்தான

இலங்கையார்	லங்காபுரியிலுள்ள அரக்கர்களுக்கு
கோவை	தலைவனான இராவணனை
அல்லல் செய்து	துன்பப்படுத்தி
வெம் சமத்துள்	வெவ்விய போர்க்களத்திலே
ஆற்றல் மிகுத்த	தன்னுடைய மிடுக்கை மிகவும் விளங்கக்காட்டின
ஆற்றலான்	மஹாவீரனும்,
வல் ஆள் அரக்கர்	வலிய ஆண்மைத்தனமுடைய ராக்ஷஸர்களின்

குலம்	குலத்தில் தோன்றிய
பாவை	தாடகை யென்னும் அரக்கியை
வாட	முடிய(ச் செய்து)
முனி தன்	விச்வாமித்ரமுனியினுடைய
வேள்வியை	யாகத்தை
கல்வி சிலையால்	தான் கற்றுப் பயின்ற வில்லைக்கொண்டு
காத்தான்	காத்தருளினவனுமான பெருமானுடைய

ஊர், கண்ணபுரம், நாம் தொழுதும்—.

* * *—கொடிபோன்று மெல்லிய இடையையுடையளான மைதிலிக்காக இராவணனைப் போர்க்களத்தில் துன்பப்படுத்தித் தனது பராக்ரமத்தைப் பரவச் செய்துகொண்ட பெருவீரனும், பருவம் நிரம்புவதற்கு முன்னமே விச்வாமித்திரமுனிவனுடைய வேள்வியைக் காத்தருளச் சென்று, வழியிடையே வந்து தகைந்து நின்ற தாடகை யென்னு மரக்கியை வில்லைவளைத்து நாணேற்றி அம்பு தொடுத்து எய்து உயிர் தொலைத்திட்டு வேள்வியைத் தலைக்கட்டுவித்தவனுமான பெருமான் உறையுமிடமான திருக்கண்ணபுரத்தைத் தொழுவோம்.

ராமராவண யுத்தத்தில் முதல்நாட்போரிலே இராமனம்புகளால் இராவணன் கிரீடங்களையும் ஆயுதங்களையும் சேனைகளையும் இழந்து சோர்ந்து வெள்கி முகங்கருத்துத் தலைகுனிந்து நின்ற சமயத்தில், இராமபிரான், இப்படி யாவுமிழந்திருக்கின்றவிவனை இப்பொழுது கொல்வது தருமமன்றென்று திருவுள்ளம் பற்றி அவனை நோக்கி 'தனியனாய் வெறுங்கையனாயிருக்கின்ற உன்னை இப்பொழுது நான் கொல்வேனல்லேன்; நீ இன்று உயிர் தப்பிச் சென்று சேனைகளையும் ஆயுதங்களையும் வித்தஞ் செய்து கொண்டு நாளைக்குப் போர்க்குப் பிரியமிருந்தால் வா' என்று பலவாறு இரக்கத்தோடு சொல்லியனுப்பி யருளினனாதலால் இவ்விஷயத்தைத் திருவுள்ளம்பற்றியே இங்கு 'வெஞ்சமத்துளாற்றல் மிகுத்தவாற்றலான்' என்றருளிச் செய்யப்பட்டது போலும். "கைபுகுந்த சத்ருவைக் கடுக முடித்துவிடாதே 'இன்று போய் நாளைவா' என்றானிறே" என்பது பெரியவாச்சான்பிள்ளை யருளிச்செயல்.

வல்லாளரக்கர் குலப்பாவை = தாடகையானவள் ஸுகேதுவென்னும் யக்ஷனது குமாரி; ஸுந்த னென்பவனது மனைவி; ஆயிரம் யானை வலிமைகொண்டவள்; கணவன் அகஸ்த்ய மஹாமுநியின் கோபாக்நிக்கு இலக்காகிச் சாம்பரானதை யறிந்த இவள் தன் புத்திரர்களாகிய ஸுபாஹு மாரீசர்களுடனே அம்முனிவனை எதிர்த்துச் சென்றபொழுது அவரிட்ட சாபத்தால் தன் மக்களோடு ராக்ஷஸத்தன்மை யடைந்தனள்; இஃது இவளது வரலாறு. 'வாட' என்றது உபசார வழக்கு; மாண்டுபோக என்றபடி.

கல்விச்சிலையால் காத்தான் = ஸீதா விவாஹத்திற்குப் பிறகு பரசுராமனை வென்று கைப்பற்றிக்கொண்ட தன்னதான வில்லினால் விச்வாமித்ர யாகத்தைக் காத்தானல்லன்; பயிற்சிக்குப் பிடித்ததொரு வில்லைக்கொண்டு காத்தானத்தனை.

மல்லைமுந்நீரதர்பட வரிவெஞ்சிலை கால்வளைவித்து *
கொல்லைவிலங்கு பணிசெய்யக் கொடியோனிலங்கை புகலுற்று *
தொல்லை மரங்கள் புகப்பெய்து துவலைநிமிர்ந்து வானணவ *
கல்லாற் கடலையடைத்தானூர் கண்ணபுரம் நாம்தொழுதுமே. (௪).

கொடியோன்	கொடியவனான இராவணனுடைய
இலங்கை	லங்காபுரியில்
புகல் உற்று	ப்ரவேசிக்கவேண்டி (அதற்காக)
மல்லை முந்நீர்	செழிப்பான கடலானது
அதர் பட	வழிபடும்படியாக
வரி வெம் சிலை	வரிகளையுடைத்தாய் வெவ்விதான வில்லை
கால் வளைவித்து	வளையச்செய்து (அவ்வளவிலே கடலரசன் வந்து இணங்கிநிற்க)
கொல்லை விலங்கு	காட்டுமிருகங்கள் [வாநரமுதலிகள்]

பணி செய்ய	கைங்கரியம் பண்ண
தொல்லை மரங்கள்	பழையமரங்களையும்
புகப் பெய்து	கடலினுட்புகும்படியாக வெட்டிப்போட்டு
துவலை	திவலைகள்
நிமிர்ந்து	கிளர்ந்து
வான்	ஆகாசத்திலே
அணவ	அளாவும்படியாக
கல்லால்	மலைகளைக்கொண்டு
கடலை	ஸமுத்ரத்தை
அடைத்தான்	அணைசெய்த எம்பெருமானுடைய

ஊர், கண்ணபுரம் நாம் தொழுதும்—.

* * *— விபீஷணாழ்வானது வார்த்தையின்படி இராமபிரான் 'கடலைக் கடக்க உபாயஞ் சொல்ல வேண்டும்' என்று கடலரசனாகிய வருணனைப் பிரார்த்தித்து தர்ப்பசயனத்திலே படுத்து மூன்று நாளளவும் ப்ராயோபவேசமாகக் கிடக்க, ஸமுத்திரராஜன் அப்பெருமானது மஹிமையைக் கருதாமல் உபேக்ஷையாயிருந்துவிடவே, ஸ்ரீராமன் அதுகண்டு கோபங்கொண்டு 'அனைவருங்கடந்து செல்லும்படி கடலைவற்றச் செய்வேன்' என்று ஆக்நேயாஸ்த்ரத்தைத் தொடுக்கத் தொடங்கியவளவிலே வருணன் அஞ்சி நடுங்கி ஓடிவந்து இராமபிரானைச் சரணமடைந்து கடல்வடிவமான தன்மேல் அணைகட்டுதற்கு உடன்பட்டு நிற்க, இராகவனும், வாநர வீரர்கள் மலைகளையும் மரங்களையும் பிடுங்கிக் கொண்டுவந்து நீரில்போட, ஸேது கட்டுவித்து அவ்வழியாய் இலங்கைபுகுந்து காரியம் பார்த்தனன் என்ற வரலாறு இங்கு அறியத்தக்கது.

"கொடியோனிலங்கை புகலுற்று மல்லை முந்நீரதர்பட வரிவெஞ்சிலைகால் வளைவித்துக் கொல்லை விலங்கு பணிசெய்ய....... கல்லால் கடலையடைத்தான்" என்று அந்வயிப்பது.

[''கோல்லை விலங்கு பணிசெய்ய.] ஒருகாலும் பூசல்கண்டறியாதே என்று மொக்கப் § பழனைகளிலே நாவிந்திரியக்கடவ குரங்குகள் பணிசெய்ய; அஸ்ப்ருஷ்ட ஸம்ஸார கந்தரான திருவடி திருவனந்தாழ்வான் தொடக்கமானார் செய்யக்கடவ கைங்கர்யத்தை இடக்கைவலக்கையறியாத திர்யக்குக்கள் செய்ய.'' என்பது பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியானவருளிச்செயல். கோல்லை—மரங்களடர்ந்த சோலை. கொல்லைவிலங்கு—ஶாகாம்ருகமென்றபடி.

மூன்றாமடியில் ''திவலை திமிர்ந்து'' என்றபாடம் புதியது; ''துவலை'' என்றே ஓதுக; திவலை என்றே பொருள்: மோனையின்பத்திற்கு இணங்கிய பாடம் இதுவே. .... (௪)

ஆமையாகி யரியாகி யன்னமாகி * அந்தணர்தம்
ஓமமாகி யூழியாகி உவரிசூழ்ந்த நெடும்புணரி *
சேமமதிள்சூழிலங்கைக்கோன் சிரமுங் கரமும் துணித்து * முன்
காமற்பயந்தான் கருதுமூர் கண்ணபுரம் நாம்தொழுதுமே. * (௫)

ஆமை ஆகி	கூர்மரூபியாயும்	இலங்கை	லங்காபுரிக்கு
அரி ஆகி	நரஸிம்ஹரூபியாயும்	கோன்	தலைவனான இராவணனுடைய
அன்னம் ஆகி	ஹம்ஸரூபியாயும் (அவதரித்தவனும்)	சிரமும்	தலைகளையும்
அந்தணர் தம்	பிராமணர்களினுடைய	கரமும்	தோள்களையும்
ஓமம் ஆகி	யாகங்களில் ஆராதிக்கப்படுபவனும்	துணித்து	அறுத்தொழித்தவனும்,
ஊழி ஆகி	பிரளயகாலத்திலு முள்ளவனும்	முன்	முன்பொருகால்
நெடு புணரி	ஓங்கின அலைகளையுடைத்தான	காமன்	மன்மதனை
உவரி	கடலினால்	பயந்தான்	பிள்ளையாகப் பெற்றவனுமான எம்பெருமான்
சூழ்ந்த	சூழப்பட்டதும்	கருதும்	திருவுள்ளம்பற்றியிருக்கப்பெற்ற
சேமம் மதிள் சூழ்	காப்பான மதிள்களாலே சூழப்பட்டதுமான		ஊர், கண்ணபுரம் நாம் தொழுதும்—.

* * *—துர்வாஸமுனிவனது சாபத்தினால் தரித்திரர்களான அமரர்கட்குக் கடலினின்று அமுதமெடுத்துக் கொடுத்தருள்வதற்காக மந்தரமலையை மத்தாக நாட்டி வாஸுகி யென்னும் மஹாநாகத்தைக் கடைகயிறாகப்பூட்டிப் பாற்கடலைக் கடையும்போது மத்தாகிய மந்தரகிரி கடலினுள்ளே அழுந்திவிடாதபடி அம்மலையின் கீழே சென்று அதனைத் தனது முதுகின்மீது தாங்கிக் கொள்வதற்காக ஆமையாய்த் திருவவதரித்தவனும், இரணியனது செருக்கை நீக்கி ப்ரஹ்லாதாழ்வானைப் பாதுகாத்தருள்வதற்காக நரஸிம்ஹரூபியாய்த் திருவவதரித்தவனும், அசுரர் கவர்ந்து சென்ற வேதங்களை மீட்டுக் கொணர்ந்து பிரமனுக்கு உபதேசித்

§ பழனை—கிளை.

தருள்வதற்காக ஹம்ஸரூபியாய்த் திருவவதரித்தவனும், அந்தணர்கள் நிகழ்த்தும் யாகங்களுக்கு ஆராத்ய தேவதையாயிருப்பவனும், பிரளய காலத்திலும் உலகுண்டு நிலைநிற்பவனும், இலங்கையரசனைப் பாழ்படுத்தினவனும், காமனைப்பயந்த காளையுமான பெருமானுறையும் திருக்கண்ணபுரத்தைத் தொழுவோம்.

'ஹோமः' என்னும் வடசொல் ஓமமெனத் திரிந்தது; லக்ஷணையால், யாகங்களிலிடும் ஹவிஸ்ஸுக்களைக் கொள்பவனென்றவாறு. "உலகுசூழ்ந்த நெடும் புணரி' என்று பெரும்பாலும் வழங்கி வரும் பாடம் வியாக்கியானத்தில் பாடாந்தரமாகக்கொள்ளப்பட்டுள்ளது. "உவரி சூழ்ந்த நெடும்புணரி" என்றேறுதக. புணரி—அலைக்கும் கடலுக்கும் பெயர்; இங்கு அலையைச் சொல்லக்கடவது. 'நெடும்புணரி உவரி சூழ்ந்த சேமமதிள் சூழிலங்கை' என்று அந்வயிப்பது. உவரி—கடல் சேமம்—க்ஷேமம். சிரம், க்ஷயம்—வடசொற்கள்.

கண்ணன் மன்மதனுடைய அம்சமாகிய ப்ரத்யும்நனுக்கு ஜநகனுதலால் காமற்பயந்தானுயினன். .... (ரு)

வருந்தாதிருநீ மடநெஞ்சே! நம்மேல் வினைகள் வாரா * முன்
திருந்தாவரக்கர் தென்னிலங்கை செந்தீயுண்ணச் சிவந்தொருநாள் *
பெருந்தோள்வாணற் கருள்புரிந்து பின்னைமணாளனுகி * முன்
கருந்தாட்களிறொன் றொசித்தானூர் கண்ணபுரம் நாம்தொழுதுமே. (சா)

மட நெஞ்சே	ஸாதுவானநெஞ்சே!,
நீ வருந்தாது இரு	நீ வருத்தப்படாமலிரு;
நம் மேல்	நம்மிடத்து
வினைகள்	பாவங்களின் பலன் ஒன்றும்
வாரா	வந்து சேரமாட்டாது; (ஏனென்றால்)
முன்	முன்னே
திருந்தா அரக்கர்	திருந்தாமலிருந்த ராக்ஷஸர்களின் ஊராகிய
தென் இலங்கை	தென்னிலங்காபுரியை
செம் தீ உண்ண	சிவந்த நெருப்பு ஆக்ரமித்து உண்ணும்படியாக
சிவந்து	சீற்றங்கொண்டவனும்
ஒருநாள்	மற்றொருகாலத்தில்

பெரு தோள் வாணற்கு	பெரியதோள்களையுடைய பாணாஸுரன்விஷயத்தில்
அருள் புரிந்து	(உயிரைக் கவராது விட்டிடுகையாகிற) கிருபையைச் செய்தருளினவனும்
பின்னை மணாளன் ஆகி	நப்பின்னைப் பிராட்டிக்கு காதலனானவனும்
முன்	முன்பொருகால்
கரு தாள்	வலிமையுள்ள கால்களையுடைய
களிறு ஒன்று	(குவலயாபீடமென்கிற) ஒரு யானையை
ஒசித்தான்	தொலைத்தவனுமான பெருமானுடைய

ஊர், கண்ணபுரம், நாம், தொழுதும்—.

* * *—நெஞ்சமே! நாம் உய்யும்வகை காணப்பெற்ற பின்பும் நீ வருந்துவது தகுதியோ? அவசியம்பலன்களை அநுபவித்தே தீரவேண்டும் படியான பாவங்களை நாம் அளவறச் செய்துள்ளோமாயினும் அப்பாவங்கள் இனி நம்மைவந்தணுக ப்ர

லக்ஷியுண்டோ? இவ்வாறு சொல்லுகைக்கு இப்போது வந்த அதிசயம் என்ன? என்கிறாயோ? கண்ணபுரம் தொழப் பெற்றோமன்றோ இன்று நாம்; ஆதலால், வருந்தாதிரு நீ மடநெஞ்சே!, நம்மேல் வினைகள் வாரா.

அங்கு உறையும் பெருமான் எப்படிப்பட்டவன் தெரியுமா? கேளாய்; திருந்தாவரக்கர் தென்னிலங்கை செந்தீயுண்ணச் சீறினவன்; கொடிய அபராதியான வாணனைச் சிரமறுத் தொழிக்க வேண்டியிருந்தும் அது செய்யாதே, 'தேவதாந்தரபஜநம் பண்ணினோர்க்குக் கைகண்ட பலன் இதுவே' என்று ப்ரஸித்தமாம்படியாகப் பரமசிவனுடைய ப்ரார்த்தனைக்கிணங்கி நான்கு தோள்களையும் உயிரையும் நிறுத்திவைத்து அருள் செய்தவன்; கலவிக்கு விரோதிகளாய்நின்ற ஏழெருதுக்களை வலியடக்கி நப்பின்னைப் பிராட்டியைத் தழுவிக்கொண்டவன்; குவலயாபீடமென்னுங் கஞ்சனது யானையை எளிதில் உயிர்தொலைத்திட்டவன். .... (௬)

இலையார் மலர்ப்பூம் பொய்கைவாய் முதலைதன்னா லடர்ப்புண்டு *
கொலையார் வேழம் நடுக்குற்றுக் குலைய அதனுக் கருள்புரிந்தான் *
அலைநீரிலங்கைத் தசக்கிரீவற்கு இளையோற்கரசை யருளி * முன்
கலைமாச்சிலையா லெய்தானூர் கண்ணபுரம் நாம்தொழுதுமே. (எ)

கொலை ஆர் வேழம்	கொலைத் தொழிலை இயற்கையாகவுடைய யானை [கஜேந்த்ராழ்வான்]
இலை ஆர்	இலைகள் நிரம்பிய
மலர்	மலர்களையுடைத்தான
பூ	அழகிய
பொய்கை வாய்	தடாகத்திலே
முதலை தன்னால்	முதலையினால்
அடர்ப்புண்டு	துன்பமடைந்து
நடுக்குற்று	நடுங்கி
குலைய	கையோய்ந்து நிற்க,
அதனுக்கு	அவ்யானைக்கு

அருள் புரிந்தான்	கிருபைபண்ணி யருளினவனும்,
அலை நீர் இலங்கை	கடல்சூழ்ந்த இலங்கைக்குத் தலைவனான
தசக்கிரீவற்கு	இராவணனுடைய
இளையோற்கு	தம்பியான விபீஷணனுக்கு
அரசை அருளி	லங்காராஜ்யத்தைக் கொடுத்தருளினவனும்
முன்	அதற்குமுன்பே
கலைமா	(மாரீசனென்கிற) மானை
சிலையால்	ஒருவில்லாலே
எய்தான்	அம்பெய்து கொன்றவனுமான பெருமானுடைய

ஊர், கண்ணபுரம் நாம் தொழுதும்—.

* * *—நாள்தோறும் ஆயிரந்தாமரைமலர்களைக் கொண்டு திருமாலை அர்ச்சித்துப் பூஜித்துவருவதை விரதமாகக் கொண்ட கஜேந்த்ராழ்வான் ஒருநாள் பூப்பறிக்கப்போன பெரியதொரு தாமரைப் பொய்கையில் முதலையின் வாயிலகப்பட்டுத் துடித்தபோது அதனுக்கு அருள்செய்தவன் பஞ்சேந்திரியங்களாகிற பல முதலைகளின் வாயிலே அகப்பட்டுத்துடிக்கின்ற நம்மையும் காத்தருள விரும்பித் திருக்கண்ணபுரத்தில் வந்து நிற்கிறான்;

இராவணனோடு கூடப் பிறந்தவன் என்று கைவிடாதே பக்தியையே கணிசித்து விபீஷணாழ்வானைக் கைக்கொண்டு 'என்னிலங்கு நாமத்தளவு மரசு' என்று சொல்லி அவனுக்குப் பட்டாபிஷேகம் செய்வித்த பெருமான் நம்மையும் கைக்கொண்டு நமக்கும் கைங்கர்ய ஸாம்ராஜ்யமளிக்கத் திருக்கண்ணபுரத்திலே வந்து நிற்கிறான்;

மாரீசனென்னும் மாய மானை அம்பெய்து முடித்தாற்போலே நம்முடைய மாயங்களையும் முடிக்கவந்து நிற்கிறான்; அத்திருக்கண்ணபுரத்தை நாம் தொழுவோம். .... (எ)

தசக்கிரீவன்—வடசொல்விகாரம்.

மாலாய் மனமே! அருந்துயரில் வருந்தாதிருநீ * வலிமிக்க
காலார் மருதும் காய்சினத்தகழுதும் கதமாக்கழுதையும் *
மாலார் விடையும் மதகரியும் மல்லருயிரும் மடிவித்து *
காலாற் சகடம்பாய்ந்தானூர் கண்ணபுரம் நாம்தொழுதுமே. (அ)

மனமே — நெஞ்சே!
நீ — நீ
மால் ஆய் — மயக்கங்கொண்டு
அரு துயரில் — அநுபவித்து முடிக்கப் போகாத துக்கங்களில் (ஈடுபட்டு)
வருந்ாது இரு — வருத்தப்படாமலிரு; (ஏனென்றால்,)
வலி மிக்க — மிகுந்த வலிமையையுடையதாய்
கால் ஆர் — வேரூன்றியிருந்ததான
மருதும் — இரட்டை மருதமரத்தையும்
காய் சினத்த — மிகுந்த கோபங்கொண்டு வந்த
கழுதும் — பேய்ச்சியாகிய பூதனையையும்
கதம் — கோபத்தையுடைய
மா — (கேசியென்னும்) குதிரையையும்
கழுதையும் — கழுதைவடிவங்கொண்டுவந்த தேநுகாஸுரனையும்
மால் ஆர் விடையும் — பெரியவடிவம் பூண்டுவந்த விருஷபங்களையும்
மத கரியும் — (குவலயாபீடமென்னும்) மதயானையையும்
மல்லர் உயிரும் — மல்லர்களின் உயிரையும்
மடிவித்து — முடித்தவனும்
காலால் — திருவடியினால்
சகடம் — சகடாஸுரனை
பாய்ந்தான் — பாய்ந்து முடித்தவனுமான பெருமானுடைய
ஊர், கண்ணபுரம் நாம் தொழுதும்—.

* * *—நெஞ்சே! நாம் திருக்கண்ணபுரத்தைத் தொழும்படியான பாக்கியம் பெற்றோமாதலால் இனி நீ ஸம்ஸாரத்தில் வீணாக மயங்கி வருந்துதலை விட்டிடு; அத் திருக் கண்ணபுரத்தில் எழுந்தருளியிருக்கும் பிரான் எப்படிப்பட்டவன்?; விரோதி நிரஸநமே தொழிலாயிருப்பவன். அஸுராவேசங் கொண்ட இரட்டை மருதமரங்களை முறித்தொழித்தவன், நஞ்சுதீற்றிய முலையைக் கொடுத்துக் கொல்லவந்த பேய்ச்சியை முலையுண்கிறபாவனையிலே உயிரையுண்டு

முடித்தவன்; கழுதை வடிவு கொண்டு கலியவந்த தேநுகாஸுரனை மாய்த்தவன், நப்பின்னைப்பிராட்டியின் கலவிக்கு இடையூறாயிருந்த எழ்விடைகளைச்செற்றவன், கம்ஸனரண்மனைவாசலில் மதமூட்டி நிறுத்தப்பட்டிருந்த குவலயாபீட மென்னும் மதயானையைப் பாகனோடுங்கூட உயிர்தொலைத்திட்டவன்; கம்ஸனது ஸபையிற் செல்லுகையில் எதிர்த்துப் பொருது கொல்லும்படி கம்ஸனால் ஏவப்பட்டிருந்த சாணூரன் முஷ்டிகன் முதலிய பெருமல்லர்களைப் பொடிபடுத்தினவன்; மிக்க இளம்பிராயத்திலேயே மேல் விழுந்து கொல்லவந்த சகடாஸுரனைப் பாலுக்கழுகிற பாவனையிலே நிமிர்த்தப்பட்ட திருவடியினால் உதைத்தொழித்தவன்; இப்படிப்பட்ட பெருமானன்றோ இன்னமும் நம்முடைய விரோதிகளைக் கிழங்கெடுப்பதற்கு வந்து நிற்கிறான்.

கழுது—பிசாசு; பேய்ச்சியாகிய பூதனையைச் சொன்னபடி. கழுதையின் வரலாறு:—கம்ஸனுடைய ஏவுதலால் கழுதையான வடிவைக் கொண்டு காட்டுக்குள்ளே கண்ணனை நலிவதாக வந்தவன் தேநுகனென்னுமசுரன். கண்ணபிரான் பலராமனோடும் ஆயர்சிறுவர்களோடும் மாடுமேய்த்துக் கொண்டு, பழங்கள் அழகாய் மிகுதியாய்ப் பழுத்து வாசனை வீசிக்கொண்டிருந்த ஒருபனங் காட்டையடைந்து அப்பனம்பழங்களை விரும்பி உதிர்த்துக்கொண்டு வருகையில், அவ்வனத்துக்குத் தலைவனும் கம்ஸன் பரிவாரத்தில் ஒருவனுமாகிய கழுதைவடிவங்கொண்ட தேநுகாசுரன் கோபங்கொண்டு ஓடிவந்து எதிர்த்துப் போர் செய்ய, உடனே கண்ணன் அதிலாகவமாய்ப் பின்னங்காலிரண்டையும் பற்றி அவ்வசுரக் கழுதையைச்சுழற்றி உயிரிழக்கும்படி பனைமரத்தின் மேலெறிந்து அழித்தனன். மதகரி—வடசொல் தொடர். .... (அ)

குன்றால் மாரிபழுதாக்கிக் கொடியேரிடையாள் பொருட்டாக *
வன்றாள் விடையேழன் றடர்த்த வானோர் பெருமான் மாமாயன் *
சென்றான் தூது பஞ்சவர்க்காய்த் திரிகாற் சகடம் சினமழித்து *
கன்றால் விளங்கா யெறிந்தானூர் கண்ணபுரம் நாம்தொழுதுமே. (கூ)

குன்றால்	கோவர்த்தன மலையினால்
மாரி	பெருமழையை
பழுது ஆக்கி	பயனற்றதாம்படி செய்தவனும்,
அன்று	முன்பொருகால்,
கொடி ஏர் இடையாள் பொருட்டாக	கொடிபோன்ற அழகிய இடையை யுடையளான நப்பின்னைப் பிராட்டிக்காக
வல் தாள் ஏழ் விடை	வலிய கால்களை யுடைய ஏழு ரிஷபங்களை
அடர்த்த	வலியடக்கினவனும்
வானோர் பெருமான்	நித்யஸூரிகளுக்குத் தலைவனும்
மா மாயன்	ஆச்சரிய சேஷ்டிதங்களை யுடையவனும்
பஞ்சவர்க்கு ஆய்	பஞ்சபாண்டவர்களுக்காக
தூது சென்றான்	(துரியோதனன் பக்கல்) தூது சென்றவனும்
திரி கால் சகடம்	ஊர்ந்து செல்லுங்காலை யுடைய சகடத்தின்
சினம்	பகைமையை
அழித்து	அழித்தவனும்

கன்றால் — வத்ஸாஸுரனைக் கொண்டு
விளங்காய் எறிந்தான் — கபித்தாஸுரன்மேல் வீசி யெறிந்து இருவரையும் முடித்தவனுமான பெருமானுடைய
ஊர், கண்ணபுரம் நாம் தொழுதும்—.

* * *—பசிக் கோபத்தினால் இந்திரன் ஏழுநாள் பெய்வித்த விடாமழையைக் கோவர்த்தனமலையைக் குடையாக வெடுத்துப்பிடித்துத் தடுத்து ஆயர்களையும் ஆநிரைகளையும் சிறிதும் தளக்க மின்றிக் காத்தருளி அப்பெருமழையைப் பயனற்றதாகச் செய்தவனும், காலூழுடைய ரிஷபங்களேழையும் நப்பின்னைப் பிராட்டிக்காக அழியச்செய்தவனும், அயர்வறுமமரர்களதிபதியாயிருப்பவனும், ஆச்சரியமான செய்கைகளையுடையனாயிருப்பவனும், தன்னுடைய மேன்மையைச் சிறிதும் பாராமல் தாழ நடையே கழுத்திலே ஓலைகட்டிப் பாண்டவர்களுக்காகத் துரியோதனன் பக்கலிலே தூது போனவனும், மெல்ல ஊர்ந்து வந்து மேல்விழுந்த சகடாஸுரனுடைய சினத்தை அவன்றன்னோடே போக்கினவனும், முள்ளைக் கொண்டே முள்ளைக் களைவதுபோல வத்ஸாஸுரனையும் கபித்தாஸுரனையும் ஒருசேர முடித்தவனுமான பெருமான் உறைபுமிடமான திருக்கண்ணபுரத்தைத் தொழுவோம். .... (கூ)

கருமாமுகில்தோய் நெடுமாடக் கண்ணபுரத் தெம்மடிகளை *
திருமாமகளா லருள்மாரி செழுநீராலி வளநாடன் *
மருவார் புயற்கைக் கலிகன்றி மங்கைவேந்த னொலிவல்லார் *
இருமாநிலத்துக் கரசாகி யிமையோரிறைஞ்ச வாழ்வாரே. (கo)

கரு மா முகில் — கறுத்துப் பெருத்தமேகங்கள்
தோய் — வந்து படியப் பெற்ற
நெடு மாடம் — பெரிய மாளிகைகளை யுடைத்தான
கண்ணபுரத்து — திருக்கண்ணபுரத்தி லெழுந்தருளியிருக்கிற
எம் அடிகளை — எம்பெருமான் விஷயமாக,
திரு மா மகளால் — பெரியபிராட்டியாரடியாக
அருள்மாரி — 'அருள்மாரி' என்று திருநாமம் பெற்றவரும்
செழு நீர் ஆலி வளம் நாடன் — ஜலஸம்ருத்தியையுடைய திருவாலி வளநாட்டுக்குத் தலைவரும்
மருவு ஆர் புயல் கை — எப்போதும் நிலைத்திருக்குந் தன்மைவாய்ந்த கான மேகத்தோடொத்த ஔதார்யத்தையுடையவரும்
மங்கை வேந்தன் — திருமங்கைக்குப் பிரபுவுமான
கலிகன்றி — ஆழ்வார் அருளிச்செய்த
ஒலி — இப்பாசுரங்களை
வல்லார் — கற்றுவல்லவர்கள்
இரு மா நிலத்துக்கு அரசு ஆகி — (பூமியும் ஸ்வர்க்கமுமாகிற) இரண்டு உலகங்களுக்கும் அரசாயிருக்கப்பெற்று, (மேல் பரமபதத்திலுஞ்சென்று)
இமையோர் — நித்யமுக்தர்கள்
இறைஞ்ச — ஸத்கரிக்கும்படி
வாழ்வார் — வாழப்பெறுவர்கள்.

* * *—நீர்கொண்டெழுந்த காளமேகங்கள் வந்து படியும்படி ஓங்கின மாடங்களையுடைய திருக்கண்ணபுரத்திலே யெழுந்தருளியிருக்கு மெம்பெருமான் விஷயமாகத் திருமங்கையாழ்வார் பாடின இப்பாசுரங்களைக்கற்று வல்லவர்கள் இவ்விபூதியாட்சிகளி லொன்றுங் குன்றாமே யநுபவித்து, விருப்ப முண்டாகில் ஸ்வர்க்கலோகாநுபவங்களையு மநுபவித்துப் பின்னைப் பரமபதத்தேறப் புகுந்து 1. "விதிவகை புகுந்தனரென்று நல் வேதியர், பதியினில் பாங்கினில் பாதங்கள் கழுவினர்" என்னுமாபோலே நித்யஸூரிகள் திருவடிகளிலே வந்து விழும்படியான பேற்றைப் பெறுவர்கள் என்று இத் திருமொழிகற்றார்க்குப் பயனுரைத்துத் தலைக்கட்டினாராயிற்று.

[திருமாமகளா லருள்மாரி.] "பெரிய பிராட்டியாருடைய முழுநோக்குக்கு இலக்கானபடியாலே 'அருள் மாரி' என்றதுதன்னையே திருநாமமாகவுடையரானாராயிற்று". [மருவார் புயற்கைக் கலிகன்றி] "என்று மொக்கவுண்டாய்க் குறைவற வர்ஷிப்பதானவொரு புயலுண்டாகிலாயிற்று இவர்கைக்கு ஒப்புச் சொல்லலாவது; என்று மொக்கக் குறைவறக் கொடுக்கிற இவர்க்கு காதாசித்கமாகத் தோற்றி ப்ராதேசிகமாக வர்ஷிக்கிறமேகம் ஒப்பாகமாட்டாதே" என்ற வியாக்கியான வாக்கியங்கள் காண்க.

இருமா நிலத்துக்கு அரசாகி = இரண்டு மாநிலத்துக்கும் [—பூமிக்கும் ஸ்வர்க்கத்துக்கும்] அரசாகி— என்று பொருள் கொள்வதன்றியே, இருமை—பெருமையாய், பெரிதான இம்மா நிலத்துக்கு அரசாகி என்று கொள்ளவுமாம். .... (௰)

அடிவரவு:—தொண்டீர் பொருந்தா வல்லி மல்லை ஆமை வருந்தாது இலை மால் குன்றால் கரு வியம்.

ஆறாந்திருமொழி உரை முற்றிற்று.

ஜீயர் திருவடிகளே சரணம்.

---

1. திருவாய்மொழி 10—9—10.

ஸ்ரீ:

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

எட்டாம்பத்து—ஏழாந்திருமொழி,

வியமுடைவிடையினம்.

உரையவதாரிகை:—கீழ்த்திருமொழியில் தமது திருவுள்ளத்தை நோக்கி 'வருந்தாதிரு'' என்று ஒருமுறைக்கு இருமுறை சொன்னார்; என்ன வாசிகண்டு 'வருந்தாதிருப்ப தென்ன; பரமபதம் நமக்கு உத்தேச்யமாகிறதும் ப்ராப்யனை எம்பெருமான் நித்யவாஸம் பண்ணுகையாலே யன்றோ; அப்பெருமான்றானே தனக்கு ப்ராப்யமென்று விரும்பி நித்யவாஸம் பண்ணுகிற தேசம் திருக்கண்ண புரமானபின்பு நமக்கும் இவ்விடமே ப்ராப்யமன்றோ? இதை ப்ராபித்த பின்பும் வருந்த வேண்டுவதுண்டோ? என்று அத்திருப்பதி தன்னையே அநுபவிக்கிறார்.

இத்திருமொழி பெரும்பாலும் குற்றெழுத்துக்களே நிரம்பப் பெற்றுச் சித்திரகவியின்பாற் படும். 'உடை' 'விடை' 'வரை' என்னுமிடங்களில் நெட்டெழுத்தாகிய ஐகாரம் வரக்கண்டாலும் அது ஒலிவடிவில் குற்றெழுத்தே போலும். பாட்டுத் தோறும் ஈற்றடியின் முடிவில் ஏகாரம் வருதலும், நான்காம்பாட்டில் நான்கடிகளிலும் முதலெழுத்து நெட்டெழுத்தா யிருத்தலும் குறையாகா தென்க. .... *

வியமுடை விடையின முடைதர மடமகள் *
குயமிடை தடவரை யகலம துடையவர் *
நயமுடை நடையன மிளையவர் நடைபயில் *
கயமிடை கணபுர மடிகள் தமிடமே. (க)

நயம் உடை நடை	அழகிய நடையையுடைய
அனம்	அன்னப்பறவைகள்
இளையவர்	இளம்பெண்களினுடைய
நடை	நடையை
பயில்	அப்யஸிக்கப் பெற்றதும்
கயம்	தடாகங்கள்
மிடை	நெருங்கியிருக்கப் பெற்றதுமான
கணபுரம்	திருக்கண்ணபுரமானது,—
வியம் உடை விடை இனம்	வலிமை பொருந்திய விருஷபங்களின் கூட்டமானது
உடைதர	அழிந்தவளவிலே
மட மகள்	மடமைக் குணமுடைய நப்பின்னைப் பிராட்டியினது
குயம்	திருமுலைகள்
மிடை	நெருங்கியணையப்பெற்ற
தட வரை அகலமது உடையவர்	பெரிய மலை போன்ற திருமார்பையுடையவரான
அடிகள் தம்	ஸ்வாமியினுடைய
இடம்	திவ்யதேசமாம்.

* * *-முன்னடிகளில் திருக்கண்ணபுரத் தெம்பெருமானுடைய பெருமையும் பின்னடிகளில் திருக்கண்ணபுரத்தின் சிறப்பும் சொல்லப்படுகின்றன. அன்னப்

பறவைகள் இளமகளிரது அழகிய நடையை அநுகரித்தூடைபயிலப் பெற்றதும் பலவகைத் தடாகங்கள் நெருங்கியிருக்கப் பெற்றதுமான திருக்கண்ணபுரம்—ஏழ் விடைகளைச் செற்று நப்பின்னைப்பிராட்டியின் திருமுலைத்தடங்களைத் திருமார் பாரத் தழுவிய பெருமான் உறையுமிடம் என்பதாம்.

வியமுடை விடையினம்='வியம்'என்னுஞ் சொல்லுக்குப் பல பொருள்க ளுண்டு; வலிமையென்னும் பொருள் இங்குக் கொள்ளப்பட்டது. வேறுபாடு என்னும் பொருளுங் கொள்ளலாம்; கறுக்கொண்ட கஞ்சனால் ஏவப்பட்டு வந்தவையாகையாலே எங்குங் கண்டறியாத வேறுபட்ட வடிவையுடைய விடை யினம் என்றவாறு. இனி, 'வியம்' என்று ஏவலுக்கும் பெயராதலால் (கம்ஸ னுடைய) ப்ரேரணையையுடைய விடையினம் என்னவுமாம்.

உடைதர—உடைய; தர்-துணைவினை. உடைதல்—அழிதல்.

'க்ஷோபம்' என்னும் வடசொல் க்ஷயமெனத்திரிந்தது. மிடைதல்-நெருங்குதல். "குயமுடை தடவரை" என்றும் வியாக்கியானத்திற் பாடம் கொள்ளப்பட்டது. அப்பாடத்தில் "குயமுடைத் தடவரை" எனத் தகரவொற்று மிக்கிருக்கவேண் டுவது இல்லாமை—ஓசையின்பம் பற்றி வேண்டுழிக் கொண்ட விகாரமெனக் கொள்க. மூன்றாமடியில், 'அன்னம்' அனமெனத் தொக்கியிருக்கிறது. (க)

இணைமலி மருதினொ டெருதிற இகல்செய்து *
துணைமலி முலையவள் மணமிகு கலவியுள் *
மணமலி விழவினொ டடியவ ரளவிய *
கணமலி கணபுர மடிகள்த மிடமே. (உ)

மணம் மலி	மகிழ்ச்சி மிகுந்த
விழவினொடு	திருவிழாக்களில்
அடியவர்	ஸ்ரீவைஷ்ணவர்கள்
அளவிய	நெருங்கப் பெற்ற
கணம்	திரள்
மலி	நிறைந்துள்ள
கணபுரம்	திருக்கண்ணபுரமானது,—
இணை மலி	சேர்த்தி பொருந்திய
மருது	(இரட்டை) மருதமரங்களோ
இற	இற்று முறிந்துவிழும்படி (செய்தவனும்)

எருதினொடு	(ஏழு) எருதுகளோடே
இகல் செய்து	போர்புரிந்த
துணை மலி முலையவள்	சேர்த்தியழகுவாய்ந்த முலைகளையுடையளான நப்பின்னைப் பிராட்டி யின்
மணம்	விவாஹத்தாலுண்டாகக் கூடிய
மிகு கலவி	மிகுந்த ஸம்ச்லேஷத்தை
உள்	உட்கொண்ட
அடிகள் தம்	ஸ்வாமியினுடைய
இடம்	திவ்யதேசமாம்.

* * *—நித்யோத்ஸவ பக்ஷோத்ஸவ மாஸோத்ஸவ ஸம்வத்ஸரோத்ஸவங்க ளென்று சொல்லப்படுகிற மஹோத்ஸவங்கள்தோறும் ஸ்ரீவைஷ்ணவர்கள் குழாங் கூடி அநுபவிக்கப் பெற்ற திருக்கண்ணபுரம்—இரட்டை மருத மரங்களைத் தவழ்

நடைப் போக்கிலே முறித்தொழித்தவனும், ஏழ்விடை செற்று நப்பின்னைப் பிராட்டியின் கலவியை அநுபவித்தவனுமான பெருமான் உறையுமிடம் என்பதாம்.

இகல்—பகையும், யுத்தமும். கலவியுள்—கலவிக்காக, எருதினேடு இகல் செய்து, அந்தவிடாய் தீர உறையுமிடம் திருக்கண்ணபுரம் என்னவுமாம்,

ஈற்றடியில் 'கணம்' என்னும் வட சொல் கணமெனத் திரிந்தது; கணம்—கூட்டம், ஸ்ரீவைஷ்ணவகோஷ்டி. .... (உ)

புயலுறு வரைமழை பொழிதர மணிநிரை *
மயலுற வரைகுடை யெடுவிய நெடியவர் *
முயல்துளர் மிளைமுயல் துள வள விளைவயல் *
கயல்துளு கணபுர மடிகள்த மிடமே. (௩)

முயல் துளர்	முயற்சிசெய்கிற களைக் கொட்டுகளை யுடைய	வரை மழை	கல்மழை
மிளை	சிறுதூறுகளில் நின்றும்	பொழிதர	பொழியுமளவில்
முயல்	முயல்களானவை	மணி நிரை	அழகிய பசுக்கள்
துள	தள்ளவும்,	மயல் உற	கலங்கிநிற்க
வளம்	செழிப்பாக		(அப்போது)
விளை	விளைகின்ற	வரை	(கோவர்த்தன) மலையை
வயல்	கழனிகளிலே	குடை	குடையாக
கயல்	கயல்மீன்கள்	எடுவிய	எடுத்த
துளு	துள்ளவும் பெற்ற	நெடியவர்	மஹாபுருஷனான
கணபுரம்	திருக்கண்ணபுரமானது,—	அடிகள் தம்	ஸ்வாமியினுடைய
புயல் உற	பெருங்காற்றோடு கூடின	இடம்	திவ்ய தேசமாம்.

* * *—களைபறிக்கிறவர்கள் களைக்கொட்டுகளைக் கொண்டு வியாபரிக்குமளவிலே சிறுதூறுகளில் நின்றும் புறப்பட்ட முயல்கள் அவர்களது முகத்திலே துள்ளவும், செழிப்பு மிக்க வயல்களிலே உழுகிறவர்கள் முகத்திலே கயல்மீன்கள் துள்ளவும் பெற்ற திருக்கண்ணபுரம்—பண்டு இந்திரன் பசிக் கோபத்தாலே ஏழுநாள் கல்மழை பெய்வித்த காலத்துக் கோநிரைகள் கலங்கிநிற்க அக்கலக்கந் தீருமாறு கோவர்த்தனமலையைக் குடையாக வெடுத்துப்பிடித்த பெருமானுறையுமிடம் என்பதாம்.

மணி நிரை என்ற விடத்துப் பெரியவாச்சான்பிள்ளை யருளிச்செயல் காண்மின்;—"மணி யென்று அழகாய், அதாகிறது—அவனும் ரக்ஷிக்கத் தானும் ஒரு தலைபற்றுகையன்றிக்கே அவனே ரக்ஷகனும்படியிருக்கை" என்று. "ஸம்வருத்திவிரோதிவ்யாவ்ருத்திநிவ்ருத்திஃ வ்ருத்திஃ" என்கிறபடியே, எம்பெருமான் கைவைத்து ரக்ஷிப்பதற்குத் தடையான தன்முயற்சி அற்றிருப்பதாகிற அழகு பொருந்திய பசுக்கள் என்றவாறு. நம்மை நாமே ரக்ஷித்துக் கொள்ள முயற்சி

செய்வோமாகில் எம்பெருமான் உதாஸீநனாயிருந்துகொண்டு 'ஆந்தனையும்முயற்சி செய்து பார்க்கட்டும்' என்று வாளா இருந்திடுவன்; சபைநடுவே பரிபவிக்கப் பட்ட த்ரௌபதி தன் மானத்தைக் காத்துக்கொள்ளத் துகிலை இறுக்கிக்கொள் ளுகையாகிற ஸ்வப்ரவ்ருத்தியில் ஊன்றியிருந்தனையும் எம்பெருமான் ரக்ஷிக்க முன் வந்திலன்; அவள் தான் இருகையும் விட்டவாறே காரியஞ்செய்யப்புகுந் தான் கண்ணபிரான். முதலைவாய்க் கோட்பட்ட கஜேந்திராழ்வான் தன்வலிமை கொண்டு போராடினவளவும் எம்பெருமான் ரக்ஷிக்க முன்வந்திலன்; அதுதன் கையோய்ந்த பின்பே அரைகுலையத் தலைகுலைய ஓடிவந்து காத்தருளினன். இப் படிப்பட்ட பல த்ருஷ்டாந்தங்களினால் நாம் தெரிந்துகொள்வதென்ன? நம்மை நாமே ரக்ஷித்துக்கொள்ள நாம் செய்யும் முயற்சியானது நம்முடைய ரக்ஷணத்து க்கு உபயோகப்படாததோடு எம்பெருமான் புகுந்து ரக்ஷிப்பதற்கு இடையூறு கவுமாகின்றது; அப்படிப்பட்ட ஸ்வப்ரவ்ருத்தி விரோதியான ஸ்வப்ரவ்ருத்தியில் நின்றும் நிவ்ருத்தி பெறுவதே அழகு; இந்திரன் ஓயாமழை பெய்வித்த காலத்தில் ஆநி ரைகள் ஸ்வரக்ஷணத்தில் ஸ்வப்ரவ்ருத்தியொன்றுஞ் செய்யாதிருந்தமை இங்கு அழகாகக் கொள்ளப்பட்டதென்க.

மயல்—மயக்கம், கலக்கம்.

நெடியவர்—ஆபத்ரக்ஷண குணத்தில் தமக்கு மேற்பட்டாரில்லாதவர்.

துள—துள்ள. துளு—துள்ளு. "குறிஞ்சிநிலமும் மருதநிலமும் கலந்தாற்போலேகாணுமிருப்பது" என்று பின்னடிகட்குப் பெரியவாச்சான்பிள்ளை அருளிச்செய்தது அறிக. .... (௩)

ஏதலர் நகைசெய இளையவ ரளைவெணெய் *
போதுசெய் தமரிய புனிதர் நல்விரைமலர் *
கோதிய மதுகரம் குலவிய மலர்மகள் *
காதல்செய் கணபுர மடிகள்த மிடமே. (௪)

நல் விரை	நல்ல பரிமளத்தையுடைய	ஏதலர்	பகைவரான சிசுபாலாதிகள்
மலர்	பூக்களை	நகை செய	சிரிக்கும்படியாக
கோதிய	{ கொத்தி, அவை அஸார மென்று விட்டு வந்த	இளையவர் அளை வெணெய் போது செய்து	இளமகளிர் கடைந்து வைத்த வெண்ணெயைத் திருத்தியாக அமுதுசெய்து
மதுகரம்	வண்டுகள்		
குலவிய	சூழ்ந்து பரவப்பெற்ற		
மலர்	(தாமரை) மலரிலவதரித்த	அமரிய	ஸந்தோஷித்த
மகள்	பெரிய பிராட்டியார்	புனிதர்	பவித்திரரான
காதல் செய்	விரும்பப்பெற்ற	அடிகள் தம் இடம்	ஸ்வாமியின் திவ்ய தேசமாம்.
கணபுரம்	திருக்கண்ணபுரமானது,—		

* * *—"விரைமலர் கோதிய மதுகரம் குலவிய" என்ற விசேஷணம் மலர்க்கும் ஆகலாம், கணபுரத்துக்கும் ஆகலாம்; மலர்க்கு ஆகும் பக்ஷத்தில்,

வண்டுகள் வந்து மொய்க்கும்படியான செவ்விவாய்ந்த தாமரைமலரில் தோன்றிய பெரிய பிராட்டியார் விரும்பும்படி. ஸ்ரீமத்தான திருக்கண்ணபுரம் என்றதாகும். கணபுரத்துக்கு விசேஷணமாகும் பக்ஷத்தில், எங்கும் வண்டுகள் மொய்க்கும்படியான மதுவெள்ளம் பொருந்திய திருக்கண்ணபுரம் என்றதாகும். விரைமலர் கோதிய மதுகரம் குலவுவதும், மலர்மகள் காதல் செய்வதுமான கணபுரம் என்றவாறு. இப்படிப்பட்ட திருக்கண்ணபுரமானது பலருமே வெண்ணெயுண்ட பெருமானுறையுமிடம் என்கை. ஏதலர்நகைசெய = 1. "பானையில் பாலைப்பருகிப்பற்றாதாரெல்லாஞ் சிரிப்ப" என்றார் பெரியாழ்வார்; 2. "கற்றினம் மேய்க்கலும் மேய்க்கப்பெற்றான் காடுவாழ் சாதியு மாகப்பெற்றான்; பற்றியுரலிடை யாப்பு முண்டான் பாவிகாளுங்களுக்கேச்சுக் கொலோ?" என்றாள் சூடிக்கொடுத்த சுடர்க்கொடியும். ஸௌலப்ய ஸௌசீல்ய குணங்களில் ஈடுபடாதே, வயிறுவளர்க்க வெண்ணெய் திருடினனென்று வசைகூறுவார் சிசுபாலன் போன்ற ஆஸுரப்ரக்ருதிகளேயிறே.

அளை வெணெய்—வினைத்தொகை; இனி, 'அளை' என்று தயிர்க்கும் பெயராதலால் உம்மைத் தொகையாகக் கொண்டு, இளையவருடைய தயிரையும் வெண்ணெயையும் உண்ட புனிதர் என்றுரைக்கவுமாம்.

செய—செய்ய. வெணெய்—வெண்ணெய். தொகுத்தல்கள். போது செய்தல்—த்ருப்தியாக வுண்ணுதல். புனிதர்—பரிசுத்தர்; நவநீதக்களவு முதலிய சேஷ்டிதங்களை அநுஸந்தித்த மாத்திரத்தில் நாமெல்லாரும் பாவங்கள் தொலையப்பெற்றுப் புண்ணியம் பெறுவோமாதலின் இவ்வகையாலே நம்மைப் பரிசுத்தராக்கவல்ல பெருமான் என்றுங்கொள்க. (௪)

தொண்டரு மமரரும் முனிவரும் தொழுதெழ *
அண்டமோ டகலிட மளந்தவ ரமர்செய்து *
விண்டவர் படமதி ளிலங்கைமுன் னெரியெழ *
கண்டவர் கணபுர மடிகள்த மிடமே. (௫)

கணபுரம்	திருக்கண்ணபுரமானது,—
தொண்டரும்	ஸ்ரீவைஷ்ணவர்களும்
அமரரும்	பிரமன்முதலிய தேவர்களும்
முனிவரும்	யோகிகளும்
தொழுது எழ	வணங்கி உஜ்ஜீவிக்கும்படியாக
அண்டமொடு	மேலுலகங்களையும்
அகல் இடம்	பரம்பிய இவ்வுலகங்களையும்
அளந்தவர்	அளந்துகொண்டவரும்

விண்டவர் பட	சத்துருக்கள் அழிந்து போம்படி
அமர் செய்து	யுத்தம் பண்ணி
மதிள் இலங்கை	மதிளையுடைய இலங்காபுரி
முன்	முன்பொருகால்
எரி எழ	தீக்கொளுவி யெரியும்படியாக
கண்டவர்	ஸங்கல்பித்தவருமான
அடிகள் தம்	ஸ்வாமியினுடைய
இடம்	திவ்யதேசமாம்.

1. பெரியாழ்வார் திருமொழி 2-7-1. 2. நாச்சியார் திருமொழி 12-8.

* * *—(இப்பாசுரத்தில் திருக்கண்ணபுரத்துக்கு விசேஷணம் ஒன்றுமில்லை; எம்பெருமானுக்கே விசேஷணங்களுள்ளன.) ஸ்ரீவைஷ்ணவர்களும் பிரமன் முதலிய தேவர்களும் ஸநகஸநந்தநாதி மஹர்ஷிகளும் தொழுது உஜ்ஜீவிக்கும்படியாக மேலுலகங்களையும் கீழுலகங்களையும் அளந்து கொண்டவரும், ஆஸுரப்ரக்ருதிகள் அழியுமாறு இலங்கையைப் பாழ்படுத்தியவருமான பெருமான் உறையுமிடம் திருக்கண்ணபுரமென்பதாம். .... (ரு)

மழுவியல் படையுடை யவனிடம் மழைமுகில் *
தழுவிய வுருவினர் திருமகள் மருவிய *
கொழுவிய செழுமலர் முழுசிய பறவைபண் *
எழுவிய கணபுர மடிகள்த மிடமே. (௬)

திருமகள் மருவிய	பெரிய பிராட்டியார் பொருந்தியிருக்கப்பெற்ற	கணபுரம்	திருக்கண்ணபுரமானது,—
கொழுவிய செழு	மிகவும் செழுமை தங்கிய	மழு	மழுவை
மலர்	தாமரைப்பூவிலே	இயல் படை உடையவன் இடம்	விசேஷமான ஆயுதமாகவுடைய பெருமானது இருப்பிடம்; (இன்னமும்)
முழுசிய	அவகாஹித்த	மழை முகில் தழுவிய உருவினர்	நீர்கொண்டெழுந்த மேகம் போன்ற திருவுருவத்தையுடையரான
பறவை	(வண்டுகளாகிய) பறவைகளினுடைய	அடிகள் தம்	ஸ்வாமியினுடைய
பண்	இசைப்பாட்டுகள்	இடம்	திவ்ய தேசமாம்.
எழுவிய	எங்கும் வியாபிக்கப்பெற்றதான		

* * *—இப்பாட்டில் 'இடம்' என்பது இருமுறையுள்ளது, முதலடியிலும் ஈற்றடியிலும். ஆழ்வாருடைய திருவுள்ளமே இதற்கு நியாமகம்.

சிறந்த தாமரை மலரில் மதுவைப் பருக இழிந்த வண்டுகள் களிப்பினால் பாடுகின்ற பண்கள் எங்கும் மலிந்திருக்கப்பெற்ற திருக்கண்ணபுரம்—மழுப்படையை ஆயுதமாகக் கொண்டவரும் கார்முகில் வண்ணருமான பெருமானுடைய திவ்ய தேசம் என்பதாம்.

பரசுராமாவதாரத்தைக் கணிசித்து 'மழுவியல் படையுடையவன்' என்றது. பரசுராமாவதாரம் அஹங்கார யுக்தஜீவனை அதிஷ்டித்து நிற்கையாலே முமுக்ஷுக்களுக்கு உபாஸிக்கத்தகுந்த தன்றாயினும் விரோதிநிரஸநம்பண்ணின உபகாரத்துக்குத் தோற்றுத் துதிக்கிறமாத்திரத்திற்குக் குறையொன்றுமில்லையென்பது அறியத்தக்கது.

'திருமகள் மருவிய' என்ற விசேஷணம் மலர்க்கும் ஆகலாம், கணபுரத்துக்கும் ஆகலாம். கணபுரத்துக்காகில் செல்வம் மல்கியவூர் என்றவாறும். மலர்க்கு ஆகில், எம்பெருமானார் கத்யத்தில் "பத்மவநாலயாம்" என்று அருளிச்செய்த

படியே தாமரை மலர்தோறும் பெரிய பிராட்டியார் உறைகின்றமை உணரத் தக்கது. .... (௬)

பரிதியோ டணிமதி பனிவரை திசைநிலம் *
எரிதீயோ டெனவின வியல்வினர் செலவினர் *
சுருதியோ டருமறை முறைசொலு மடியவர் *
கருதிய கணபுர மடிகள்த மிடமே. (௭)

சுருதியொடு — ஸ்வரத்தோடு கூடின
அரு மறை — அருமையான வேதங்களை
முறை — முறைப்படியே
சொலும் — ஓதுகின்ற
அடியவர் — ஸ்ரீ வைஷ்ணவர்கள்
கருதிய — (நமக்கு இவ்விடமே ப்ராப்யம் என்று) அநுஸந்திக்கப்பெற்ற
கணபுரம் — திருக்கண்ணபுரமானது,—
பரிதியொடு — ஸூர்யனென்ன
அணி மதி — அழகிய சந்திரனென்ன

பனி வரை — ஹிமயமலை முதலிய குலபர்வதங்களென்ன
திசை — திக்குக்களென்ன
நிலம் — பூமண்டலமென்ன
எரி — ஜ்வலிக்கிற
தீயொடு — அக்நியென்ன
என — என்று சொல்லப்படுகிற
இன — இப்படிப்பட்ட பொருள்களை யெல்லாம்
இயல்வினர் — ப்ரகாரமாகவுடையவரும்
செலவினர் — இவற்றை நடத்திக்கொண்டு போருகிறவருமான
அடிகள் தம் இடம் — ஸ்வாமியின் திவ்ய தேசமாம்.

* * *—வைதிக ஸ்ரீவைஷ்ணவர்களால் புகலிடமாகக் கொள்ளப்பட்ட திருக்கண்ணபுரம்—கருதரியவுயிர்க்குயிராய்க் கரந்தெங்கும் பரந்துறையு மொரு தனி நாயகனுடைய திவ்யதேசம் என்பதாம். முன்னடிகளால் எம்பெருமானுடைய ஸர்வாந்தர்யாமித்வம் சொல்லுகிறது. ஸூர்யன் சந்திரன் முதலிய ஸகல பதார்த்தங்களிலும் அநுப்ரவேசித்திருந்து நடத்துகின்ற நிர்வாஹகத் தலைமையன் என்றவாறு.

'பரிவேஷ:' என்னும் வடசொல் சந்திரனையும் ஸூர்யனையுஞ் சுற்றியிருக்கிற 'ஊர்கோள்' எனப்படும் பரிவேஷத்தைச் சொல்லுவதாயினும், அவ்வடசொல்லின் திரிபாகிய 'பரிதி' என்னும் தமிழ்ச்சொல் ஸூர்யவாசகமாக வழங்கும். 'பனிவரை' என்று இமயமலையொன்றைச் சொன்னது மற்றுமுள்ள குலபர்வதங்களுக்கும் உபலக்ஷணமென்ப.

இரண்டாமடியில் 'தி' எனக் குறுகிநிற்பது செய்யுள் விகாரம்.

'சுருதி' என்பது வேதவாசகமாயினும் அடுத்து 'அருமறை' என வந்திருத்தலால் ஸ்வரமென்று பொருள் கொள்ளப்பட்டது. ... (௭)

படிபுல்கு மடியிணை பலர்தொழ மலர்வைகு *
கொடிபுல்கு தடவரை யகலம துடையவர் *
முடிபுல்கு நெடுவயல் படைசெல வடிமலர் *
கடிபுல்கு கணபுர மடிகள்த மிடமே. (௮)

முடி புல்கு	நாற்று முடிகளோடு கூடியிருக்கிற	படி புல்கும் அடி இணை உடையவர்	பூமியை அளாவிய திருவடியிணையை உடையவரும்
நெடு வயல்	விசாலமான கழனிகளிலே	மலர் வைகு	தாமரைப்பூவில் பொருந்திய
படை	கலப்பைகளை	கொடி	கொடிபோன்ற பெரிய பிராட்டியார்
செல	செலுத்தும்போது		
அடி	கால்பட்ட	புல்கு	அணையப்பெற்ற
மலர்	(தாமரை முதலிய) பூக்களானவை	தட வரை அகலம் அது உடையவர்	பெரிய மலைபோன்ற திருமார்பை உடையவருமான
கடி புல்கு	பரிமளத்தைப் புறப்பட விடப்பெற்ற		
கணபுரம்	திருக்கண்ணபுரம்;—	அடிகள் தம்	ஸ்வாமியினுடைய
பலர் தொழ	பல பக்தர்கள் வணக்கும்படியாக;	இடம்	திவ்யதேசமாம்.

* * *—கழனிகளில் நடுகைக்காக எங்கும் பரப்பிக்கிடக்கிற நாற்று முடிகள் மூன்றாமடியிலுள்ள 'முடி' என்னுஞ் சொல்லுக்குப் பொருள். அவை நிரம்பிய பெரிய வயல்களிலே உழவர்கள் கலப்பையைக்கொண்டு புகுந்து உழுவர்கள்; காலாலே ஒருகால் குழப்புவர்கள்; அவ்வளவிலே இடையிலே நெருங்கிக்கிடந்த தாமரைப்பூவானது பரிமளத்தைப் புறப்படவிடுமாம். "படைநின்ற பைந்தாமரையோடு அலிநீலம் மடைநின்றலரும் வயலாலிமணாளா" (11-8-6) என்றபாசுரம் இங்கு ஸ்மரிக்கத்தக்கது.—வயல்களிலெங்கும் தாமரை முதலிய மலர்கள் மணங்கமழப் பெற்ற திருக்கண்ணபுரம் * அகலகில்லேனிறையுமென்று அலர்மேல்மங்கை யுறைமார்பனுடைய திவ்யதேசம் என்றதாயிற்று.

படிபுல்குமடியிணை பலர்தொழ = முன்பு உலகளந்த திருவடிகளைத் திருக்கண்ணபுரத்திலே பலரும் வணங்கும்படியாக வைத்தவராம். படி—பூமி. மலர்வைகு கொடி—பெரிய பிராட்டியார். 'கொடி' என்பது ஸ்த்ரீஜாதிக்கு உவமையாகு பெயர். ... ... (௮)

புலமனு மலர்மிசை மலர்மகள் புணரிய *
நிலமக ளெனவின மகளிர்களிவரோடும் *
வலமனு படையுடை மணிவணர் நிதிகுவை *
கலமனு கணபுர மடிகள்த மிடமே. (௯)

நிதி குவை	பொற்குவியல்களையுடைய		(ஸமுத்ரத்தை
கலம்	மரக்கலங்கள்		ஸமீபத்திலுடைத்தான)
மனு	பொருந்தியிருக்கப்பெற்ற	கணபுரம்	திருக்கண்ணபுரம்,—

புலம் மனு	இந்த்ரியங்களை அருந்திக்கிடக்கும் படியாக அழகுவாய்ந்த
மலர் மிசை	தாமரைப்பூவிலுண்டான
மலர்மகள்	பெரிய பிராட்டியோடு
புணரிய	கூடின
நிலம் மகள்	பூமிப்பிராட்டியார்
என இன	என்று இப்படிப்பட்ட
மகளிர்கள் இவரோடும்	திவ்ய மஹிஷிகளோடும்

வலம் மனு	வலத்திருக்கையில் பொருந்திய
படை உடை	திருவாழிப்படையை யுடையவரும்
மணி வணர்	நீலமணிபோன்ற நிறத்தை யுடையவருமான
அடிகள் தம்	ஸ்வாமியினுடைய
இடம்	திவ்யதேசமாம்.

* * *—திருக்கண்ணபுரம் ஸமுத்ரத்திற்கு ஸமீபத்திலுள்ளதாதலால் 'நிதிக் குவைக்கலமனு கணபுரம்' எனப்பட்டது. த்வீபாந்தரங்களிலிருந்து சிறந்த சரக்குக்களை ஏற்றிக்கொண்டு வருகின்ற கப்பல்கள் கடலில் பெரும்பான்மையாகக் காணப்படுதல் இயல்பு. கீழ், திருக்கடல்மல்லைத் திருப்பதிகத்தில் "புலங்கொள் நிதிக்குவையோடு புழைக்கைம்மா களிற்றினமும், நலங்கொள் நவமணிக்குவையும் சுமந்தெங்கும் நான்றொசிந்து, கலங்களியங்கும் மல்லை" என்றருளிச்செய்த பாசுரமும் இங்கு ஸ்மரிக்கத்தக்கது.

'நிதி' என்னும் பலபொருளொருசொல் இங்குபொன் என்றபொருளில் வந்தது. இங்கே பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியான வாக்கியம்;—"பொற்குவை மாறாத மரக்கலங்களையுடைய திருக்கண்ணபுரம். கடலொருபுறமாயிருக்கும் போலேகாணும்" என்பதாம். "கலங்கல் முந்நீர்க்கண்ணபுரத்து"-என்று மேல் திருமொழியிலுங் காண்க.

திருமடந்தை மண்மடந்தை யிருபாலுந் திகழநிற்கும் பெருமானுடைய உறைவிடம் திருக்கண்ணபுரம் என்றதாயிற்று.

புலமனுமலர்—கண் முதலிய இந்திரியங்களை ஆகர்ஷித்துத் தன்னிடத்திலேயே நிலைநிற்கச் செய்யவல்ல [மிக அழகிய] மலர் என்றவாறு. "புலமனு மலர்மிசை மகள்" என்னுமளவே போதுமாயிருக்க, மீண்டும் 'மலர்மகள்' என்றதில் புநருக்தி சங்கிக்க வேண்டா; 'மலர்மகள்' என்றது ஸம்ஜ்ஞையாகக் கொள்ளத்தக்கது.

வலமனுபடை—இங்குப் படையென்னும் பொதுச்சொல் ஆழிப்படையென்ற சிறப்புப் பொருளில் வந்தது. மணிவணர்—மணிவண்ணர்; தொகுத்தல்.

மலிபுகழ்க் கணபுர முடையவெம் மடிகளை *
வலிகெழு மதிளயல் வயலணி மங்கையர் *
கலியன தமிழிவை விழுமிய விசையினொடு *
ஒலிசொலு மடியவ ருறுதுய சிலரே. (௧௦)

மலி புகழ்	நிறைந்த புகழையுடைய	மங்கையர்	திருமங்கை நாட்டிலுள்ளார்க்குத் தலைவரான
கணபுரம்	திருக்கண்ணபுரத்தை	கலியன	திருமங்கையாழ்வாருடைய
உடைய	இருப்பிடமாகவுடைய	இவை தமிழ்	இத்தமிழ்ப் பாசுரங்களை
எம் அடிகளை	எம்பெருமான் விஷயமாக,	விழுமிய இசையினொடு	சிறந்த இசையோடு கூட
வலி கெழு	திண்மை பொருந்திய	ஒலி சொலும்	அப்யஸிக்கின்ற
மதிள்	மதிளையும்	அடியவர்	பக்தர்கள்
அயல்	சுற்றுப்புறங்களில்		
வயல்	கழனிகளையும்	உறு துயர் இலர்	அவச்யமநுபவிக்கும்படியாக ஏற்பட்ட துக்கங்களினின்றும் விடுபட்டவராவர்.
அணி	அலங்காரமாகக்கொண்ட		

* * *—திருக்கண்ணபுரத் தெம்பெருமான் விஷயமாகத் திருமங்கையாழ்வார் அருளிச்செய்த இத் திருமொழியை இதற்குரிய இசை குன்றாமல் ஓதுமவர்கள், அநுபவித்தே தீரவேண்டும்படியான பாபபலன்களையும் அநுபவிக்க மாட்டார்கள்—முக்தி பெறுவர்கள் என்பதாம்.

மலிபுகழ்க்கணபுரம்=“வாஸுதேவோஸி பூர்ண:” என்கிறபடியே பரவாஸுதேவனுயிருக்கும் பரத்வ நிலையிலும் ஸகலகுணங்களும் நிறைந்திருந்தாலும், உபாயமாகப் பற்றுமிடத்தில் வேண்டுமவையான ஸௌலப்யவாத்ஸல்யாதி குணங்கள் அங்கு ப்ரகாசிப்பதில்லை; அது பரம ஸாம்யாபந்நர்க்கு முகங் கொடுத்திருக்கிற விடமாகையாலே அங்கு அக்குணங்கள் பகல்விளக்குப்போலே ஒளி மழுங்கப்பெற்றிருக்கும்; அர்ச்சாவதாரமானவிடத்தில் நைச்யத்துக்கு எல்லை நிலமான ஸம்ஸாரிகளுக்கு முகங்கொடுத்துக் கொண்டிருக்கையாலே அக்குணங்கள் இங்கு இருட்டறையில் விளக்குப்போலே பேரொளி பெற்று விளங்கும் என்பதாதலால் பரமபதத்திற் காட்டில் புகழ்மலிந்திருக்குமிடமென்று விசேஷிக்கப்பட்டது.

‘வலிகெழு மதிள்’ என்பதும் ‘வயலணி’ என்பதும் மங்கைவிசேஷணங்கள்.

கலியன= அ—ஆறாம் வேற்றுமையுருபு.

இத் திருமொழியின் இசை பரமபோக்கியமாதலால் ‘விழுமிய விசையினொடு’ என்றது. .... (௧0)

அடிவரவு:—வியம் இணை புயல் ஏதலர் தொண்டார் மழு பரிதி படி புலம் மலிபுகழ் வானோர்.

ஏழாந்திருமொழி உரை முற்றிற்று.

ஜீயர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

எட்டாம்பத்து—எட்டாந்திருமொழி,

வானோரளவும்முதுமுந்நீர்.

உரையவதாரிகை:—திருக்கண்ணபுரத் தெம்பெருமான் தன்னுடைய பல அவதார திவ்ய சேஷ்டிதங்களை அடைவே ஆழ்வார்க்கு ப்ரத்யக்ஷ ஸமாநாகாரமாக ஆக்ருவிக்க, அவற்றையெல்லாம் அநுபவித்துப் பேசி இனியராகிறார் இத் திருமொழியில்.

மத்ஸ்ய கூர்ம வராஹ நரஸிம்ஹ வாமந பரசுராம தசரதராம பலராம ஸ்ரீக்ருஷ்ணாவதாரங்களைப் பாட்டடைவே அநுபவிக்கிறாராய்ச் செல்லுகிறது.

வானோரளவும் முதுமுந்நீர் வளர்ந்தகாலம் * வலியுருவின்
மீனாய்வந்து வியந்துய்யக்கொண்ட தண்டாமரைக்கண்ணன் *
ஆனாவுருவி லானாயனவனை அம்மா விளைவயலுள் *
கானார்புறவிற் கண்ணபுரத்து அடியேன் கண்டுகொண்டேனே. (க)

முது முந்நீர்	கடல் வெள்ளம்
வானோர் அளவும்	தேவர்களின் எல்லையளவும்
வளர்ந்த காலம்	பரந்து சென்ற காலத்திலே
வலி உருவின் மீன் ஆய் வந்து	வலிமைகொண்ட வடிவையுடைய மீனாய்த் திருவவதரித்து
வியந்து	ஆச்சரியப்படும்படியாக
உய்யக் கொண்ட	எல்லாரையும் பிழைப்பித்தருளின
தண் தாமரை கண்ணன்	குளிர்ந்த தாமரை போன்ற திருக்கண்களையுடையவனும்
ஆனா உருவின் ஆன் ஆயன் அவனை	விகாரமற்ற உருவையுடைய ஸ்ரீக்ருஷ்ணனாகத் திருவவதரித்தவனுமான பெருமானை,
அம்	அழகிய
மா	பரந்த
விளை	விளைவுமிக்க
வயலுள்	வயல்களையுடையதும்
கான் ஆர் புறவில்	காடுகள் செறிந்த பர்யந்தங்களையுடையதுமான
கண்ணபுரத்து	திருக்கண்ணபுரத்திலே
அடியேன் கண்டு கொண்டேன்—	

* * *—மத்ஸ்யாவதாரம் செய்தருளின பெருமானைத் திருக்கண்ணபுரத்தில் காணப்பெற்றேனென்கிறார். ஒரு பிரமகல்பமுடிவில் பிரம சம்பந்தமான நைமித்திக ப்ரளயம் உண்டாயிற்று; அப்பொழுது பூமிமுதலிய உலகங்கள் கடலாற் சூழப்பட்டு மூழ்கும் ஸமயத்தில் நித்திரை தெளிந்தெழுந்து அந்த ஜலத்தில் படுக்க யத்தனித்த பிரமனது முகத்தினின்றும் வெளிக்கிளம்பின நான்கு வேதங்களையும் ஹயக்ரீவனென்னுமோர் தானவன் அபஹரித்துக் கொண்டுபோய் விட்டான்; அப்போது வேதங்கள் தொலைந்தது கண்டு திருமால்

ஓர் சிறிய மீன்வடிவு கொண்டார்; அக்காலத்தில் தவத்தின் பெருமையினால்
ஜீவித்து, கிருதமாலா நதியின் கரையில் திருமாலை நோக்கித் தவஞ்செய்து கொண்
டிருந்த ஸத்யவ்ரதனென்னுமோர் ராஜர்ஷி ஜலபானம் பண்ணிக்கொண்டு பிழைத்
திருந்தார்; அவர் ஜலதர்ப்பணஞ் செய்கையில் அவரது இரண்டு கைகளுக்குள்
ஒரு சிறிய மீன் அகப்பட்டுக்கொண்டது; அதனை அவர் ஜலத்தில் விட்டார்;
அப்போது அந்த மீன் 'ஓ தயாளுவான ராஜரிஷியே! என்னை இப்படி ஜலத்தில்
விட்டீரே, என் இனத்தார் என்னை விழுங்கிவிடுவார்களே; என்னை நீர் காப்பாற்றி
யருளவேணும்' என்ன, அவர் அதனைத் தன் கமண்டலதீர்த்தத்தில் எடுத்து
விட்டார்; அதனுட்புகுந்த அந்த மீன் ஓரிரவுக்குள் கமண்டலத்துக்குள் நிரம்பி
மறுநாள் காலையில் 'ஓ தயாளுவே! நான் எப்படி உம்முடைய கலசத்துக்குள்
கஷ்டப்பட்டு வஸிப்பது? என்மீது சிறிது அருள்புரியலாகாதா?' என்றது;
உடனே அவர் அதைக் கமண்டலத்தினின்றும் எடுத்துத் தன்னிடத்துள்ள
சந்தன ஜலத்தில் புகவிட்டார்; உடனே மூன்றடி. பிரமாணம் வளர்ந்த அந்த
மீன் 'என்னை இப்படி கஷ்டப்படுமாறு விட்டுவைப்பது உமக்குத்தருமமா?' என்
றது; அன்புகூர்ந்த அவர் உடனே அதை யெடுத்து ஓர் குளத்தினுள் விட்டார்;
அங்கும் மிகவளர்ந்த அந்த மீன் 'நான் சுகமாக வஸிக்க இடம்பெறாமல் வருந்து
வது உமது திருவுள்ளத்திற்கு உகப்போ?' என்றது; உடனே அவர் அதை
யெடுத்து ஒரு ஏரியில் விட்டார்; அக்கணமே அந்த ஏரி நிரம்பவளர்ந்த அந்த மீன்
'ஸ்வாமின்! என்னை யிப்படி அலையவிடுவது நியாயமா?' என்றது; அதைக்கேட்டுக்
கருணைகூர்ந்த அவர் அதனையெடுத்துக் கடலில் விட்டார்; அப்பால் அந்த ஸத்ய
விரதர் அம்மீனிடத்துப் பெருமயல்கொண்டு அதனை நோக்கி 'ஓ மத்ஸ்யராஜனே!
உன்னுடைய வரலாற்றைத் தெரிந்துகொள்ள மிக்க ஆவலுள்ளவனாய் இருக்
கிறேன்; நூறுயோஜனை நீளமும் அதற்குத் தக்க பருமனும் வாய்ந்துள்ள நீயார்?
உனது தத்துவத்தை வெளியிடவேணும்' என்று கைகூப்பிப் பிரார்த்திக்க, அந்த
மத்ஸ்யராஜன் 'ஓ மஹானுபாவரே! இன்று முதல் ஏழு நாட்களுக்குள் இந்த
மூன்று உலகங்களும் மூழ்கிவிடப்போகின்றன; அந்தப் பெருநீரில் ஒரு
விசாலமான ஓடம் வரப்போகிறது; அந்தப்படகில் ஸப்தரிஷிகளும் நீரும் எல்லா
ஓஷதிகளும் ஸமஸ்த பிராணிகளும் ஏறி மனத்திற்கு வருத்தமொன்றுமின்றி
உலாவக்கடவீர்கள்; இப்படி ஸஞ்சரித்துக் கொண்டிருக்குமளவில் ஓர் பெருங்
காற்று அடிக்கப் போகிறது; அதனால் அந்த ஓடமானது பெருநீரில் அலையப்
போகின்றது; அப்பொழுது எனது சிரஸ்ஸில் முளைத்துள்ள பெரியதொரு
கொம்பில் பெரியதொரு ஸர்ப்பத்தினால் அந்த ஓடத்தைக் கட்டிவிடும்; பிறகு
நான் அந்தப் படகுடன் உம்மையும் எல்லாப்பிராணிகளையும் ரிஷிகளையுஞ் சுமந்து
கொண்டு அந்தப் பேரிருள் நீங்கும்வரையில் நான் கடலில் ஸஞ்சரிக்கப்போகின்
றேன்; அப்போது எனது பெருமையை நீர் உணர்வீர்' என்றுரைத்துவிட்டு
மறைந்திடவே, ஆச்சரியமடைந்த அந்த ஸத்யவிரதர் பகவானாலே குறிக்கப்
பட்ட அக்காலத்தை எதிர்பார்த்திருக்கையில் ஸப்த மேகங்களினுடைய ஆர

வாரத்தால் கடல் கிளர்ந்தெழுகின்றது; பகவான் குறித்த தினத்தில் ஒரு பெரிய ஓடம் அந்தக்கடலில் வரக்கண்டு மகிழ்ந்து எல்லாச் செடி கொடி பீஜங்களையும் அந்தப் படகிலேற்றித் தாமும் ஏறினர்; ஏறி, ஸப்தரிஷிகளுந் தாமுமாய்ப் பகவானைச் சிந்தனை செய்து கொண்டிருக்கையில், பெரிய கொம்புள்ள மத்ஸ்யரூபங்கொண்ட பகவான் காணப்பட்டார்; லக்ஷம் யோஜனை நீளமும் பதினாயிரம் யோஜனை பருமனும் ஒற்றைக்கொம்பும் ஸுவர்ணவர்ணமும் ஸகல லோகமனோஹரரூபமும் வாய்ந்தவராகக் காணப்பட்டார்; உடனே அந்த ஸத்யவிரதர் ஒரு பெரிய நாகத்தைக் கொண்டு அந்த மத்ஸ்யபகவானது கொம்பிலே அப்படகைக் கட்டிவிட அப்பெருமான் அதை வஹித்துக்கொண்டு அண்டகடாஹத்தளவும் செல்லத் துள்ளிவிளையாடி, முன்பு அசுரர் கவர்ந்துசென்ற வேதங்களையும் மீட்டுக்கொணர்ந்தருளி, ஆக இவ்வண்ணம் பிரளயாபத்தில் நின்றும் பிரஜைகளைச் காத்தருளியதும் வேதங்களை உபகரித்தருளினதும் மத்ஸ்யாவதார வரலாறும்.

ஸ்ரீரங்கராஜஸ்தவ உத்தரசதகத்தில் தசாவதாரங்களையும் அழகாக அநுபவித்து வரும் பட்டர் மத்ஸ்யாவதார விஷயமாக அருளிச்செய்த “[illegible]” என்ற இரண்டு ச்லோகங்களும் இங்கு அநுஸந்திக்கத் தக்கன.

வலியுருவின் மீனாய் வந்து=இவ்விடத்திற்குப் பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியானம்;—“கடல் வெள்ளத்தைத் தன்னுடைய ஒரு செலுவிலே அடக்க வல்ல மத்ஸ்யமாய் வந்து” என்பதாம். செலுவாவது—மீனின் உட்புறத்தேயுள்ள முள்; ‘செதிள்’ எனவும் படும். அன்றி, செலுவாவது—மீன்செட்டையெனப்படும் மீன் சிறகு என்றுஞ் சொல்லுவர். “மான யோசனை யளவெசழி மெய்யுருவாய்ந்த, மீனமாயினனெடுங்கடற் பரவையின் வீழ்ந்து, கானவெண்டிரைக் கருங்கடலளறெழக் கலக்கிப், போன வாளையிற் றசுரனைத் தடவுறும் புகுந்து” (கந்த புராணம்—உபதேச காண்டம்) என்றபடி எம்பெருமான் எண்ணிடற்கரிய மிகப்பல யோஜனை நீளமும் அதற்கேற்ற பருமனும் வாய்ந்த பெருமீனானபோது அந்த மத்ஸ்யத்தின் ஒரு செலுவினகத்தே கடல் வெள்ளம் முழுவதும் ஒடுங்கும்படி யிருந்ததென அதன் பெருமை தோன்ற ‘வலியுருவின் மீனாய்’ என்றது.

ஆறுவுருவின்=“ஸதைகரூபரூபாய” “அவிகாராய சுத்தாய” என்கிற படியே என்றும் ஒருபடிப்பட நின்று விகாரமற்ற வுருவையுடையவன் என்கை. அப்படியாகில், மத்ஸ்ய கூர்மாதி ரூபமான விகாரவுருக்களைக் கொண்டது என்னேவெனின்; கருமமடியாகக் கொண்டிலன்; க்ருபையடியாகக் கொண்டவத்தனை.

விகாரமற்றவனென்று ப்ரமாணங்கள் சொல்லுவதெல்லாம் கருமநிபந்தனமான விகாரமில்லாமையையே யென்றுணர்க. "அஜாயமாநோ பஹுதா விஜாயதே தஸ்ய தீரா: பரிஜாநந்தி யோநிம்." என்றதுங் காண்க. .... (க)

மலங்கு விலங்குநெடுவெள்ளம் மறுக அங்கோர்வரை நட்டு *
இலங்கு சோதியாரமுத மெய்துமளவோ ராமையாய் *
விலங்கல் திரியத் தடங்கடலுட் சுமந்துகிடந்த வித்தகனை *
கலங்கல்முந்நீர்க் கண்ணபுரத்து அடியேன் கண்டு கொண்டேனே. (உ)

மலங்கு	(உள்ளுக்கிடக்கிற) மீன்சாதிகள்
விலங்கு	தடுமாறும்படியான
நெடுவெள்ளம்	பெரிய வெள்ளம்
மறுக	குழம்பும்படியாக
அங்கு	ஆழமான அவ்விடத்திலே
ஓர் வரை நட்டு	ஒரு (மந்தர) பர்வதத்தை நாட்டி
இலங்கு சோதி ஆர் அமுதம்	விளங்குகின்ற தேஜஸ்ஸோடு கூடின அம்ருதமானது
எய்தும் அளவு	தோன்றும் வரையில்
ஓர் ஆமை ஆய்	ஒப்பற்ற ஆமையாயிருந்து கொண்டு
விலங்கல்	அந்த மந்தரமலையானது
திரிய	நாற்புறமும் திரிந்து வரும்படியாக
தடகடலுள்	பெரிய அக்கடலிலே
சுமந்து கிடந்த	(அம்மலையைத்) தாங்கிக்கொண்டிருந்த
வித்தகனை	ஆச்சரியபூதனான பெருமானை
கலங்கல் முந்நீர் கண்ணபுரத்து	கலக்கமுள்ள கடலை அணித்தாகவுடைய திருக்கண்ணபுரத்திலே
	அடியேன் கண்டுகொண்டேன்—

* * *—கூர்மாவதாரம் செய்தருளின பெருமானைத் திருக்கண்ணபுரத்திலே ஸேவிக்கப் பெற்றேனென்கிறார். முன்னொரு காலத்தில் இவ்வண்டகோளத்திற்கு அப்புறத்திலுள்ள விஷ்ணுலோகத்துச் சென்று திருமகளைப் புகழ்ந்து பாடி அவளால் ஒரு பூமாலை ப்ரஸாதிக்கப்பெற்ற ஒருவித்யாதரமகள், மகிழ்ச்சியோடு அம்மாலையைத் தன் கைவீணையில் தரித்துக்கொண்டு ப்ரஹ்மலோகவழியாய் மீண்டு வருகையில், துர்வாஸமஹாமுனி எதிர்ப்பட்டு அவளை வணங்கித்துதிக்க, அவ்விஞ்சைமங்கை அம்மாலையை அம்முனிவனுக்கு அளித்திட்டாள்; அதன் பெருமையை உணர்ந்து அதனைச் சிரமேற்கொண்ட அம்முனிவன் ஆநந்தத்தோடு தேவலோகத்திற்கு வந்து, அப்பொழுது, அங்குவெகு உல்லாஸமாக ஐராவத யானையின்மேற் பவனிவந்துகொண்டிருந்த இந்திரனைக் கண்டு அவனுக்கு அம்மாலையைக் கைநீட்டிக்கொடுக்க, அவன் அதனை அங்குசத்தால் வாங்கி அந்த யானையின் பிடரியின்மேல் வைத்தவளவில், அம்மதவிலங்கு அதனைத் துதிக்கையாற்பிடித்து இழுத்துக்கீழெறிந்து காலால் மிதித்துத் துவைத்தது; அதுகண்டு முனிவரன் கோபங்கொண்டு இந்திரனை நோக்கி, 'இவ்வாறு செல்வச்செருக்குற்ற நினது ஐச்வரியங்களெல்லாம் கடலில் ஒளிந்துவிடக்கடவன' என்று சபிக்க, உடனே தேவர் செல்வம்யாவும் ஒழிந்தன;

ஒழியவே, அசுரர்வந்துபொருது அமரரைவெல்வாராயினர்; பின்பு இந்திரன் தேவர்களோடு திருமாலைச் சரணமடைந்து, அப்பிரான் அபயமளித்துக்கட்டளை யிட்டபடி, அசுரர்களையுந் துணைக்கொண்டு மந்தரமலையை மத்தாகநாட்டி, வாசுகி யென்னும் மஹாநாகத்தைக் கடைகயிறாகப்பூட்டிப் பாற்கடலைக்கடையலாயினர்; அப்பொழுது, மத்தாகிய மந்தரகிரி கடலினுள்ளே அழுந்திவிட, தேவர்கள் வேண்டுகோளினால் திருமால் பெரியதோர் ஆமைவடிவமெடுத்து அம்மலையின் கீழேசென்று அதனைத்தனது முதுகின்மீதுகொண்டு தாங்கி அம்மலை கடலில் அழுந்திவிடாமற் கடைவதற்கு உபயோகமாம்படி அதற்கு ஆதாரமாக எழுந் தருளியிருந்தனனென்பது கூர்மாவதார வரலாறு.

ஆழத்துக்கு அவதியில்லாத விடத்திலே மந்தரமலையைக் கொண்டு போய் நிறுத்துமளவிலே அப்போதுண்டான குழப்பத்தைச் சொல்லுகிறது 'மலங்கு விலங்கு நெடு வெள்ளம் மறுக' என்று. மலங்கு—மீன்களில் ஒருவகைச்சாதி. அமுத மென்பது—போன வுயிரை மீட்குந் தன்மையதான புகர் பெற்றிருத்தல் பற்றி 'இலங்கு சோதியாரமுதம்' எனச்சிறப்பித்துக் கூறப்பட்டது. விலங்கல் திரிய="மன்னும் வட மலையை மத்தாக மாசுணத்தால், மின்னுமிருசுடரும் விண்ணும் பிறங்கொளியும், தன்னினுடனே சுழல மலை திரித்து" என்ற பெரிய திருமடல் இங்கு அநுஸந்திக்கத் தக்கது. (௨)

பாராரளவும் முதுமுந்நீர் பரந்தகாலம் * வளைமருப்பில்
ஏராருருவத் தேனமாயெடுத்த வாற்றலம்மானை *
கூராராரலிரைகருதிக் குருகுபாயக் கயலிரியும் *
காரார்புறவிற் கண்ணபுரத்து அடியேன் கண்டு கொண்டேனே. (௩)

முது முந்நீர்	கடல் வெள்ளம்
பாராளவும்	பூமிப்பரப்படங்கலும்
பரந்த காலம்	சூழ்ந்த காலத்தில்
வளை மருப்பின்	வளைந்த கோரப்பல்லையுடைய
ஏர் ஆர் உருவத்து	அழகுமிக்க திருமேனியை யுடைய
ஏனம் ஆய்	வராஹமூர்த்தியாகி
எடுத்த	(பூமியை) உத்தரிப்பித்த
ஆற்றல்	மிடுக்கையுடையனான
அம்மானை	ஸர்வேச்வரனை
கூர் ஆர்	கூர்மை பொருந்திய (வாயலகுகளை யுடைய)
குருகு	நாரைகளானவை
ஆரல்	ஆரல்மீன்களை
இரை கருதி	ஆஹாரமாகக் கொள்ள நினைத்து
பாய	(சேறில்) பாய்ந்தவளவிலே
கயல்	கயல்மீன்கள்
இரியும்	அஞ்சியோடும்படியுள்ள தாம்
கார் ஆர் புறவில்	மேகங்கள் படிந்த சோலைகளை யுடையதுமான
கண்ணபுரத்து	திருக்கண்ணபுரத்தில்
	அடியேன் கண்டுகொண்டேன்—.

* * *—மஹாவராஹமாய்த் திருவவதரித்தருளின பெருமானைத் திருக் கண்ணபுரத்திலே ஸேவிக்கப்பெற்றேனென்கிறார். இப்பொழுது நடக்கிற

ச்வேதவராஹ கல்பத்துக்கு முந்தின பாத்மகல்பத்தைப் பற்றிய ப்ரளயத்தின் இறுதியில் ஸ்ரீமந்நாராயணன் ஏகார்ணவமான ப்ரளய ஜலத்தின்கண் முழுகி யிருந்த பூமியை மேலெடுக்க நினைந்து ஸ்ரீவராஹாவதாரத்தைச் செய்தருளிக் கோட்டுநுனியாற் பூமியை யெடுத்து வந்தனனென்ற வரலாறு அறியத்தக்கது.

ஹிரண்யகசிபுவின் உடன் பிறந்தவனான ஹிரண்யாக்ஷனென்னுங் கொடிய அஸுரராஜன் தன் வலிமையாற் பூமியைப் பாயாகச் சுருட்டி யெடுத்துக் கொண்டு கடலில் மூழ்கிச் சென்றபோது, தேவர் முனிவர் முதலியோரது வேண்டுகோளினால் மஹாவராஹரூபியாகத் திருவவதரித்துக் கடலினுட்புக்கு அவ்வஸுரனை நாடிக்கண்டு பொருது கோட்டினாற் குத்திக்கொன்று பாதாளலோகத்தைச் சார்ந்திருந்த பூமியைக் கோட்டுநுனியிற்குத்தி அங்கு நின்று எடுத்துக் கொண்டுவந்து பழையபடி விரித்தருளினன் என்ற வரலாறும் உண்டாயினும் அஃது இங்கு அவிவக்ஷிதம்.

பின்னடிகள் வயல்வளமும் பொழில் வளமும் சொல்வன. .... (௩)

உளைந்த வரியும் மானிடமும் உடனாய்த் தோன்ற வொன்றுவித்து *
விளைந்த சீற்றம் விண்வெதும்ப வேற்றோ னகலம் வெஞ்சமத்து *
பிளந்து வளைந்த வுகிரானைப் பெருந்தண் செந்நெற் குலைதடிந்து *
களஞ்செய் புறவிற் கண்ணபுரத்து அடியேன் கண்டு கொண்டேனே. (௪)

உளைந்த	கண்டபோதே அஞ்சி நீங்கவேண்டும்படியான	அகலம்	மார்பை
அரியும்	சிங்கவுருவத்தையும்	வெம் சமத்து	வெவ்விய போர்க்களத்திலே
மானிடமும்	மனிதவுருவத்தையும்	பிளந்து	இருபிளவாக்கி
உடனாய் ஒன்றுவித்து	ஒருசேரப் பொருந்தச் செய்து	வளைந்த உகிரானை	வளைந்த நகங்களையுடைய பெருமானை,
தோன்ற	(நரஸிம்ஹரூபியாய்த்) தோன்ற	பெரு	பெருத்த
	(அப்போது)	தண்	அழகிய
விளைந்த	உண்டான	செந்நெல் குலை	செந்நெற்கதிர்கள்
சீற்றம்	கோபத்தைக் கண்டு	தடிந்து	வயிரம்பற்றி
விண் வெதும்ப	விண்ணுலகத்தவர்களும் அஞ்சி நடுங்க	களம் செய்	இருள் மூடியிருக்கப்பெற்ற
வேற்றோன்	பகைவனான இரணியனுடைய	புறவில்	சுற்றுப்பிரதேசங்களையுடைத்தான
		கண்ணபுரத்து	திருக்கண்ணபுரத்திலே
			அடியேன் கண்டுகொண்டேன்—.

* * *—நரஸிம்ஹாவதாரம் செய்தருளின பெருமானைத் திருக்கண்ணபுரத்திலே ஸேவிக்கப் பெற்றேனென்கிறார். திருத்துழாய் நறுமணத்தோடே அங்குரிக்குமா போலே இயற்கையான பகவத் பக்தியோடே பிறந்த ப்ரஹ்லாதாழ்வான் ஸ்ரீமந் நாராயண நாமத்தையே உருச்சொல்லிக் கொண்டிருந்தது

காரணமாக அவனிடம் கறுக்கொண்ட அவனது தந்தையான ஹிரண்யகசிபுவென்பான் மைந்தனைத் தன்வழிப்படுத்தப் பலவாறு முயன்றும் அங்ஙனம் வழிப்படாத அவனைக் கொல்லுதற்கு என்னவுபாயஞ் செய்தும் அவன் பகவானருளால் இறந்திலனாக, ஒருநாள் ஸாயங்காலத்தில் அவ்விரணியன் மகனைநோக்கி 'நீ சொல்லும் நாராயணனென்பான் எங்கு உளன்? காட்டு' என்ன, 'தூணிலுமுளன், துரும்பிலுமுளன், எங்குமுளன்' என்று அவன் உறுதியாய்ச் சொல்ல, உடனே இரணியன் 'இங்கு உளனோ?' என்று சொல்லி எதிரில் நின்ற தூணைப் புடைக்க, அதிலிருந்து திருமால் உடனே மனிதரூபமும் சிங்கவடிவமுங் கலந்த நரசிங்கமூர்த்தியாய்த் தோன்றி இரணியனைப் பிடித்து வாயிற்படியில் தன் மடிமீது வைத்துக்கொண்டு தனது திருக்கைநகங்களால் அவன்மார்பைப்பிளந்து அழித்திட்டானென்ற வரலாறு உலகப்பிரசித்தம்

ப்ரஹ்மஸ்ருஷ்டிக்கு உட்பட்ட எந்தப் பிராணியினாலும் சாகாதபடியாக இரணியன் பிரம ருத்திராதிகளிடத்துப் பெற்ற பெருவரம் பழுதுபடாமைக்காக நரங்கலந்த சிங்கமாய்த் தன்னைத் தானே தோற்றுவித்துக்கொண்டு தோன்றினனென்பது தோன்ற "அரியும் மானிடமும் உடனாய் ஒன்றுவித்துத் தோன்ற' எனப்பட்டது.

பட்டர் ஸ்ரீரங்கராஜஸ்தவ உத்தர சதகத்தில் நரஸிம்ஹாவதாரத்தை அநுபவித்துப் பேசுமிடத்து "ஸிதாக்ஷீரந்யாயேந ஸம்ஹிதாஜுகம்—ஸிதாக்ஷீரந்யாயேந ஸங்கமிதாங்ககம்" என்கிறார்; சர்க்கரையும் பாலுங் கலந்தாற்போலே நரவுருவும் சிங்கவுருவும் பொருந்திற்றென்றார்; அது இப்பாசுரத்தின் முதலடியை அநுஸந்தித்துப் போலும்; "உடனாய் ஒன்றுவித்து" என்றதற்கு அது மிகப் பாங்கு.

வளைந்த சீற்றம் விண்வேதும்ப="ஈச்வரன் அவதரித்துப் பண்ணின ஆனைத் தொழில்களெல்லாம் பாகவதாபசாரம் பொறாமை யென்று ஜீயரருளிச் செய்வர்" என்று ஸ்ரீவசநபூஷணத்திற் பாசுரம். அதாவது—ஸங்கல்பமாத்திரத்தாலே எல்லாவற்றையும் நிர்வஹிக்கவல்ல ஸர்வ சக்தியான ஸர்வேச்வரன் தன்னை யழியமாறி இதர ஸஜாதீயனா யவதரித்துக் கைதொடனாய் நின்று செய்த ஹிரண்ய ராவணாதி நிரஸநரூபமான அதிமாநுஷ க்ருத்யங்களெல்லாம் ப்ரஹ்லாதன் மஹர்ஷிகள் முதலான பாகவதர் திறத்தில் அவ்வவர் பண்ணின அபசாரம் ஸஹியாமையாலேயே என்று நஞ்சீய ரருளிச்செய்வராம். எம்பெருமான் தன்னளவிலே நிரக்கழிய அபராதப் படுமவர்களைப் பற்றி ஒன்றும் கணிசியான்; அடியார் திறத்தில் ஸ்வல்ப அபராதம் பண்ணுவானுண்டாகிலும் அவனை அப்போதே தலையறுத்துப் போகடுவானென்பது இதிஹாஸ புராணப்ரஸித்தம். [க்வசி கிஞ்சிதாவஜ்ஞை கிங்கார்யம் ஸீதயா ஓ?—த்வயி கிஞ்சித் ஸமாபந்நே கிம் கார்யம் ஸீதயா மம.] இராமபிரான் எழுந்தருளி நிற்கச்செய்தே இராவணன் கோபுர சிகரத்திலே வந்து தோன்றினவாறே 'ராஜத்ரோஹியான இப்பயல் பெருமாள் திருமுன்பே நிற்கையாவதென்?' என்று ஸுக்ரீவமஹாராஜர்

அவன் மேலே பாய்ந்து வென்று வந்தபோது அவரை நோக்கி இராமபிரான் இங்ஙனே அருளிச்செய்கிறார்;—'நீர் மஹாராஜரான தமம் குலைய [உம்மைத் திரஸ்கரித்து] அந்த ராக்ஷஸப் பயல் ஒரு தீங்கு செய்யாதிருந்தானாகில் நீர் பரிபவப்பட்ட பிறகு ஸீதைதானும் எனக்கு எதுக்கு?' என்றார். ஆச்ரிதர் விஷயத்தில் எம்பெருமானுடைய பக்ஷபாதம் இப்படியன்றோ இருப்பது தன் உயிர் நிலையான பாகவதர்களுக்கு ஒரு தீங்கு நேர்ந்தால், தனக்குத் தீங்கு நேரும் போது பிறக்கும் சீற்றம் அற்பமென்னும்படி சீற்றம் பெருகிச் செல்லும். தான் ஸமுத்ரராஜனைச் சரணம் புகச்செய்தேயும் அவன் முகங்காட்டிற்றிலனாக "கோபமாஹாரயத் தீவ்ரம்" என்னும்படி சீற்றத்தை வரவழைத்துக் கொண்டார் பெருமாள்; பின்பு இராவணனாலே அநுமான் நோவுபட்டபோது "ததோ ராமோ மஹாதேஜா: ராவணேந க்ருதவ்ரணம்—த்ருஷ்ட்வா ப்லவக சார்தூலம் கோபஸ்ய வசமேயிவாந்" என்னும்படி கோபமிட்ட வழக்கானார். இங்ஙனேயிறே பாகவத விஷயத்திலே எம்பெருமானுக்குள்ள பரிவின் மிகுதியிருப்பது. இரணியன் எம்பெருமான் திறத்திலே நேராக அபசாரப்பட்டுத் திரிந்த நாள்கள் எண்ணிறந்தவையுண்டு; அக்காட்களிலே எம்பெருமானுடைய திருவுள்ளம் அவ்வரக்கனளவிலே சீற்றங்கொள்ளவில்லை; பள்ளியிலோதிவந்த தன் சிறுவன் வாயிலோ ராயிரநாமம் ஒள்ளியவாகிப்போத ஆங்கதனுக்கு ஒன்றுமோர் பொறுப்பிலனாகிப் பிள்ளையைச் சீறி வெகுண்டு நலிந்தானென்று அறிந்தவாறே 'நம்மளவிலே எத்தனை தீம்பனாயிருந்தாலும் பொறுத்திருப்போம்: நம்முடையனை சிறுக்கனை நலிந்த பின்பும் பொறுத்திருக்கவோ' என்று ஆறியிருக்கமாட்டாதே அப்போதே வந்த தோன்றிப் புடைத்தானாயிற்று. ஆகவே, 'தனக்குப் பகைவன்' என்கிற காரணத்தினாலுண்டாகும் சீற்றத்திற் காட்டிலும் 'தன்னடியார்க்குப் பகைவன்' என்கிற காரணத்தினாலுண்டாகும் சீற்றம் வாசாமகோசரமாதலால் 'விளைந்த சீற்றம் விண்வேதும்ப' எனப்பட்டது. அப்போதுண்டான சீற்றத்தைக் கண்டு தேவஜாதியடங்கலும் 'இது எவ்வளவாய் முடியப் புகுகிறதோ!, என்ன ப்ரளயம் நேரிடப் புகுகிறதோ!' என்று அஞ்சிற்றுப் போலும்.

சேந்நெற்குலை தடிந்து களஞ்செய் புறவிற் கண்ணபுரத்து='களம்' என்பதற்கு உள்ள பல பொருள்களில் 'இருள்' என்னும் பொருள் இங்குக் கொள்ளப்பட்டது.

நெற்கதிர்கள் செழிப்பாக முற்றி எங்கும் இருண்டுகிடக்கின்றபடி. இனி, 'களம்' என்பதற்கு நெற்களம் என்றே பொருள் கொள்ளவுமாம். நெற்களத்தின் செய்கைஎங்கும் என்றும் மாறாதிருக்கும்படியைக் கூறினவாறு .... (௪)

தொழுநீர்வடிவிற் குறளுருவாய் வந்துதோன்றி * மாவலிபால்
முழுநீர்வையம் முன்கொண்ட மூவாவுருவி னம்மானை *
உழுநீர் வயலுட் பொன்கிளைப்ப வொருபால் முல்லைமுகையோடும் *
கழுநீர்மலரும் கண்ணபுரத்து அடியேன் கண்டு கொண்டேனே. (௫)

தொழும் நீர்	கண்டவாறே வணங்க வேண்டும்படியான நீர்மையையுடைய
வடிவின்	வடிவு கொண்ட
குறள் உரு ஆய்	வாமன ரூபியாய்
வந்து தோன்றி	அவதரித்து
மாவலிபால்	மஹாபலியினிடத்தில்
முன்	முன்பொருகால்
மூழுநீர் வையம்	கடல் சூழ்ந்த வுலகத்தை
கொண்ட	இரந்து பெற்ற
மூவா உருவின்	விகாரமற்ற ரூபத்தை யுடையவனை
அம்மானை	ஸர்வேச்வரனை,
உழு நீர்	(எப்போதும்) உழுவதையே இயல்வாகவுடைய
வயலுள்	வயல்களிலே
பொன் கிளைப்ப	பொன் விளையப் பெற்றதும்
ஒருபால்	வேறு சில இடங்களில்
முல்லை	முல்லைமலர்களும்
முளைகையோடும்	கருமுகைமலர்களும்
கழுநீர்	செங்கழுநீர்ப்பூக்களும்
மலரும்	மலரப் பெற்றதுமான
கண்ணபுரத்து	திருக்கண்ணபுரத்திலே
அடியேன் கண்டு கொண்டேன் —	

* * * — வாமனமூர்த்தியாய் தோன்றி த்ரிவிக்ரமமூர்த்தியாகி மூவுலகளந்த பெருமானைத் திருக்கண்ணபுரத்திலே காணப்பெற்றேனென்கிறார்.

தொழுநீர்வடிவிற் குறளுருவாய் = கண்டாரடங்கலும் தொழும்படியாவதையே இயற்கையாவுடையதாம் எம்பெருமானுடைய திருவுருவம்; வாமனமூர்த்தியைப் பற்றிச் சொல்லவும் வேணுமோ? கண்ணபிரான் தூர்யோதன ஸபைக்குத் தூது நடந்தபோது அங்குள்ள அரசர்கள் தங்களுக்கு இயற்கையாகவுள்ள ஆஸுரத்தன்மையினால் கண்ணபிரானுக்கு மரியாதை செய்யக்கூடாதென்று கெட்ட எண்ணங்கொண்டு 'இப்போது க்ருஷ்ணன் இங்கே வரப்போகிறான்; அவன் வந்தவாறே அவனைக்கண்டு எழுந்திருக்கவாவது, கைகூப்பவாவது, தலை வணங்கவாவது கூடாது; ஒருவரும் ஒருவகையான உபசாரமும் செய்யவேகூடாது; இடித்த புளிபோல் ஆடாது அசையாது உட்கார்ந்தபடியே யிருக்கக்கடவோம்' என்றெல்லாருமாக ஸங்கேதம் செய்துகொண்டிருந்தும், $ "[illegible] தஸ்ய மநோஹரே [illegible] வபுஷி மக்நமநா முநிமண்டலீ—ஜபமமுஞ்சத ஹோமமமுஞ்சத வ்ரதமமுஞ்சத வேதமமுஞ்சத." என்னும்படியான திவ்யரூபத்துடனே கண்ணபிரான் ஸபையில் எழுந்தருளினவாறே அவர்களெல்லாரும் தங்களுடைய ஸங்கேதத்தை அடியோடே மறந்து பரவசமாகவே ஆஸனத்தை விட்டெழுந்து மரியாதை செய்ததாக "[illegible]" ஆதிவேதரா-யாதர்ஹம் கேசவே

$ கண்ணபிரானுடைய நீலமணிநிறத்ததான திவ்ய மங்கள விக்ரஹத்திலே ஆழ்ந்துபோன மஹர்ஷிகளின் திரளானது நியமத்துடனே ஜபஞ் செய்வதையும் ஹோமஞ் செய்வதையும் மற்றும் விரதங்களனுட்டிப்பதையும் வேத மோதுதலையும் பரவசமாகவே விட்டிட்டது என்பதாம்.

வ்ருத்திம் அவசா: ப்ரதிபேதிரே" என்கிற மஹாபாரதமும் "சுழல்மன்னர் சூழக் கதிர்போல் விளங்கி, எழுவுற்று மீண்டேயிருந்துன்னை நோக்கும், சுழலைபெரி துடைத் துச்சோதனன்" என்கிற பெரியாழ்வார் திருமொழியும் வெளியிடு கின்றன. ஆகையாலே எம்பெருமானது திவ்ய ரூபத்தைக் கண்டவாறே பரவசமாகவே தொழ நேர்ந்து விடுமென்பது தோன்றத் 'தொழுநீர் வடிவின்' என அடைமொழி கொடுக்கப்பட்டது. 'தொழுநீர்' என்பதில் நீர்மை யென்னும் பண்பு ஈறு போயிற்று; வணங்கப்படுந்தன்மையையுடைய வடிவுபடைத் தவனென்றவாறு.

மாவலிபால் முழுநீர்வையங் கொண்ட = மஹாபலி தாரை வார்த்துத் தத்தம் செய்தது மிகச் சிறிய அளவுடையதான மூவடி நிலமேயாகிலும் எம்பெருமானுடைய திருவுள்ளத்தால் அந்த மூவடி நிலமும் மூன்று லோகமாதலாலும் மேற் காரியமும் அங்ஙனே ஆயிற்றாதலாலும் மாவலிபால் முழுநீர்வையங் கொண்டதாகக் கூறக் குறையில்லை யென்க.

மூவாவுருவினம்மானை = இரவும் பகலும் லோகரக்ஷணமே செய்யா நிற்கச் செய்தேயும் ஒன்றுஞ் செய்யாதானைப் போன்று இன்னமும் இளகிவரும் உருவத்தையுடையவன்; ஜகத்ரக்ஷண குதூஹலத்தில் கிழத்தனமடையாதே இப் ஜோக்கிப் பிராயம் புகுமவன் என்க.

திருக்கண்ணபுரத்தின் வயல்வளமும் தோட்டவளமும் பின்னடிகளிற் சொல்லப்படுகின்றன. வயலுள் பொன் விளைவதாகச் சொன்னது உபசாரம்; "இராமழை பெய்த விரவிரத்தாள், பனைநுகங்கொண்டு யானையேர் பூட்டி, வெள்ளி விதைத்துப் பொன்னே விளையினும், வேண்டேன் பிறந்தகத் தீண்டிய வாழ்வே" என்றதிற்போல. பொன்போன்ற நெற்களின் விளைவைச் சொன்னவாறு. .... (௫)

வடிவாய் மழுவே படையாக வந்துதோன்றி மூவெழுகால் *
படியாரரசு களைகட்ட பாழியானை யம்மானை *
குடியா வண்டு கொண்டுண்ணக் கோலநீலம் மட்டுகுக்கும் *
கடியார் புறவிற் கண்ணபுரத்து அடியேன் கண்டு கொண்டேனே. (௬)

வடி வாய்	கூர்மை பொருந்திய வாயையுடைய	அரசு	க்ஷத்ரியர்களாகிற
மழுவே	கோடாலியையே	களை	விரோதிகளை
படை ஆக	ஆயுதமாகக் கொண்டு	கட்ட	தொலைத்த
வந்து தோன்றி	(பரசுராமனாய்த்) திருவவதரித்து	பாழியானை	மிடுக்குடையவனான
மூ எழுகால்	இருபத்தொரு தலைமுறையளவும்	அம்மானை	எம்பெருமானை,—
படி	பூமியில்	வண்டு	வண்டுகளானவை
ஆர்	நிறைந்திருக்கிற	குடி ஆ	குடும்பமாக
		கொண்டு உண்ண	(மதுவை) எடுத்துப் பருகும்படியாக

கோலம் நீலம்	அழகிய நீலோற்பல மலர்கள்	கடி ஆர் புறவின்	பரிமளம் மிக்க சுற்றுப் பிரதேசங்களையுடைய
மட்டு	மதுவை	கண்ணபுரத்து	திருக்கண்ணபுரத்தில்
உகுக்கும்	பெருகச்செய்யப் பெற்ற		அடியேன் கண்டுகொண்டேன்—.

* * *—பரசுராமாவதாரம் செய்தருளின பெருமானைத் திருக்கண்ணபுரத்திலே காணப்பெற்றேனென்கிறார்.

உலகில் தண்டிப்பாரொருவருமில்லாமையால் கொழுத்துத் திரிந்து கொடுமை இயற்றிவந்த க்ஷத்திரிய வம்சங்கள் பலவற்றை அழிக்கும் பொருட்டு ஸ்ரீமந்நாராயண மூர்த்தி ஜமதக்நி முனிவரது மனைவியான இரேணுகையிடம் இராமனைத் திருவவதரித்துப் பரசு என்னுங் கோடாலிப்படையை ஆயுதமாகக் கொண்டு அதனாற் பரசுராமனென வழங்கப்பட்டு வருகையில், ஒரு நாள் கார்த்தவீர்யார்ஜுநனும் அவனது குமாரர்களும் ஜமதக்நியின் ஆச்ரமத்தில் இளைப்பாறப் புகுந்த காலத்தில், அங்கே அம்முனிவனது ஹோம தேநுவானது வேண்டின வஸ்துக்களையெல்லாம் யதேஷ்டமாக அளித்துக் கொண்டிருப்பதைக்கண்ட இவர்கள் அப்பசுவைக் கைக்கொள்ள விரும்பி ‘இந்தப்பசுவை எனக்குக் கொடுக்க வேணும்’ என்று ஜமதக்நியைக் கார்த்தவீரியன் கேட்க, அதற்கு மஹர்ஷி ‘அது என்வசமன்று; ரிஷிகளின் உபயோகத்திற்காக இதனைத்தேவர்கள் அனுப்பி வைத்திருக்கிறார்கள்’ என்று சொல்ல, அது கேட்ட கார்த்தவீரியன் தன்னை வெல்வாரில்லை யென்னுஞ் செருக்குடைமையாலே அக்காமதேநுவைப் பலாத்காரமாகப் பிடித்திழுத்துக் கொண்டு தன் நகர்க்குச் சென்றான். வனத்திற்குச் சென்றிருந்து மீண்டு வந்த பரசுராமன் ஆச்ரமத்தில் பசுவைக் காணாமல், கார்த்தவீரியன் வலியக் கவர்ந்து கொண்டு போனதாகத் தந்தை சொல்லக் கேட்டுக் கடுங்கோபங் கொண்டு அவனிருக்கும் மாஹிஷ்மதி நகரத்திற்குச் சென்று அங்குள்ள த்வாரபாலர்களை விளித்து ‘உங்களரசன் எங்கள் பசுவைக் கொடுத்துப் பிழைத்துய்ய நினைக்கிறானா? அன்றி என்னுடன் போர் செய்து முடிய நினைக்கிறானா? கேட்டு வாருங்கள்’ என்று சொல்ல, அவர்கள் சென்று கார்த்தவீரியனுக்கறிவிக்க, அவன் “பரசுராமனுடன் நாம் எதிர்த்தால் நமக்கு ப்ரஹ்மஹத்யை வரும்; காமதேநுவைக் கொடுத்து விட்டால் இவனொரு பார்ப்பானுக்கு எதிர்நிற்கமாட்டாத அஸமர்த்தன் என்று உலகர் சிரிப்பர்; இதற்கென் செய்வோம்” என்று ஆலோசித்து, தனக்குக் கீழ்ப்பட்ட அரசர்களைப் பரசுராமனுடன் போர்புரிய அனுப்ப, பரசுராமன் அவர்களைக் கொன்று வென்றிட்டனன். அவ்வரசர் மாண்டு போனதைக் கேட்கவுற்ற கார்த்தவீரியன் தானே எதிர்த்து வந்தான். அவனைப்பரசுராமன் தனது கோடாலிப் படையினால் ஆயிரம் கைகளையும் வெட்டிக் கொன்றுவிட்டுத் தன் தேநுவைத் தன் ஆச்ரமத்திற்குக் கொண்டு சேர்த்தார். கார்த்தவீரியனது புதல்வர் ‘பரசுராமன் நம் தந்தையைக் கொன்றிட்டானாதலின் நாம் அவனது தந்தையைக் கொன்றிடல் வேண்டும்’ என்றெண்ணிப் பரசுராமன் வனஞ் சென்றிருந்த வேளை பார்த்து

அவரது ஆச்ரமத்திற்கு வந்து ஜமதக்நியைக் கொன்று விட்டனர். பரசுராமன் ஆச்ரமத்திற்கு மீண்டுவந்ததும் செய்தியறிந்து அதனால் க்ஷத்திரிய வம்சம் முழுவதன் மேலும் கோபாவேசங் கொண்டு உலகத்திலுள்ள அரசர்கள் பலரை யும் இருபத்தொரு தலைமுறை பொருது ஒழித்திட்டான்.

இப்பரசுராமன் ஏழுசிரஞ்சீவிகளில் ஒருவன்; இவனது வலிமையும் வெற்றியும் அற்புதமானது. சிவபிரானது கைலாஸகிரியைப் பெயர்த்தெடுத்த இராவணன் மிகவலியவனென்றும், அவனிலும் கார்த்தவீரியன் வலியவனென்றும், அவனிலும் பரசுராமன் வலியவனென்றும் இதிஹாஸங்களால் விளங்கும். சிவனே விஷத்தையுண்டு கங்கையைத் தரித்து மேருவில்வளைத்துத் திரிபுரமெரித்து மன்மதனை நீறுபடுத்தி யமனையுதைத்து ஸம்ஹாரத் தொழில் நடத்தும் பேராற்றலையுடைய உக்ர மூர்த்தியாவான். அக்கடவுள் வீற்றிருக்கின்ற கைலாஸ கிரியை இராவணன் ஒருகால் வேரோடு பெயர்த்தனன். அங்ஙனம் மிகவலியவனைத் திக்விஜயஞ் செய்து திக்கஜங்களையும் வென்ற இராவணனைக் கார்த்தவீரியன் கட்டிச் சிறையிலிட்டனன்; அன்னவனைப் பரசுராமபிரான் தோள் துணித்துத் தொலைத்திட்டன னென்றால் இவனது ஆற்றல் பேச்சுக்கு நிலமன்றே.

இப்படிப்பட்ட பரசுராமன் ஏழாமவதாரமான தசரதராமன் மீது கோபித்தலும் இவ்விருவரும் ஒருவரோடொருவர் போர் செய்தலும், ஒருவர் மற்றொருவரை வெல்லுதலும் பொருந்துமோ வெனின்; துஷ்டர்களாய்க் கொழுத்துத் திரிந்த அரசர்களைக் கொல்லும் பொருட்டுப் பரசுராமனிடத்தில் ஆவேசித்திருந்த விஷ்ணுசக்திவிசேஷம் அக்காரியம் முடிந்த பின்பு அவ்விஷ்ணுவின் அம்சாவதாரமான தசரதராமனால் கவர்ந்து கொள்ளப்பட்டதாகையால் பொருந்துமென்க. இதனால் ஆவேசாவதாரத்திற் காட்டிலும் அம்சாவதாரத்திற்கு உள்ள ஏற்றம் விளங்கும்.

ஸ்ரீமந்நாராயணனது விபவாவதாரங்கள் அளவற்றவை; அவை முக்கியம் அமுக்கியம் என இருவகைப்படும். இவற்றில் முன்னினது சிறந்தது. பின்னினது அதனிலும் தாழ்ந்தது. முக்கியமாவது ஸாக்ஷாதவதாரம். அமுக்கியமாவது ஆவேசாவதாரம். ஆவேசம் ஸ்வரூபாவேச மென்றும் சக்தியாவேச மென்றும் இருவகையதாம். ஸ்வரூபாவேசமாவது—சேதநருடைய சரீரங்களில் எம்பெருமான் தன்னுடைய ரூபத்துடன் ஆவேசித்து நிற்பது. பரசுராமன் பலராமன் போல்வார் இத்திறத்தார்கள். சக்தியாவேசமாவது — சேதனர்பக்கல் காரிய காலத்தில் எம்பெருமான் சக்திமாத்திரத்தால் தோன்றி விளங்குதல். கார்த்தவீரியார்ஜுநன், அர்ஜுநன், வியாஸர்போல்வார் இத்திறத்தார். இவற்றில் சக்தியாவேசத்தைவிட ஸ்வரூபாவேசம் ப்ரபலம். இவற்றின் உண்மை நிலையை விஷ்வக்ஸேநஸம்ஹிதைமுதலிய ஸ்ரீபாஞ்சராத்ரஸம்ஹிதைகளிலும் தத்வத்ரயத்திலும் அதன் வியாக்யானத்திலும் பரக்கக் காணலாம். பரசுராமாவதாரம் ஸ்வரூபாவேசாவதாரம்.

முமுக்ஷுக்களுக்குப் பரசுராமாவதாரம் உபாஸனைக்கு உரியதன்றாகிலும் விரோதிகளைக் களைந்தொழித்த உபகாரத்துக்குத் தோற்றுத் துதிப்பது மாத்திரமுண்டு; இதில் பாதகமொன்றுமில்லை. "கோக்குலமன்னரை மூவெழுகால் ஒரு கூர்மழுவால் போக்கிய தேவனைப்போற்றும் புனிதன்" என்ற இராமாநுசநூற்றந்தாதிப் பாசுரத்தின் வியாக்யானமும் காண்க.

க்ஷேத்ரத்தின் போக்யதை பின்னடிகளிற் கூறப்பட்டது. மூன்றாமடிக்கு இருவகையாகப் பொருள்கூறலாம்; வண்டுகள் உண்ணுமாறு மலர்கள் மதுவைப் பெருக்குகின்றனவாக உரைத்தல் ஒன்று. வண்டுகள் மதுவை யதேஷ்டமாக உண்டபின்னும் மலர்கள் மதுவை மேன்மேலும் பெருக்ிக்கொண்டேயிருக்கின்றனவாக உரைத்தல் மற்றொன்று. இரண்டாவது நிர்வாஹமே பெரியவாச்சான் பிள்ளை திருவுள்ளம்பற்றியது. "கடலிலே ஒரு சிறங்கையைப் புஜிக்குங் காட்டில் கடல்வற்றுமதிறே" என்ற ஸ்ரீஸூக்திகாண்க. .... (௬)

வையமெல்லா முடன்வணங்க வணங்காமன்னனாய்த் தோன்றி *
வெய்யசீற்றக் கடியிலங்கை குடிகொண்டோட வெஞ்சமத்து *
செய்தவெம்போர் நம்பரனைச் செழுந்தண் கானல் மணநாறும் *
கைதைவேலிக் கண்ணபுரத்து அடியேன் கண்டு கொண்டேனே. (௭)

வையம் எல்லாம்	உலகமெல்லாம்
உடன் வணங்க	ஒருமைப்பட்டு திருவடிகளில் விழுந்துவணங்க
வணங்கா	தான் ஒருவரையும் வணங்க வேண்டும்படியிராத
மன்னன் ஆய்	ராஜாதிராஜனாய் [இராமபிரானாய்]
தோன்றி	திருவவதரித்து,
வெய்ய சீற்றம்	கடுமையான சீற்றத்தை யுடையதும்
கடி	அரண்களை யுடையதுமான
இலங்கை	இலங்காபுரியிலுள்ளவர்கள்
குடிகொண்டு ஓட	குடும்பத்தோடும் (யமலோகத்திற்கு) ஓடிச் செல்லும்படியாக
வெம் சமத்து	வெவ்விய போர்க்களத்தில்
வெம் போர் செய்த	கடுமையான யுத்தத்தை நடத்தின
நம் பரனை	எம்பெருமானை,—
செழு	அழகிய
தண்	குளிர்ந்த
கானல்	நெய்தல்நிலத்தை யுடையதும்
மணம் நாறும் கைதை	பரிமளம்மிக்க தாழைகளை
வேலி	வேலியாகவுடையதுமான
கண்ணபுரத்து	திருக்கண்ணபுரத்திலே
	அடியேன் கண்டுகொண்டேன்—.

* * *—ஸ்ரீதசரதராமனாய்த் தோன்றின பெருமானைத் திருக்கண்ணபுரத்திலே ஸேவிக்கப்பெற்றேனென்கிறார்.

அநுகூலர்களோடு ப்ரதிகூலர்களோடு வாசியற எல்லாரும் இராமபிரானை வணங்கும்படியிருக்குமேயன்றி, அப்பெருமான் வணங்குதற்குரிய பிறரொருவர் இலராதலால் "வையமெல்லா முடன்வணங்க வணங்கா மன்னனாய்த்

தோன்றி" எனப்பட்டது. இவ்வவதாரத்தில் "ஸ்யா ஹஜெஜ்யஉவெஷ்யவம் நந ஓஉயம்.தா கஷஹ்யிஜ—த்விதா பஜ்யேயமப்யேவம் ந நமேயம் து கஸ்யசித்" [இருபிளவாகப் பிளந்து இருபக்கங்களிலும் இருதுண்டமாக விழுந்தாலும் விழுவனேயன்றி ஒருவர்காலில் தலைசாய விழமாட்டேன்] என்று வணங்காமுடி யன்னாய் இருமாந்திருந்தவன் இராவணனொருவனே போலும். அவனைக்குடும் பத்தோடு களைந்தொழித்தமை இரண்டாமடிகளிற் கூறப்பட்டது.

கைதை—'கேதகீ' என்னும் வடசொல்லின் சிதைவு. .... (எ)

ஒற்றைக்குழையும் நாஞ்சிலு மொருபால் தோன்றத் தான் தோன்றி *
வெற்றித்தொழிலார் வேல்வேந்தர் விண்பாற் செல்ல வெஞ்சமத்து *
செற்ற கொற்றத் தொழிலானைச் செந்தீ மூன்று மில்லிருப்ப *
கற்றமறையோர் கண்ணபுரத்து அடியேன் கண்டு கொண்டேனே. (அ)

ஒற்றை குழையும்	ஒருகாதில்தொங்குகிற திருக்குண்டலமும்
ஒருபால்	ஒருபக்கத்தில்
நாஞ்சிலும்	கலப்பையும்
தோன்ற	விளங்க
தான் தோன்றி	(பலராமனாய்த்) திருவவதரித்து,
வெற்றி தொழிலார்	ஜயம்பெறுவதையே இயல்வாகவுடையரும்
வேல்	வேற்படையையுடையரு மான
வேந்தர்	அரசர்கள்
விண் பால் செல்ல	வீரஸ்வர்க்கத்திற்குச் சென்று சேரும்படி
வெம் சமத்து	வெவ்விய போர்க்களத்தில்
செற்ற	(அவ்வரசர்களை) அழியச் செய்ததனாலுண்டான
கொற்றம்	வெற்றியை
தொழிலானை	தொழிலாகவுடைய பெருமானை,—
செம் தீ மூன்றும்	த்ரேதாக்நிகளெனப்படுகிற மூன்று அக்நிகளும்
இல்	திருமாளிகை தோறும்
இருப்ப	ஜ்வலித்துக் கொண்டிருக்கப் பெற்றதும்
கற்ற மறையோர்	கலைகளைக் கற்ற வைதிகர்களுடையதுமான
கண்ணபுரத்து	திருக்கண்ணபுரத்தில்
	அடியேன் கண்டுகொண்டேன்—.

* * *—நம்பிமூத்தபிரானாய்த் திருவவதரித்த பெருமானைத் திருகண்ண புரத்திலே ஸேவிக்கப்பெற்றேனென்கிறார்.

ஸ்ரீராமாவதாரத்தில் ஆதிசேஷனது அம்சமாய்த் தோன்றிய லக்ஷ்மணன் தனக்குச் செய்த அரிய பெரிய பணிவிடைக்கு உவந்து பகவானாகிய ஸ்ரீமந் நாராயணன் அவ்வாதிசேஷனை நோக்கி 'மற்றோரவதாரத்தில் உமக்கு நான் தம்பியாய்ப் பிறந்து உம்மைப் பூஜிக்கக்கடவேன்' என்று வரமளித்திருந்தார். அவ்வவதாரங்கழிந்த வெகுநாளைக்குப் பின்னர் த்வாபரயுகத்தில், இப்பூமியில் முன் ராமாவதாரத்தில் ராமபாணங்களால் அடிபட்டு மரணமடைந்த அரக்கர்கள் க்ஷத்ரியஜாதியிற் பிறந்து ஜனங்களை நலிந்துகொண்டிருக்கையில், பகவான் மீண் டும் அவதரித்து முன்போலவே அவர்களையழிக்கக்கருதி ஆதிசேஷனை நோக்கி 'எனக்குமுன் நீர்போய் வஸுதேவர்க்குப் பிள்ளையாகப் பிறக்கவேணும்' என்ன,

ஆதிசேஷனும் அப்படியே வடமதுரையில் வஸிக்கும் வஸுதேவரென்கிற யது
வம்சத்து க்ஷத்ரியனுடைய மனைவியாகிய தேவகியின் கருவில் புகுந்தார். பின்பு
பகவான் தன்னுடைய யோகமாயையை யழைத்து 'நம்முடைய ஆதிசேஷன்
தேவகியின் கருவிற் புகுந்திருக்கிறார், நீ போய் அந்தக் கருப்பிண்டத்தை அப்
படியே யெடுத்து வஸுதேவருடைய முதல்மனைவியும் நந்தகோபருடைய
கோகுலத்தில் வஸிப்பவளுமான ரோஹிணியின் கர்ப்பத்தில் வைத்திடு' என்று
கட்டளையிட, அப்படியே தேவகியின் ஆறுமாதத்துக் கருப்பிண்டத்தை யோக
மாயை பெயர்த்தெடுத்துக் கொண்டுபோய் ரோஹிணியின் வயிற்றிற் சேர்த்து
விட, சரத்காலத்துத் திங்கள் போன்ற வடிவையுடையராய்ப் பலராமன் அவ
தரித்தார். பிறகு, ஒருத்திமகனாய்ப் பிறந்து ஓரிரவிலொருத்தி மகனாய் ஒளித்து
வளரும் கண்ணபிரானிடத்தில் மிகவும் விருப்பமுற்றவராய் அப்பெருமானுக்கு
ஒருவகைத் தீங்கும் நேரிடாதபடி பாதுகாவலாக இருந்துகொண்டு இணைபிரியாது
வாழ்ந்துவந்தார். இவர்க்கு நம்பிமூத்தபிரான் என்பது ஸம்ப்ரதாயத் திருநாமம்.
இவர்க்குக் கலப்பை ஆயுதம். அதனால் இவர்க்கு 'ஹலீ' என்றும் 'ஹலாயுதன்'
என்றும் திருநாமங்கள் வழங்கும். ஒருகாலத்தில் பலராமர், பக்கத்தில் ஓடு
கின்ற யமுநாநதியை நோக்கி 'ஓ யமுனாய்! நீ இங்கேவா; நான் நீராடவேண்டும்'
என்றழைக்க, அவ்யமுனை அவர் மதுபானமயக்கத்தினால் இப்படிச் சொல்லு.
கின்றாரென்று அவரது வார்த்தையை அவமதித்து அங்கே வாராதொழிய, அது
கண்டு அவர் வெகுண்டு தமது கலப்பையைக் கையிலெடுத்து அதன் நுனியாலே
அந்நதியை இழுக்க, அந்நதி தான்போகும்வழியை விட்டு அவரெழுந்தருளி
யிருக்கும் வனத்தில் வந்து பெருகியதன்றியும், தன்னுடைய சரீரத்தோடு
அவர்க்கெதிரில் வந்து பயத்தினாலே மிகவும் நடுநடுங்கி விசேஷமாக வேண்டிக்
கொள்ள, பின்பு அந்நதியை க்ஷமித்து அதில் நீராடின ரென்றும்,—ஒருகால்
ஹஸ்திநாபட்டணத்தில் துரியோதனன் தன்மகளான லக்ஷணைக்கு ஸ்வயம்வரம்
கோடிக்க, அக்கன்னிகையை ஸ்ரீக்ருஷ்ணனது மஹிஷிகளுள் ஒருத்தியாகிய
ஜாம்பவதியின் குமாரனான ஸாம்ப னென்பவன் பலாத்காரத்தால் தூக்கிக்
கொண்டுபோக, துரியோதனாதியர் எதிர்த்து யுத்தஞ்செய்து அவனைப் பிடித்துக்
காவலிலிட்டுவைக்க, அச்செய்திகேட்ட பலராமன், தான் அவனை விடுவித்து
வருவதாய்ச் சொல்லிப்புறப்பட்டு அஸ்திநாபுரத்திற் கெழுந்தருளி 'நம்முடைய
ஸாம்பனை விடவேண்டும்' என்றருளிச் செய்ய, அக் கௌரவர்யாவரும் 'துஷ்ட
காரியஞ்செய்த அவனை நாங்கள் விடமாட்டோம்' என்று ஒரேகட்டுப்பாடுடைய
வர்களாய் இகழ்ந்துபேச, பலராமர் அளவுகடந்த கோபங்கொண்டு எழுந்திருந்து
'குருகுலத்தார் வாஸஞ்செய்து கொண்டிருக்கின்ற இந்நகரத்தைக் கங்கையிற்
கவிழ்த்துவிட்டுப் பூமியிற் கௌரவப்பூண்டில்லாமற் செய்துவிடுகிறேன், பாருங்
கள்' என்று சொல்லித் தமது கலப்பையை மதிலின்மேலுள்ள நாஞ்சிலென்னும்
உறுப்பில் மாட்டியிழுக்க, அதனால் அப்பட்டணமுழுவதும் அசைந்து சாயவே,
அது கண்ட கௌரவரெல்லாரும் மனங்கலங்கி வணங்கிவேண்ட, நம்பி மூத்த

பிரான் அவ்வளவோடு கலப்பையை வாங்கியருளினன் என்றுமுள்ள பலகதைகளினால் இவரது கலப்பையின் ஆற்றல் அறியத்தக்கது.

“ஒற்றைக்குழையும்—ஒருகாதுக்குழையும்” என்பது பெரியவாச்சான்பிள்ளை வியாக்யானம். இதற்கு அரும்பதவுரைகாரர்—“ஒருகாது என்றது கலப்பையை ஒரு தோளிற் சுற்றிக்கொண்டு புறப்படுகையாலே ஒருகாதுக் குழையே புறம்புள்ளார்க்குத் தோற்றுமென்னுங் கருத்தாலே என்று கொள்வது” என்றுரைத்துள்ளார். மற்றும் பிரமாணத்திற்குப் பொருந்திய நிர்வாஹமுண்டேல் கண்டு கொள்வது.

கண்ணபிரானால் பல வேல்வேந்தர்கள் அமர்க்களத்தில் வீரஸ்வர்க்கத்திற்குச் செலுத்தப்பட்டபோது அதற்குப் பலராமன் துணையாயிருந்தது பற்றியும், கம்ஸனுடைய தம்பியாகிய ஸுநாமா முதலிய பலமன்னர்களைத் தானே கொன்றிட்டதுபற்றியும் “வெற்றித் தொழிலார் வேல்வேந்தர் விண்பாற் செல்ல வெஞ்சமத்துச் செற்ற கொற்றத்தொழிலானை” என்றது.

சேந்தீமூன்றுமில்லிருப்பக் கற்றமறையோர் கண்ணபுரம்—நித்தியாக்நிஹோத்ரிகளும் வித்வான்களுமான ஞானவுட்டான ஸம்பந்நர்கள் திரண்டுவாழுமிடம் திருக்கண்ணபுரம் என்க. .... (அ)

துவரிக்கனிவாய் நிலமங்கை துயர்தீர்ந்துய்யப் பாரதத்துள் *
இவரித்தரசர் தமோற இருள்நாள் பிறந்த வம்மானை *
உவரியோதம் முத்துந்த வொருபாலொருபாலொண்செந்நெல் *
கவரி வீசும் கண்ணபுரத்து அடியேன் கண்டு கொண்டேனே. (கூ)

துவரி கனி வாய்	இலவம் பூப்போலவும் கொவ்வைக்கனி போலவும் சிவந்த அதரத்தையுடையளான
நிலம் மங்கை	பூமிப்பிராட்டியானவள்
துயர் தீர்ந்து	(பாவிகளைச் சுமப்பதனாலுண்டான) துக்கம் தொலைந்து
உய்ய	சுகப்படும்படியும்,
பாரதத்துள்	பாரதப் போரில்
இவரித்த	எதிரிட்ட
அரசர்	ராஜாக்கள்
தமோற	நிலைகுழம்பும்படியாகவும்
இருள் நாள்	இராப்பொழுதில்

பிறந்த	திருவவதரித்த
அம்மானை	ஸ்வாமியை,—
ஒரு பால்	ஒரு புறத்தில்
உவரி ஓதம்	கடலலைகள்
முத்து	முத்துக்களை
உந்த	ஒதுக்கித்தள்ளவும்
ஒரு பால்	இன்னொருபுறத்தில்
ஒண்	அழகிய
செந்நெல்	செந்நெற்பயிர்கள்
கவரி வீசும்	சாமரம்போல் வளைந்து வீசவும் பெற்ற
கண்ணபுரத்து	திருக்கண்ணபுரத்திலே

அடியேன் கண்டுகொண்டேன்—.

* * *—பூமிதேவிக்குத் தன்மீது ஸஜ்ஜநங்கள் எத்தனை கோடிக் கணக்காக இருந்தாலும் அவர்களைச் சுமப்பது இலவம்பஞ்சைச் சுமப்பது போல வருத்தமற்றிருக்கும். ஒரு துஷ்டனுண்டாகிலும் இரும்பு மூட்டையைத் தாங்குவதுபோல

மிகவருத்தமாம். ஆகையால், த்வாபரயுகத்தில் இப்பூமியின்கண் பிறந்திருந்த கம்ஸன் சிசுபாலன் முதலிய அஸுரர்களின் பாரத்தைப் பொறுக்கமாட்டாமல் பூமிப்பிராட்டி கோரூபத்தைத் தரித்து மேருமலையினுச்சியிலுள்ள தேவர்களின் ஸபையையடைந்து, அச்சபை நடுவில் வீற்றிருக்கும் நான்முகனை வணங்கித் தனது துயரத்தை முறையிட்டு இவ்வஸுரர்களைத் தொலைத்துத் தன்னை ஸுகப்படுத்தவேணுமென வேண்டிக் கொள்ள, அதற்கு நான்முகன் சிறிதுகாலம் யோசித்து 'இது நம்மாலாகாது; ஸர்வஜ்ஞனும் ஸர்வசக்தனும் ஸர்வலோக பிதாவாகிய ஸ்ரீமந்நாராயணனுக்கு அறிவித்து அவர் மூலமாக இக்காரியத்தை நிறைவேற்றுவிக்க வேணும்' எனக்கருதி அந்தப் பூமிதேவியையும் மற்றுமுள்ள தேவர்களையுங் கூட்டிக் கொண்டு போய்ப் பாற்கடலுள் பள்ளிகொள்கின்ற பரமனைத் தொழுதுதுதித்தனர். பின்பு திருமால் அருள்புரிந்த சிந்தை கொண்டு அவர்கட்குக் காட்சிதந்து யோக க்ஷேமங்களை விசாரித்து அவர்கள் வந்த வரலாற்றை உணர்ந்தருளி 'ஓ தேவர்களே! உங்கள் கருத்தை அறிந்து கொண்டேன்; முற்காலத்தில் வருணனுடைய சாபத்தினால் கச்யபரும் அவரது மனைவியான அதிதியும் இப்பொழுது வஸுதேவ தேவகிகளாகப் பிறந்திருக்கின்றனர்; இப்பிறவியில் அவர்களுக்கு நான் பிள்ளையாகப் பிறக்கிறேனென்று முன் வரமளித்திருக்கிறேன்; அங்ஙனமே நான் அவர்களுடைய கருவில் தோன்றி ஸாது பரித்ராணமும் துர்ஜந விநாசமும் தர்மஸம்ஸ்தாபநமும் செய்யக்கடவேன், நீங்கள் போகலாம்' என்று சோதிவாய் திறந்து அருளிச்செய்ய, அவர்கள் பரமாநந்தத்துடன் விடைபெற்றுப்போக, அவர்கட்கு அபயமளித்த வண்ணமாகவே வந்து அவதரித்தபடியைப் பேசுவன முன்னடிகள்.

மண்ணைக் காணப்படுகிற பூமிக்கு அதிஷ்டாந தேவதையாகிய பிராட்டிக்கு விசேஷணம் துவரிக்கனிவாய் என்பது.

இவரித்தரசர் தடுமாற=இவரித்தல்-எதிர்த்தல். இவரித்த + அரசர்-இவரித்தவரசர் எனச் சந்தியாக வேண்டுவது அங்ஙனம் ஆகாதது தொகுத்தல் விகாரம். "அரசர் தடுமாற இவரித்து இருள் நாள் பிறந்த அம்மானை" என்றும் அந்வயிக்கலாம்; அப்போது 'இவரித்து' என்பதை எச்சத்திரிபாகக் கொண்டு இவரிக்க என்றுரைத்துக் கொள்க. அன்றியே, உருபுபிரித்துக் கூட்டி 'இருள் நாள் பிறந்து பாரதத்துளரசர் தடுமாற இவரித்த அம்மானை' என்னவுமாம்.

க்ருஷ்ணபக்ஷத்தில் நடுநிசியில் அவதரித்ததுபற்றி 'இருள் நாள் பிறந்த' எனப்பட்டது.

ஒரு பக்கத்தில் கடலலைகள்வந்து முத்துக்களைக் கொழித்துத்தள்ளவும் மற்றொருபக்கத்தில் செந்நெற் பயிர்கள் கதிர்களை வணக்கிச் சாமரம் வீசுவது போல் அசையவும் அழகுமிக்கதாம் திருக்கண்ணபுரம்.

இங்கே ஒரு சங்கை:—திருக்கண்ணபுரத்திற்கு ஏறக்குறைய யோஜனை தூரத்திற்கப்பால் கடலுள்ளது; அப்படியிருக்க, கடல் அணித்தாயிருப்பது போல் கீழ்த்திருமொழியிலும் இத்திருமொழியிலும் அருளிச்செய்தது என்

கொண்டு? என்று; இந்த சங்கைக்கு நாம் என்ன பரிஹாரம் சொல்வோம்; நம்மாழ்வாரும் திருவாய் மொழியில் (9-10-1.) வேலை. மோதும் மதிள் சூழ் திருக்கண்ணபுரம் "என்றருளிச் செய்யக் காண்கிறோம்; முற்கால நிலைமையில் கடல் மிக அணித்தா யிருந்ததென்னலாம் போலும். .... (௯)

மீனோடாமை கேழலரி குறளாய் முன்னு மிராமனாய்த்
தானாய் * பின்னு மிராமனாய்த் தாமோதரனாய்க் கற்கியு
மானான்றன்னை * கண்ணபுரத்தடியன் கலிய னொலிசெய்த *
தேனாரின்சொல் தமிழ்மாலை செப்பப் பாவம் நில்லாவே. (௧௦)

மீனோடு	மத்ஸ்ய ரூபியாயும்
ஆமை	கூர்ம ரூபியாயும்
கேழல்	வராஹரூபியாயும்
அரி	நரஸிம்ஹ ரூபியாயும்
குறள் ஆய்	வாமநமூர்த்தியாயும்
முன்னும் இராமன் ஆய்	பரசுராம மூர்த்தியாயும்
தான் ஆய்	ஸாக்ஷாதவதாரமான ஸ்ரீராமபிரானும்
பின்னும் இராமன் ஆய்	பலராமனும்
தாமோதரன் ஆய்	கண்ணபிரானும்
கற்கியும் ஆனான் தன்னை	கல்கியாயும் திருவவதாரஞ் செய்யுமியல்பினனான எம்பெருமானை

கண்ணபுரத்து	திருக்கண்ணபுரத்திலே (ஸேவித்து)
அடியன்	சேஷபூதரான
கலியன்	திருமங்கையாழ்வார்
ஒலி செய்த	அருளிச் செய்த
தேன் ஆர் இன் சொல்	தேன்போன்று மதுரமான சொற்களையுடைய
தமிழ் மாலை	இத்தமிழ்ப்பாசுரங்களை
செப்ப	அப்யஸிக்குமளவில்
பாவம்	பாவங்கள்
நில்லா	நிற்கமாட்டாமல் அகன்றொழியும்.

* * *—தசாவதாரங்களையும் அடைவே அநுஸந்திக்கத் தொடங்கிய ஆழ்வார் கீழ்ப்பாட்டில் க்ருஷ்ணாவதாரத்தோடு நிறுத்தி இந்தநிகமநப் பாசுரமருளிச் செய்கிறாராயினும், பத்தாவது அவதாரமும் இனி நடக்கப்போகிறதுமான கல்கியவதாரம் இப்பாட்டில் சுருக்கமாக அநுஸந்திக்கப்படுகிறதென்று கொள்க.

புருஷோத்தமனாகிய ஸ்ரீமந்நாராயணன் க்ருஷ்ணாவதாரம் செய்தருளி மண்ணின் பாரத்தை நீக்கித் தருமநெறிகளை நிலைநிறுத்தித் தன்னடிச் சோதிக்கெழுந்தருள, உடனே இப்புவியில் கலிபுருஷன் செங்கோல்செலுத்தப் புகுந்து அதர்மம் அவிவேகம் அநாசாரம் முதலியவற்றை மெல்ல ஜனங்களிடத்தில் உண்டு பண்ணிக்கொண்டு வந்து நெடுநாள் வரையில் முற்றிவிட்டான். இங்ஙனம் கலி முற்ற முற்ற ஜனங்கள் அல்பாயுஸ்ஸுக்களாவர்கள்; சரீரத்தில் வளர்த்தியும் வலிவும் குறைந்துவிடப்போகிறது; அழகும் தெளிவும் தேஜஸ்ஸும் அடியோடே அழியப்போகிறது; அல்பபுத்திகளாகவும் ஆசாரஹீநர்களாகவும் கல்வியற்றவர்களாகவும் ஆகப்போகிறார்கள். பலசொல்லியென்? எல்லாம் தலைகீழாகப்போகி

றது. பாவிகள் எல்லையில்லாமல் நிற்கப்போகிறார்கள். அப்போது நிலமங்கை
தாங்கமாட்டாமல் முன்போலவே எம்பெருமானிடம் சென்று முறையிடவும்
அதற்கு அவர் தானே மீண்டும் வந்து அவதரித்துத் துயர்தீர்ப்பேன் என்று
அபயமளிக்கவும் நேரப்போகிறது. பிறகு பகவான் வடதிசையின் கணுள்ள
சம்பளக்கிராமத்தில் வாஸம் செய்கிற வைதிகோத்தமனான விஷ்ணுயசஸ் என்
பவருடைய மனைவியாகிய ஸுமதியினுடைய கருவிற் புகுந்து பன்னிரண்டாண்டு
உறைந்து வைசாகசுக்லத்வாதசியினன்று திருவவதரிக்கப்போகிறார். பிறகு வ்யா
ஸர் முதலிய பெரியோர்கள் சென்று அக்குழந்தைக்குக் கல்கியென்று பெயரிடப்
போகிறார்கள். பிறகு கல்கிபகவான் வேதமோதுகைக்காகப் பரசுராமனை நாடிச்
சிறிது நாள் குருகுலவாஸஞ்செய்து வேதங்களையும் அஸ்த்ரசஸ்த்ரங்களையுங்
கற்று 'தருமபரிபாலனஞ் செய்வதே குருதக்ஷிணை' என்று அப்பரசுராமனளிப்
பதைக் கொண்டாடி அதிலே கண்ணுங்கருத்துமாயிருந்து அவதாரகாரியத்தை
முடிக்கைக்காக ஸங்கல்பம் செய்துகொண்டு, விச்வஜித் அச்வமேதம் முதலிய
யாகங்களைச்செய்ய வேண்டுமென்று தந்தையிடம் அநுஜ்ஞைபெற்று அதற்காகத்
திக்விஜயஞ்செய்யப் புறப்பட்டு, முந்துறமுன்னம் பௌத்தர்களின் ராஜ்யத்தை
நோக்கிச்சென்று அவர்கள்மேல் படை யெடுத்து அங்குள்ளாரை யெல்லாம்
தொலைத்திட்டு அங்குநின்றும் யவநர்களுடைய ராஜ்யத்திற் சென்று அங்குள்ள
மிலேச்ச ஸேனைகளையும் அரசர்களையும் தான் குதிரைமேலேறிக் கத்தியைக்
கையில் பிடித்துத் துண்டுதுண்டாக வெட்டியெறிந்து அத்தேசமெங்கும் ரக்த
வெள்ளமும் பிணக்காடுமாக ஆக்கி, அத்தேசங்களில் தன்னை அநுவர்த்தித்து
வரும் அரசர்களைப் பட்டாபிஷேகம் செய்வித்துத் தருமமார்க்க பரிபாலனம் செய்
விக்கப்போகிறார். பிறகு கலிபுருஷன் மிக்க கோபத்துடனே உருவமெடுத்துக்
கொண்டு அதர்மம் அஜ்ஞாநம்முதலியவற்றுக்கு அதிஷ்டாந தேவதைகளையுங்
கூட்டிக்கொண்டு கோரரூபியாய்ப் படையெடுத்து வந்தெதிர்ப்பான். பின்பு பக
வான் குதிரைமீதேறி அதிவிசித்திரமாக அச்சேனைத்திரளில் ஸஞ்சரித்துத்
தான் பிடித்த கத்தியினால் அவர்களுடன் யுத்தஞ்செய்து அவர்கள் பிரயோகிக்
கும் ஆயுதங்களையும் மாயைகளையும் நீறுக்கிச் சேனைகளை ஒன்றொழியாமற்
கொன்று கலிபுருஷனைப் பலவகைகளிலும் பங்கப்படுத்தி அவனுடைய பராக்கிர
மத்தை யெல்லாம் ஒய்வித்துப் பின்பு அவன் குடுமியைப்பிடித்திழுத்து அவனது
கழுத்தின்மேற் கத்தியையெறிந்து வெட்டப்புகுங்காலத்தில் அக்கலிபுருஷன் பக
வானைப் பலவகையாகவேண்டிக்கொண்டு பாதங்களிற்பணிந்து தன்னுயிரைமாத்தி
ரம் தப்பவைத்துக்கொண்டு இவ்வுலகைவிட்டு ஓடிப்போய் ஒளிந்துகொள்வான்.
அதன்பின் அவனுடைய தோழர்களாகிய கோகன் விகோகன் என்ற இரண்டு
பெயர் கலிபுருஷன் ஓடிப்போனதைக் கேட்டுக் கல்கிபகவான்மீது வெகு கோபங்
கொண்டு எதிர்த்துவந்து யுத்தஞ்செய்ய, அவர்களை எத்தனைபடி அடித்தாலும்
அவர்கள் சாவின்றியே யிருப்பதைக் கண்டு இதற்கென்ன காரணமென்று
யோசித்துக் கொண்டிருக்கையில் பிரமதேவன் வந்து 'ஸ்வாமிந்! இவர்களிரு

வரையும் ஒருபொழுதே கொல்லவேணும்; தனித்தனியே இவர்கட்கு மரணமுண்டாகாதபடி நான் வரங்கொடுத்திருக்கிறேன்' என்று சொல்லக்கேட்டுக் கல்கிபகவான் தன்னுடைய வஜ்ராயுதத்தை யெடுத்து ஓங்கி இருவர்தலையிலும் அடிக்க அவர்கள் கீழேவிழுந்து மாண்டுபோவர்கள். இப்படி கல்கிபகவான் உலகத்திலுள்ள துஷ்டர்களையெல்லாம் ஸம்ஹரித்து அதர்மத்தை வேரறுவித்துத் தருமத்தை எங்கும் பரவச்செய்து கிருதயுகத்தைப் பிரவர்த்திப்பித்துத் தன் தாய்தந்தையர்க்கும் முத்தியளித்து, இங்ஙனம் தன்னுடைய அவதாரப்ரயோஜனம் தலைக்கட்டினவாறே பதரிகாச்ரமத்துக் கெழுந்தருளி மற்றவர்களைப்போல் யோகாப்யாஸஞ் செய்து திருவாழி திருச்சங்கு முதலிய ஸகலலக்ஷணங்களோடுங் கூடிய தனது அப்ராக்ருத திவ்யஸ்வரூபத்தை ஆவிஷ்கரித்து, பின்பு பரமபதத்திலிருந்து அநந்த கருட விஷ்வக்ஸேநாதி நித்யஸூரிகள் பூர்ணகும்பமேந்தி ஸாமகானம் கோஷித்துக்கொண்டு வந்து திருவடிதொழ, சிறப்புடனே தன்னடிச்சோதிக் கெழுந்தருளப்போகிறார்—என்பது கல்கியவதார கதைச்சுருக்கம்.

இப்பாசுரத்தில் ஸ்ரீராமாவதாரத்தை "தானாய்" என்ற சொல்லால் குறிப்பிட்டதனால் மற்ற அவதாரங்களிற் காட்டிலும் ஸ்ரீராமாவதாரத்திற்குள்ள ஏற்றம் விளங்கும்.

ஆக, தசாவதாரங்கள் செய்தருளின பெருமான் விஷயமாகப் பாடின இத்திருமொழியைக் கற்போர் நித்ய நிஷ்கல்மஷராவர் என்று பயனுரைத்துத் தலைக்கட்டினாராயிற்று. .... (௧௦)

அடிவரவு:—வான் மலங்கு பார் உலை தொழு வடி வையம் ஒற்றை துவரி மீன் கைம்மானம்.

எட்டாந்திருமொழி உரை முற்றிற்று.

ஜீயர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

எட்டாம்பத்து—ஒன்பதாந் திருமொழி,

கைம்மான மதயானை.

திருக்கண்ணபுரத்தம்மானுக்கன்றி அடியேன் வேறொருவர்க்கு உரியேனல்லேன் என்கிறார் இத்திருமொழியில். ....

கைம்மான மதயானை யிடர்தீர்த்த கருமுகிலை *
மைம்மான மணியை அணிகொள் மரதகத்தை *
எம்மானை யெம்பிரானை யீசனை யென்மனத்துள்
அம்மானை * அடியேனடைந்துய்ந்து போனேனே. (க)

மானம் கை மதம் யானை	நீண்ட துதிக்கையையுடையதும் மதங்கொள்ளுமியல்வுடையதுமான கஜேந்திரனுடைய
இடர்	துயரத்தை
தீர்த்த	போக்கியருளின
கருமுகிலை	காளமேகம் போன்றவனும்
மை	மைபோன்ற நிறத்தையுடைய
மானம் மணியை	பெருவிலைபெறும் நீலரத்னம்போன்றவனும்
அணிகொள் மரதகத்தை	அழகுபொருந்திய மரதகப்பச்சை போன்றவனும்
எம்மானை	எமக்கு ஸ்வாமியும்
எம்பிரானை	எமக்கு மஹோபகாரம் செய்தருள்பவனும்
ஈசனை	ஸர்வேச்வரனும்
என் மனத்துள் அம்மானை	என் நெஞ்சினுள் இருக்கும் ஸ்வாமியுமான ஸ்ரீசௌரிராஜனை
அடியேன் அடைந்து	அடியேன் ஆச்ரயித்து
உய்ந்து போனேன்	உஜ்ஜீவித்துப் போனேன்.

* * *—முதலையின் வாயிலகப்பட்டு இடர்ப்பட்ட கஜேந்திராழ்வானுடைய துயரத்தைத் தீர்த்து அதனால் திருமேனி புகரெழுந்து விளங்கப்பெற்று இன்னமும் அப்படிப்பட்ட திருமேனிவிளக்கத்துடனே திருக்கண்ணபுரத்திலே காட்சி தந்தருளும் பெருமானை ஆச்ரயித்து உஜ்ஜீவிக்கப் பெற்றேனென்கிறார்.

கைம்மானம்=கையில் பெருமையையுடையது; முன்கை மிடுக்குடைமையாலே அஞ்சாமல், மேல்விளைவதறியாதே பொய்கையிலிழிந்து ஆபத்துக்கு ஆளாயிற்றென்க. மதயானை=கஜேந்திராழ்வான் மதங்கொண்டிருந்தானென்று பொருளல்ல; மதங்கொள்ளுமியல்வுடையதென்று ஜாதிப்ரயுக்தவிசேஷணம் இது. யானையிடர்தீர்த்த=யானையின் இடராவது முதலைவாயிலகப்பட்ட துக்கமன்று; கையில்பறித்து வைத்துக் கொண்டிருக்கிற செந்தாமரைப்பூ செவ்வியழிவதற்கு முன்னே எம்பெருமானது திருவடிகளில் சாத்தப்பெறவேணுமென்பதே

கஜேந்திராழ்வானுடைய அபிநிவேசமாதலால் அவ்வாசை நிறைவேறப்பெறுமை யால் வந்த துக்கமே இங்கு இடரெனப்படுகிறது; "𑌨𑌾𑌹𑌂 𑌕𑌲𑍇𑌵𑌰𑌸𑍍𑌯𑌾𑌸𑍍𑌯 𑌤𑍍𑌰𑌾𑌣𑌾𑌰𑍍𑌥𑌂 𑌮𑌧𑍁𑌸𑍂𑌦𑌨। 𑌕𑌰𑌸𑍍𑌥𑌕𑌮𑌲𑌾𑌨𑍍𑌯𑍇𑌵 𑌪𑌾𑌦𑌯𑍋𑌰𑌰𑍍𑌪𑌿𑌤𑍁𑌂 𑌹𑌰𑍇𑌃 = நாஹம் கலேபரஸ்யாஸ்ய த்ராணார்த்தம் மதுஸூதந!—கரஸ்தகமலாந்யேவ பாதயோரர்ப்பிதும் ஹரே:" என்றது காண்க: இவ்வுடம்பைக் காப்பாற்றிக் கொள்ள நான் கரையவில்லை; கையிலுள்ள தாமரைப்பூவைத் திருவடிகளில் ஸமர்ப்பிக்கப் பெறவேணுமே என்றே கரைகின்றேனென்றவாறு.

இடர்தீர்த்தகருமுகிலை = அடியார்கள் துயர்தீர்ந்தால் அதனால் எம்பெருமானுடைய திருமேனியில் ஒரு புதியபுகர் உண்டாகும்; அதனைநினைக்கிறது இங்கு; "𑌅𑌭𑌿𑌷𑌿𑌚𑍍𑌯 𑌚 𑌲𑌙𑍍𑌕𑌾𑌯𑌾𑌂 𑌰𑌾𑌕𑍍𑌷𑌸𑍇𑌨𑍍𑌦𑍍𑌰𑌂 𑌵𑌿𑌭𑍀𑌷𑌣𑌮𑍍। 𑌕𑍃𑌤𑌕𑍃𑌤𑍍𑌯𑌸𑍍𑌤𑌦𑌾 𑌰𑌾𑌮𑍋 𑌵𑌿𑌜𑍍𑌵𑌰𑌃 𑌪𑍍𑌰𑌮𑍁𑌮𑍋𑌦 𑌹 = அபிஷிச்ய ச லங்காயாம் ராக்ஷஸேந்த்ரம் விபீஷணம்—க்ருதக்ருத்யஸ் ததா ராமோ விஜ்வர: ப்ரமுமோத ஹ" என்றதிறே ஸ்ரீராமாயணத்தில். ஸ்ரீராமபிரான் விபீஷணாழ்வானுக்கு முடிசூட்டி, அதனால் தன் காரியம் தலைக்கட்டிற்றாகவும் தன் துயர் தீர்ந்ததாகவுங்கொண்டு பொலிவுற்றான் என்பது இந்தச்லோகத்தின் கருத்து.

மைம்மானமணியை = ரத்நத்திற்கும் எம்பெருமானுக்கும் பலபடிகளாலே ஸாம்யமுண்டு;—

1. ரத்நத்தை ஸ்வயம் போக்யமாகவுங் கொள்ளலாம்; விற்பனை செய்து வேறுபொருள்களையும் பெறலாம். அப்படியே, எம்பெருமானை ஸ்வயம் புருஷார்த்தமாகவுங் கொள்ளலாம்; அன்றி அவனை உபாயமாக்கி வேறு புருஷார்த்தங்களையுங் கொள்ளலாம்; அதாவது—எம்பெருமானுடைய உபேயத்வ உபாயத்வங்களைச் சொன்னபடி. 'எம்பெருமானே! எனக்கு நீயே அமையும்; உன்னிடத்திற் பெறுவதொரு பேறும் எனக்குவிருப்பமில்லை' என்றிருக்குமதிகாரிகள் ரத்நத்தை ஸ்வயம்போக்யமான ஹாரமாகக் கொள்ளுமதிகாரிகளோடும், எம்பெருமானைக் கொண்டு ஐச்வர்ய கைவல்யாதிகளைப் பெற விரும்புவார் ரத்நத்தை விற்று ஜீவிக்குமதிகாரிகளோடும் ஒப்பர்களிறே.

2. ரத்நத்தை மதிப்பறியாதவன் அற்பவிலைக்கு விற்பன்; மதிப்பறிந்தவன் உள்ளவிலைக்கு விற்பன்; உத்தமாதிகாரி அதனை விற்பனை செய்யாதே மார்பிலணிந்து அநுபவித்து மகிழ்வன்; ஆகவே, அற்பவிலைக்கு மாறுதல், உள்ளவிலைக்கு மாறுதல், விலைக்கு ஆட்படாமல் ஸ்வயம்போக்யமாகக் கொள்ளப்படுதல் என மூன்று தன்மைகள் ரத்நத்துக்கு அதிகாரிபேதத்தால் கூடுகின்றன. காண்மின்;—கடலிலே வலைவீசி மீன்பிடித்து ஜீவிக்கும் செம்படவன்கையில் மீன்களிடையே விலையுயர்ந்த ரத்னமொன்று கிடைத்தால் அதன் மதிப்பை அவன் அறியமாட்டாதவனாதலால் அவன் அந்த ரத்நத்தைக் கொண்டுபோய் ஒரு வர்த்தகனிடத்திலே மிகக்குறைந்தவிலைகூறி விற்றுவிடுகிறான்; அந்த வியாபாரி, தான் ரத்தினத்தின் மதிப்பு நன்குணர்ந்தவனாகையாலும் வியாபாரமே ஜீவிகை

யாகவுடையவனைகையாலும் அவன் அதைக் கொண்டுபோய் ஒரு மஹாராஜனிடத்திலே கிரமமாக அதற்குள்ள விலைகூறி விற்றுவிடுகிறான்; பின்பு அந்த மஹாராஜன் அந்த ரத்நத்தை தான் விற்பனைசெய்ய நினையாதே அதனைப் பெரியதொரு ஹாரத்திலே இணைத்து ஸ்வயம்போக்கியமாக அமைத்துக்கொள்ளுகிறான்: ஆக இச்செய்தியில் ஒரு ரத்நத்துக்கே மூன்று தன்மைகள் உண்டாகின்றன. எம்பெருமானாகிற ரத்நத்துக்கும் இங்ஙனே மூன்று தன்மைகள் கூடாநின்றன;— ரத்நத்தின் மதிப்பை அறியமாட்டாது அதனை அற்பவிலைக்கு விற்கும் செம்படவனைப் போல எம்பெருமானது சீர்மையையறிய மாட்டாத சிற்றறிவாளர் அவனைக்கொண்டு ஐச்வர்ய கைவல்யாதி க்ஷுத்ரபலன்களைக் கொள்வர்; ரத்நத்தைக் குறைந்தவிலைக்குக் கொடாதே தகுந்தவிலைக்கு விற்கும் வர்த்தகனைப்போன்ற மத்யம அதிகாரிகள் எம்பெருமானை மோக்ஷோபாயமாக அபிமானித்து. க்ஷுத்ர பலனைக் கொள்ளாதே மோக்ஷபுருஷார்த்தத்தைக் கொள்வர்; ரத்நத்தை ஒன்றுக்கும் ஸாதநமாக்காதே ஸ்வயம்போக்யமாகக் கொள்ளும் மஹாராஜனைப் போன்ற உத்தமாதிகாரிகள் எம்பெருமானை ஒன்றுக்கும் ஸாதநமாகக்கோலாதே 'எனக்குத் தேனேபாலே கன்னலேயமுதே திருமாலிருஞ் சோலைக்கோனே' என்று ஸ்வயம்போக்யமாகக் கொண்டு வர்த்திப்பார்கள்.

3. ரத்நத்தை இழந்தவன் கதறிக் கதறியழுவன். எம்பெருமானையிழந்தவனும் அப்படியே. ஸ்ரீராமரத்நத்தையிழந்த பரதாழ்வான் ஸபையிற் புரண்டு கதறியழுதானிறே; "तच्छ्रुत्वा भरतो वाक्यं शोकेनाभिपरिप्लुतः......विललाप सभामध्ये = தத் ச்ருத்வா பரதோ வாக்யம் சோகேநாபிபரிப்லுத:—விலலாப ஸபாமத்யே" என்றது காண்க. * பழுதேபலபகலும் போயினவென்று கதறியழுவர்கள். "இன்பத்தையிழந்த பாவியேனெனதாவி நில்லாதே" "எழில்கொள் நின் திருக்கண்ணிணை நோக்கந் தன்னையுமிழந்தேனிழந்தேனே" "உன்னைக் காண்பான் நானலப்பாய் ஆகாயத்தை நோக்கியழுவன்" என்றிப்படி யெல்லாம் கதறுவர்கள். "एकस्मिन्नप्यतिक्रान्ते मुहूर्ते ध्यानवर्जिते । दस्युभिर्मुषितेनेव युक्तमाक्रन्दितुं नृणाम् = ஏகஸ்மிந்நப்யதிக்ராந்தே முஹூர்த்தே த்யாநவர்ஜிதே—தஸ்யுபிர் முஷிதேநேவ யுக்தமாக்ரந்திதும் ந்ருணாம்." எம்பெருமானுடைய சிந்தனையையிழந்து ஒரு கணப்பொழுது கழியப் பெற்றாலும், கள்வர் ஸர்வஸ்வத்தையும் கொள்ளைகொண்டால் எப்படி கதறியழக்கூடுமோ அப்படி கதறியழவேணுமென்பர் அறிவுடையார்.

4. ரத்நமுடையவன் மார்பு நெறிப்பன். எம்பெருமானைக் கைக்கொண்டவர்களும் "எனக்காரும்நிகரில்லையே" "மாறுளதோ இம்மண்ணின்மிசையே" "எனக்கென்னினிவேண்டுவதே" "இல்லை யெனக்கெதிரில்லை யெனக்கெதிரில்லை யெனக்கெதிரே" என்று செருக்கிப் பேசுவர்கள்.

5. ரத்நமுள்ளவனை உலகமெல்லாம் அநுவர்த்திக்கும். எம்பெருமானைக் கைக்கொண்டவனையும் அப்படியே; "सेवेत्यः सर्वभूतानां

அபிவாத்ய—மைத்ரேய: பரிபப்ரச்ச ப்ரணிபத்யாபிவாத்ய ச." இத்யாதிகள் காண்க.

6. இடையில் ஒரு புருஷனைக்கொண்டே ரத்நம் வாங்கப்படும்; புருஷகார மின்றி எம்பெருமானைப் பெறமுடியாது; "வேதம்வல்லார்களைக் கொண்டு விண்ணோர் பெருமான் திருப்பாதம் பணிந்து" இத்யாதி.

7. ரத்நத்திற்குச் சிலசில ஆச்ரயங்களில் மதிப்பு அதிகப்படும்; எம்பெருமானுக்கும் அப்படியே. ஆழ்வார்கள் திருவாக்கில் புகுந்துபுறப்பட்ட திருப்பதிகளிலேயிறே எம்பெருமானுக்கு மதிப்பு அதிகம்.

8. ரத்நம் ஒளியைவிட்டு இராது; எம்பெருமானும் பிராட்டியைவிட்டு இரான். "தேவத்வே தேவதேஹேயம் மநுஷ்யத்வே ச மாநுஷீ=தேவத்வே தேவதேஹேயம் மநுஷ்யத்வே ச மாநுஷீ." இத்யாதிகள் காண்க.

9. ரத்நத்துக்கு ஒளியால் மஹிமை; எம்பெருமானுக்கும் பிராட்டியால் ஏற்றம்; "ஹ்ரியா தேவ்யா தேவஸம்ஸ்ப்ருஷ்டே" என்றான் வேதபுருஷன். இராவணன் மாரீசனிடம்வந்து 'இராமனை அடர்க்க நீ துணை நிற்கவேணும்' என்று இரக்க, "அப்ரமேயம் ஹி தத் தேஜோ யஸ்ய ஸா ஜநகாத்மஜா—அப்ரமேயம் ஹி தத் தேஜோ யஸ்ய ஸா ஜநகாத்மஜா" என்றன்றோ விடைகூறினது; ஸீதாபிராட்டியைக் கைப்பிடித்தவனன்றோ இராமபிரான்; அவனை அடர்க்கலாகுமோ? என்றான்.

10. ரத்நத்துக்கு ஒளியால் ஏற்றமென்றாலும் ரத்நத்தின் ஸ்வதந்த்ர மஹிமைக்கு ஒருகுறையில்லை; எம்பெருமானுக்கு மப்படியே. இவ்விஷயத்தை ஸ்ரீபட்டர் அருளிச்செய்த ஸ்ரீகுணரத்நகோசத்தில்—"ஸ்வத: ஸ்ரீஸ்த்வம் விஷ்ணோ: ஸ்வமஸி ததஏவைஷ பகவாந் த்வதாயத்தர்த்திஸ் ஸந்நபி பவதி ஸ்வாம்யபி தவ। ஸ்வயம் தீப்த்யா ரத்நம் பவதபி மஹார்க்கம் ந விகுணம் ந குண்டஸ்வாதந்த்ர்யம் பவதி ச ந சாந்யாஹிதகுணம்." என்ற ச்லோகத்தினால் தெளிக.

11. ரத்நம் கடல், மலை முதலிய இடங்களில் உள்ளது; எம்பெருமானும் திருப்பாற்கடல் திருமலை முதலான இடங்களில்.

12. ரத்நம் எவ்வளவு விலையுயர்ந்ததாயினும் தலைப்பில் முடிந்து ஆளலாம்படி யிருக்கும்; எம்பெருமானும் பரத்வத்தைமறைத்து ஸௌலப்யத்தைக் காட்டுவனிறே.

13. ரத்நம்பெற்றவர்கள் இரவும்பகலும் கண்ணுறங்கமாட்டார்கள்; எந்த வேளையில் யார்கொள்ளைகொள்வரோ வென்று துஞ்சாதிருப்பார்கள்; எம்பெருமானைப் பெற்றவர்களும் அப்படியே; "கண்ணாரக் கண்டு கழிவதோர் காதலுற்றார்க்கு முண்டோ கண்கள் துஞ்சுதலே" என்கிறபடியே காண்பதற்கு முன்பு உறக்கமில்லை; கண்டால் * ஸதாபஸ்யந்திபாகையாலே உறக்கமில்லை.

இங்ஙனே மற்றும் பல உவமைப்பொருத்தங்கள் கண்டு கொள்க.

அணி கோள் மாதகத்தை=பசுமை நீலம் கருமை என்ற நிறங்களை அபேதமாகக் கூறுவது கவிமரபாதலால் எம்பெருமானுடைய காளமேகத் திருவுருவத்திற்கு மரதகப்பச்சையையும் உவமை கூறுவதுண்டு: "பச்சை மாமலை போல் மேனி" என்ற திருமாலையுங்காண்க; காணப்புக்கவர்களின் கண்ணையும் நெஞ்சையும் குளிர்வித்து அவர்களுடைய ஸம்ஸார தாபங்களை யெல்லாம் போக்குந் தன்மையும் இவ்வுவமையினால் தொனிக்கும். .... (க)

தருமான மழைமுகிலைப் பிரியாது தன்னடைந்தார் *
வருமானம் தவிர்க்கும் மணியை அணியுருவில் *
திருமாலை யம்மானை யமுதத்தைக் கடற்கிடந்த
பெருமானை * அடியேனடைந்துய்ந்து பிழைத்தேனே (உ)

தரு	கல்பவிருக்ஷம் போன்றவனும்	அணி உருவின்	அழகியவடிவத்தையுடைய
மானம்	பெரிய	திரு மாலை	லக்ஷ்மீநாதனும்
மழை முகிலை	காளமேகம்போன்றவனும்,	அம்மானை	ஸர்வசேஷியாயிருப்பவனும்
பிரியாது	ஒரு காலும் விட்டுநீங்காமல்	அமுதத்தை	அமிருதம் போன்றவனும்
தன் அடைந்தார்	தன்னைவந்து பணிந்தவர்கட்கு	கடல் கிடந்த பெருமானை	திருப்பாற்கடலில் திருக்கண்வளர்ந்தருளும் பெருமானுமான ஸ்ரீசௌரிப் பெருமானை
வரும்	சேர்கின்ற		
மானம்	அவமானத்தை		
தவிர்க்கும்	போக்குகின்றவனும்		
மணியை	நீலமணிபோன்றவனும்	அடியேன் அடைந்து உய்ந்து பிழைத்தேன்-,	

* * *—"தருமான மழை முகிலை" என்றது—'தருவை, மானமழை முகிலை' என்றபடி. தரு என்னும் வட சொல் விருக்ஷ மென்று பொதுப் பொருள் படுமாயினும் இங்கே கல்பவ்ருக்ஷ மென்று சிறப்புப் பொருள் படும். வேண்டுவார் வேண்டின பலன்களைக் கொடுப்பதில் கல்பவிருக்ஷத்தை நிகர்த்தவன் என்க. "எனக்கே தன்னைத் தந்த கற்பகம்" என்று கல்பவ்ருக்ஷத்திற்காட்டிலும் ஏற்றமும் அருளிச்செய்வர் நம்மாழ்வார்; கல்பவ்ருக்ஷமானது தன்பக்கலிலுள்ளவற்றைக் கொடுக்குமே யன்றித் தன்னைக் கொடுக்க மாட்டாது; எம்பெருமான் அங்ஙனன்றியே, பலன்களையுங் கொடுத்துத் தன்னையுங் கொடுத்தருள்வன் என்று.

இருந்தவிடத்திலிருந்து கொண்டே உதவுகின்ற கல்பவ்ருக்ஷத்தை உவமை கூறினவளவால் த்ருப்திபெறாதவராய்ப் பெரிய காளமேகத்தை உவமைகூறுகின்றார் மான மழை முகிலை என்று. 1. "உயிரளிப்பான் மாகங்களெல்லாந் திரிந்து நன்னீர்கள் சுமந்து" என்றாற்போலே நீரைச்சுமந்து கொண்டு நாடெங்குஞ் சென்று ஆங்காங்கு வர்ஷிக்கும் மேகமே 2. "விண்மீதிருப்பாய் மலைமேல்

1. திருவிருத்தம்-32. 2. திருவாய் மொழி 6—9—5.

நிற்பாய் கடல் சேர்ப்பாய், மண்மீதுழல்வாய்" என்னப்படுகிற எம்பெருமானுக்குப் பொருத்தமான உவமையாகும். அடியாருள்ள விடந்தேடிச் சென்று உதவுமவனிறே.

பிரியாது தன்னடைந்தார் வருமானந்தவிர்க்கும்=அடியார்கட்கு ஏதேனும் அவமானமுண்டானால் ஆனைத்தொழில்களுஞ் செய்து அதைப் போக்கியருள்பவன் எம்பெருமான். இதற்குப் பல இதிஹாஸங்களுள்ளன வாகிலும் இங்கே ஒரு இதிஹாஸங்காட்டுவோம்;—பண்டைக்காலத்தில் ஸூர்யவம்சத்து அரசர்களில் அம்பரீஷனென்பானொருவன் பரமபகவத் பக்தனாய் விளங்கி வந்தான். இவனுடைய ஞானபக்தி விரக்திகளை நோக்கி மிகத் திருவுள்ள முவந்த எம்பெருமான் ஸர்வகாலத்திலும் இவனைப் பாதுகாத்தற் பொருட்டுத் தனது திருவாழியாழ்வானை எப்போதும் இவ்வரசனுடைய மாளிகையிலேயே கோயில்கொண்டிருக்கும்படி நியமித்திருந்தான். இப்படியிருந்து வருகையில், அவ்வரசன் பகவதாராதநரூபமாய் ஒரு ஸம்வத்ஸரம் அநுஷ்டித்துத் தலைக்கட்ட வேண்டியதான த்வாதசீ வ்ரதமொன்றை அநுஷ்டித்து, விரதம் முடிவாகும் த்வாதசியன்று விசேஷமாக அந்தணர்கட்கு தக்ஷிணைகள்கொடுத்து அவர்களுடைய நியமனம்பெற்றுக்கொண்டு பாரணை பண்ணப் புகுமளவில், துர்வாஸ மஹர்ஷி அதிதிபூஜை பெற்றுக்கொள்ள அங்கு வந்து சேர்ந்தார். மிகச்சிறந்த தபோநிதியாகிய இந்த அதிதி எழுந்தருளினதைக் கண்டு பரமஸந்தோஷ மடைந்த பிரபு உபசாரங்களை விதிப்படி நடத்தி 'தேவரீரும் பாரணை கோஷ்டியில் எழுந்தருளியிருந்து அமுது செய்யவேணும்' என்று விநயமுடன் வேண்டிக் கொண்டான். மஹர்ஷியும் அதற்கு இசைந்து 'மாத்யாஹ்நிக அநுஷ்டாநங்களை நிறைவேற்றி வருகிறேன்' என்று சொல்லி யமுனைக்குச் சென்றார். சென்றவர் அநுஷ்டாநங்களில் மிக ஊன்றித் தாமதிக்கையில் த்வாதசிதிதியானது கழிந்துபோகுந்தருணமாயிற்று; ஸங்கல்ப பூர்வகமாக இந்த விரதத்தை அனுட்டித்து வந்த அரசன் "த்வாதசிதிதி ஸமாப்தியடைவதற்கு முன்னே பாரணை செய்யாவிடில் வ்ரத லோபம் விளையும்; எழுந்தருளின அதிதியை உபேக்ஷித்துப் பாரணை செய்தால் மஹத்தான பாபம் விளையும்; இங்ஙனே தர்மஸங்கடமாக நேர்ந்து விட்டதே!, இதற்கு என் செய்வோம்!" என்று மிக்க கவலைகொண்டு வல்லவர்களான அந்தணர்களைத்திரட்டி இப்போது என்னசெய்யத்தக்கதென்று விமர்சித்தான். 1. "ஏவொஷ்ராதி தவோவாஸிதம் நைவாநஸிதம் நக்ஷாயாசௌ ஷவதி" என்ற வேதவாக்கியத்தை ஆதாரமாகக் கொண்டு "அம்ஷஸா கெவவெநாய கவிஷெஹீ தவாரணாம் ஆஹாராஸ்வாஷணம் விஷ்ரா ஸஙி.தாநஸி தம்வ யக." என்று தீர்மானித்து, தீர்த்தபாரணை செய்து விட்டு ப்ரஸாத பாரணைக்காக துர்வாஸமஹர்ஷியின் வரவை எதிர்பார்த்திருந்தான். பிறகு வந்து சேர்ந்த மாமுனிவர், தம்மை அவமதித்து அரசன் ஜலபாரணை செய்து விட்டதாகக் கருதி மிகுந்த சீற்றங்கொண்டு தம் தலையில் நின்று ஒரு சடைமயிரைக் களைந்தெடுத்து அதனால் காலாக்நியோ

1. தைத்திரீயயஜுஸ்ஸம்ஹிதா 1—6—

டொத்த ஒரு $ க்ருத்யையை உண்டாக்கி, அம்பரீஷனை நலியுமாறு ஏவினர். மிக்கபயங்கரமாய்தன்னை நோக்கி விரைந்து வருகின்ற அதனைக் கண்டும் அம்பரீஷன் சிறிதும் நிலைகலங்காது எம்பெருமானையே சிந்தித்திருந்தான். இவனுடைய பாதுகாவலின் பொருட்டு மாளிகையில் ஸ்தாபிக்கப்பட்டிருந்த சக்கரத்தாழ்வான் அந்த க்ருத்யையை நீறாக்கிவிட்டதுமல்லாமல் துர்வாஸ முனியைத் தான் தொடரத் தொடங்கவே, அம்முனிவர் எத்திசையு முழன்றோடியும் புகல் பெறுமல் திருமால் திருவடிகளில் வந்துவிழ, ஸ்ரீமந்நாராயணனும் 'அம்பரீஷர் திருவடியே உமக்குப் புகல்' என்று காட்டிக் கொடுக்க, பிறகு முனிவன் அரசனையே சரணம்புகுந்து உயிர் பிழைத்து வாழ்ந்தார் என்பதாம். (உ)

விடையே ழன்றடர்த்து வெகுண்டு விலங்கலுற *
படையா லாழிதட்ட பரமன் பரஞ்சோதி *
மடையார் நீலமல்கும் வயல்சூழ் கண்ணபுரமொன்
றுடையானுக்கு * அடியேன் ஒருவர்க் குரியேனோ? (௩)

அன்று	முன்பொருகாலத்தில் (நப்பின்னைப் பிராட்டியைப் பெறுதற்காக)	பரம் சோதி	சிறந்த தேஜஸ்ஸ்வரூபியும்
		மடை ஆர்	மடைகளெங்கும் நிரம்பிய
		நீலம்	நீலோத்பல மலர்கள்
ஏழ்விடை	எழு ரிஷபங்களை	மல்கும்	வியாபித்திருக்கப் பெற்ற
வெகுண்டு	சீறிக்கொண்டு	வயல்	கழனிகளாலே
அடர்த்து	வலியடக்கினவனும்,	சூழ்	சூழப்பட்ட
விலங்கல்	த்ரிகூடபர்வதத்தில்	கண்ணபுரம் ஒன்று	திருக்கண்ணபுரமென்கிற ஒரு விலக்ஷண திவ்யதேசத்தை
உற	சென்று சேரும்படியாக		
படையால்	(வாநர) ஸேனைகளைக் கொண்டு	உடையானுக்கு	(இருப்பிடமாக) உடைய பெருமானுக்கு
ஆழி	ஸமுத்ரத்தை	அடியேன்	சேஷபூதனான நான்
தட்ட	அடைத்தவனும்,	ஒருவர்க்கு	வேறுசிலர்க்கு
பரமன்	எல்லாரினுஞ் சிறந்தவனும்	உரியேனோ	உரிமைப்படுவேனோ?

* * *—நப்பின்னைப்பிராட்டியின் கலவிக்கு இடையூறாயிருந்த ஏழு காளைகளைவலியடக்கி அவளை மணந்து கொண்டவனும், வானரப்படைகளைக் கொண்டு கடலில் அணைகட்டினவனும், திருக்கண்ணபுரமென்கிற ஒரு விலக்ஷணமான திருப்பதியை இருப்பிடமாகக் கொண்டு மேவுணித் திருப்பவனுமான எம்பெருமானுக்கன்றி வேறொருத்தனுக்கும் உரியேனல்லேனென்று திருமந்த்ரார்த்தமான அநந்யார்ஹசேஷத்வத்தை அநுஸந்தித்தாராயிற்று.

விலங்கலுறப் படையாலாழிதட்ட பரமன் = ஆழி விலங்கலுறப் படையால் தட்ட பரமன் என்றும் அந்வயித்து உரைப்பர். ஆழி—ஸூர்யனானவன், விலங்

$ க்ருத்யையாவது—பிசாச முதலிய வுருவமான ஏவல் தேவதை.

கல் உற—(அஸ்தமன) பர்வதத்தில் சேர்ந்து விட்டானென்னும்படி, படையால்—சக்கரப்படையினால், தட்ட—மறைத்த—என்று பொருள் காண்க. அர்ஜுநன் பதின்மூன்றாம் நாட்போரில் தன்மகனான அபிமந்யுவைக்கொன்ற ஜயத்ரதனை மறுநாள் ஸூர்யன் அஸ்தமிப்பதற்கு முன்னே கொல்வதாகப் பல பிரதிஜ்ஞைகள் செய்ய, அது நிறைவேறக் கூடாதென்று அந்த ஜயத்ரதனை எதிரிகளால் உட்புக முடியாதபடியாக வியூஹத்திலே நிறுத்திக் காப்பாற்றிக் கொண்டிருந்த ராஜாக்களின் முன்னே ஸ்ரீக்ருஷ்ணன் பகல் நாழிகை முப்பதும் சென்றதாகத் தோன்றும்படி, நினைவறிந்து காரியஞ் செய்யுந் தனது சக்ராயுதத்தைக் கொண்டு ஸூர்யனைமறைக்க, 'ஆதித்யன் அஸ்தமித்தான், இனி நமக்குப் பிராணபயமில்லை; அர்ஜுநன் பிரதிஜ்ஞைசெய்திருக்கிறபடியே அக்நிப்ரவேசம் செய்யப் போவதைக் கண்டுகளிப்போம்' என்றெண்ணி ஜயத்ரதன் வெளிப்பட்டு நின்றவளவிலே, கண்ணபிரான் ஸுதர்சநாழ்வானை மீட்டுக் கொள்ள, ஸூர்யன் இன்னும் அஸ்தமிக்கவில்லையென்று உணர்ந்து கொண்ட அர்ஜுநன் உடனே தனது அம்பைக் கொண்டு அந்த ஜயத்ரதனைத் தலையறுத்து விட்டனன் என்ற வரலாறு அறிக. "ஸுதர்சநம் பாஸ்கர கோடிதுல்யம்" என்கிறபடியே கோடிஸூர்ய ப்ரகாசமான திருவாழியைக் கொண்டு ஸூர்யனைமறைத்தல் எங்ஙனம் கூடுமெனில்; ஸூர்யனுடைய ஒளி கண்ணாலே காணலாம்படி அளவுபட்டிருத்தலால் இருட்டைப்போக்கும்; அப்படியல்லாமல் திருச்சக்கரத்தினொளி நேராகக்கண்கொண்டு பார்க்கமுடியாதபடி அளவுபடாத மிக்க பேரொளியைக் கொண்டுள்ளதனால் பளபளத்துக் கண்களை இருளப்பண்ணுமெனச் சமாதானங் கூறுவர் பெரியோர். மற்றுஞ் சிலவகையான ஸமாதானங்களுங் கூறுவாருளர்.

'கண்ணபுரமுடையானுக்கு' என்னாமல் 'கண்ணபுரம் ஒன்று உடையானுக்கு' என்றது இத்திருப்பதியின் சிறப்பை விளக்கும்; எம்பெருமான் எத்தனையோ இடங்களை உடையனாயிருந்தாலும் திருக்கண்ணபுரமே அத்விதீயமான இடம் என்பது போதரும். .... (௬)

மிக்கானை மறையாய் விரிந்த விளக்கை * என்னுள்
புக்கானைப் புகழ்சேர் பொலிகின்ற பொன்மலையை *
தக்கானைக் கடிகைத் தடங்குன்றின் மிசையிருந்த *
அக்காரக்கனியை அடைந்துய்ந்து போனேனே. (௭)

மிக்கானை	சிறந்தவனும்
மறை ஆய் விரிந்த விளக்கை	வேதமாக விரிவுபெற்ற விளக்குப் போன்றவனும்
என்னுள் புக்கானை	என்னெஞ்சினுள்ளே புகுந்திருப்பவனும்
புகழ் சேர்	கீர்த்தி வாய்ந்தவனும்
பொலிகின்ற பொன் மலையை	ஜ்வலிக்கின்ற பொன் மலை போன்றவனும்,

தக்கானை	தகவுடையவனும்
கடிகை தட குன்றின் மிசை இருந்த	கடிகையென்னும் பெரிய திருமலையின்மீது எழுந்தருளியிருக்கின்ற,
அக்காரக் கனியை	அக்காரக் கனியுமான திருக்கண்ணபுரத்தெம்பெருமானை

அடைந்து உய்ந்து போனேன்—.

* * *—மிக்கான்—மிகுந்தவன்; ஸர்வஸ்மாத்பரன் என்றபடி. "மறையாய் விரிந்த விளக்கை" என்பதற்கு இரண்டு வகையான நிர்வாஹங்களுண்டு; "வேறொன்றால் காணவேண்டாதே தனக்குத்தானே ப்ரகாசகமாயிருப்பது; ப்ரமாணங்களாலே அறியப் பார்க்குமன்று அவற்றாலே ப்ரகாசிக்கிற மேன்மைக்கு எல்லையின்றிக்கேயிருப்பது." என்பது பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியான அருளிச்செயல். இதனால், எம்பெருமானே மறையாய் விரிந்தவன் என்றதாகிறது. ஆசார்யஹ்ருதயத்தின் முதல் சூர்ணிகையில் "மறையாய் விரிந்த துளக்கமில் விளக்கில் கொளுத்தின ப்ரதீபமான கலைகளை நீர்மையினாலருளி செய்தான்" என்றருளிச் செய்தபடியை நோக்குங்கால் மறையாய் விரிந்த விளக்கென்று அகாரத்தைச் சொல்லிற்றாக விளங்குகின்றது. அவ்விடத்து ஸ்ரீமணவாளமாமுனிகள் வியாக்கியானத்தில் அகாரபரமாகவே தெளிவாக வியாக்கியானம் செய்தருளப்பட்டிருக்கிறது. "அகாரோ வை ஸர்வா வாக்" (எல்லாவாக்குக்களும் அகாரமே) என்கையாலே, அகாரந்தானே நான்மறைகளாகப் பரம்பிற்றென்ப. ஆக, 'மறையாய் விரிந்த விளக்கு' என்று அகாரத்தைச்சொல்லிற்றாகிலும் அகாரவாச்யனான எம்பெருமானே இவ்விடத்திற்குப் பொருள்; வாச்யவாசகபாவஸம்பந்தத்தைப் பற்றினது ஸாமாநாதிகரண்யம். ஆக, இரண்டுவகையான நிர்வாஹங்களும் அறியத்தக்கன.

பொலிகின்ற பொன் மலையை="கணபுரத்துப் பொன்மலை போல் நின்றவன்" என்றார் பெரிய திருமடலிலும்.

தக்கான்=சோளஸிம்ஹபுரமென்று வழங்கப்படுகிற திருக்கடிகைப்பதியெம்பெருமானுடைய திருநாமம். பரமதயாளு என்றபடி.

கடிகைத் தடங்குன்று='கடிகா' என்னும் வடசொல் கடிகையெனத் திரிந்தது; நாழிகை என்றபடி. ஒருவர் ஒரு நாழிகைப்பொழுது இத்தலத்தில் உறைந்தாலும் அவர்க்கு முத்தி கிடைக்குமாதலால் இத்தலத்திற்குக் கடிகையென்று திருநாமமென்பர். இது சோள தேசம் போன்று வளம் மிக்கு நரசிங்கமூர்த்தி உறைதற்கு இடமாயிருத்தல் பற்றி சோளஸிம்ஹபுரமென்று வழங்கப்படும். சோளஸிம்ஹராஜனது புரமென்றும் பொருள் கூறுவர்.

அக்காரக்கனி=இதுவும் அத்தலத்து எம்பெருமானது திருநாமம். அக்காரம் (வெல்லக்கட்டி) போலவும் கனி போலவும் மதுரமாயிருப்பவன் என்க. அக்காரத்தில் தோன்றிய கனி எனவுமாம். அதாவது—அக்காரத்தைக் கொம்பு ஸ்தானத்திலே நிறுத்தி, அதில் நின்று முண்டான கனி எப்படி விலக்ஷணமான இனிப்போடு கூடியிருக்குமோ, அப்படி எம்பெருமான் விலக்ஷணபோக்யன் என்றவாறு.

இத்திருமொழியில் பல பாசுரங்களில் திருக்கண்ணபுரத்தின் திருநாம இலச்சினை இல்லையாயினும் நிகமனப் பாசுரத்தில் "கருநீர்முகில்வண்ணன் கண்ணபுரத்தானை" என்று தலைக்கட்டுகையாலே சௌரிப்பெருமாளையே தக்கானாகவும் அக்காரக்கனியாகவும் திருக்குடந்தையாராவமுதனாகவும் வயலாலிமைந்தனாகவும்

பேசி யநுபவிக்கிறாரென்று கொள்க. கீழ் ஏழாம்பத்தில் திருநறையூர்ப் பதிகங்களுள் "கறவாமடநாகு" "சினவிற்செங்கண்" என்னுந் திருமொழிகளின் போக்கும் இத்தகையதே. .... (௪)

வந்தா யென்மனத்தே வந்துநீ புகுந்தபின்னை *
எந்தாய்! போயறியா யிதுவே யமையாதோ? *
கொந்தார் பைம்பொழில்சூழ் குடந்தைக் கிடந்துகந்த
மைந்தா! * உன்னை யென்றும் மறவாமைப் பெற்றேனே. (௫)

எந்தாய்	எம்பெருமானே!	பை பொழில்	பரந்த சோலைகளினால்
என் மனத்தே	என் நெஞ்சினுள்ளே	சூழ்	சூழப்பட்ட
நீ வந்தாய்	நீ வந்துபுகுந்தாய்;	குடந்தை	திருக்குடந்தையிலே
வந்து புகுந்த பின்னை	அங்ஙனம் வந்து சேர்ந்த பின்பு	கிடந்து	சாய்ந்தருளி
போய் அறியாய்	திரும்பிப்போவதை அடியோடு மறந்திட்டாய்;	உகந்த	திருவுள்ளமுவந்த
இதுவே	இந்தப் பேறுதானே	மைந்தா	ஸுந்தரனே!,
அமையாதோ	போராதோ?	உன்னை	உன்னை
கொந்து ஆர்	கொத்துக்கள் நிரம்பிய	என்றும்	என்றைக்கும்
		மறவாமை பெற்றேன்	மறவாமலிருக்கப் பெற்றேன்.

* * *—தாம்பெற்ற பேற்றை வாயாரச்சொல்லி மகிழ்கிறார். "என்மனத்தே வந்து நீ புகுந்தபின்னை எந்தாய் போயறியாய்" என்று ஒருவாக்கியமாகவே சொல்லிவிடலாமே; முதலில் "வந்தாய்" என்றென்று தனிப்படவேண்டாவே என்னலாமாயினும், தம்முடைய ஆநந்தம் நன்கு விளங்குமாறு "எந்தாய்! என் மனத்தே வந்தாய்—நீவந்து புகுந்தபின்னைப் போயறியாய்" என்று தனித்தனி வாக்கியமாக நீட்டிநீட்டி யருளிச்செய்கின்றார்.

வந்தாய்—பரமபதம் திருப்பாற்கடல் முதலான அஸாதாரண ஸ்தலங்களை விட்டு இவ்விடம்வந்தாய்; என்மனத்தேவந்து நீபுகுந்தபின்னை = வந்தவிடத்திலும் ஜ்ஞாநாநுஷ்டாநங்களிற் சிறந்த யோகிகளின்மனத்தைத் தேடியோடாமல் நாயினேனுடைய மனத்தைத் தேடிப்பிடித்து வந்துபுகுந்தபின்பு, போயறியாய்—'இனிய இடங்களிலே நாம் சுகமாகவாழ்வதைவிட்டு இவருடைய அழுக்கு நெஞ்சிலே சிறைப்பட்டுக் கிடப்பானேன்?' என்று வெறுத்து நெஞ்சைவிட்டு நீங்கிப் போக நினையாமல் 'இதனில் சிறந்தஸ்தாநம் வேறொன்று நமக்கில்லை' என்று கொண்டு என்னெஞ்சிலேயே ஸ்திரப்ரதிஷ்டையாக இருக்கின்றாய்—என்றும் விரித்துரைக்கலாம்.

இதுவே அமையாதோ?—ஒருவனுக்கு இதற்கு மேற்படவும் ஒருபேறு உண்டோ? என்றவாறு.

சௌரிப்பெருமாளை அநுபவித்துவருகிற ஆழ்வாருடைய திருவுள்ளம் திருக்குடந்தை ஆராவமுதன்பக்கல் சென்றுசேர, ஆராவமுதப் பெருமாளே! நீர் உம்

முடைய பேறாக என்னெஞ்சிலே வந்துபுகுந்தாலும் பாவியேன் மறந்தொழியலாமே; அப்படி மறந்தொழிகையின்றியே "எந்நன்றி செய்தேனா என்னெஞ்சில் திகழ்வதுவே" என்றாப்போலே நன்றிபாராட்டப் பெற்றேனே!, நீர்வந்து புகுந்த பேற்றுக்கு மேற்பட்ட பேறன்றோ இது! என்றவாறு. .... (௫)

எஞ்சா வெந்நரகத் தழுந்தி நடுங்குகின்றேற்கு *
அஞ்சேலென் றடியேனை ஆட்கொள்ள வல்லானை *
நெஞ்சே! நீநினையாது இறைப்பொழுது மிருத்திகண்டாய் *
மஞ்சார் மாளிகைசூழ் வயலாலி மைந்தனையே. (௬)

எஞ்சா	ஒருகாலும் குறைதலில்லாத	வயல்	வயல்களையுடைத்தான
வெம் நரகத்து	கொடிய நரகத்திலே	ஆலி	திருவாலியில் எழுந்தருளியிருக்கிற
அழுந்தி	ஆழங்காற்பட்டு	மைந்தனை	ஸ்வாமியுமான ஸ்ரீசௌரிப்பெருமானை
நடுங்குகின்றேற்கு அடியேனை	நடுங்குகின்ற என்னை	நெஞ்சே	மனமே!
அஞ்சேல் என்று	'பயப்படாதே' என்று தேற்றி	நீ	நீ
ஆட்கொள்ள வல்லானை	அடிமைகொள்ள வல்லவனும்	இறைப் பொழுதும்	க்ஷணகாலமும்
மஞ்சு ஆர் மாளிகைசூழ்	மேகமண்டலத்தளவும் ஓங்கின திருமாளிகைகளால் சூழப்பட்டு	நினையாது இருத்தி கண்டாய்	நினையாமலேயிருக்கிறாயே.

* * *—கீழ்ப்பாட்டில் "உன்னையென்றும் மறவாமைப் பெற்றேனே" என்றருளிச்செய்தவர்தாமே இப்போது "நெஞ்சே! நீ இறைப்பொழுதும் நினையாது இருத்திகண்டாய்" என்கிறார்; கருத்தென்?; எம்பெருமான் செய்தருளின பேருதவிக்குத் தம்முடைய மறவாமை ஈடல்ல; அந்த உபகாரத்தின் கனத்தையும் தம்முடைய நினைவையும் ஒத்திட்டுப் பார்க்குமளவில் தம்முடைய மறவாமை அளத்கல்பமாய்த் தோற்றிற்றுப் போலும்; அதனால் அருளிச் செய்கிறபடி.

பலவகைகளாலும் கனக்கப் பாவங்களைப்பண்ணி அவற்றின் பலன்களை யநுபவிக்கக் கொடிய நரகங்களிலே சென்று நோவுபடுங்கால் 'தான்பண்ணின பாவங்களின் பலனைத் தான் அநுபவிக்கட்டும்; நமக்கு வந்ததென்ன?' என்றிராமல் அங்கே யெழுந்தருளி 'நாம் இருக்க, நீ பாபங்களின்பலனை அநுபவிக்க ப்ராப்தியுண்டோ? அஞ்சாதே' என்று அபயப்ரதானம் பண்ணி ரக்ஷித்தருளுமெம்பிரான் என்பன முன்னடிகள்.

நரகத்திலே அழுந்தி நடுங்கும்போது அஞ்சேலென்று ஆட்கொள்வதாகச் சொல்லுகிறவிதற்குக் கருத்து என்? எனில்; * தென்னவன்தமர் செப்பமிலாதார் சேவதக்குவார் போலப்புகுந்து பின்னும் வன்கயிற்றால் பிணித்தெற்றிப் பின் முன்னாக இழுப்பதாகிற யமதண்டனைகளை அநுபவித்துக் கொண்டிருக்கையில்

எம்பெருமான் அங்கே வந்து அபயமளித்துக் காத்தருள்கின்றனென்கிறதன்று; 'ஐயோ! நாம் எல்லையில்லாத பாவங்களைப் பண்ணிவிட்டோமே! வெவ்விய நரகங்களிலே சென்று கொடியதுன்பங்களை யநுபவிக்க நேருமே, என்செய்வோம்?' என்று கவலைப்பட்டு வருந்தியிருக்குமிருப்பிலே அபயப்ரதானம் பண்ணும்படியைச் சொன்னவாறு என்க. இங்கு வெந்நரகமென்றது ஸம்ஸாரத்தை என்று கொள்ளும் பக்ஷத்தில் எளிதாகவே பொருளாகும். இப்பொருளே வியாக்கியானத்திற் கிணங்கியது.

"நடுக்குகின்றேற்கு அடியேனை" என்றவிடத்து, வடமொழியில் ஆர்ஷப்பிரயோகங்களிற்போல உபபத்தி கூறவேண்டும்: "நடுக்குகின்றேற்கு" என்பது 'நடுக்குகின்ற எனக்கு' என்று பொருள்தர நின்றாலும் இங்கு அங்ஙனம் பொருள்படாது 'நடுக்குகின்ற' என்று விசேஷணமாத்திரமாக நிற்கும்; அடியேனில் அந்வயிக்கவேண்டுதலால். திருமாலையில் "மழைக்கன்று வரைமுனேந்தும்" என்றபாசுரத்தில் "உழைக்கின்றேற்கு என்னை" என்ற பிரயோகமும் பிறவும் காணத்தக்கன.

இருந்தி—முன்னிலையொருமை நிகழ்காலவினைமுற்று. கண்டாய்—முன்னிலையசை. .... (சு)

பெற்றார் பெற்றொழிந்தார் பின்னும்நின் றடியேனுக்கு *
உற்றனாய் வளர்த்து என் னுயிராகி நின்றானை *
முற்றாமாமதிகோள் விடுத்தானை யெம்மானை *
எத்தால் யான்மறக்கேன் இதுசொல்லென் னேழைநெஞ்சே! (எ)

என் ஏழை நெஞ்சே!—;

பெற்றார்	என்னைப் பெற்ற தாய்தந்தையர்
பெற்று ஒழிந்தார்	பெற்றுப் போட்டுப் போய்விட்டார்கள்;
பின்னும்	பின்பு
அடியேனுக்கு	அடியேனுக்கு
உற்றன் ஆய் நின்று	ஸகலவித பந்துவுமாயிருந்துகொண்டு
வளர்த்து	என்னைவளரச்செய்து
என் உயிர் ஆகி நின்றானை	(அவ்வளவோடும் விடாமல்) எனக்கு உயிராயிருந்து கொண்டு மேலும் நன்மைகளைச் செய்பவனும்
முற்றா மா மதி	பருவம் நிரம்பாத சந்திரனுடைய
கோள்	க்ஷயரோகத்தை
விடுத்தானை	போக்கினவனுமான
எம்மானை	எம்பெருமானை
எத்தால்	எக்காரணம்பற்றி
யான் மறக்கேன்	நான் மறக்கவல்லேன்?
இது சொல்	இவ்விஷயத்திற்கு விடைகூறு.

* * *—சரீரபிண்டத்தை மாத்திரமே உற்பத்தி பண்ணுமவர்களான மாதாபிதாக்கள் என்னைப் பெற்றுப் போட்டுப் போய்விட்டார்கள்; ஞானபக்தி

முதலிய குணங்கள் எனக்கு வளர்தற்குரிய வழிகளில் ஒரு முயற்சியும் அவர்கள் செய்தார்களில்லை. இப்படி அவர்கள் கைவிட்டகாலத்தில் எனக்கு எல்லாவுறவு முறையாய் நின்று என்னை வளரச்செய்து வருகின்ற எம்பெருமானை நெஞ்சே! என்ன காரணம் பற்றி மறந்தொழிய முடியும்? சொல்லாய் என்று தம்திருவுள்ளத்தோடு உசாவுகிறார்.

உற்றாய் வளர்த்து = "பிதாவ ரக்ஷகஶ்ஶேஷீ பர்த்தா ஜ்ஞேயோ ரமாபதி:। ஸ்வாம்யாதாரோ மமாத்மா ச போக்தா வாத்யமநூதித:—பிதா ச ரக்ஷகச் சேஷீ பர்த்தா ஜ்ஞேயோ ரமாபதி:-ஸ்வாமீ யாதாரோ மமாத்மா ச போக்தா சாத்யமநூதித:" என்கிறபடியே திருமந்த்ரத்தில் கேறுகின்ற ஒன்பதுவகையான உறவுகளையுமுடையவன் எம்பெருமான் என்க. உடன் பிறந்தவர்கள், வயிற்றில் பிறந்தவர்கள், தாய்தந்தையர், பிரமன் ருத்ரன் முதலானவர்கள் ஒருவரும் ரக்ஷகரல்லர், எம்பெருமானொருவனே ரக்ஷகன் என்பதை இப்பாசுரத்தில் விளங்கவைக்கிறார். உடன் பிறந்தவர்கள் ரக்ஷகரல்லர் என்பதை வாலியிடத்திலும் இராவணனிடத்திலும் காணலாம். தாய்தந்தையர் ரக்ஷகரல்லர் என்பதைக் கைகேயியிடத்திலும் ஹிரண்யகசிபுவிடத்திலும் காணலாம். மாதாபிதாக்கள் தங்கள் புத்திரர்களை யௌவநவிரோதி யென்று உபேக்ஷித்தல், க்ஷாமகாலம் வந்தவாறே ஆள்பார்த்துத் தூற்றிலே போடுதல், விலைகூறி விற்பனை செய்தல், மரணஸமயத்திலாவது எம்பெருமானை நினைத்துக் கரைசேர வொட்டாதபடி "சோர்வினால் பொருள் வைத்த துண்டாகில் சொல்லு சொல்லென்று சுற்றுமிருந்து" என்கிறபடியே அலைத்தல் முடித்தல் செய்யாநிற்பர்கள். ஸ்த்ரீகளுக்குக் கணவன் ரக்ஷகனல்லன் என்பது தருமபுத்திராதிகளிடத்திலும் நளனிடத்திலும் காணலாம். இவர்களெல்லாம் ரக்ஷகரல்லரேயாகிலும் நாட்டுக்குக் கண்காட்டியாய்ப் போருகிற சந்திரன் ஸூரியன் முதலானோர் ரக்ஷகர்களாகக் குறையென்னென்னில்; அவர்களும் ஸர்வேச்வரனுடைய ஆணைக்கு அஞ்சித் தாங்கள் நினைத்தபடி ஸஞ்சரிக்கப் பெறாமல் நாழிகை கூறிட்டு உதிப்பதும் அஸ்தமிப்பதுமாய்ப் போருகையாலும், இரணியன் இராவணன் முதலானோர் கையில் அகப்பட்டு இழிதொழில் செய்து திரிபவர்களாகையாலும் ரக்ஷகராக மாட்டார்கள். த்ரிலோக பாலகனான இந்திரனும் 'நம்முடைய பதவி எப்போது நழுவப்போகிறதோ!' என்று அஞ்சியிருப்பவனும் இந்திரஜித்தின்கையிலே அகப்பட்டுக்கொண்டு கட்டுண்டவனும், மஹாபலிபோல்வார்கையிலே செல்வத்தைப்பறிகொடுத்துக் கண்ணுங் கண்ணீருமாய்த் திரிபவனாகையாலே ரக்ஷகனாக மாட்டான். நான்முகனும் மதுகைடபர்கையிலே வேதங்களைப்பறிகொடுத்து 'கண்இழந்தேன், தனமிழந்தேன்' என்று நிலம் துழாவுகையாலே ரக்ஷகனாக மாட்டான். ருத்ரனும் ஸகலப்ராணிகளையும் ஸம்ஹரிப்பதையே தொழிலாகவுடையனாய் விடாயர் முகத்திலே நெருப்பைச் சொரிந்தாற் போலே தழல்நிறவண்ணனாய், தன்னையாச்ரயித்தவர்களை 'அறுத்துத்தா, பொரித்துத்தா' என்று கொடுந்தொழில்களைச் செய்வித்துக் கொள்ளுகையாலும், தன்னையடுத்த

வாணனை 'தலையில் பூவாடாதே ரக்ஷிக்கிறேன்' என்று ப்ரதிஜ்ஞைபண்ணி வைத்து, தன்னைத் தொழுத கைகளைக் கள்ளிக்காடு செய்தாற்போலே செய்க்கக் கண்டு 'உயிருண்டாகில் உப்புமாறியுண்ணலாம்' என்று நெற்றிக்கண்ணை மறைத்துக் கொண்டு நழுவினவனையாலும், லோககுருவாய்த் தனக்குப் பிதாவான பிரமனது தலையைத் திருகிப் பாதகியாய்க் கையுங்கபாலமுமாய்த் திறந்துகிடந்த வாசல்தோறும் புக்குத் தன்னை வெளியிட்டுக் கொண்டு திரிந்த வனையாலும் ரக்ஷகனாகமாட்டான்.

ஸ்ரீமந்நாராயணனொருவனே மாதாபிதாக்கள் கைவிட்ட நிலைமையிலும் தன்னுருக்கெடுத்து வேற்றுருக் கொண்டு தாய்முகங்காட்டியும் இன்சொற்கள் சொல்லியும் அகவாயிலே நின்று ஸத்தையே பிடித்து நோக்கிக் கொண்டு போரும் ஸர்வரக்ஷகனவன். இந்த ரக்ஷகத்வம் தம்மளவில் பலித்தபடியை முன்னடிகளால் அருளிச்செய்தாராயிற்று.

பருவம் நிரம்பாத பாலசந்திரனுக்கு வந்த க்ஷயத்தைப் போக்கினவனும், தன்னுடைய ரக்ஷகத்வத்தைக் காட்டி என்னை ஆட்படுத்திக் கொண்டவனுமான பெருமானை என்னகாரணம் பற்றி மறக்கலாம்? மறக்கவழியுண்டாகில் சொல்லாய் நெஞ்சமே! என்கிறார் பின்னடிகளில்.

எத்தால் யான் மறக்கேன்=எம்பெருமான் நமக்கு ஒரு நன்மையும் செய்ய வில்லை யென்கிற காரணத்தினால் மறக்கவோ? அல்லது, அற்பமான உபகாரமே நமக்குப் பண்ணியிருக்கிறானென்று கொண்டு மறக்கவோ? நம்மை ரக்ஷிக்கவல்லார் பிறருளரென்று கொண்டு அவனை மறக்கவோ? .... (எ)

கற்றார் பற்றறுக்கும் பிறவிப் பெருங்கடலே *
பற்றா வந்தடியேன் பிறந்தேன் பிறந்தபின்னை *
வற்றா நீர்வயல்சூழ் வயலாலி யம்மானைப்
பெற்றேன் * பெற்றதுவும் பிறவாமைப் பெற்றேனே. (அ)

கற்றார்	விவேகிகள்
பற்று அறுக்கும்	'இதன் ஸம்பந்தமே நமக்கு வேண்டா' என்று வெறுத்து ஒழிக்கும்படியான
பிறவி பெரு கடலே	ஸம்ஸாரமாகிற பெரியகடலையே
பற்றா	போக்யமாகப் பற்றி
அடியேன் வந்து பிறந்தேன்	(இந்நிலத்திலே) அடியேன் வந்து (பலபிறப்பும்) பிறவாநின்றேன்;
பிறந்த பின்னை	இப்படி பிறந்து வருமளவிலே,
வற்றா நீர் வயல் சூழ்	ஒருகாலும் வற்றாத நீர்வளமுடைய கழனிகளாலே சூழப்பட்ட
வயலாலி	'வயலாலி' என்றேபெயர் பெற்ற திருவாலியில் எழுந்தருளியிருக்கிற
அம்மானை	எம்பெருமானை
பெற்றேன்	ப்ராப்தனானேன்;
பெற்றதுவும்	அவனைப்பெற்றவாறே
பிறவாமை பெற்றேன்	மறுபிறப்பில்லாமை பெற்றேன்.

* * *—தன்னை மறக்கமுடியாதபடி எம்பெருமான் உமக்குப் பண்ணித் தந்த உபகாரந்தான் ஏதென்ன, தன்னுடைய அநுபவத்துக்கு இடையூறு வாராதபடி பண்ணித்தந்த மஹோபகாரகனன்றோ வென்கிறார்.

1. “பொய்ந்நின்ற ஞானமும் பொல்லாவொழுக்கு மழுக்குடம்பு மிந்நின்ற நீர்மை இனியாமுறாமை” என்றும், 2. “நோயே மூப்பிறப்பிறப்புப் பிணியே யென்றிவை யொழியக், கூயேகொள் ளடியேனைக் கொடுவுலகங்காட்டேலே” 3. “இருள்தருமா ஞாலத்துள் இனிப்பிறவி யான் வேண்டேன்” என்றும் விவேகிகள் வெறுத்துத் தள்ளும்படியான ஸம்ஸாரமாகிற பெருங்கடலிலே அலைமேல் அலையாகக் கொண்டு வந்து தள்ளுமாபோலே ஒருஜன்மம் ஒருஜன்மத்திலே கொண்டு தள்ள மாறிமாறிப் பலபிறப்பும் பிறந்து போந்தேன்; இப்படி பிறந்து வாராநிற்கச்செய்தே நான் பிறந்த ஸம்ஸாரத்திலே அவன் வந்து நெருங்குகையாலே அவனைப் பெற்றுக்கொண்டு நின்றேன். இப்படிப்பட்ட ஸம்ஸாரப் பிறவி மீண்டும் எனக்கு நேராதபடியான பெரும் பேற்றைப் பெற்றேன், இதுவன்றோ அவன் செய்தருளின உபகாரம் என்றாராயிற்று. மூன்றாமடியில் திருவாலிப்பதிக்கு விசேஷணமாக ‘வயல்’ என்னுஞ் சொல் இரண்டுமுறை வந்துள்ளது புநருக்தியன்று; ‘வயல்சூழ்’ என்பதே விசேஷணம்; ‘வயலாலி’ என்பது திருவாலியென்பது போலே திருப்பதியின் ப்ரஸித்தவ்யவஹாரத்தின் அநுகாரமாகும். வயலாலிமணவாளன் என்றே வழங்குவர்களிறே.

“பிறவாமைப் பேற்றேனே” என்பதற்குப்பலபடி பொருளருளிச் செய்வர்; பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியானங் காண்மின்:—“இப்பேற்றுக்கு விச்சேதத்தைப் பண்ணக்கடவ ஜன்மம் மறுவலிடாதபடி பெற்றேனென்னுதல்; அன்றிக்கே இப்பேற்றுக்கடியாக என்பக்கல் ஒரு நன்மை பிறவாதிருக்கச் செய்தே பெற்றேனென்னுதல்; அங்ஙனுமன்றிக்கே, பெற்றேனென்னும் உபகாரஸ்ம்ருதியும் வர்த்தியாதபடி பெற்றேனென்னுதல். உபகாரஸ்ம்ருதி அநுவர்த்தித்தவன்று ப்ரத்யுபகாரம் தேடி நெஞ்சாறல்பட வேண்டும்படியிருக்குமிறே; அது வேண்டாதே ‘ப்ராப்தம் இது’ என்றிருக்கும்படி உபகரித்தானாயிற்று.” என்று.

இனிப் பிறப்பில்லாமையைப் பெற்றேன் என்பது முதல்அர்த்தம்; (என்னிடத்தில் ஒரு ஹேதுவும்) பிறவாமல் பேறுபெற்றேன் என்பது இரண்டாம் அர்த்தம்; நன்றியறிவும் பிறவாமலே பேறுபெற்றேன் என்பது மூன்றாவது அர்த்தம். .... (அ)

கண்ணார் கண்ணபுரம் கடிகை கடிகமழும் *
தண்ணார் தாமரைசூழ் தலைச்சங்க மேல்திசையுள் *
விண்ணோர் நாண்மதியை விரிகின்ற வெஞ்சுடரை *
கண்ணாரக் கண்டுகொண்டு களிக்கின்றதிங்கென்றுகொலோ? (கூ)

---

1. திருவிருத்தம் 1. 2. திருவாய்மொழி 4—9—7.
3. திருவாய்மொழி 10—6—1.

கண் ஆர்	கண்பொருந்தும்படியான [ஸுந்தரமான]
கண்ணபுரம்	திருக்கண்ணபுரத்திலும்
கடிகை	திருக்கடிகாசலத்திலும்
கடி கமழும்	பரிமளம்மிக்க
தண் ஆர்	குளிர்ச்சிபொருந்திய
தாமரை சூழ்	தாமரைகளாலே சூழப்பட்ட
தலைச்சங்கம் மேல் திசையுள்	தலைச்சங்கமென்னும் பதியில் மேலைப்பக்கத்திலும்
விண்ணோர்	நித்யஸூரிகளுக்கு
நாண் மதியை	நாள்தோறும் சந்திரன்போலே அநுபவிக்கவுரியனாய்
விரிகின்ற வெம் சுடரை	உதயகாலத்தில் விரியும் ஸூர்யன்போலே ப்ரதாபம் மிக்கவனான எம்பெருமானை
இங்கு	இந்நிலத்திலே
கண் ஆர கண்டு கொண்டு	கண்கள் த்ருப்திபெற மனவும் காணப்பெற்று
களிக்கின்றது	ஆநந்திப்பது
என்று கொல்	என்றைக்கோ?.

* * *—திருக்கண்ணபுரத்திலும் திருக்கடிகையிலும் தலைச்சங்கமேல் திசையிலும் நித்யஸூரிகளுக்கு நிர்வஹிக்கின்ற எம்பெருமானைக் கண்ணாரக்கண்டு களிக்கப் பெறும் நாள் என்றைக்கோ என்று குதூஹலிக்கிறார்.

கண்ஆர் கண்ணபுரம்=வைத்த கண் வாங்காமல் பார்த்துக்கொண்டே யிருக்கவேண்டும்படி மிகஅழகிய திருக்கண்ணபுரம் என்றவாறு. அன்றியே, இடமுடைத்தான [—விசாலமான] திருக்கண்ணபுரம் என்றுமாம். **கண்-இடம்.**

தலைச்சங்க மேல்திசையுள் விண்ணோர் நாண்மதியை=சோழநாட்டுத் திருப்பதிகளுள் 'தலைச்சங்க நாண்மதியம்' என்பது ஒரு திருப்பதி. (திருநாங்கூர் ஸமீபத்திலுள்ளது.) அங்குள்ள எம்பெருமானுக்கு 'நாண்மதியப் பெருமாள்' என்று திருநாமம் சிறந்த திருச்சங்கையேந்திய நாண்மதியப் பெருமானையுடைய தலமாதல் பற்றித் தலைச்சங்க நாண்மதியம் என்று திருநாமமென்பர். இது 'தலைச்சங்காடு' என்றும் வழங்கப்படும். 'தலைச்சங்காடு' என்பது மருவிற்றுப் போலும். தலைச்சங்கப் பெருமாளுடைய இருப்பிடமென்றவாறு. "கைப்பால் அலைச்சங்கமேந்து மணியரங்கத் தம்மான், தலைச்சங்கநாண்மதியத்தான்" என்பது ஐயங்காரது நூற்றெட்டுத் திருப்பதியந்தாதிப் பாசுரம். இத்தலத்திற்குப் பாடல் ஆழ்வார் திவ்யஸூக்திகளுள் இஃதொன்றும், பெரியதிருமடலில் "நன்னீர்த் தலைச்சங்க நாண்மதியை" என்பதும்.

நாண்மதியை விரிகின்ற வெஞ்சுடரை="கதிர்மதியம் போல் முகத்தான்"—"திங்களுமாதித்தியனு மெழுந்தாற்போல் அங்கணிரண்டுங்கொண்டு"— "உதயபருப்பதத்தின் மேல் விரியுங்கதிரே போல்வானை விருந்தாவனத்தே கண்டோமே." .... (௯)

சேருநீர வேல்வலவன் கலிகன்றி மங்கையர்கோன்*
கருநீர் முகில்வண்ணன் கண்ணபுரத்தானை *
இருநீரின் தமிழின்னிசை மாலைகள் கொண்டு தொண்டீர்!*
வருநீர் வையமுய்ய இவைபாடியாடுமினே. (௧௦)

கரு	கர்ப்பத்தில்
நீர்	நீர்கொண்ட
முகில்	மேகம்போன்ற
வண்ணன்	திருநிறத்தையுடையரான
கண்ண புரத்தானை	சௌரிப்பெருமாள் விஷயமாக,-
செரு நீர வேல் வலவன்	யுத்தம்செய்வதையே இயல்வாகவுடைய வேற்படையைப் பிரயோகிக்கவல்லவரும்
மங்கையர் கோன்	திருமங்கையிலுள்ளார்க்கு அரசருமான
கலிகன்றி	ஆழ்வார் (அருளிச்செய்த)
இரு நீர்	மிக்க நீர்மையையுடைய
இன் தமிழ்	இனிய தமிழினாலாகிய
இன் இசை	இனிய இசையையுடைய
இவை மாலைகள் கொண்டு	இச்சொல்மாலைகளைக் கொண்டு
தொண்டீர்	தொண்டர்களே!
வரு நீர் வையம் உய்ய	கடல்சூழ்ந்த உலகம் உஜ்ஜீவிக்கும்படி —
பாடி	வாயாரப்பாடி
ஆடுமின்	மகிழ்ச்சிக்குப் போக்கு வீடாகக் கூத்தாடுங்கள்.

* * *—இத்திருமொழியில் திருவாலி திருக்குடந்தை திருக்கடிகை முதலான பல திருப்பதிகளை அநுஸந்தித்திருந்தாலும் இப்போது இவர் கவி பாடுகிறது திருக்கண்ணபுரத்தையே என்பது இப்பாட்டில் விளக்கப்பட்டது.

பகவத்பக்தியிருந்து தொண்டர்களென்று பெயர் பெற்றவர்களை விளித்து, நீங்கள் இத்திருமொழியைப் பாடியாடுங்கோள்; உலகமெல்லாம் உஜ்ஜீவிக்கும்—என்கிறார்.

வருநீர்வையம்—கடல் சூழ்ந்த பூமியிலே, உய்ய—நீங்கள் உஜ்ஜீவிக்கும்படி, இவைபாடி யாடுமின் என்னவுமாம். .... (௰)

அடிவரவு:—கைம்மானம், தரு, விடை, மிக்கான், வந்தாய், எஞ்சா, பெற்றார் கற்றார், கண்ணார், செரு, வண்டார்.

ஒன்பதாந்திருமொழி உரை முற்றிற்று.

ஜீயர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

எட்டாம்பத்து—பத்தாந்திருமொழி,

வண்டார்பூமாமலர்மங்கை.

(இதுவும் திருக்கண்ணபுரத் திருப்பதிகம்.)

வண்டார் பூமா மலர்மங்கை மணநோக்க
முண்டானே! * உன்னை யுகந்துகந் துன்றனக்கே
தொண்டானேற்கு * என்செய்கின்றாய்? சொல்லு நால்வேதம்
கண்டானே! * கண்ணபுரத்துறை யம்மானே! (க)

வண்டு ஆர் பூ	வண்டுகள் நிறைந்த அழகிய	அம்மானே	ஸ்வாமியே!,
மா மலர்	சிறந்த (தாமரைப்) பூவிற் பிறந்த	உன்னை உகந்து உகந்து	உன்னையே மிகவும் உகந்து
மங்கை	பெரிய பிராட்டியாருடைய	உன் தனக்கே	உனக்கே
மணம் நோக்கம்	மகிழ்ச்சியோடு கூடின திருக்கண் பார்வையை	தொண்டு ஆனேற்கு	அடிமைசெய்யப் பெறவேணுமென்று ஆவல்கொண்டிருக்குமென் விஷயத்தில்
உண்டானே	தாரகமாகக் கொண்டுள்ளவனே!	என் செய்கின்றாய்	என்னசெய்வதாக இருக்கிறாய்?
நால் வேதம் கண்டானே	நான்கு வேதங்களாலும் காணப்பட்டவனே!	சொல்லு	இதை அருளிச்செய்ய வேணும்,
கண்ணபுரத்து	திருக்கண்ணபுரத்திலே		
உறை	நித்யவாஸஞ்செய்தருள்கிற		

* * *—கீழ்த்திருமொழியில் "கண்ணாரக்கண்டுகொண்டு களிக்கின்றதிங் கென்று கொலோ" என்றார்; அது எம்பெருமான் திருவுள்ளப்படியே ஆக வேண்டியதாதலால் 'பிரானே! உன் திருவுள்ளம் எங்ஙனே யிருக்கிறது? சொல்ல வேணும்' என்கிறார்.

'என்செய்கின்றாய் சொல்லு' என்ற கேள்வியினால் ஸகலசாஸ்த்ர ஸாரப் பொருளை வெளியிடுகிறாராழ்வார் என்று குறிக்கொண்மின்; சேதநனுடைய க்ரியா கலாபமொன்றும் பேற்றுக்கு ஸாதனமன்று; பரமபுருஷனுடைய திருவுள்ளத்தி லிரக்கமே பலனைப் பெறுவிக்க வல்லது என்க. பெரியபிராட்டியார் புருஷ காரமாயிருந்து எம்பெருமான் திருவுள்ளத்திலிரக்கத்தை வளரச் செய்வ னென்பது தோன்ற 'வண்டார் பூமாமலர்மங்கை மணநோக்கமுண்டானே!' என்கிறார். 'பிராட்டியும் அவனுமான சேர்த்தியிலே அடிமை செய்கை முறை' என்கிற சாஸ்த்ரார்த்தத்தை வெளியிடுகிறாராகவுமாம்; "உன்றனக்கே தொண்டா னேற்கு" என்றிறே அடுத்துள்ளது. பிராட்டியின் கடைக்கண் நோக்கத்தை எம்பெருமான் பரம போக்யமாகக்கொண்டு அதையே தனக்கு ஜீவநாதாரமாக

வுசு கொள்ளுதலால் 'மலர்மங்கை மணநோக்கம் உண்டானே!' என்றார்: பிராட்டியின் கடாக்ஷவீக்ஷணத்தை உணவாகக்கொள்ளவனும். அதாவது—1. "யஸ்யா வீக்ஷ்ய ஸ்ரீவம் ததிம்மிதவாராயணோ வியத்தேவிதம்—யஸ்யா வீக்ஷ்ய முகம் ததிங்கிதபராதீனோ விதத்தேகிலம்" என்கிறபடியே பிராட்டியின் புருவநெறிப் புப்படியே காரியம் நிர்வஹிக்குமவன் என்றவாறு.

உன்னை உகந்துகந்து= பிராட்டியுமவனுமான சேர்த்தியிலே உண்டான உகப்பாகையாலே இரட்டிப்பு.

தொண்டானேற்கு= தொண்டுசெய்ய விருப்பங்கொண்டிருக்கிற எனக்கு என்றபடி: பகவத்கீதையில் "தேஷாம் ஸததயுக்தாநாம்" என்றவிடத்தில், ஸததயுக்தாநாம்— ஸததயோகத்தை விரும்புகின்றவர்களுக்கு என்று பொருள் சொல்வது போல.

நால்வேதங்கண்டானே!= இங்கே பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியான வருளிச்செயல்;—

"பட்டர் அருளிச் செய்தாராகச் சிறியாத்தான் பணிக்கும்படி— இது கர்த்தரி அன்று, கர்மணி கிடாய், என்று."

என்பதாம்.

இதனை விவரிப்போம்;— 'கண்டான்' என்பதற்கு கண்டவன் என்றும் காணப்பட்டவன் என்றும் பொருள் படுவது தமிழ்மரபு. இப்பொருள்கள் வடமொழியில் முறையே கர்த்தரி யென்றும் கர்மணி யென்றும் வழங்கப்படும். இங்கு நால்வேதங்களையும் கண்டவனே! எனப் பொருள்கொள்வது கர்த்தரிப்பொருளாகும்; நால் வேதங்களாலும் காணப்பட்டவனே! எனப் பொருள் கொள்ளுதல் கர்மணிப்பொருளாகும். கர்மணிப் பொருள் கொள்ளவேணுமென்பது பட்டர் திருவுள்ளம். நால்வேதங்களையுங் கண்டவனே! என்பதில் விசேஷமில்லை; நால்வேதங்களாலுங் காணப்பட்டவனே! என்பதில் ஸ்வாரஸ்யமுண்டு. உபாயமும் உபேயமும் தானேயாக நால்வேதங்களாலும் நிஷ்கர்ஷிக்கப்பட்டவனே! என்றவாறு. 'நான் கண்ட பொருள்' என்றால் 'என்னாலே காணப்பட்ட பொருள்' என்று பொருள்படுவதுபோல 'நால் வேதங்கண்டானே' என்றதற்கு நால் வேதங்களாலும் காணப்பட்டவனே! எனப் பொருள்படுதல் எளிதே யென்றுணர்க. .... (க)

பெருநீரும் விண்ணும் மலையு முலகேழும் *
ஒருதாரா நின்னுளொடுக்கிய நின்னையல்லால் *
வருதேவர் மற்றுளரென் றென்மனத்திறையும்
கருதேன்நான் * கண்ணபுரத்துறை யம்மானே! (உ)

கண்ணபுரத்து உறை அம்மானே!—; பெரு நீரும் சமுத்ரங்களையும் | விண்ணும் ஆகாயத்தையும் மலையும் மலைகளையும்

1. ஸ்ரீஸ்தவம்—1.

உலகு ஏழும்	ஏழுலகங்களையும்
ஒரு தார் ஆ	ஒருமாலையாக
நின்னுள்	தன்னுள்ளே
ஒடுக்கிய	(ஒருமூலையில்) அடங்கச் செய்துகொண்ட
நின்னை அல்லால்	உன்னைத்தவிர
வரு தேவர் மற்று உளர் என்று	(நான் ஆச்ரயணீயன் என்று சொல்லிக்கொண்டு) வரக்கூடிய தேவதை வேறொன்று இருப்பதாக
என் மனத்து	என்னெஞ்சிலே
இறையும்	சிறிதும்
நான் கருதேன்	நான் நினைத்தறியேன்.

* * *—கீழ்ப்பாட்டில் 'உன்றனக்கே தொண்டானேற்கு' என்றார்; இப்படி சொல்லுவானேன்? மற்றும்பல தெய்வங்களுமில்லையோ? உலகிற் பலர் பல தெய்வங்களை ஆச்ரயிக்கக் காண்கிறோமே; அந்த வழிகளில் உமக்கு ஊற்றமில்லையோ? என்று எம்பெருமான் திருவுள்ளமாக, பிரானே! நீ உண்டு உமிழ்ந்த எச்சிலான தேவர்களை ஒரு பொருளாகவும் நான் நெஞ்சிற் கொள்வேனல்லேன் என்கிறார்.

1. "அங்கண் ஞாலமுண்டபோது வெள்ளி வெற்பு அகன்றதோ" என்றபடி கைலாஸகிரிபுமுட்பட எல்லாவற்றையும் ப்ரளயகாலத்தில் திருவயிற்றில் கொண்டிருந்த உன்னைத் தெய்வமாக நினைப்பேனே, அன்றி, உன் திருவயிற்றில் ஒடுங்கியிருந்து பின்பு வெளிவந்த எச்சில்களைத் தெய்வமாக நினைப்பேனோ என்கை.

'ஒரு தாரா' என்பதை விளியாகவுங் கொள்ளலாம்; (ஆச்ரிதரக்ஷணத்துக்கு இட்ட) தனிமாலையையுடையவனே! என்றபடி.

"[வருதேவர் இத்யாதி.] ப்ரளயம் வந்தபோதாக உன்வயிற்றிலே போய்ப்புக்கு, நீ வெளிநாடுகாணப் புறப்படவிட்டவாறே 'நான் ஆச்ரயணீயன்' என்று வருவதொரு தேவதையுண்டாக நான் அறியேன்" என்ற வியாக்கியான ஸ்ரீஸூக்திகாண்க.

கண்ணபுரத்துறையம்மானே!— முன்பு மஹாப்ரளயத்தைப் போக்கினாய்; இப்போது ஸம்ஸாரப்ரளயத்தைப் போக்கத் திருக்கண்ணபுரத்திலே வந்து நித்யஸந்நிதி பண்ணியிருக்கிறாய்; இப்படி நீ யிருக்க மற்ற தெய்வாபாஸங்களைப் பூர்வபக்ஷமாகவும் நெஞ்சிலிட்டு நினையேன் என்றாராயிற்று. .... (௨)

**மற்றுமோர் தெய்வ முளதென்றிருப்பாரோ
டுற்றிலேன் * உற்றது முன்னடியார்க்கடிமை *
மற்றெல்லாம் பேசிலும் நின் திருவெட்டெழுத்தும்
கற்றுநான் * கண்ணபுரத்துறை யம்மானே!** (௩)

1. பிள்ளைப்பெருமாளையங்கார் தனிப்பாடல்.

கண்ணபுரத்து உறை அம்மானே!—;

மற்றும் ஓர் தெய்வம் உளது என்று இருப்பாரோடு	உன்னைக்காட்டிலும் வேறொரு தெய்வம் ஆச்ரயிக்கவுரியதாக உண்டு என்று நினைத்திருப்பவர்களோடே
உற்றிலேன்	இணங்கமாட்டேன்;
நின் திரு எட்டெழுத்தும்	உனது திருவஷ்டாக்ஷர மந்திரமானது
மற்று எல்லாம் பேசிலும்	அறியவேண்டிய எல்லாப் பொருள்களையும் சொன்னாலும்
நான் கற்று உற்றது	(அத்திருமந்திரத்தை) நான் அதிகரித்துத் தெரிந்துகொண்ட பொருள்
உன் அடியார்க்கு அடிமை	பாகவத சேஷத்வமேயாம்.

* * *— வேறு சிலரைத் தெய்வமாக நெஞ்சிலும் நினைக்கமாட்டேனென்றார் கீழ்ப்பாட்டில்; அவ்வளவேயோ? தாமஸபுருஷர்களோடு சேர்க்கையுமில்லை, ஸாத்விகபுருஷர்களையொழியக் காலம் செலுத்தவும் மாட்டேனென்கிறார் இதில்.

திருவஷ்டாக்ஷரமென்னும் பெரிய திருமந்திரத்தில் தாம் ஸாரமாக ப்ரதிபத்திபண்ணின அர்த்த விசேஷம் பாகவத சேஷத்வமே என்பதை இப்பாட்டில் வெளியிட்டருளுகிறார்.

வேதங்களும் வேதாந்தங்களு மெல்லாம் ஐந்து அர்த்தங்களையே முக்கியமாகப் பிரதிபாதிக்கின்றன; அவையாவன:— ப்ராப்யனான எம்பெருமானுடைய ஸ்வரூபம், ப்ராப்தாவான சேதநனுடைய ஸ்வரூபம், எம்பெருமானை யடைதற்குறுப்பான உபாயத்தின் ஸ்வரூபம், அடைந்து பெறவேண்டிய பேற்றின் ஸ்வரூபம், அப்பேற்றைப் பெறவொட்டாத பிரதிபந்தகத்தின் ஸ்வரூபம் என்பனவாம். இவையே அர்த்தபஞ்சகமெனப்படும். 1. "மிக்க இறை நிலையும் மெய்யாமுயிர்நிலையும், தக்க நெறியும் தடையாகித் தொக்கியலு மூழ்வினையும் வாழ்வினையுமோதுங் குருகையர்கோன், யாழினிசை வேதத்தியல்." என்கிறபடியே திருவாய்மொழி ஆயிரத்திலுள்ளும் இவ்வர்த்தபஞ்சகமே விவரிக்கப்பட்டுள்ளதென்பதும் இங்கு உணரத்தக்கது. திருவஷ்டாக்ஷரத்தில், ப்ரணவத்தாலே சேதநஸ்வரூபத்தையும், நமஸ்ஸாலே விரோதியினுடையவும் உபாயத்தினுடையவும் ஸ்வரூபங்களையும், நாராயணபதத்தாலே பரமபுருஷனது ஸ்வரூபத்தையும், அதில் சதுர்த்தியாலே புருஷார்த்தஸ்வரூபத்தையும் பிரதிபாதிக்கையாலும், அறியவேண்டிய ஸகலார்த்தங்களும் இவையே யாகையாலும் 'மற்றெல்லாம் பேசிலும்' எனப்பட்டது. பிள்ளையுலகாசிரியர் அருளிச்செய்த மும்முக்ஷுப்படியில் "மற்றெல்லாம் பேசிலு மென்கிறபடியே அறியவேண்டுமர்த்தமெல்லாம் இதுக்குள்ளே உண்டு; அதாவது அஞ்சர்த்தம்." என்றருளிச்செய்ததுங் காண்க.

இப்படி திருமந்திரத்தில் அநேக அர்த்தங்கள் கிடந்தாலும் அவற்றில் தமக்கு ஊற்றமில்லை யென்பதை 'பேசிலும்' என்ற உம்மையினால் வெளியிடுகிறார். பின்னை எவ்வர்த்தத்தில் ஊற்ற மென்ன, "உற்றதுமுன்னடியார்க்கடிமை" என்கிறார்.

1. திருவாய்மொழித்தனியன்.

திருமந்திரத்தில் எந்த சொல்லில் பாகவத சேஷத்வம் காணக்கிடக்கின்றது? என்னில், கேண்மின் ;—அஹங்காரமும் மமகாரமும் நீங்கப்பெற்று பகவத் சேஷத்வம் உள்ளபடி ப்ரகாசிக்கிற நமஸ்ஸிலே அந்த பகவத்சேஷத்வத்தின் எல்லைநிலமான பாகவத சேஷத்வம் அநுஸந்திக்கப் படவேணுமென்பது ஆழ்வார் திருவுள்ளம். இந்த பாகவத சேஷத்வம் திருமந்திரத்தினுள் ப்ரணவத்தின் உள்ளீடான அகாரத்திலே தோற்றுமென்று சிலரும் உகாரத்திலே தோற்றுமென்று சிலரும் சொல்லுவதுமுண்டு. எங்ஙனேயெனில், அகாரத்தின்மேல் ஏறிக்கிடந்து லோபமடைந்துள்ள சதுர்த்தியாலே ஆத்மாவினுடைய பகவத் சேஷத்வம் சொல்லப்படுகையாலே அந்தபகவச் சேஷத்வத்தின் எல்லையான பாகவத சேஷத்வத்தை அகாரத்திலே அநுஸந்திக்கலாமென்பர் சிலர். அநந்யார்ஹசேஷத்வத்துக்கு எல்லை பாகவத சேஷத்வமாகையாலே அந்த அநந்யார்ஹத்வத்தைச் சொல்லுகிற உகாரத்திலே அதன் எல்லையான பாகவத சேஷத்வத்தை அநுஸந்திக்கலாமென்பர் சிலர். அர்த்தாத் ஸித்தமாக அநுஸந்திக்க வேண்டுவதை எந்த இடத்தில் அநுஸந்தித்தாலும் குறையில்லை. ஆகிலும் அஹங்கார மமகாரங்கள் கழிவதைக் காட்டுகின்ற நமஸ்ஸிலே அதனை அநுஸந்திப்பது மிகப் பொருந்துமென்பது நம் ஆசார்யர்களின் திருவுள்ளம்.

இப்பாட்டின் ஈற்றடி "கற்று நான்வல்லது கண்ணபுரத்தானே" என்றும் ஓதப்பட்டுவந்ததாக வியாக்யானத்தில் தெரிகிறது. அது இப்போது எங்கும் வழங்காதபாடம். ... . (ரு.)

பெண்ணானாள் பேரிளங் கொங்கையி னாரழல்போல் *
உண்ணாநஞ்சுண் டுகந்தாயை யுகந்தேன் நான் *
மண்ணாளா! வாள்நெடுங்கண்ணி மதுமலராள்
கண்ணாளா! * கண்ணபுரத்துறை யம்மானே! (௬)

மண் ஆளா { பூமிப்பிராட்டியை ஆள்பவனே!

வாள் நெடு கண்ணி } ஒளிபொருந்திப் பெருத்த கண்களையுடையவளும்

மது மலராள் { மதுபெருகுகின்ற மலரிற் பிறந்தவளுமான ஸ்ரீ மஹாலக்ஷ்மிக்கு

கண்ணாளா வல்லபனானவனே!

கண்ணபுரத்துறையம்மானே !—;

பெண் ஆளன் { பெண்வடிவுகொண்டுவந்த பூதனையினுடைய

பேர் இள கொங்கையின் } பெரிதும் இளையதுமான ஸ்தநத்திலுள்ள

ஆர் அழல் போல் } நெருப்புப்போன்றதான

உண்ணா உண்ணமுடியாத

நஞ்சு விஷத்தை

உண்டு உறிஞ்சியுண்டு

உகந்தாயை திருவுள்ளமுவந்த உன்னை

நான் உகந்தேன் } நான் அடைந்து மகிழப் பெற்றேன்.

* * *—அடியேன், கைக்கொள்வதற்குரிய சிறந்தவஸ்து அல்லேனாயினும், பேய்ச்சியாகிய பூதனை உன்னைக் கொல்வதற்காகத் தன்முலையில் தடவிக்கிடந்த விஷமே உனக்கு விரும்பத்தக்கதான போது அடியேன்தானோ விரும்பத் தகாத

வனாகப்போகிறேன்; அந்த விஷத்திற் காட்டிலும் கொடியவனன்றோ நான்? அப்படி கொடியவனேயாயினும், புருஷகாரம் பண்ணிச் சேர்ப்பிக்கவல்ல பிராட்டிமார் இணைபிரியாதிருக்க நான் இழக்க வேண்டுவதுண்டோ? என்கிற கருத்தை யடக்கி இப்பாசுர மருளிச்செய்கிறார்.

கம்ஸனுடைய ஏவுதலாலே பேய்ருவத்தை விட்டு (யசோதையாக)ப்பெண்ணுருவத்தை ஏறிட்டுக்கொண்டமை தோன்றப் 'பெண்ணுனாள்' என்றது. பேர்இளங்கொங்கை=பேய்த்தன்மைக்குத் தகுந்தபடி பெருமையும், யசோதையுருவத்தின் ஏறிடுலுக்குத் தகுந்தபடி இளமையும் கொங்கைக்குக் கூறப்பட்டன வென்க.

விஷம் தாரகமானவனுக்கு ஆகாதாரில்லை; நீ கைவிடப் பார்த்தாலும் விடவொண்ணாத புருஷகாரமுண்டு என்பது பின்னடிகட்கு அவதாரிகை. பொறுமைதானே வடிவெடுத்துள்ள பூமிப்பிராட்டியென்ன, உசிதமான உபாயங்களாலே பொறுப்பிக்க வல்ல பெரிய பிராட்டியாரென்ன இவர்களோடே கூடித் திருக்கண்ணபுரத்திலே ஸந்நிதி பண்ணியிருக்கும் பெருமானே! உன்னை நானுகந்தேன்—நீ கைவிடாது ரக்ஷிக்கக் கடவையென்று விச்வஸித்திருக்கிறேனென்றவாறு. .... (ச)

பெற்ருரும் சுற்றமுமேன்றிவை பேணேன் நான் *
மற்ருரும் பற்றிலேனுதலால் நின்னடைந்தேன் *
உற்றனென் றுள்ளத்து வைத்தருள்செய்கண்டாய் *
கற்ருர்சேர் கண்ணபுரத்துறை யம்மானே! (ரு)

கற்ருர் சேர்	பண்டிதர்கள் சேர்ந்து வாழுமிடமான
கண்ணபுரத்து உறை அம்மானே!—;	
பெற்ருரும்	மாதாபிதாக்களென்ன
சுற்றமும்	உறவினரென்ன
என்ற இவை	என்று சொல்லப்படுகிற இப்படிப்பட்டவர்களை
நான் பேணேன்	நான் உற்ருராக விரும்ப மாட்டேன்;
மற்று ஆரும்	மற்று யாரிடத்திலும்
பற்று இலேன்	பற்று உடையேனல்லேன்;
ஆதலால்	ஆகையாலே
நின் அடைந்தேன்	உன்னைவந்து ஆச்ரயித்தேன்;
உள்ளத்து	திருவுள்ளத்திலே
உற்றன் என்று வைத்து	இவன் நம்முடையவன் என்று அபிமானித்து
அருள் செய்	கிருபைபண்ணவேணும்.

* * *—காமத்தாலே பெற்றுவிட்டுப் போட்டுப் போகிற தாய்தந்தையரையும், 1 "பொருள் கையுண்டாய்ச் செல்லக்காணில் போற்றியென்றேற்றெழுவர், இருள்கொள் துன்பத்தின்மை காணில் என்னே யென்பாருமில்லை" என்கிறபடியே கையில் துட்டுகாசு நடையாடுங் காலங்களில் உறவு கொண்டாடியும் அஃதில்லாத வறுமையில் விட்டொழிந்தும் போருகிற ஆபாஸபந்துக்களை

1. திருவாய்மொழி 9—1—3.

யும்; புகலாக நெஞ்சிலும் நினைக்கின்றிலேன். விவேகமில்லாமல் வேண்டியபடி வரங்களையளித்துத் தடுமாறியும், ஆபத்காலத்தில் முதுகுகாட்டியோடியும் போகிற தேவதாந்தரங்களிடத்திலும் ஒரு பற்று உடையேனல்லேன். ஆக, பரிபூரணமான அநந்யகதித்வத்தையுடையேனான நான் "களைவாய் துன்பம் களையா தொழிவாய் களைகண்மற்றிலேன்" என்றாற்போலே உன்னைவந்து பணிந்தேன். 'எங்கும் புகலற்று நம்மையேபற்றி வந்தானிவன்' என்று திருவுள்ளம் பற்றி அடியேன்பால் அருள்புரியவேணும். இல்லையாகில், பரமபதம் திருப்பாற்கடல் முதலிய இடங்களைவிட்டுத் திருக்கண்ணபுரத்தே கோயில் கொண்டெழுந்தருளியிருப்பது பயனற்றதாகுங்காண். நீ வர்த்திக்கிற ஊரிலே உள்ளவர்கள் ஸாமாந்யரல்லர்; கலையறக்கற்றுணர்ந்த மாஞானிகள்; வேறு புகலற்று வந்தவனைக் கைக்கொள்வது தகுதியோ? கைவிடுவது தகுதியோ? என்று அவர்களைக் கேட்டாகிலும் நீ உணரப்பெறலாம்—என்கிறார்போலும். 'உற்றேனென்று' என்பதற்கு 'படாதபாடுகளும் பட்டானென்று' என்றும் பொருளுரைப்பர். அதாவது— இக்கலியன் நம்மைவிட்டுப் புறம்பேபுக்குப் படவேண்டியதெல்லாம் பட்டுவந்தான்; எங்குமுழன்றலைந்து வருந்திவந்து சேர்ந்த இவனை இனி நாம் பரீக்ஷிக்கத் தேவையில்லை என்று கடுகக் கிருபைசெய்தருளவேணும் என்கை. உற்றேன்— அநர்த்தப்பட்டான் என்றபடி. இச்சொல்லுக்கு இப்பொருள்படுதலை "மற்றுமோர் தெய்வமுண்டே மதியிலா மானிடங்காள், உற்றபோதன்றி நீங்கள் ஒருவனென்றுணரமாட்டீர்" என்ற திருமாலைப் பாசுரத்திலுங் காண்க.(ரு)

ஏத்தியுன் சேவடி யெண்ணி யிருப்பாரை *
பார்த்திருந் தங்கு நமன்றமர் பற்றாது *
சோத்தம் நாமஞ்சுது மென்று தொடாமை * நீ
காத்திபோல் கண்ணபுரத் துறை யம்மானே! (சு)

கண்ணபுரத்துறையம்மானே!—;

உன்	உன்னுடைய	அங்கு	அந்த சரமஸமயத்தில்
சே அடி	திருவடிகளை	பற்றாது	வந்து கிட்டமாட்டாமல்,
ஏத்தி	துதித்து	சோத்தம்	"நமஸ்காரம்,
எண்ணி இருப்பாரை	சிந்தித்திருக்குமவர்களை	நாம் அஞ்சுதும்	நாம் (அணுகுவதற்கும்) அஞ்சுகின்றோம்"
நமன் தமர்	யமபடர்கள்	என்று	என்றுசொல்லி
பார்த்து இருந்து	உயிர்போகுங்காலத்தை எதிர்பார்த்திருந்து	தொடாமை	தொடுதலும் செய்யாதபடி
		நீ காத்தி போல்	ரக்ஷித்தருளுகிறாயன்றோ.

—பிரானே! நீ என் குற்றங்களைப்பாராதே என்னைக் கைக்கொண்டருள்வதுமாத்திரம் போராது; செய்த குற்றங்களை ஆராய்வதற்கென்று நியமித்துள்ள யமன் முதலானோரும் என்னருகு வராதபடி நோக்கியருளவேணுமென்று பிரார்த்தித்தல் இப்பாட்டின் உள்ளுறை.

"உன் சேவடி செவ்வி திருக்காப்பு" என்று உன் திருவடிகட்குப் பல்லாண்டு பாடுவதே தொழிலாய் "ஒழிவில்காலமெல்லா முடனாய்மன்னி வழுவிலாவடிமை செய்யவேண்டுநாம்" என்று அத்தாணிச் சேவகத்தையே இடைவிடாது சிந்தித்திருப்பவர்களான பாகவதர்களை சரீர விமோசகசமயத்தில் யமதூதர்கள் வந்து அணுகக்கூசிக் கடக்கநின்று அஞ்சலிசெய்துவிட்டுப் போகும்படியாக நீ நோக்கியருள்கின்றாயென்றது, இங்ஙனே அடியேனை நோக்கியருளவேணுமென்ற குறிப்பு. 'வடைதிருப்பணியாரம் இனிமையாகச் சமைத்திருக்கிறது' என்றால் 'இதுஎனக்கு வேணும்' என்று குறிப்பிடப்படுதல்போலக் கொள்க.

சேவடியேத்தி யெண்ணியிருப்பாரை நமன்தமர் அஞ்சியணுகாமைக்குக் காரணம் ஸ்ரீவிஷ்ணுபுராணத்தில் (3-7-14.) "ஸ்வபுருஷமபிவீக்ஷ்ய பாசஹஸ்தம் வததி யம: கில தஸ்ய கர்ணமூலே, பரிஹர மதுஸூதநப்ரபந்நாந் ப்ரபுரஹமந்யந்ருணாம் ந வைஷ்ணவாநாம் = ஸ்வபுருஷமபிவீக்ஷ்ய பாசஹஸ்தம் வததி யம: கிலதஸ்ய கர்ணமூலே, பரிஹர மதுஸூதநப்ரபந்நாந் ப்ரபுரஹமந்யந்ருணாம் ந வைஷ்ணவாநாம்" என்ற ச்லோகத்திலும் "திறம்பேன்மின் கண்டீர் திருவடிதன் நாமம், மறந்தும் புறந்தொழாமாந்தர்— இறைஞ்சியும், சாதுவராய்ப் போதுமின்களென்றான் நமனுந்தன் தூதுவரைக் கூவிச் செவிக்கு." [நான்முகன் திருவந்தாதி-68.] என்ற திருமழிசைப்பிரான் பாசுரத்திலும் காண்க. யமனுடைய தூதர்கள் பாசங்களைக் கையிற்கொண்டு தங்கள் கடமையைச் செலுத்தப்புறப்படும்போது யமன் அத்தூதர்களையழைத்து ரஹஸ்யங்கள் சொல்லுமாபோலே காதோடே ஒரு வார்த்தை சொல்லுவான்;— ஓ தூதர்களே! நீங்கள் பாகவதர்களிடத்தில் சிறிதும் அதிகாரம் செலுத்தவேண்டா; அவர்கள்கிட்ட நீங்கள் செல்லவே கூடாது; ஒருகால் அவர்கள் நேர்ப்பட்டால் வணங்கி வலஞ்செய்து பரமஸாத்விகர்களாய் விலகுங்கோள் என்றானும். இதனால் பாகவதர்கட்கு யமபயப்ரஸக்தியேயில்லை யென்றதாம். "அவன்தம ரெவ்வினையராகிலும் எங்கோனவன்தமரே யென்றொழிவதல்லால்—நமன்தமரா லாராயப்பட்டறியார் கண்டீர் அரவணைமேல் பேராயற்காட்பட்டார் பேர்." என்றார் பொய்கையாழ்வார். "கெடுமிடராய வெல்லாம் கேசவாவென்ன நாளுங், கொடுவினை செய்யுங் கூற்றின்தமர்களுங் குறுககில்லார்" என்றார் நம்மாழ்வார். "மூவுலகுண்டுமிழ்ந்த முதல்வ! நின் நாமங்கற்ற, ஆவலிப்புடைமைகண்டாய்—காவலிட்டுழிதர்கின்றோம் நமன் தமர் தலைகள்மீதே" என்றார் தொண்டரடிப்பொடியாழ்வார்.

சோத்தம்= அஞ்ஜலிபண்ணுமவர்கள் அதுக்கு அநுகூலமாகத் தாழ்ச்சி தோற்றச் சொல்லுவதொரு சப்தவிசேஷமாம் இது. 'ஸ்தோத்ரம்' என்றவடசொல் சோத்தமெனச் சிதைந்துகிடக்கிறது என்பாருமுளர். "சோ[illegible]த்தம் பிரானிங்கே வாராய்" என்ற பெரியாழ்வார் ப்ரயோகமுங்காண்க.

அஞ்சுதும்—தன்மைப்பன்மை வினைமுற்று. காத்திபோல்= போல்— உவமைப்பொருளதன்று; ஒப்பில்போலியாய்வந்ததென்க. வடமொழியில்

1. "க்ருவஷி ஜயஹாணாம்" இத்தியாதிஸ்தலங்களில் இவசப்தம்போல வாக்யாலங்காரமென்க. .... (௬)

வெள்ளைநீர் வெள்ளத் தணைந்த வரவணைமேல் *
துள்ளுநீர் மெள்ளத் துயின்ற பெருமானே! *
வள்ளலே! யுன்றமர்க் கென்றும் நமன்றமர்
கள்ளர்போல் * கண்ணபுரத்துறை யம்மானே. (எ)

வெள்ளை நீர்	திருப்பாற்கடலினுடைய
வெள்ளத்து	வெள்ளத்திலே
அணைந்த	சேர்ந்த
அரவு அணை மேல்	சேஷசயனத்தின்மேலே
துள்ளு நீர்	சிறுதிவலைகள்
மெள்ள	மெதுவாகவீச
துயின்ற	திருக்கண்வளர்ந்தருள்கின்ற
பெருமானே	ஸ்வாமியே!
வள்ளலே	உதாரனே!
கண்ணபுரத்துறை அம்மானே!—;	
உன் தமர்க்கு	உன் அடியார் விஷயத்தில்
நமன் தமர்	யமபடர்கள்
என்றும்	எக்காலத்திலும்
கள்ளர் போல்	திருடர்போலே மறைந்தொளிப்பர்கள்.

ஆ. * * *—யமதூதர்கள் பாகவதர்களை அணுகமாட்டார்களென்றது கீழ்ப் பாசுரத்தில். அவர்கள் கிட்டாதமாத்திரமேயோ? அவர்கள் கள்ளர்போலே மறைந்தொளிந்து கிடக்கும்படியாயன்றோ உன் பிரபாவமிருப்பதுஎன்கிறார் இப் பாட்டில். "சித்திரகுத்தனெழுத்தால் தென்புலக்கோன் பொறியொற்றி, வைத்த இலச்சினைமாற்றித் தூதுவரோடியொளித்தார்" என்றார் பெரியாழ்வாரும்.

நோவுபட்டுக் கூவுமடியார்களின் கூக்குரல் செவிப்படுவதற்கு அணித்தாகத் திருப்பாற்கடலிலே சிறுதிவலைகள் துடைகுத்தத் திருவனந்தாழ்வான்மீது உறங்குவான்போல் யோகுசெய்யும் பெருமானே!, அத்தனைதூரமும் பொறாமல் திருக்கண்ணபுரத்திலேவந்து மிக அணியனாகவுள்ள பெருமானே! நான் யமதூதர்களுக்கு அஞ்சவேண்டிற்றுண்டோ? உனக்கு அடியனாருமத்தனையே வேண்டுவது; யமபடர்கள் அவ்வளவிலே ஓடியொளிக்கப் பெறுவர்களன்றோ—என்றதாயிற்று. .... (எ.)

மாணாகி வையமளந்ததுவும் * வாளவுணன்
பூணாகம் கீண்டதும் ஈண்டு நினைந்திருந்தேன் *
பேணாத வல்வினையேன் இடரெத்தனையும்
காணேன்நான் * கண்ணபுரத்துறை யம்மானே! (அ)

கண்ணபுரத்துறை அம்மானே!—;	
மாண் ஆகி	(முன்பு) வாமநப் பிரமசாரியாகி
வையம்	உலகங்களை
அளந்ததுவும்	அளந்துகொண்டதையும்
வாள் அவுணன்	வாள்கொண்ட இரணியாசுரனுடைய
பூண் ஆகம்	ஆபரணங்களணிந்தமார்பை
கீண்டதுவும்	கிழித்தெறிந்ததையும்
ஈண்டு	இப்போது

1. சாகுந்தளநாடகம்.

நினைந்திருந்தேன்	நான் அநுஸந்திக்கின்றேன்;	வல் வினையேன் நான்	வலியபாபங்களையுடையவனுமான நான்
பேணாத	ஆத்மோஜ்ஜீவநத்துக்கு ஒரு நன்மையும் செய்து கொள்ளாதவனும்	இடர் எத்தனையும்	தனி பாவத்தையும்
		காணேன்	(என்னிடத்தில்) காண்கிறேனில்லை.

* * *—ஆழ்வீர்! யமபடர்கள் பாகவதர்களுக்கு அஞ்சி யொளிப்பர்கள் என்றது உண்மையே; அதனாலென்ன? நீரோ பாவங்களைப் பிரபலமாகச் செய்திருக்கின்றீரே! அவற்றின் பலன்களை அநுபவித்துத் தீரவேண்டுமே என்று எம்பெருமான் திருவுள்ளமானதாகக் கொண்டு, தம்முடைய பாவங்கள் "வானோ மறிகடலோ மாருதமோ தீயகமோ, கானோ வொருங்கிற்றுக் கண்டிலமால்" என்றாற்போலே போனவிடந் தெரியாதபடி போயினகாண் என்கிறார் இப்பாட்டில்.

குறள்பிரமசாரியாய் மாவலியின் வலிதொலைத்த சரிதையென்ன, பிரஹ்லாதாழ்வானுக்காக நரசிங்கமூர்த்தியாய்த் தூணில்தோன்றி இரணியனைகலம்பிளந்த சரிதையென்ன இவைபோல்வன மற்றும் பல சரிதைகளையும் நெஞ்சார நினைத்தேன்; அதனால், என்னுடைய பாவங்களில் லவலேசமும் காணக்கிடைக்காதபடி அற்றொழிந்ததுகாண் என்கிறார்.

பேணாத = தேஹத்திற் காட்டில் வேறுபட்டவனான ஆத்மா ஒருவன் உண்டென்று நினைத்து அவனுக்கு உரிய நன்மைகளை நாடாதவனாயிருந்தவன் நான் என்றபடி. ... ... (அ)

நாட்டினாயென்னை யுனக்குமுன் தொண்டாக *
மாட்டினேனத்தனையே கொண்டேன் வல்வினையை *
பாட்டினாலுன்னையென் நெஞ்சத் திருந்தமை
காட்டினாய் * கண்ணபுரத்துறை யம்மானே! (கூ)

கண்ணபுரத்து உறை அம்மானே!—;		என் வல் வினையை	எனது கொடிய பாவங்களை
முன்	முந்துற	மாட்டினேன்	மாளச்செய்தேன்;
என்னை	அடியேனை		(அதுவுமன்றி)
உனக்கு	உனக்கு	பாட்டினால்	இப்படிப்பட்ட பாசுரங்களினால்
தொண்டு ஆக	அடியவனாக	உன்னை என் நெஞ்சத்து இருந்தமை	நீ எனது நெஞ்சினுள் இருக்கிறபடியை
நாட்டினாய்	நிறுத்திக்கொண்டாய்; (அதற்குப்பிறகு அடியேன்)		
அத்தனையே கொண்டு	அவ்வளவேகாரணமாக	காட்டினாய்	விளக்கச்செய்தாய்.

* * *—தம்முடைய பாவங்கள் அகன்றுபோன படியையும் தாம் பெற்ற பேற்றையும் பேசித்தலைக்கட்டுகிறார்.

மாறிமாறிப் பலபிறப்பும் பிறந்து விஷயாந்தரங்களிலே மண்டிக் கைகழிந்து போன என்னை நிர்ஹேதுகக்ருபையாலே திருமந்திர முணர்த்தித் தொண்டர் திறளிலே சேர்த்தியருளினைப்; இப்படிப்பட்ட சேஷத்வமாகிற ராஜகுல மாஹாத்மியத்தாலே என்னுடைய பாபங்களை யெல்லாம் அறத்தொழிக்கப் பெற்றேன், அவ்வளவேயோ? என்நாவினுள் நீ வந்து புகுந்து இனிய பாசுரங்களைப் பாடுவிக்கையாலே என் ஹ்ருதயத்தினுள்ளே நீ நித்யவாஸம் செய்தருளுகின்றாயென்பதையும் நிச்சயித்துக் கொண்டேன் என்றாராயிற்று.

இப்பாட்டின் பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியான முடிவில் "இவரைப் பாடுவித்த முக்கோட்டை யிருந்தபடி" என்றொரு வாக்கியமுள்ளது. அதன் கருத்தாவது—மலையாளத்தில் 'முக்கோட்டை' என்று ஒரு இடமாம்; அவ்விடத்தில் ஊமைகள் சென்றாலும் அந்நில மிதியால் வெகு அழகாகக் கவி பாடுவர்களாம். (இது முற்கால வழக்கம் போலும்.) திருக்கண்ணபுரத்தை அந்த முக்கோட்டையாக ஆழ்வார் திருவுள்ளம்பற்றினபடி.... (௯)

கண்டசீர்க் கண்ணபுரத்துறை யம்மானை *
கொண்டசீர்த் தொண்டன் கலியனொலிமாலை *
பண்டமாய்ப் பாடு மடியவர்க் கெஞ்ஞான்றும் *
அண்டம்போ யாட்சி அவர்க்கதறிந்தோமே. (௰)

கண்ட சீர்	கண்ணாலே ப்ரத்யக்ஷமாகக் காணக்கூடிய செல்வம் பொருந்திய	ஒலி	அருளிச்செய்த
கண்ணபுரத்து	திருக்கண்ணபுரத்திலே	மாலை	இப்பாமாலையை
உறை	நித்யவாஸஞ்செய்தருளுகின்ற	பண்டம் ஆய்	நிதியாகக்கொண்டு
அம்மானை	சௌரிப் பெருமான் விஷயமாக,	பாடும்	பாடவல்ல
சீர் கொண்ட	ஸ்ரீவைஷ்ணவலக்ஷ்மி வாய்ந்த	அடியவர்க்கு	ஸ்ரீவைஷ்ணவர்களுக்கு
தொண்டன்	தாஸனான	எஞ்ஞான்றும்	எப்போதும்
கலியன்	திருமங்கைமன்னன்	அண்டம் போய் ஆட்சி	பரமபதத்திலிருந்து கொண்டு வானகமாளப் பெறுவதாகும்;
		அவர்க்கு அது அறிந்தோம்	அவர்கட்கு அதுவே பேறு என்பதை நிச்சயமாகத் தெரிந்து கொண்டோம்.

* * *—திருக்கண்ணபுரத் தெம்பெருமான் விஷயமாகக் கலியன் சொன்ன இப்பாமாலையை நிதியாகக் கொண்டு பாடும் அடியவர்கட்குத் திருநாட்டுச் செல்வத்தை ஆளப்பெறுவதே பேறாகும் என்று பயனுரைத்துத் தலைக்கட்டினாராயிற்று.

கண்டசீர்க்கண்ணபுரம்=பரமபதத்தின் சிறப்பை ஸ்ரீவைகுண்டகத்யம் முதலான ஏட்டுப்புறங்களிலே காணலாமத்தனை யொழியக் கண்கொண்டு காணவொண்ணாது; அங்ஙனன்றியே திருக்கண்ணபுரத்தின் சிறப்பு ப்ரத்யக்ஷலக்ஷ்யமென்கை.

கொண்டசீர்த் தொண்டன்—சீர்கொண்ட தொண்டன் என்க: சீர்—ஸ்ரீவைஷ்ணவலக்ஷ்மியைச் சொன்னபடி. இலங்கைச்செல்வமனைத்தையும் விட்டிட்டுப் புகலற்று வானத்திலே வந்து நின்ற விபீஷணாழ்வானை "அந்தரிக்ஷகதஃ ஸ்ரீமாந் - அந்தரிக்ஷகத: ஸ்ரீமாந்" என்றார் வால்மீகி முனிவர். அப்போது அவ்விபீஷணரிடத்து இருந்த ஸ்ரீயாவது ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீயேயாம்; இராமபிரான் பின்னே காட்டுக்குப் புறப்பட்ட இளயபெருமாள் "லக்ஷ்மணோ லக்ஷ்மிஸம்பந்நஃ—லக்ஷ்மணோ லக்ஷ்மிஸம்பந்ந:." எனப்பட்டார்; அப்போது லக்ஷ்மணனுக்கிருந்த லக்ஷ்மியாவது ஸ்ரீவைஷ்ணவலக்ஷ்மியேயாம். முதலையின் வாயிலே அகப்பட்டுத் துடியாநின்ற கஜேந்திராழ்வான் "ஸது நாகவரஃ ஸ்ரீமாந்—ஸது நாகவர: ஸ்ரீமாந்" எனப்பட்டான்; அப்போது கஜேந்திராழ்வானுக்கிருந்த ஸ்ரீயாவது ஸ்ரீவைஷ்ணவ ஸ்ரீயேயாம். .... (௧௦)

அடிவரவு:—வண்டார் பெரு மற்று பெண் பெற்றார் எத்தி வெள்ளை மாண் காட்டினாய் கண்டசீர் வங்கம்.

பத்தாந்திருமொழி உரை முற்றிற்று.

ஜீயர் திருவடிகளே சரணம்.

பெருமாள்கோயில் பிரதிவாதிபயங்கரம்
அண்ணங்கராசாரியர் ஸ்வாமி அருளிச்செய்த
திவ்யப்ரபந்த திவ்யார்த்த தீபிகையில்
பெரியதிருமொழி எட்டாம்பத்து உரை
முற்றுப்பெற்றது.

ஸ்ரீ:

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

பெரிய திருமொழியின் 6, 7, 8 பத்துக்களில் ஆழ்வார் அநுஸந்தித்தருளின

இதிஹாஸ புராண கதைகளின் அடைவும். அக்கதைகள் அமைந்த பாசுரங்களின் தலைப்பும்.

[கதைகள்.]	[பாசுரங்களின் தலைப்புக் குறிப்பு.]
1. திருமால் மீனாய்த் திருவவதரித்தது. விவரணப் பக்கம் 822.	கொழுங்கயலாய். முந்நீரைமுன்னாள். வானோரளவும்முது.
2. ஹயக்ரீவாவதாரம் செய்தருளியது.	முன்னிவ்வுலகேழுமிருள்,
3. ஆமையாய்த் திருவவதரித்தது. வி—ப. 1091.	ஏரார்மலரெல்லாம். மலங்குவிலங்குநெடுவெள்ளம்.
4. கடல் கடைந்தது.	அண்ணல்செய்து. கலங்கமுந்நீர்கடைந்து. முந்நீரைமுன்னாள். கலங்கமாக்கடல்கடைந்து.
5. அரனுக்கு நஞ்சுண்ணக்கொடுத்தது. வி—ப. 765.	அண்ணல்செய்தலைகடல்.
6. பன்றியாசிப் பார கங்கீண்டது. வி—ப. 1092.	கிடந்தநம்பி. விடந்தானுடைய. பண்டேனமாயுலகை. சிலம்புமுதல். மார்வில் திருவன்.
7. நரசிங்கவுருக் கொண்டதும் இரணிய னகலம் பிளந்ததும்.	முனையார்சீயமாகி. பைங்கணாளரியுருவாய். அன்றுலகமூன்றினையும். ஓடாவரியாய். என்செய்கேனடியேன். வந்திக்குமற்றவர்க்கும். சிங்கமதாயவுணன். விண்டான்விண்புக. சினமேவுமடலரியின். மடலெடுத்த நெடுந்தாழை. உளைந்தவரியும். மாணாகிவையம்.
8. உலகமளந்தது.	வண்டுணுநறுமலர். அன்றுலகமூன்றினையும். மான்கொண்டதோல். கிடந்தநம்பி. விடந்தானுடைய. வானவர்தம்துயர்தீர. தொண்டருமமரரும். தொழுநீர்வடிவிற்குறள். மாணாகிவையமளந்ததுவும்.
9. பரசுராமாவதாரம். வி—ப. 1097.	முனியாய்வந்துமூவெழுகால். சேர்வாணர்மடிய. முழுதிவ்வையகம். வடிவாய்மழுவேபடையாக.
10. (கார்த்தவீரியனைக் கொன்றொழித்தது.)	மன்னஞ்சவாயிரந்தோள்.

11. தாடகையைமுடித்து மாமுனிவேள்வியைக் காத்தது.	வல்லியிடையாள்பொருட்டாக.
12. சூர்ப்பணகையை அங்கபங்கஞ் செய்தது.	மீதோடிவாளெயிறு.
13. மாய மானை மாய்த்தது.	தென்னார்கடல்வாய். இலையார்மலர்ப்பூம்பொய்கை.
14. மராமரமேழெய்தது. வி—ப. 895.	சினவிற்செங்கண். ஏழுமாமரந்துளைபட.
15. விபீடணனுக்கு அரசளித்தது.	இலையார்மலர்ப்பூ.
16. கடலில் அணைகட்டினது.	கலங்கமாக்கடல்கடைந்தடைத்து. மல்லைமுந்நீர்தட்ப்பட. விடையேழன்றடர்த்து.
17. இலங்கை பாழ்படுத்தது.	கல்லாவைம்புலன்கள். மின்னேரிடையார். ஆனைப்புரவி. குடையாவரையால். உரக்கமெலியன்று. தோராளும்வாளரக்கன். தொண்டருமமரரும். வையமெல்லாமுடன்.
18. மாலியைமடித்ததும், சுமாலிமுதலானோரைப் பாதாளலோகம் செலுத்தியதும்.	பொருந்தாவரக்கர் வெஞ்சமத்து.
19. பலராமாவதாரம்.	ஒற்றைக்குழையும் நாஞ்சிலும்.
20. தந்தைகாலில் விலங்கறக் கண்ணன் திருவவதரித்தது.	தந்தைகாலில்பெருவிலங்கு. தந்தைகாலில்விலங்கற. துவரிக்கனிவாய்நிலமங்கை.
21. பேய்ச்சி முலையுண்டது.	பகுவாய்வன்பேய். முலைத்தடத்தநஞ்சு. கண்சோரவெங்குருதி. கஞ்சனைக்காய்ந்தானை. சினமேவுமடலரியின். பேய்முலைத்தலை. வெஞ்சினக்களிற்றை. ஆயன்மாயமேயன்றி. மாலாய்மனமே. பெண்ணானான்.
22. சகடமுறித்தது.	வடேறுகஞ்சனொடு. மாலாய்மனமே. குன்றால்மாரிபழுதாக்கி.
23. இரட்டை மருதமரங்களை முறித்தது. வி—ப. 1034.	விடையேழ்வென்று. கணமருவுமயிலகவு. மாலாய்மனமே. இணைமலிமருதினொடு.
24. காளியனுச்சியில் நட்டம்பாய்ந்தது.	வில்லார்விழவில். விடந்தானுடைய.
25. கேசியைக் கொன்றது. வி—ப. 1026.	ஆங்குவெந்நரகத்து. தப்பினத்தாங்கம்பட. திருத்தினைத்திசை. தாங்கரீர்பேசிலும்.
26. தேனுகாஸுரவதம்.	மாலாய்மனமே.
27. கொக்கின்வாயைக் கிழித்தெறிந்தது.	புள்வாய்பிளந்தபுனிதா.

28. விளங்கனி வீழ்த்தது.	அம்புருவவரிநெடுங்கண். வெஞ்சினக்களிற்றை. குன்றால்மாரிபழுதாக்கி.
29. குன்றேடுத்துக் கோநிரைகாத்தது.	மிடையாவக்தவேல்மன்னர். அன்றேரளித்துசில். குடையாகவரையால். மின்றவரையும். கடுங்கால்மாரி. குன்றால்மாரிதடு. விண்டான்விண்புக. கரையெடுத்தசுரிசங்கும். குன்றால்மாரிபழுதாக்கி. புயலுறுவரைமழை.
30. ஆய்ச்சியர்வளைகளைக் கொண்டது.	மூலைத்தடத்தகஞ்சுண்டு.
31. குடக்கூத்தாடினது.	சொல்லாய்திருமார்பா.
32. குரவை ஆய்ச்சியரோடு கோத்தது. (ராஸக்ரீடை.)	கும்பமிகுமதவேழம்.
33. ஏழ்விடை செற்றது.	உறியார்வெண்ணெயுண்டு. விடையேழ்வென்று. குடையாவரையால். கறுத்துக்கஞ்சனை. கும்பமிகுமதவேழம். தங்கமாமணிமாட. மாலாய்மனமே. குன்றால்மாரிபழுதாக்கி. வியமுண்டவிடையினம். இணைமலிமருதிறுத்தும். விடையேழன்றடர்த்து.
34. குவலயாபீட யானையைக் கொன்றது.	பருவாய்வன்பேய். பூணுதனலும். கும்பமிகுமதவேழம். கூடேறகஞ்சனொடு. தாராயதண்துளபம். அரிவிரவுமுகில். வருந்தாதிருநீ. மாலாய்மனமே.
35. மல்லர்களை மடித்தது.	கல்லாவைம்புலன்கள். வில்லார்விழவில்வடம்துரை. கூடேறகஞ்சனொடு. மாலாய்மனமே.
36. கஞ்சனது வில்விழவைச் செற்றது.	கூடேறகஞ்சனொடு.
37. கஞ்சனைக் கொன்றது.	வில்லார்விழவில். கஞ்சனைக்காய்ந்தானை. கூடேறகஞ்சனொடு.
38. வாணன் தோள்களைத்துணித்தது.	வள்ளிகொழுகன்முதலாய.
39. வாணனுக்கு அருள்புரிந்தது.	வருந்தாதிருநீ.
40. அரன் அஞ்சியோடமாறு ஆழியை விசைத்தது.	உடையானையொலிசீர்.
41. ஸத்யபாமைக்காகக் கற்பகத்தரு கொணர்ந்தது. வி—ப. 853.	கட்டேறுநீள்சோலை.
42. காண்டவ வனத்தைத் தீ மூட்டிவிட்டது. வி—ப. 852.	கட்டேறுநீள்சோலை.
43. பாண்டவர்க்காகத் தூது சென்றது.	போதார்தாமரையாள். குன்றால்மாரிபழுதாக்கி.

44. பார்த்தன் தேரில் பாகனாயிருந்தது. வி—ப. 818. } பாலைசூழும். மிடையாவக்தவேல். மண்ணின்மீபாரம். உரங்களாலியன்ற. பாரித்தெழுந்த.

45. பாரதப்போரில் சங்கு ஊதினது. } பந்தார்விரலான். கயங்கொள்புண்டலை.

46. ஜயத்ரதனை மடிவித்தது. (ஆழியால் இரவியைமறைத்தது.) வி—ப. 817. } வெள்ளைப்புரவித்தேர். அகிற்குறடும். விடையேழன்றடர்த்து.

47. ஸாந்தீபிநிபுத்திரனை மீட்டுக் கொடுத்தது. வி—ப. 816. } மூந்தநூலும்முப்புரிநூலும்.

48. கஜேந்திரனைக் காத்தருளியது. } துவாயபுன்னூர்ந்த. குன்றால்மாரிதடுத். குலத்தலையமதவேழம். இலையார்மலர்ப்பூ. கைம்மானமதயானை.

49. அரனது சாபத்தை அகற்றினது. வி—ப. 845. } ஆறும்பிறையுமரவமும். பெடையடர்த்தமடவன்ன "

50. அரனுக்குத் தன் திருமேனியில் கூறு கொடுத்தது. வி—ப. 977. } வாளோர்மதிபொதியும். எங்களுக்கருள்செய்கின்ற. திருத்தனைத்திசை.

51. சிவன் திரிபுரமேரித்த போது அந்தர்யாமியாகவும் அம்பாகவும் அமைந்தது. வி—ப. 766. } குழல்திறவண்ண.

52. மதிகோள் விடுத்தது. வி—ப. 787. } நீவாய்வல்வினையார். கனிசேர்ந்திலங்கு. தங்கமாமணிமாட. பெற்றார்பெற்றொழிந்தார்.

53. காமனுக்குத் தந்தை யானது. வி—ப. 1047. } வாமனன்கற்கி. ஆமையாகியரியாகி.

54. உலகமுண்டதும் ஆலிலைத்துயின்றதும். } பாரொழுகடலெழு. அம்பரமும்பெருநிலனும். வற்றாமுதுநீரொடு. தூயாய்சுடர். வண்டமரும்மலர். பெருநீரும் விண்ணும். மிலவொடுவெய்யில். சிறியாயோர்பிள்ளையுமாய். வென்னத்தன்னோராலிலை. மெய்ந்நலத்தவத்தை.

55. கல்கியவதாரம். வி—ப. 1105. } வாமனன்கற்கி. மீனோடாமைகேழல்.

கதைக் குறிப்பு மூற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

பெரியதிருமொழி—ஆறு, ஏழு, எட்டாம்பத்துக்களின்

செய்யுளகராதி.

செய்யுளகராதி முற்றிற்று.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

எம்பெருமானார் திருவடிகளே சரணம்.

ஜீயர் திருவடிகளே சரணம்.